# ஒன்பதாவது குரல்



தாட்சாயணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாவது குரல்

தாட்சாயணி

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவது குரல்(சிறுகதைகள்)/ தாட்சாயணி / முதற்பதிப்பு: ஐப்பசி 2019/ ©தாட்சாயணி/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 176/ விலை: 400.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Onpathavathu Kural (a collection of Short Stories) / Thadsayanee/ First Edition: October 2019/ ©Thadsayanee/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 176 /Price: 400.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-17-7

ஜீவநதி வெளியீடு – 128



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு பிள்ளையாரின் கதை
- சிவப்புக்கோடு
- சாருமதியின் வீடு
- தொடராத சொந்தங்கள்
- பொய்மையும் வாய்மையிடத்து
- ராகவி ஆகிய நான்
- நாளை இனி யாரோ...?
- இரண்டு ஆசிரியர்கள்,இரண்டு மாணவிகள்
- நர்மதாவின் கடிதங்கள்
- முடிச்சிடப்ப ட்ட மூன்று காலங்கள்
- உள்ளே தான் உள்ளாயோ...?
- நியாயங்களும் கேள்விகளாகின்றன
- மெட்டி
- எல்லாப்பாதையிலும் முட்கள்
- ஒன்பதாவது குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## தாட்சாயணியின் தனித்துவமான குரல்

இலங்கைத்தமிழ் இலக்கிய உலகுக்கு புதிதாக ஓர் அறிமுகம் தேவைப்படாத படைப்பாளி தாட்சாயணி.

சங்க காலம் முதல் இன்றுவரை பெண்கள் பலர் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளாக இருந்து வருகின்றார்கள். அந்த வரிசையில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுள் ஒருவர் தாட்சாயணி. இலங்கை அரச நிர்வாக அதிகாரிகளாக இருந்து வந்த சிலர் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளாகவும் தமிழ் இலக்கியத்துக்குப் பங்களிப்புச் செய்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் தாட்சாயணிக்கு மிகக் காத்திரமான ஓர் இடமுண்டென்பதனை அவரின் "ஒன்பதாவது குரல்" என்னும் இச்சிறுகதைத் தொகுதி மீண்டும் வலியுறுத்துகின்றது.

மொத்தம் பதினைந்து சிறுகதைகளை உள்ளடக்கியதாக விளங்குகின்றது இத்தொகுதி. அதன் முதற் சிறுகதை "ஒரு பிள்ளையாரின் கதை". இந்தப் பிள்ளையாரை கதாசிரியர் இவ்வாறு அறிமுகப்படுத்துகிறார்.

> "ஓலையால் வேய்ந்த ஒரு சிறிய கொட்டிலில் பிள்ளையார் வெயிலையும் மழையையும் தன்னிச்சை யாய் அனுபவித்தபடி விழித்துக் கொண்டிருந்தார். முன்னால் போடப்பட்ட திரைசீலை காற்றில் அலைந்து நசுங்கிக் கிடக்க ஏ-9 வீதியால் செல்கின்ற பேருந்து களையும் பயணிகளையும் பிள்ளையார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.
>
> ஆம். பிள்ளையாரின் வசிப்பிடம் கண்டி வீதிக்கு அண்மையிற்தான். கைதடியில் பனைவள ஆராய்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம் அமைந்துள்ள பெரியவளவின் ஒரு ஓரத்தில்தான் உட்கார்ந்திருக்கிறார் பிள்ளையார்... முன்னே திரைச்சீலை விலக அதனூடு பிள்ளையாருக்கு அவ்வப்போது வெளியுலக தரிசனம் கிடைத்துக் கொண்டிருக்கிறது."

இந்தத் தெருவோரத்துப் பிள்ளையாரின் பார்வைக்கூடாகவே தாட்சாயணி உலகத்தைக் காட்டி இருக்கிறார்.

பெண்களைப் பொறுத்தவரையில் குடும்பப் பொறுப்புடன் அரச உத்தியோகம் பார்ப்பது மேலும் அவர்களுக்குப் பெரும் சுமையாகக் கனக்கிறது. அலுவலகத்தில் போடப்படும் சிவத்தக்கோடு அவர்களைத் தினமும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. சிவத்தக்கோடு போடுவதற்கு முன் கைச்சாத்திட வேண்டுமென்ற பிரயத்தனம் - மனப்போராட்டம் என்பன சித்திரிக்கப்படுகிறது. அயலில் குடியிருந்த நண்பியின் மகன் விபத்துக்குள்ளாகி கோமாநிலையில் கிடப்பதும் நண்பி இனி அயல்வீடு திரும்பி வரமாட்டாள் என்ற துயரத்தையும், ஏக்கத்தையும் பதிவு செய்கிறது ஒரு கதை. திருமணப்பேச்சு நடந்து, சொந்தமென உள்ளத்தால் உறவு பூண்டுவிட்ட சிறுமி(மாணவி) பேச்சுக்கால் முறிந்த பின்பும் மனநிலை மாறாது சொந்தம் கொண்டாடுகிறாள் என்பதை ஒரு சிறுகதை பேசுகிறது.

திருமணமாகி கணவனை இழந்து போன இளம் பெண்ணொருத்திக்கு, அவள் எதிர்கால வாழ்வினை நினைத்து, திருமணமாகாதவள் எனக் கிராம சேவகர் ஒருவர் நற்சான்றுவழங்கி உறுதிப்படுத்தும் மனிதாபிமானம் பற்றி ஒரு சிறுகதை சொல்கிறது.

மொத்தம் பதினைந்து சிறுகதைகள் தாட்சாயணியின் இந்தத் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ளன. பொதுவாக மொத்தம் பன்னிரண்டு சிறுகதைகளே ஒரு தொகுதியில் இடம் பெறுவது வழக்கம். பல தொகுதிகளைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கும் சிரமத்தினை குறைக்கவே பெரியதொகுதியாக இது வெளி வருகிறது எனலாம்.

இலங்கையர்கோன்(சிவாஞானசுந்தரம்) முதல் அண்மையில் அமரத்துவம் அடைந்த எனது அருமை நண்பர் து. வைத்தியலிங்கம் அவர்கள் வரை உதவி அரசாங்க அதிபராக உயர்பதவி வகித்தவர்கள். சிறுகதை ஆக்க இலக்கியப் படைப்பாளிகளாக விளங்குகிறார்கள். அந்த வகையில் இன்று ஆக்க இலக்கியம் படைத்துக் கொண்டிருப்பவர் தாட்சாயணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாட்சாயணியிடத்தே தெளிவான சமூகப் பார்வை இருக்கிறது. சமதரையில் ஆற்றுநீர் ஓடுவது போன்ற மொழிஓட்டம், வீச்சு வெற்றுச் சலசலப்பின்றி ஓடிக் கொண்டிருக்கிறது. தமது ஆக்க இலக்கியப் படைப்புகளைச் சராசரி வாசகர்களும் வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டுமென்னும் இலக்கிய சமூக அக்கறை இவரது எழுத்துக்களில் புலப்படுகின்றது.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சிறுகதை பற்றியும் தனித்தனியாகச் சொல்லிக் குறிப்பிடுவது வாசகர்களுக்கு இடையூறாக அமையக் கூடும். ஈழத்து தமிழ் இலக்கியத்துக்கு தாட்சாயணியின் "ஒன்பதாவது குரல்" பயனுள்ள நல்லகுரலாகுமெனத் துணிந்து கூறலாம். தாட்சாயணியின் குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்க எனது நல்வாழ்த்துக்கள்.

- தெணியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

நீண்ட காலத்திற்குப் பிறகு, மீண்டுமொரு சிறுகதைத் தொகுப்போடு, உங்களை சந்திக்கின்றேன். 2011 இல் எனது ஐந்தாவது நூலை வெளியிட்டேன். அதற்குப் பிறகான எட்டு வருடங்களின் இடைவெளி மிக நீண்டது தான். எழுத்தாளர்கள் இடையிடையே மௌனம் கொள்வது அவர்களின் எழுத்திற்குக் காத்திரமளிக்கவும் சந்தர்ப்பம் அளிக்கும். எனினும் இத்தொகுதியில் அடங்கியிருக்கும் கதைகளில் அனேகமானவை 2011, 2012 களில் எழுதப்பட்டவை. எழுதப்பட்டவற்றை ஒன்று சேர்த்துத் தொகுப்பதற்குக் கூட அவகாசமற்றிருந்தேன் என்பது எனக்கே ஆச்சரியத்தையும் ஒருங்கே ஆதங்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

இத்தொகுதியின் பாதிக்கதைகள் போரின் உக்கிரத்திலிருந்து வெளிப்பட்ட மனிதர்கள் எதிர் கொண்ட பாடுகளைப் பற்றிப் பேசுவன. இப்போது காலங்கள் கடந்து விட்டாலும், அப்போது அங்கிருந்து வெளியேறிய மனிதர்கள் பலர் எதிர் கொண்ட பிரச்சினைகளை அவர்களது வாய்மொழியூடாக அறிய முடிந்ததன் மூலம் அவற்றினைச் சிறுகதைக ளாகப் பதிந்து வைக்க முடிந்தது. கால ஓட்டத்தில் சில ஞாபகங்கள் கரைந்து விட்டாலும், இப்போது அவற்றை மீள் வாசிப்பினூடாக உணர்கின்ற போது அவ்வுணர்வுகளை ஆவணமாக்கிய ஒரு மனத் திருப்தியை உணர முடிகின்றது.

இத்தொகுதிக்கான முன்னுரையினை முதுபெரும் எழுத்தாளரான தெணியான் அவர்கள் வழங்கியிருக்கிறார். ஆரம்ப காலத்திலிருந்தே என் எழுத்துக்களை வாசித்து ஊக்கப்படுத்தி, எனது தனிப்பட்ட நலனிலும் அக்கறை செலுத்தி வருபவர் அவர். குறித்த காலத்துக்குள் இக்கதைகளை படித்து காத்திரமானதொரு அணிந்துரையினைத் தந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது அதிகம் சிறுகதைகள் ஜீவநதியிலேயே பிரசுரமாகியிருக்கின்றன. அவ்வகையில் ஜீவநதி பதிப்பகத்தினூடாக இத்தொகுப்பை வெளியிட விரும்பியபோது, உடனடியாக செயற்பட்டு இந்நூலை விரைவில் வெளியிடுகின்ற ஜீவநதி பதிப்பக க. பரணீதரனுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், எனது குடும்ப உறவுகள், வாசக நண்பர்கள் அனைவரும் எனது வளர்ச்சியில் முக்கிய பங்கெடுப்பவர்கள். அவர்களை இவ்விடத்தில் மறந்து விட்டால் என திருப்தி நிறைவுறாது. அவர்களையும் நினைவிற் கொள்கிறேன்.

இனி, நான் பேசுவதற்கு ஏதுமில்லை
ஒன்பதாவது குரல் உங்களோடு பேசும்.

- தாட்சாயணி
(திருமதி பிரேமினி பொன்னம்பலம்)

பெரிய அரசடி வீதி
சங்கத்தானை
சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிள்ளையாரின் கதை

பிள்ளையாருக்குச் சலிப்பாக இருந்தது.

கலகலவென்று என்ன மாதிரி இருந்த இடம்.

ஒரு நாளைக்கு எத்தனை பேர் வந்து அவர் முன் மன்றாடிச் சென்றிருப்பார்கள். அவர்களில் ஒருவரைக் கூட இன்று அயலில் காண முடியவில்லை.

ஓ... வென்று வானம் பார்த்த வெறு வெளி. மனிதர் கால் படாமற் போனதால் குத்துச்செடிகள் ஆங்காங்கு பூமியைப் பிளந்து வானத்தை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தன.

ஒரு சிறிய ஓலையால் வேய்ந்த கொட்டிலில் பிள்ளையார் வெயிலையும் மழையையும் தன்னிச்சையாய் அனுபவித்த படி விழித்துக் கொண்டிருந்தார். முன்னால் போடப்பட்ட திரைச்சீலை காற்றில் அலைந்து ஒதுங்கிக்கிடக்க, ஏ-9 வீதியால் செல்கின்ற பேருந்துகளையும் பயணிகளை யும் பிள்ளையார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம். பிள்ளையாரின் வசிப்பிடம் கண்டி வீதிக்கு அண்மையிற்தான். கைதடியில் பனைவள ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள பெரியவளவின் ஒரு ஓரத்தில்தான் உட்கார்ந்திருக் கிறார் பிள்ளையார். சின்னதாய்ச் சுவர் எழுப்பி மூன்று பக்கங் களையும் மறைத்து, செங்கட்டிச் சிவப்பிலும் வெண்மையிலு மென வரிவரியான வர்ணம் தீட்டி அந்தக் குட்டி இடம் ஆலய மாக்கப்பட விளைந்த ஆர்வத்தின் வெளிப்பாட்டைக் காட்டியது. முன்னே திரைச்சீலை விலகலினூடு பிள்ளையாருக்கு அவ்வப் போது வெளியுலக தரிசனம் கிடைத்துக் கொண்டிருந்தது.

பிள்ளையார் அங்கு ஆலயம் கொண்ட கதை சுவாரசிய மானது. ஆலயங்கள் உருவாகுவதற்கு வரலாறுகள் இருக்கும். இங்கேயும் அப்படித்தான். கூட்டம் கூட்டமாக வாழ்பவர்கள் தமக்கென்று நம்பிக்கை ஊட்டவும், மகிழ்வையும், துக்கத்தை யும் பகிரவும் சிறு சிறு குழுக்களிடையே இவ்வாறு ஆலயங்களை உருவாக்கிக் கொண்டமை வரலாறு. கோவில் இல்லா ஊரில் யாரும் குடியிருக்கவும் மாட்டார்கள். ஆனால்,கோவில் இருந்த ஊர்களில் வசித்தவர்கள் கூட குடி எழும்ப வேண்டியதாயிற்று. போர் விரட்ட விரட்ட அவர்கள் கோவிலென நினைத்த சொந்த மண்ணைவிட்டு இடம் பெயர்ந்தார்கள். இடம் பெயர்தலின் முடிவில் கூட்டம் கூட்டமாய் சிறுசிறு நிலப்பகுதிகளுக்குள் அடைக்கப்பட்டார்கள். ஒருநாள், இருநாள் என மாறி வாரங்கள் கழிந்து, மாதங்களான போது பொறுக்க மாட்டாமல் அவர்கள் கேட்டே விட்டார்கள்.

“சாப்பாடு வேண்டும்”, “தண்ணீர் வேண்டும்”, “மருந்து வேண்டும்” எனக்கேட்டவர்கள் ஒருநாள் கேட்டார்கள். “எங்களுக்குக் கடவுள் வேண்டும்”, “கோவில் வேண்டும்” என்று. தொடர்ச்சியான அவர்களின் வேண்டுகைக்குப் பிறகு பிள்ளை யார் அங்கு எடுத்து வரப்பட்டார். சுற்றிவரச் சின்னச்சுவர் எழுப்பி, வர்ணமடித்து கூரை எழுப்பி, மணியொலிக்க அந்தச் சனங்களுக்கு அருள் பாலிக்கவென்று எழுந்தருளினார்.

மற்றைய கடவுளரை விடப் பிள்ளையார் மிக இலேசானவர். எங்கேயாவது ஒரு மரமோ, கல்லோ இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் போதும். அடியார்களின் வசதிக்கேற்ப, அவ்வவ் இடங்களில் குடியிருக்க ஆரம்பித்து விடுவார். ஆலடி, அரசடி என்று எங்கெங்கு மரம் இருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த விக்னவினாயகர் அமர்ந்திருப்பதைக் காணலாம். ஆனால், அப்படி மரங்களுக்குக் கீழ் அமர்ந்திருக்கின்ற பிள்ளையார்கள் நீண்ட காலச் சரித்திரத்திற்குள் உட்படக் கூடிய சாத்தியம் குறைவு. அப்படித்தான் இரு வருடத்திற்கு முன் ஏற்பட்ட நிஷா புயலிலும் அதிகப் பிள்ளையார்கள் அடையாளம் இல்லாமல் போனார்கள். நுணாவில் பகுதியில் வீதியோரம் மருத மரத்தின் கீழ் சிறியதொரு கோபுர அறைக்குள் அருள்பாலித்துக் கொண்டிருந்த பிள்ளை யார், அப்படியே அந்தப்புயலில் சிக்கி, பிடரி அடிபட்டது போல் மல்லாந்து விழுந்து கிடந்தார். இரண்டு, மூன்று நாட் களுக்குள் அவரை அவரது பக்த கோடிகள் நிமிர்த்தி விட்டார்கள். வெள்ளத்துக்குள் உடைமைகள் இழந்து தவித்துக் கொண்டிருந்த ஏழை, எளியவர்கள் இழந்தவற்றை மீளப் பெறுவதற்கிடையில் பிள்ளையாரின் பக்தகோடிகள் திரும்பவும் சுவர் எழுப்பி கோபுரமாக்கி கம்பிக்கதவு வைத்து அவரை உள்ளே அமர்த்தி விட்டார்கள். அங்கு விடிகாலையில் எப்போதும் "செம்பரத்தம்பூ" கிடைத்துக் கொண்டிருந்தது பிள்ளையாருக்கு.

இங்கென்றால் பிள்ளையார் வறண்டு போய்க் கிடந்தார். சிறுபூ, தீர்த்தம் எதுவும் கிடையாது. வெயிலிலும் காய்ந்து, மழையிலும் அபிஷேகம் கண்டு ஆனந்தம் கண்டு கொண்டிருந் தார். எப்போதேனும் வீசுகின்ற காற்றில் எற்றுப்படுகின்ற சருகுகளே அவர் முன் பூக்கள் போல விழுந்து கொண்டிருந்தன. ஒரு தீபம்... வெளிச்சம்... ம்ஹூம்... எதுவும் இல்லை. கற்பூர வாசம், ஊதுபத்தி, சந்தனம், குங்குமம், விபூதி இவற்றின் கலவை மணங் கண்டு ரொம்பவே நாளாயிற்று.

நிறைய வர்ணங்கள் பூசிய, மூன்றடியில் நிமிர்ந்திருக்கும் அந்த நுணாவில் பிள்ளையாருக்கும், கன்னங்கரேல் என்றிருக்கும் இந்தக் குட்டிப்பிள்ளையாருக்கும் தான் எத்துணை வித்தியாசம்? இவருக்கும் எண்ணெய் கிடைத்திருந்தால் கறுப்பென்றாலும் "பளபள"வென்று இருந்திருக்கலாம். முன்பென்றால் ஆட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ இருந்தபோது பரவாயில்லை. பிச்சைக்காரன் தனக்குக் கிடைப்பதில் "சொச்சத்தை"த் தன் பின்னே ஒட்டித்திரியும் நாய்க்குப் போடுவது போல், அவர்களும் தமக்கு எதுவும் இல்லா விட்டாலும் தங்கள் நிலைக்கேற்றாற்போல் பிள்ளையாரையும் அவ்வப்போது கவனித்துக் கொண்டார்கள். பிச்சைக்காரன் வசதி கிடைத்துப் போய்விட்டது போல அவரோடு இருந்தவர்கள், இப்போது தமக்கு உரித்தான ஏதோ ஒரு இடத்துக்குப் போய் விட்டார்கள். அவர்கள் இடம்பெயர்ந்து வந்த போது அவர் களுக்காக இங்கு குடி வந்தவர் தானே பிள்ளையார். அவரவர் தங்கள், தங்கள் இடத்துக்குப் போக முடியாவிட்டாலும் ஏதோ ஒரு இடத்திற்குப் போன பிறகு பிள்ளையார் இப்படித்தான் தனியே விடப்பட்டார்.

"சுள்"ளென்று வெயில் எரித்தது. அனல் தகிக்கும் வெயிலை இப்போது தான் அதிகமாய் உணர முடிகிறது பிள்ளை யாருக்கு. முன்பு வெயிலாய் இருந்தாலும் ஆட்பஞ்சம் இருக் காது. மாறி மாறி யாராவது வந்து கொண்டேயிருப்பார்கள். அப்படிப் பிள்ளையாரை யாரும் தனியே விட்டு விட்டாலும் கூட அவருக்குப் பொழுது போக்கிற்குப் பஞ்சம் இருக்காது.

எந்தக் கிராமத்திலுள்ள கோவிலிலும் இப்படி நிறைந்த சனம் திருவிழாக்காலத்திலன்றி ஒருபோதும் கூடியிருக்காது. அந்தவிதத்தில் இந்தப் பிள்ளையாரைச் சுற்றி எப்போதுமே கல கலவென்று ஒரே கூட்டம். எப்போதும் ஆரவாரித்திருக்கும் அவ்விடம் அந்த நாட்களில் முட்கம்பிகளால் சுற்றிவர வளையமிடப்பட்டிருந்தது. யாரும் வெளியே போக முடியாது.

உள்ளே யாராவது வெளி ஆட்கள் வர வேண்டி இருந்தாலும், உரிய அனுமதி எடுக்கப்பட்டே வர முடிந்தது. சில பெரிய "தலைகள்" இலகுவில் வந்து போக முடிந்தது என்பது வேறு விடயம். ஆனால், பிள்ளையார் அங்கு வந்து குடி ஏறுவ தற்கே விசேட அனுமதி எடுக்க வேண்டி இருந்தது. எப்படியோ மிகுந்த சிரமப்பாடுகளுக்கு அப்பால் அங்கு குடி வந்த பிள்ளை யாருக்கு ஆரம்பத்தில் அங்கு இருந்தால் பைத்தியம் பிடித்து விடும் போலவே தோன்றிற்று. ஏனெனில் ஒவ்வொருவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பலும் அப்படி.

"பிள்ளையாரப்பா... உன்னை மட்டும் தானையப்பா, கடைசி வரைக்கும் நம்பி இருந்தன். என்ரை பிள்ளையை என்ரை கண்ணுக்கு முன்னாலை சிதற வைச்சிட்டியேப்பா..."

அது சீதேவிப்பாட்டி அழுத அழுகை. இராமநாத புரத்தில் இருந்த பிள்ளையாரோடு சீதேவிப்பாட்டி வலு சிநேகம்.

எல்லாப் பிள்ளைகளையும் கரை சேர்த்த பிறகு தனது வலது குறைந்த வாய்பேச மாட்டாத முப்பது வயது மகனைக் காப்பாற்றுமாறு சீதேவிப்பாட்டி எத்தனையோ முறை பிள்ளை யாரை இறைஞ்சியிருக்கிறாள்.

"அது பாவம், வாயில்லாத பூச்சி, அந்தச் சீவனை எடுத்துப் போட்டியேப்பா..." பிள்ளையார் மௌனித்துப் போயிருந்தார். சீதேவியின் கேள்வியில் நியாயம் இருந்தது. ஆனால் கர்மவினை...

"கர்மவினை எண்டால் அங்கை செத்த எல்லாருக்கும் ஒரே கர்ம வினை தானோ...? நீ என்ன விசர்க்கதை கதைக்கிறாய்?

பாட்டி உரிமை கொண்டு குரல் உயர்த்தி விடுவாள். ஆனால் பிள்ளையார் எதற்கும் பதில் சொல்வதில்லை.

ஒவ்வொருவர் திருப்திக்கும் பதில் சொல்ல வெளிக் கிட்டால் அது கடைசியில் வாதப்பிரதி வாதமாகி அதன் காரணத்தால் அவர்கள் பிள்ளையாரை அப்படியே பெயர்த்துப் போய் அப்பால் வீசி விடவும் கூடும். அதனால் பிள்ளையார் பேசாமலே இருந்தார், அத்தனை பேரின் அழுகையையும் காதில் வாங்கிக் கொண்டு.

ரதிமலரும் நாளும் பொழுதும் பிள்ளையாரின் காலடியிலேயே வந்து உட்கார்வாள். அவளும், தேசிகனும் சுதந்திரபுரத்திலே சேர்ந்து வாழ்ந்தது ஐந்தாறு மாதங்கள்தான். அதற்குள் சண்டை வலுத்து விட்டது. எப்படியோ, ஷெல்லுக் கும், குண்டுக்கும் இடையில் தவழ்ந்து, தவழ்ந்து வெளியேறி விட்டார்கள். அவர்கள் இயக்கத்தில் பயிற்சி எடுத்தவர்கள் தான். அப்போது அங்கே வாழ்ந்தவர்களில் யார் தான் பயிற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கவில்லை. யாரோ காட்டிக் கொடுத்ததன் பலன், அவனைத் தடுப்புமுகாமுக்கு அனுப்பி விட்டார்கள். அவள் கதறக்கதற, அவனை விட்டுவிடுமாறு கெஞ்சக்கெஞ்ச விசாரித்து விட்டு, விட்டு விடுவதாகக் கூறிக் கூட்டிக் கொண்டு போனார்கள். ஆனால், இன்னும் விடவில்லை. இவள் இங்கே இந்த முகாமுக்குள் அடைபட்டுக் கிடந்தாள். முன்பென்றால் பிள்ளையாருக்கு ஒரு அறுகம்புல் எடுத்து வைக்கக்கூட அலட்சியம் காட்டுபவள். இப்போது நுணாவிலிலிருந்து இடையிடையே சாப்பாடு கொண்டு வரும் சித்தியிடம் பூக்கள் கொண்டுவரச் சொல்லி மாலை கட்டிப் பிள்ளையாருக்குச் சாத்துகிறாள்.

“இவ்வளவு நாளும் உன்னை நான் ஏறெடுத்துக்கூடப் பாக்கேல்லை எண்டோ, என்ரை புருசனைப் பிரிச்சுப் போட்டாய்... என்ரை மனிசனை விடப்பண்ணு. நான் வெளிலை வந்தவுடனை உனக்கு நூற்றெட்டுத் தேங்காய் உடைப்பன்...”

பிள்ளையாரின் மெளனம் இன்னும் கலையாமல் இருக்கும்.

“குட்டிப் பிள்ளையாரப்பா...” மெல்லிய மழலைக்குரல் ஒன்று கேட்பது போலிருந்தது பிள்ளையாருக்கு. தலையைச் சிலிர்த்துக் கொண்டு விழித்தார்.

யாருமில்லை...

அப்படியானால், யாருடைய குரல் அது?

ஓவியா

... கூப்பிடுகிறாள். நாலு வயசுப் பச்சை மண்.

“எனக்கு என்ரை அம்மா வேணும். பிள்ளையாரப்பா....”

அங்கு இருந்த காலத்தில் அவளும், அவள் அக்கா காவியாவும் மனதுருகிக்கேட்ட விடயங்கள். மனைவியும், குழந்தையும் காயப்பட்டு அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுவிட, இந்த இரு சிறிசுகளோடும் தனியே சரிக்கட்ட முடியாமல் மல்லாடும் செங்கீரன். பாசம் நிறைந்த அந்தப் பிள்ளைகள், சீரும்சிறப்புமாயும் வாழ வேண்டிய வயதில் அந்த முகாம் வாழ்வில் உபத்திரவப்பட்டாலும் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரை மறக்கவில்லை.

இப்படிப் பலவிதமான கதைகளையும் கேட்டுக்கேட்டு, மனநிம்மதியைத் தொலைத்திருக்கும் பிள்ளையார், தனது அடுத்த தந்தத்தையும் பிடுங்கி எழுதத் தொடங்கினால் இந்த உலகத்திற்கே ஒரு துயர காவியம் கிடைத்து விடும். ஆனால், அதனால் எந்த ஒரு பயனும் விளைந்து விடப்போவதில்லை என்பது தெரிந்தது போல் பிள்ளையார் பேசாமலே இருந்தார்.

இந்தத் துன்பதுயரங்களிலேயே ஒரேயடியாய் அடி பட்டுப் போகாமல் மீளவும் தங்கள் வாழ்நிலைகளைக் கட்டி எழுப்பும் எண்ணம் கொண்டவர்களும் அவர்களுக்குள் இருக்கத்தான் செய்தார்கள்.

"கெதியிலை வெளிலை போடோணும் பிள்ளை யாரப்பா... இந்த நரகத்திலையிருந்து விடுதலை கொடு" என்று வேண்டாத ஆட்கள் இல்லை. எல்லாரது ஆவலும் விடுதலை என்ற ஒன்றைக் குறிப்பதாகவே இருந்தது. ஆனால், அவர்கள் நினைத்தும் தான் என்ன? வெளியில் போகக்கூடிய சாத்தியம் தான் வாய்க்கவில்லை. மதியம் வரை வயிற்றுப்பாட்டுக்காக கூட்டுச்சமையல் நடந்து கொண்டிருப்பது பிள்ளையாரின் கண்களில்படும். எத்தனை கோயில்களில் அன்னதானம் வைப்பதற்கென்று பெரிய கிடாரங்களில் சமையல் செய்வதை பிள்ளையார் வேடிக்கை பார்த்திருப்பார். அப்படித்தான் இங்கும். ஆனால், ஒவ்வொரு நாளைக்கும் ஆட்களை மாற்றிப் போட்டு சமைத்தார்கள். எப்போதும், கோயிலில் நடக்கும் அன்னதானங்களில் மரக்கறி வாசத்தையே அறிந்து பழகிய பிள்ளையாருக்கு இங்கு பக்கத்தில் நிகழும் கூட்டுச் சமையல் வாசமாக "மச்சமாமிசத்"தின் வாசமும் எட்டத் தொடங்கி யிருந்தது. பிள்ளையாருக்கு ஆரம்பத்தில் அந்த வாடை ஒத்துக் கொள்ளாமலிருந்தாலும், நாளடைவில் அந்த வாடை பழகிப்போயிற்று. முகாமில் இருக்கின்ற "சுப்பிரமணிய அய்யர்" குடும்பம் தான் அதனால் கொஞ்சம் கஷ்டப்படுவதாக பிள்ளை யாருக்கு ஒரு உறுத்தல். "நெடியகாட்"டில் பூவைத்துப்பூசை செய்த அந்த அய்யருக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிட வேண்டும் என்று தான் துடித்தார். ஆனால், எதுவுமே செய்துவிட முடியவில்லை.

மதியம் தாண்டி மாலைப்பொழுதானால் இளைஞர்கள் பந்தடித்து விளையாடுவார்கள்.

“நல்லம், நல்லம், சாப்பிட்டு சும்மா தூங்கக்கூடாது. இப்பிடி இருந்தாத்தான் வெளியிலை போனாப்பிறகு நல்லா வேலை செய்யலாம்...”

அங்கிருந்த புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த “சோமபால” அவர்களை ஊக்குவித்தபடியே சொல்லுவான்.

அடிக்கடி அங்கிருப்பவர்களை அவன் விசாரணை செய்வான். அவனது விசாரணை எவ்வளவு காலத்திற்கு நீளும் என்று அவனுக்கே தெரியாது எனச் சில இளைஞர்கள் பெருமூச் செறிவார்கள்.

பிள்ளையார் அந்த விளையாட்டுக் கூச்சலுக்குள் கொஞ்சம் உற்சாகம்பெற விழைவார். சிலவேளைகளில் பந்து இவரது முற்றத்தில் விழும். ஓடி வரும் இளைஞர்கள் சத்தமாய் ஆர்ப்பரித்துப் பந்தைப் பொறுக்கிக் கொண்டு போவார்கள். சில பெரிசுகள் பிள்ளையாரின் முற்றத்தில் அமர்ந்து விளையாட்டை ஆற அமரப்பார்த்துக்கொண்டிருப்பார்கள். எல்லாக்கதைகளும் பிள்ளையார் கேட்டுப் பழகிய ஒரேவிதமான கதைகளா யிருக்கும்.

பிறகு, கொஞ்சம் கொஞ்சமாய் அந்த இடத்தில் ஆட்கள் குறையத் தொடங்கினார்கள். அறுபது, எழுபது என்று ஆட்களை இடைக்கிடையே வந்து பெரிய பேருந்துகளில் ஏற்றிக் கொண்டு போனார்கள்.

சிலரை முகாம் மாற்றப் போவதாய் சொன்னார்கள். மற்றும் சிலரை விடுவிக்கப் போவதாய் சொன்னார்கள்.

விடுவிக்கப்பட்டவர்கள், பிள்ளையார் முன் வந்து தோப்புக்கரணம் போட்டுக் குட்டிக் கும்பிட்டு விட்டு குதூகல மாய் வெளியேறினார்கள். சுதந்திரக்காற்றினைச் சுவாசிப்ப தென்பதன் அர்த்தம் இது தானோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிக்கப்படாதவர்கள் வந்து முறையிட்டார்கள்.

பிள்ளையாரால் என்ன தான் செய்ய முடியும்?

பேசாதிருந்தார்.

மீண்டும், கொஞ்சம் கொஞ்சமாய் அந்த இடத்தில் ஆட்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆயிரக்கணக்கில் தங்கி யிருந்தவர்கள் நூறாய், பத்தாய், ஒன்றாய் சுருங்கி ஒருவருமே இல்லை என்றாயிற்று.

முன்னே அமைக்கப்பட்டிருந்த தற்காலிகப் பாடசாலை ஒவ்வொரு குடில் குடிலாய் அகற்றப்பட்டது. இந்த முகாமுக்குள்ளும், ஓலைக் கூரைகளாலும், தறப்பாள்களாலும் போர்த்தப்பட்ட குடிசைகள் ஒன்றொன்றாய் கழற்றப்பட்டன. முட்கம்பிகள் அகற்றப்பட்டன. சீருடைகள் அப்பால் போயின.

பிள்ளையாரின் குடில் அப்படியே இருந்தது. மேல் கூரை வெயிலிலும், மழையிலும் இற்றுப் போனது. சுவரின் கடுஞ் சிவப்பு வண்ணக்கோடுகள் நிறம் மங்கித் தோன்றின. காற்றிலும், வெயிலிலும் வெளுத்துப்போன திரைச்சீலை ஒதுங்கி ஆடியது.

பிள்ளையாரை விடுவிக்க யாரும் இல்லை.

முட்கம்பிவேலி இல்லை.

சீருடையுடன் இராணுவத்தினர் இல்லை.

குடில்கள் கிளப்பப்பட்ட இடத்தில் மக்கள் விடுவிக்கப் பட்டு ஒரு வருடமான பிறகு குத்துச் செடிகள் குபீரெனப் புறப்பட்டு அந்த இடத்தில் ஒரு காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு சேரக் குவிந்திருந்ததை மறைக்க முயற்சித்துக் கொண்டிருந்தன.

வெறும் கட்டடமாகவே பலகாலமாய் வெறித்திருக்கும் பனை வள ஆராய்ச்சி நிலையம் குறுங்காலக் கலகலப்போடு, மீளவும் அந்த மயான அமைதியில் மூழ்கிக் கொண்டது.

பிள்ளையாருக்கு இப்போது தனிச்சிறைக்குள் இருப்பது போலான பிரமை.

தனது வலது குறைந்த பிள்ளையை பறித்து விட்டதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதேவிப் பாட்டி எந்தப் பிள்ளையாரிடம் இப்போது தனது மனக்குறையைக் கொட்டிக் கொண்டிருக்கிறாளோ தெரியாது.

தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த ரதிமலரின் கணவன் முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டானா? இல்லையா? அதுவும் தெரியாது.

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கென அனுப் பப்பட்ட ஓவியாவின் தாயும், தம்பியும் சுகமாகத் திரும்பி வந்து இவர்களோடு சேர்ந்தார்களோ...? அதுவும்தெரியவில்லை.

எல்லாவற்றையும் அறிவதற்கு ஊரை ஒரு சுற்றுச்சுற்றி வர வேண்டும் போலிருக்கிறது பிள்ளையாருக்கு.

அவரை யாரும் விடுவிக்கவுமில்லை. விடுவிக்கப் போவதுமில்லை.

தூரத்திலிருந்த கிணற்றில் நாலைந்து பெண்கள் குடத் தோடு வந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு போகிறார்கள்.

கொழும்பிலிருந்து வருகின்ற பேரூந்துகள், வீதிப் பள்ளங்களில் ஏறி இறங்கித் தயங்கி நகர்கின்றன.

பிள்ளையாரின் திரைச்சீலை ஆடி அசைகிறது.

எல்லோரையும் விடுவித்த பிள்ளையாரை விடுவிக்கப் போவது யார்...?

பிள்ளையார் எப்போதும் போல ஒன்றுமே பேசாமல் வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

- தினக்குரல் : ஜனவரி - 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புக் கோடு

சைக்கிளை விட்டு விட்டு ஓடித் தான் வர வேண்டியிருந்தது.

ஒரு கல் தடக்கினால் போதும் அந்தநாளின் ஆரம்பமே, உடைந்து சிதறி விடக்கூடும்.

மனதுக்குள் எச்சரிக்கை மணி ஒலித்து, ஒலித்து, "நிதானம் காட்டு", என்றது.

இன்னொரு பக்கம், தாமதமாய்ப் போனால் ஏற்படக்கூடிய விளைவுகள் அவளை எட்டிப்பார்த்து "ஓடு சீக்கிரம்" என்றன.

இரண்டு விதமாய் தளும்பும் மனதைச் சமப் படுத்த முடியாமல் தடுமாறி விறுவிறென்று நடந்தாள்.

சிலவேளைகளில் இப்படித்தான் ஆகிவிடுகின்றது. எவ்வளவு தான் ஜாக்கி ரதையாக இருந்தாலும், அசந்தர்ப்பமான தருணங்கள் வாய்த்து விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு இப்படி அவசரமான காலங்களைக் கடந்து வந்ததாய் ஞாபகமில்லை பொறுப்பில்லாமல் இறக்கையடித்துப் பறந்து திரிந்த காலம் "டாணெ"ன்று ஏழு இருபத்திற்கு அவள் தயாராகி பஸ் நிறுத்தத்தில் நிற்பாள். எந்த அவசரமும் இல்லாமல், நிதானமாய் தன்னை அலங்கரித்து ஏழுமணிக்குச் சாப்பிட வேண்டி யிருக்கிறதே என்ற அங்கலாய்ப்புக்கூட இன்றி, அம்மா சமைத்து வைப்பதில் இரண்டு கவளம் வாயிலிட்டுக் கொறித்துவிட்டு மதியச் சாப்பாட்டைப் பொதிபண்ணி, சாவகாசமாய் வெளிக்கிட்டு... இரண்டு வருடங்கள் அப்படித் தான் வேலைக்குப் போய் வந்தாள். அப்போதெல்லாம் அவள் அந்த பஸ்ஸைத் தவறவிடுவதே யில்லை. சிலவேளைகளில் அந்த பஸ் வரத்தவறுமே தவிர, அவள் ஒரு போதுமே அதைத் தவற விட்டதில்லை. சற்றே நெரிசலாய் இருந்தால் தவிர, ஒரு போதுமே அவளுக்கு பஸ் பயணம் அலுத்ததில்லை. இவளது நிறுத்தத்தில் பஸ் வரும்போது ஆசனங்கள் நிரம்பியிருக்காது. ஓரிரு ஆசனங்களேனும் வெறுமையாயிருக்கும். அலுவலகத் திற்கருகே இறங்கும் வேளையில் தான். சனங்களை விலக்கி இறங்குவதற்குச் சிரம்பட வேண்டியிருக்கும். இடையிடையே பேரூந்தில் ஒலிக்கும் பாடல்களின் ரசனையோடு இவள் அப்போது உல்லாசப் பறவையாயிருந்தாள். அப்போதெல்லாம் இடைவழியில் அரக்கப்பரக்க ஏறுகின்றவர்களைப் பார்த்தால் எரிச்சலாயிருக்கும். ஏன் நேரத்திற்குப் புறப்பட்டு வர வேண்டியது தானே. தாமதமாய் வந்துவிட்டு, எதற்காக பஸ் புறப்பட்டு விட்டதென்ற அங்கலாய்ப்பு என்றே எண்ணத் தோன்றும். அலுவலகத்தில் கூட இவள் எட்டரைக்கு முன்ப தாகக் கையொப்பமிட்டு விடுவாள். ஒன்பது மணிவரைக்கும் அவசரப்பட்டு ஓடிவந்து கையொப்பமிடுபவர்களைப் பார்த்தால் எரிச்சல் மிகும். இருபது கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் அவள் முன்னமே வந்துவிட, அலுவலகத்திற்குப் பக்கத்தில் இருப்பவர்களெல்லாம் இப்படி பிந்தி வருவது அவளுக்குச் சகிக்கக் கூடியதாய் இருப்பதில்லை.

"நான் இஞ்சை வந்து சேர்ந்தாப்பிறகு தான் சிலபேர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டாலையே வெளிக்கிடுவீனை..." என்று ஆற்றாமை தாளாமல் பானுவிடம் புலம்பியிருக்கிறாள்.

"அவரவருக்கு, அவரவற்றை பிரச்சினை உனக்கு ஒரு பொறுப்பும் இல்லை உப்பிடித்தான் சொல்லுவாய். பொறுப்பு வந்தாப் பிறகு தெரியும்..." என்பாள் பானு.

"நான் உப்பிடி வரன்..." என்பாள் அவள் வீறாப்பாக.

பானு எல்லார் பக்கத்திலுமுள்ள நியாயங்களை வடி கட்டிப் பார்ப்பதில் வல்லவள். அதற்கு அவள் வளர்ந்த குடும்பச் சூழ்நிலையும் காரணமாக இருக்கலாம்.

இப்போது இவளது நிலைமை மாறிவிட்டது. பொறுப்புக்கள் கூடிவிட்டன. கணவன். குழந்தை என்று குடும்பம் வளர்ந்து விட்டது. ஆனால் வேலைத்தலத்திற்குத் தான் மாற்றம் கிடைக்கவில்லை. யார், யாரோ எப்படி, எப்படியோ மாற்றம் எடுத்துக் கொண்டு போக அவள் மட்டும் நான்கு வருடங்களாக ஒரேயிடத்தில் வேலை செய்து கொண்டி ருக்கிறாள். ஊருக்குள் என்றால் பரவாயில்லை. இந்தப் போக்கு வரத்துப் பிரச்சினை தான் பெரிதாக மாறி நான் முழுதையும் தின்று கொண்டிருக்கிறது. அதனால் விளைகிற தொல்லை களும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றன.

கணவன் ஆசிரியர். இவள் ஒரு தொங்கலில் என்றால், அவனுக்கு இன்னொரு தொங்கலான இடத்தில் பாடசாலை. இவளுக்கு முதலே கிளம்பிப் போய்விடுவான். அவனது மோட்டார் சைக்கிளில் தொற்ற முடியாத அளவிற்கு இன்னொரு திசையில் இருக்கிறது அவளது வேலைத்தலம். நாலு மணிக்கு எழுந்து முற்றத்துச் சரை கூட்டி சமைத்து, குளித்து, வீடு வாசல் கூட்டி இருவருக்கும் சாப்பாடு கட்டி, குழந்தையை எழுப்பி, அதன் அலுவல்கள் பார்த்து, உணவு புகட்டி, கொஞ்ச நேரமென்றாலும், குழந்தயைக் கொஞ்சி, அம்மா வீட்டுக்கு எட்டி நடந்து, பிரிய மறுக்கும் குழந்தையை அம்மாவிடம் கொடுத்து விட்டு வந்து, சைக்கிள் உழக்கிப் பிரதான வீதிக்குக் கிட்ட இருக்கும் தெரிந்தவர்கள் வீட்டில் சைக்கிளை விட்டுப் பூட்டி, எட்டி நடந்து பஸ்நிறுதத்தை அடைந்தால், சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் பஸ் அப்போது தான் அவ்விடத்தைக் கடந்து போயிருக்கும். அப்போதெல்லாம் அவளுக்குச் சினம் ஆங்கார மாய்ப் பொங்கும். கொஞ்சத்தூரத்தில் தவறவிடப்படும் பஸ்வண்டி எவ்வளவு சுயபச்சாதாபத்தைக் கிளறும் என்பதை, அதை உணர்ந்தவர்களிடம் தான் கேட்டுப் பார்க்க வேண்டும்.

வழக்கமாக வருகின்றவள் இல்லை என்றால், தூரத்தில் வருகின்றாளா என்று கவனிப்பதில்லையா எனச் சாரதி மேல் கோபம் கிளம்பும். அந்த பஸ்ஸிற்குள் இருக்கின்ற யாராவது, இவள் ஓடி வருவதைக் கண்டு பஸ்ஸை நிறுத்தக் கூடாதா என்று தோன்றும். ஊஹூம் அவளுக்குச் சாதகமான எந்தவொரு அசைவுமின்றி பஸ் தன்பாட்டில் புறப்பட்டுப் போய்விடும். அந்த பஸ்ஸை விட்டால், பிறகு முக்கால் மணி நேரத்திற்கு அந்தப் பாதையில் பஸ்ஸே இருக்காது. சில சமயங் களில், அடுத்த பஸ் வருவதற்கு ஒரு மணி நேரம் கூட ஆகும். அது வரைக்கும் வெறுத்துப் போய், வீதியில் நிற்க வேண்டியதை நினைத்தாலே உடம்பு கசகசத்துப் போகும். அந்த முக்கால் மணி நேரத்திற்குக் குழந்தையைக் கொஞ்சவும் முடியாமல், அலுவலகத்திலு மில்லாமல் வெட்டியாய் பொழுது போவதை நினைத்தாலே, இனிமேல் வேளைக்கு வந்துவிட வேண்டுமென்று தான் தோன்றும். ஆனால் குழந்தை குடும்பமென்று வந்தபிறகு, நினைத்தது எப்படிச் சாத்திய மாகிறது...?

அடுத்தபஸ்ஸில் புறப்பட்டால், எப்படியும் ஒன்பதை மட்டுமட்டாகத் தொடுகின்ற வேளைகளில் தான் அலுவல கத்தை அடைய முடியம். பெரும்பாலான நேரங்களில் சிவப்புக் கோட்டிற்குக் கீழே தான் கையொப்பமிடவேண்டி நேர்கிறது. முன்பென்றால் சிவப்புக் கோட்டை இவள் கண்ணால் கண்டதே அரிதாக இருக்க, இப்போதோ ஒன்று இரண்டு நிமிடங்கள் காரணமாக “ஷோட் லீவும்” போடவேண்டி வந்து விடு கிறது. லீவு போனால் போகிறதென்று விட்டுவிடலாம். இது வரைக்கும் அவள் எடுத்த லீவுகள் எண்ணி விடக் கூடியளவு குறைவாய் இருப்பதால் அதைப்பற்றி அவள் பொருட்படுத்துவதில்லை. ஆனால் பிந்திப் போவதால் எழும் மனக்குறுக்கம் அவளை மீள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும்ப விடுவதில்லை. முன்பெல்லாம் வருடமுடிவில், எந்த ஒரு லீவும் எடுக்காதவள் என்று டிசம்பர் முப்பத்தொன்றில் பீற்றிக் கொள்வதில் அவளுக்கு அலாதி இன்பம் இருந்தது. ஒவ்வொரு மாதமும் இருக்கின்ற இரண்டு குறுகிய லீவுகளையும் பெற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பது போல். தேவையில்லாது விடினும் லீவு எடுக்கின்றவர்களைக் கண்டால் ஒரு கொதிப்பு ஏற்படும். அதிலும் வேணி வேண்டுமென்றே முப்பது, முப்பத் தோராம் திகதிகளில் குறுகிய விடுமுறை போடுவாள்.

"என்னத்துக்காம் இப்ப ஷோட் லீவ் ... வீட்டிலை நித்திரை கொள்ளவோ...? என இவள் முணுமுணுப்பதைக் கண்டால் பானு சமாதானப்படுத்துவாள்.

"உனக்கென்னடி, நீ வீட்டிலை ராசாத்தி செல்லப் பிள்ளையாயிருப்பாய். நாங்களெல்லாம் அப் பிடியோ... நாங்கள் தானை எங்கட அலுவல் பாக்கோணும்"

"அதுக்கு சனி, ஞாயிறு கிடக்குத்தானை..." என்பாள் இவள்.

"சனி, ஞாயிறு ஓ.ரி போடவெல்லோ கிடக்கு ..." என்று பரிகாசமாய்ச் சிரிப்பாள் பானு. அவள் சனி, ஞாயிறு வேலை செய்வதற்கு வராவிடினும் வேணியின் இயல்பு புரிந்து தான் அப்படிச் சொல்வாள்.

குடும்பத்து அலுவல் பார்த்தால் அது வேறு. தேவை நிமித்தம் என்று சொல்லலாம். ஆனால் சேலை வாங்கவும், நகை வாங்கவும் அலுவலக நேரத்தில் "ஷோட் லீவு" போட்டுவிட்டா போகவேண்டும்?

இப்போது இவளும் "ஷோட்லீவு" போட வேண்டி நேர்கிறது தான். கணவன், பாடசாலை முடித்து, ரியூசன் கொடுத்துவிட்டு வர எப்படியும் இவள் வருகின்ற நேரம் ஆகிவிடும். இவள் வந்து அம்மாவிடம் போய் குழந்தையை வாங்கி கணவனுக்குத் தேனீர் போட்டுக் கொடுத்து, குழந்தைக்குப் பால் புகட்டி, இரவுச் சமையல் பார்த்து, பார்த்திரங்கள் விளக்கி, பிறகு கொஞ்சநேரம் குழந்தைக்கு அம்மாவாக மாறி அதனோடு விளையாடி ... அடடடா ... காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு வேகமாகப் போவது தெரியாமல் போகிறது. அப்படியான வேளைகளில் தான் சிறிதேனும் ஆறுதலாக இருக்க வேண்டி "ஷோட் லீவு" போடுகிறாள். ஆனால், காலையில் பஸ்ஸைத் தவறவிடும் நேரங்கள். அது வேறாகப் போய் விடு கின்றது. வழக்கமான செயற்பாடுகளை விரைவில் முடித்து விடலாம் அல்லது நேரத்திற்கேற்பச் சுருக்கி விடலாம். ஆனால் கணவன், குழந்தைக்கு ஏற்படும் உடல் சுகவீனங்கள், அசௌகரியங்கள், குழந்தையின் நேரம் கணிப்பிட முடியாத சில தேவைகள் போன்றன எப்போது நேரும் என்று சொல்ல முடியாமலல்லவா இருக்கிறது. சளித்தொல்லை கூடினால் சதா அழுதுகொண்டேயிருக்கும் குழந்தையைச் சமாளித்து அழுகை நிறுத்துவதற் கிடையில் சமயங்களில், சில நிமிடங்கள் தொலைந்து போயிருக்கும். பிறகு எப்படிப் பேரூந்தைப் பிடிக்க முடியும்...? இன்று கூட அப்படித்தான் எல்லா வேலையும் முடித்து குழந்தையைத் தூக்கிக் கொஞ்சியபோது, குழந்தை சேலையை நனைத்து விட்டது. மளமளவென்று சேலையை மாற்ற வேண்டியதாகி விட்டது. வேறொரு சேலை கட்டி, பழைய சேலையை தண்ணீருக்குள் கழுவி, காயப் போட்டு விட்டுக் கிளம்புகையில் தான் இந்த அவசரம்.

இவள் சைக்கிளை விட்டு விட்டு வீதிக்கு வருவதற் கிடையில் பஸ் கிளம்பிவிட்டது. இனி ஒரு மணி நேரத்திற்கு தெருவில் தவமிருக்க வேண்டியது தான்.

தலை கிறுகிறுவென்றது. உடம்பு முழுக்க வியர்த்து விட்டது. இனி இன்றைய பொழுதுமுழுக்க "நசநச"வென்று தானிருக்கப் போகின்றது. சீ... என்றிருந்தது. மாதக்கடைசி வேலைகள் அதிகமாகக் குவிந்திருக்கும். இந்தநேரம் இப்படி... சிவப்புக்கோடு வேறு விழப் போகிறது. வாழ்க்கை ஒரேயடியாக இப்படி இவளை மாற்றிப்போடும் என்று அவள் நினைத்திருக்க வேயில்லை.

இப்போது பஸ்நிறுத்தம் வெறிச்சோடி யிருந்தது. இவள் மட்டுமே நின்றிருந்தாள். ஏற்கனவே நின்றிருந்த எல்லோரும் பஸ்ஸில் ஏறிப் போயிருந்தனர். அவர்களில் ஒருவருக்காவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதா...? இவள் சைக்கிளை விட்டுவிட்டு வரப்போவது பற்றி. எல்லோருக்கும் அவரவர் கவலைகள்.

அந்த பஸ்ஸில் போயிருந்தால் ஓரளவு சீரான வேகத்தில் குறைந்தளவு சனங்களோடு போயிருக் கலாம். இனி வரும் பஸ்ஸில் சனம் கூடவாய் இருக்கும். சந்தை, ஆஸ்பத்திரி, வங்கி என்று தமது தேவைக்கு வெளிக்கிடும் பொதுசனங்களை அதிகம் கொண்டிருக்கும். இவளைப் போல தாமதமாக வேலைக்குக் கிளம்புகின்ற ஒருசில அலுவலர்களுக்காக ஏன் விரை வாகப் போகவேண்டும் என்பது போல பஸ் ஊர்ந்து கொண்டிருக்கும். வேகமெடுக்காத பஸ்ஸைச் சினந்து என்ன செய்வது...?

சலிப்பான அவஸ்தையோடு காத்திருந்தாள். நேரம் ஆமை போல நகர்ந்தது. இதுவரை வீட்டுவேலை செய்து கொண்டிருக்கையில் கடுகதி போல் நகரும் நேரம் இப்போது அசைய மறுப்பதுபோல தோன்றுவது அதிசயமான விடயம் தான். அடிக்கடி மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டாள். எப்படியும் இன்றைக்கு வேளைக்குப் போயே ஆகியிருக்க வேண்டும். எவர் தலையீடும் இன்றி வேலைகளை வேளைக்கு முடித்தால்தான் பின்னேரமாவது, ஒழுங்காக பஸ்ஸைப் பிடிக்க முடியும். வேலை முடியாவிட்டால் பிறகு அங்கும் தாமதித்து, மாலை வருகையும் தாமதித்துப் போகும்.

வீட்டுக்கவலைகள் மறந்து இப்போது செய்து முடிக்க வேண்டிய அலுவலகக் கடமைகள், அலுவலகப் பிரச்சினைகள் மனதில் துருத்திக்கொண்டு நின்றன. எப்போதும் இப்படித்தான். அலுவலகத்திற்கு வந்தால், வீட்டுப் பிரச்சினையும், வீட்டிற்கு வந்தால், அலுவலகப் பிரச்சினையும் மனதுக்குள் சுழன்று கொண்டிருப்பது ஒரு நிர்ப்பந்தமாகிவிட்டது. இதை விரைவில் மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மனநிம்மதியைத் தொலைக்க வேண்டி வந்துவிடும்.

நிறுத்தத்தில் இப்போது சனங்கள் கூடி விட்டார் கள் வேலைக்குப் போகின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாய் குறைந்திருந்தது. சந்தை, ஆஸ்பத்திரிக்குப் போகின்றவர்கள் தான் நின்றிருந்தார்கள். வேலைக்குப் போகின்றவர்களும் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாறு ரூபாய் தூரத் திற்கு செல்கின்றவர்களாய் இருந்தார்கள். இவளுக்கும் அது குறித்து ஒரு எரிச்சல் ஏற்பட்டிருந்தது. கொஞ்சத் தூரம் செல்வதற்கு பஸ்ஸை மறித்து, ஏறி இறங்கி இனி மினக்கடுத்தப் போகின்றார்கள். அதேபோல இனி இந்தச் சந்தைச் சனம் சாமான் மூட்டைகளோடு இறங்கி நேரம் மினக்கடுத்தப் போகிறது.

எல்லாம் அவள் பிழை. அவள் நேரத்திற்கு வந்திருந்தால் இந்த பஸ்ஸில் ஏறவேண்டி வந்திருக் காது.

நேரம் நகர்ந்து எட்டு மணியைத் தொட்ட போது தூரத்தில் பஸ்ஸின் முகம் தெரிந்தது. அப்பாடா ... என மூச்சு விட்டாள். பஸ் கிட்டே வந்தவுடன், அவளது நிறுத்தத்தில் இறங்கு பவர்களுக்கு வழிவிட்டு ஏறினாள். உள்ளே வழியை அடைத்துக் கொண்டு சனங்கள் நின்றிருந்தார்கள். உள்ளே செல்லவும் விடாமல் வழியையும் மறித்துக் கொண்டு நிற்பவர்கள் மீது எரிச்சல் பீறிட்டது.

“வழியை விடுங்கோ...” என உள்நகர முற்பட்ட போது அவர்கள் சற்றும் அசைந்து கொடுப்பதாய் இல்லை. இவள் இடித்துக் கொண்டு உள்நகர்ந்தாள். அதற்குள் நின்றிருந்த ஒரு பெண் இவளைக் கோபமாய்ப் பார்த்து ஏதோ முணுமுணுத்தாள். இவள் அதைக் கவனிக்காதது போல் உள்ளேறி ஒரு இடை வெளிக்குள் புகுந்து கொண்டாள். பஸ் ஒவ்வொருவருக்குமாக, சில, பல நிமிடங்களை விழுங்கிக் கொண்டு ஆறுதலாக நகர்ந்து கொண்டிருந்தது.

“சீ... இப்பிடி முதல் வந்த பஸ்ஸூம் நிண்டு பாத்துப் போயிருந்தா எனக்கிந்த வில்லங்கம் வந்திராது ...” என முணுமுணுத்துக் கொண்டாள்.

இவள் பிடித்துக் கொண்டிருந்த ஆசனத்திலிருந்த ஒரு வயோதிபர் எழும்பினார். இவள் அந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு தற்செயலாய் திரும்பிய போது சற்று முன் வழிவிடாமல் முணுமுணுத்த பெண் இவளை விரோதமாய் பார்ப்பது போலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸின் மணியை திடீரென்று யாரோ அடிக்க ஒரு களேபரம், "ஆர் மணி அடிச்ச...? ஆர் இறங்குற...?" என்று கிளம்பியது

"ஆக்கள் வரீனை... ஆக்கள் வரீனை..." யாரோ சொன்னார்கள். சனங்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

அந்த ஒழுங்கைக் குள்ளிருந்து இருவர் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். இப்படி அவள் வரும்போது யாரேனும் பஸ்ஸை நிறுத்தியிருக்கக் கூடாதோ...? என்று தோன்றிற்று.

கடிகாரத்தைப் பார்த்தாள். பரபரவென்று வந்தது. எட்டு நாற்பதை நெருங்கியிருந்தது. எப்படியும் ஒன்பதிற்குள் போய் விட வேண்டுமே.

பஸ் தங்களுக்காகத்தான் நிற்கிறது என்று ஓட்ட வேகத்தைக் குறைத்து ஏனோ தானோ என்று வரும் அந்த இருவர் மீதும் மீண்டும் ஒரு கோபம் ஏறி உட்கார்ந்து கொண்டது. அவர்கள் வருவதற்கிடையில் இரண்டு மூன்று தரம் கைக்கடி காரத்தைப் பார்த்து விட்டாள்.

பஸ் புறப்பட்டது. பிறகு ஒரே சீரான வேகம். இவள் ஆசுவாசப் பெருமூச்சோடு, அந்த ஆறுதல் தொலைந்துவிடக் கூடா தென்ற பிரார்த்தனையில் இருந்தாள். அடுத்த நிறுத்தத்தி லும் இரண்டொரு பேர் நிற்பது தெரிந்தது.

பஸ் வேகம் குறைத்து நின்றது. அவர்கள் ஏறியதும் வேக மெடுத்த பஸ்ஸிலிருந்து எதேச்சையாக மறுபுறம் திரும்பிய போது அவள் "அந்தப் பெண்ணை"க் கண்டாள். ஒழுங்கை முடக்கில் அவள் தென்பட்டாள். நகரும் பஸ்ஸைக் கண்டவுடன் அவள் ஓடிவர எத்தனிப்பது தெரிந்தது. இவளது மனதில் சடுதியான பயம் ஒன்று உறைக்க கடிகாரத்தைப் பார்த்தாள். ஒன்பது மணிக்குப் பத்து நிமிடங்களே இருந்தன. மீண்டும் திரும்பிய போது அவள் தூரத்தில் கையசைத்தபடியே ஓடி வருவது தெரிந்தது. இவள் பக்கென முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்தப் பெண்ணுக்காக யாரும் பஸ்ஸை நிறுத்திவிடக் கூடாதே என்று இப்போது தோன்றியது.

- ஜீவநதி :ஆவணி - 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாருமதியின் வீடு

அந்த முற்றத்தில் இப்போது பாதச்சுவடுகள் கூடுகின்றன.

புதிய, புதிய சுவடுகள்...

யார், யாரோ...? எவர், எவரோ...?

அந்த வீடு முன்னெப்போதும் காணாத பலபேரைத் தன் அறைகளுக்குள் அனுமதிக்கிறது.

இன்னும் கொஞ்ச நாள்தான்.

அதற்குப் பிறகு அந்த வீட்டின் மீதான எனது நெருக்கம் விலக வேண்டியது தான்.

இது வரைக்கும் அதனோடிருந்த ஒட்டுறவு கழன்று வெறும் ஏக்கப் பெரு மூச்சுக்களோடு அதைத் தாண்டிப் போக வேண்டியதுதான்.

எனக்கே இந்த அவதி என்றால்... சாருமதிக்கு...?

சாருமதி இங்கு இல்லை.

அவள் இப்போது இங்கு இல்லாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருப்பதே நல்லது.

எப்போதாவது அவள் திரும்பி வருவாள் என்ற நிலையும் இனி இல்லாமலாகும்.

இனி, எந்த ஒரு காலத்திலும், அவள் இங்கு வரப் பிரியப்படமாட்டாள்.

எப்போதாவது வந்திருக்கலாம்.

வராமல் விட்டுவிட்டு இனி ஏங்குவதில் அர்த்தமொன்று மில்லை.

சாருமதியின் வீடு எப்படியெல்லாம் இருந்தது அப்போது.

வாயிலின் இரண்டு பக்கமும் சரிந்து, வீட்டை நோக்கிச் செல்லும் பச்சைச் செடிகள் மூன்றடிக்கு அழகாகக் கத்தரிக்கப் பட்டிருக்கும். புல்வேலி போல் பசுமை. முன் படலைக்குக் குடை பிடிப்பது போல் ஜாம் மரம். குறுணல், குறுணலாக சிவந்த பழங்களையும், கூடவே சில குருவிகளையும் கொண்டிருக்கும். பின் வளவில் ஒரு பெருநெல்லி நின்றது. சாருமதியின் அம்மா பெரிய, நீண்ட கொக்கத்தடி தந்து நெல்லிக்காய் பறித்த ஞாபகம் நெஞ்சின் ஓரத்தில் பதுங்கியிருக்கின்றது

சிறுவயதில் சாருமதி பள்ளிக்கு வரும்போது, நெல்லிக் காய் கொண்டு வருவாள். எங்கள் வீட்டுப்பக்கம் வேறெங்கிலும் பெரிய நெல்லி இருந்ததில்லை. அவள் ஒன்றொன்றாய், ஒவ் வொருவருக்கும், நெல்லிக்காய் பகிர்ந்து தருவாள். இன் னொன்று... இன்னொன்று... என்று கேட்டு, அவளது நெல்லிக் காய் களுக்காகவே நான் அவளோடு சிநேகமாயிருக்கிறேன்.

அவள் எனக்கு நெருக்கமான சிநேகிதி என்றில்லை. அவள் என்னூர்க்காரி என்பதால், சிறு வயதில் ஆரம்பித்த நட்பு. அவ்வளவுதான். அவளுக்கு நெருக்கமாக அஞ்சுவும், யாழியும் ஒட்டிக் கொண்டு திரிந்தார்கள். எனக்கு பானு நெருக்கமா யிருந்தாள். சாருமதி எனக்கு சாதாரணமான ஒரு வகுப்புத் தோழி. அவ்வளவே.

ஆனால், ஒரு நெல்லிக்காய்க் காலத்தில், அவளோடு என் உறவு முறிந்து போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அவளது தோழிகளதும், என் தோழியினதும் போட்டியினால் ஏற்பட்டதாயிருக்கலாம்.

ஒவ்வொரு முறையும் பெரி நெல்லிக்காயில் எனக்குள்ள விருப்பம் உணர்ந்து, கொண்டு வந்து தருவாள் அவள். அந்த நெல்லிக்காய்ப் பரிமாற்றம் எல்லாவித நட்புக்களைவிடவும், அபரிதமான தாயிருந்தது. ஆனால், அந்தமுறை அஞ்சுவும், யாழியும் என்மீதிருந்த சாருவின் அன்புரிமையைப் பறித்து விட முனைந்தனர். அதிகூடிய நட்புக்களாய்த் தாங்கள் இருக்கும் போது அவள் எப்படி முதல் நெல்லிக்காயை என்னிடம் தரலாம் என்பதாகத்தான் தொடங்கிற்று அது.

சாரு அதற்குப் பதில் சொல்லமாட்டாமல் திணறினாள். எத்தனை புதிய நட்புக்கள் வந்தாலும், இளமையிலே ஆரம்பித்த நட்பை அவள் எப்படி உடைத்துவிடமுடியும்?

அதற்குள் பானு குமுறிவிட்டாள். நெல்லிக்காய் வேண்டு மானால் சந்தையில் வாங்கிக் கொள்ளலாம். இதற்குப்போய் ஒரு நட்புத் தேவையா...? என்று உருவேற்றினாள் அவள்.

அதற்குப் பிறகு சாருமதியும், நானும் பேசிக்கொள்வ தில்லை. அஞ்சுவோடும், யாழியோடும், பானு முறுகிக் கொண்டாள். நெல்லிக்காயில் அவர்களுக்கு விருப்பமதிக மில்லாவிட்டாலும், நெல்லிக்காய்க் காலங்களில் என் கண்களில் படும்படி கன்னங்களை உப்ப வைத்துக் கொண்டு செல்வதை, நான் கண்டும் காணாத மாதிரிச் சென்றிருக்கிறேன்.

இதெல்லாம், பத்தாம் வகுப்பில் நாங்கள் படிக்கும்போது நடந்தது. பிறகு,இரண்டு வருடங்கள் நாம் பேசிக் கொள்ளா மலேயே கழிந்தது.அம்மா சாருமதி வீட்டுக்குப் போகின்ற வேளைகளில், சாருவின் அம்மா பை நிறைய நெல்லிக்காய்களைக் கொடுத்து விட்டிருப்பாள். அம்மாவுக்கும்,சாருவின் அம்மாவுக் கும், நாம் பேசிக் கொள்ளாதது குறித்து நிறைய வருத்தம் இருந்தாலும், காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டார்கள்.

சின்ன வயதில் நான் பெரும்பாலும் அங்குதான் விளையாடி வளர்ந்தேன். அவள் வீட்டு முற்றம். அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்து வெட்டப்பட்டிருந்த பச்சை அடர்ந்த குறுவேலிகளுக்கிடையே ஒழித்து விளையாடுவோம். இரண்டு அண்ணன்கள் அவளுக்கு. அவர்களது நண்பர்களால் அவளது வீடு அமர்க்களப்படும். சிறுவயதில் அவர்களோடு சேர்ந்து நானும், சாருவும் விளையாடியிருக்கிறோம். வளர்ந்த பிறகு பையன்கள் நிற்கும் வீடு எனும் நினைப்பு என் குடும்பத்தைச் சலனப்படுத்தியது. அதன் விளைவாக நான் அங்கு போதல் ஓரளவு மட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வந்தது.

அவளோடு கதைக்காமல் விட்ட பிறகு,அந்த வீடு, எனக்கு முற்றிலும் அந்நியமானது போலிருநதது. டியூஷனுக்கு, அவளது வீட்டைத் தாண்டித்தான் போய்வர வேண்டியிருந்தது. அவளது அண்ணன்கள், படலையின் ஜாம் மரத்துக்குக் கீழ், யாரேனும் நண்பர்களோடு கலகலத்துக் கொண்டிருப்பார்கள். அவளும், நானும் ஒற்றை,ஒற்றையாக வந்துகொண்டிருப்போம்.

சில வேளைகளில் அவள் முன்னால்...

சில வேளைகளில் நான் முன்னால்...

அவளது பெரியண்ணா எங்களைக் கிண்டலடித்துச் சிரிப்பான்.

அவளானால், வீட்டில் அவனோடு அது குறித்து மல்லுக்கட்ட முடியும்.

என்னால் அது முடியாது.

தலையைக் குனிந்துகொண்டு வந்துவிடுவேன்.

காலம் அப்போது கரும்புகைகளால் நிரம்பியிருந்தது.

அடிக்கடி குண்டுகள் வந்து வீழத் தொடங்கியிருந்தன.

கொஞ்ச நாளில் அவளது அம்மா, தன்பேரிலிருந்த ஆறுபரப்புக்காணியை விற்பதற்காக ஓடித்திரிந்தாள்.

நெடுநாள் அலைச்சலின்பின் காணியை விற்றுத் தன் ஆண்பிள்ளைகளைக் கொழும்புக்கு அனுப்பிவிட்டாள். அவர்களும் அதற்குப் பிறகு ஒன்றொன்றாய் ஏதேதோ தேசங்களுக்குப் போனதாயறிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் ஏ.எல்லுக்கு வந்தோம். அஞ்சுவும், யாழியும் பட்டணத்துப் பாடசாலைக்குப் படிக்கப் போனார்கள். பானுவோ, கலைப் பிரிவில் சேர்ந்து கொண்டாள். நானும், சாருவும், விஞ்ஞானப்பிரிவில் ஒன்றிணைந்தோம். பழைய நட்புகள் விலகப், புதுப்புது நட்புகள் சேர்ந்தன. ஆனால், எங்களுக்கிடையிலான இடைவெளி அப்படியே தானிருந்தது.

ஏனோ, என்னாலும் அவளோடு பேச முடியவில்லை.

அவளும் என்னோடு வலிந்து பேசவில்லை.

அஞ்சுவும், யாழியும் பிரிந்து போனபின் அவள் ஒரு நாளும் நெல்லிக்காய் கொண்டு வரவுமில்லை. அம்மாவிடம், அவள் அம்மாகொடுத்தது போக, மீதி நெல்லிக்காய்களை அவளின் அம்மா சந்தைக்குக் கொடுத்தனுப்புவதாகப் பிறகு அறிந்தேன்.

அடுத்த இரு வருடங்களுக்கு நாங்கள் பட்டுக் கொள்ளாமல் பழகிக் கொண்டோம். அவளுக்கு அதிகமாய் நண்பர்கள் இருந்தார்கள். இரண்டு அண்ணன்கள் இருந்ததாலோ என்னவோ, அவள் ஆண் பிள்ளைகளோடு மிகவும் இயல்பாகப் பேசுவாள். அது, யார் கண்ணைக் குத்தியதோ தெரியவில்லை. எங்களுக்கு முதல் வகுப்பில் படித்த "சேந்தனோடு" அவள் கதைப்பதாக என் வகுப்புப் பெண்கள் கிசுகிசுத்தார்கள். அவள் இயல்பாய்க் கதைத்ததை அவர்கள் தப்பாய் அர்த்தப்படுத்திக் கொண்டார்களோ...? அல்லது "சேந்தனை" அவளுக்குப் பிடித்துக்கொண்டதோ அது அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாய் இருக்கலாம்.

சிலவேளை, அஞ்சுவும், யாழியும் கூட அவளோடு தொடர்பில் இருந்திருப்பின் அதை அறிந்திருக்கலாம்.

அதைப்பற்றி அவளிடம் கேட்பதற்குரிய எந்த உரிமை யும் என்னிடத்தில் இல்லை,

உயர்தரப்பரீட்சை எழுதி மறுமொழி வந்து, இரண்டாம் தடவைக்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருந்த காலகட்டம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான், அவள் சீக்கிரத்திலேயே போய்விடப் போகிறாள் என்றார்கள்.

அவள் அம்மாவுக்கு, உடம்பு முடியாமல் போய், கடைக் குட்டிப் பெண்ணான அவளுக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து பார்த்துவிட வேண்டு மென்ற எண்ணம் வந்தபோது, அவளுக்கு வயது வெறுமே இருபது தான். அண்ணன்கள் அவளுக்கு வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்த்தார்கள். அப்போது போக்கு வரத்து சிக்கற்பட்டுக் கொண்டிருந்த காலம். வடக்கைத் தாண்டுவதென்பதே பெரும்பாடாகவிருந்தது.

அவளுக்குக் கல்யாணம் முற்றாகிற்றென்று, அவளது அம்மா, எனது சித்தியிடம் சொல்லியிருந்த செய்தி என் காதிற்கும் கசிந்து வந்தது.

"இப்பவாவது ஒருக்கால் போட்டுவா..." அம்மாவின் குரலில் சாருமதி மீதிருந்த பரிவு எட்டிப்பார்த்தது.

நெடுநெடுவென்று நீண்ட, நாட்களின் பின்னரான ஒரு மாலைப்பொழுதில் அவளது வீட்டிற்கு மறுபடியும் சென்றிருந்தேன். சிரித்தபடியே வாசலுக்கு வந்தாள். எனக்கு அவளைப் பார்க்கத் துக்கம் ஒரு பாறைபோல, தொண்டைக்குள் அழுத்தியது. என்ன மனநிலையோடு அவளை அணுகுவதென்று தெரியவில்லை.

இறுகிப்போன மௌனத்துடனிருந்தேன்.

ஒருவேளை அவள் உண்மையிலேயே "சேந்தனைக்" காதலித்து, தாய்க்காக இந்தக் கல்யாணத்தை ஏற்றிருக்கின்றாள் என்றால், அதற்காக நான் சந்தோஷப்பட முடியாது.

மிக நிறைவாக, இந்தத் திருமணத்தையே அவள் தன் வாழ்வின் உன்னத தருணமாகக் கருதி அவள் கிளம்புகிறாள் என்றால், அவளை நான் வாழ்த்தாமல் இருப்பது அந்தச் சந்தர்ப்பத்திற்கு இசைகேடாகிப் போகலாம்.

இயல்பிற்கு மீறி என்னாலும் அவளிடம் அதிகம் பேசமுடியவில்லை. டீயும், பிஸ்கட்டும் கொண்டுவந்து தந்தாள். அவளால் அந்தச் சந்தர்ப்பத்தில் அதை மட்டுமே தர முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்து அவளது மகிழ்ச்சி குறித்து எதையும் ஊகிக்க முடிய வில்லை. இருவருக்குமிடையே இடைவெளி விழுந்திருந்தது. திரை கழன்று இருவரும் பேச ஆரம்பித்தபோது ஒன்றொன்றாய் ஆட்கள் வரத் தொடங்கினார்கள். அவளது பழைய சிநேகிதி களும் கூட... எங்கிருந்தோ மோப்பம் பிடித்து வந்து விட்டார்கள்.

விடைபெற்றபோது அவள் என்னைப் பார்த்து இயல் பாய்ப்புன்னகைத்தாள். நான் அவள் கரத்தைப் பற்றிக் குலுக்கினேன்.

"விஷ் யூ ஒல் த பெஸ்ட்..." என வாழ்த்தினேன்.

குளிர்ந்திருந்த அவள் கரம் கொஞ்ச நேரம் என் கைக்குள் இருக்கவேண்டும் போலிருந்தது.

"மதி..." என்று அவளது அம்மாவின் குரல் கேட்ட போது அவள் என்னிடமிருந்து விலகிக் கொண்டாள்.

"ஓகே...பை..." என விடைபெற்றுக் கொண்டேன்.

அதன்பிறகு அவள் போய்விட்டாள் என்பதனைச் சித்தி மூலம் அறிந்துகொண்டேன். நீண்ட நாட்களுக்கு, அவள் வாசலுக்கு வந்து விடை பெற்ற கணங்கள் என் உள்மனதைக் கிளறிக் கொண்டேயிருந்தன. அன்று வாசலுக்கு வந்த கடைசிக் கணத்தில் அவள் என்னிடம் என்ன சொல்லவந்தாள்...?அவள் கண்களில் இருந்தது என்னவென்பதை என்னால் பின்வந்த நாட் களில் யூகிக்க முடியவில்லை. அவளது திருமணம் இந்தியாவில் நடந்ததென்றும், கொஞ்ச வாரங்கள் கொழும்பில் நின்ற அவளது அம்மா, தானும் பிள்ளைகளிடம் சென்று விட்டாள் என்றும் பிறகு அறிந்து கொண்டேன். அவளுக்கு நெருக்கமான உறவாயிருந்த அவளது மாமா வீட்டில் அவளது திருமணப் புகைப்படத்தையும், அவளது குழந்தையின் புகைப் படத்தையும் பார்க்கக் கிடைத்தது. அவளைப் பற்றிக் கடைசிக் கணங்களில் ஏற்பட்ட கலக்கம் அந்த நிமிடத்தில் தீர்ந்து போனது.

அவள் நன்றாகத்தான் இருக்கிறாள்.

அவளோடு கதைத்துத் திரிந்ததாகச் சொல்லப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்தனிடத்தில் அவள் போன பின்னர் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை. அதனால் என்னிடம் தொடர்ந்து எந்தவிதமான சஞ்சலமும் ஏற்படவில்லை.

அதன் பிறகு சாருமதியின் வீடு கொஞ்சக்காலம் அவளுடைய ஒன்றுவிட்ட மாமாவின் பராமரிப்பில் இருந்தது. ஐந்தாறு மாதங்கள். அப்போது நாங்கள் பெரிநெல்லிக்காய் வேண்டி அங்கு போவோம். ஒற்றை,ஒற்றையாய் விழும் நெல்லிக்காய்களை உப்பில் ஊறவைத்துச் சாப்பிடுவோம்.

அப்போதெல்லாம் நான் அவளை இரக்கத்தோடும், அவளது தோழிகளை எகத்தாளத்தோடும் நினைத்துக் கொள்வேன்.

ஆனால், பிறகு அதற்கும் வழியில்லாமல் போனது.

ஐந்தாறு மாதங்களில்,அவள் வீட்டு மதிலுக்குமேல் மூன்றடி உயரத்திற்கு தகரங்கள் அடிக்கப்பட்டு, கேற் அருகில் மண் அணை கட்டி காவலரண் ஏற்பட்டது. உள்ளே மேலும் கட்டுமானப்பணிகள் நடப்பதற்கு ஏதுவாய், மணல்,சல்லியோடு உழவு இயந்திரங்கள் ஒழுங்கையால் போய்த்திரும்பும்.

உள்ளே பெரிய வேலைப்பாடுகள் நடப்பதாய்ப் பானு சொல்வாள். அங்கே இரவிரவாய் வேலை நடக்கிறதென்றும், யாரோ பெரியவர்கள் தங்குகின்ற அசுமாத்தம் இருந்ததென்றும் ,ஊருக்குள் பேசிக்கொண்டார்கள்.

ஆனையிறவுப் பக்கம் அடிபாடு தொடங்கமுதல் அந்த வீடு சில நாட்கள் ஒரே கூச்சலும், கும்மாளமுமாய் இருந்தது. போராட்டப் பாடல்கள் உள்ளிருந்து கசட் ரெக்கோடர்களில் உணர்ச்சி ததும்ப எழும்பி உயிரை அருட்டுவதாக இருக்கும். அதன்பின் அடிபாடுகள் நடைபெறும் காலங்களில் விவரிக்கவியலாத ஒரு நிசப்தம் அந்த வீட்டைச் சூழ்ந்திருக்கும்.

இடையில் ஒருநாள் அந்த வீட்டைக் கடந்து சென்ற வேளையில்,சேந்தனை அவ்விடத்தில் கண்டேன். சீருடையுடன் இருந்தான். எனக்கு அவனை அங்கு கண்டது அதிர்ச்சியாயிருந்தது. அவன் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. உள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டான்.

அதற்குப் பிறகு அவனைக் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டவில்லை.

ஒருவருடம் அவர்கள் மாறிமாறிப் பல குழுக்களாக அந்த வீட்டில் இருந்தார்கள். அதற்குப் பிறகு அவர்களும் அந்த வீட்டில் இருக்கமுடியாமற் போனது.

மாறிமாறி வெடிச்சத்தங்கள் துரத்திய ஒரு பொழுதில் அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்தார்கள். பிறகு, மறுபடியும், அந்த இடத்தை அவளது மாமா பராமரிக்கத் தொடங்கினார்.

அந்த வீட்டில் இடைக்கிடை சோதனைகளும், ஆயுதத் தேடல்களும் நிகழும். அங்கே ஒருதடவை ஒழித்து வைக்கப் பட்ட சில ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. அதன்பிறகு அந்த வீடு கடும் பாதுகாப்பின் மத்தியில் அமளிதுமளிப்பட்டது. மாமா கூட அங்கு வருவது தடைப்பட்டது. பிறகு கொஞ்ச நாளில் அக்குவேறு, ஆணிவேறாகத் துளைக்கப்பட்ட பிறகு அந்த வீடு மாமாவிடம் கையளிக்கப்பட்டது.

அங்கு நெல்லிமரத்தின் கீழ், பெரியதாக ஒரு பதுங்குகுழி அமைக்கப்பட்டிருந்ததென்றும், அதற்குள் இரண்டு, மூன்று அறைகள் அமைந்திருந்ததென்றும் கதையோடு கதையாக செய்திகள் வந்தன. ஒழுங்கைக்குள் இருந்ததாலோ என்னவோ மற்றைய வீடுகள் போல் இராணுவம் அந்த வீட்டைத் தான் எடுத்துக் கொள்ளவில்லை. தொடர்ச்சியாய் மாமாவும் அங்கு போய்த் தங்கி வந்ததனால், அந்த வீடு நெடுநாட்களுக்குப் பின் மீட்கப்பட்டதாய் சொல்லிக் கொண்டார்கள். பிறகு, அங்கிருந்த நெல்லிக்காய் நினைவு மடிந்துபோன ஒரு பொழுதில் மீண்டும் அந்த நினைவை மேலெழச் செய்யும் வண்ணம் அங்கு போக வேண்டி நேர்ந்தது.

அது முதலாவது சமாதானகாலத்திற்கு முன்னர் வெடித்த போராகவிருந்தது

கடும் ஷெல் மழைக்கு மத்தியில் மீளமுடியாத திணறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது.

ஓய்வொழிச்சல் இல்லாத ஷெல்லடிக்குள் இரு பக்கத்திற்குமிடையிலான யுத்தத்தில் சிக்கிக்கொண்ட போது ஒவ்வொன்றாய் குடும்பங்கள் விலகி ஓடின.

நாங்கள் ஒரு இருபது,முப்பது குடும்பங்கள் எஞ்சியிருந் தோம். ஓடுவதற்கு இடமின்றி சாருமதி வீட்டு பங்கருக்குள் தஞ்சம் புகுந்தோம். ஐந்து பகல். ஐந்து இரவு. அரிசிமாவும், பிஸ்கட்டும்,தேநீருமாய் அங்கேயே வசித்தோம். கொங்கிரீட் அறைகளுடனிருந்த உறுதியான பங்கர்.

வெடிச்சத்தங்கள் இடைவெளி விட்டபோது, அவளது வீடும், நெல்லியும் அவளது நினைவை என்னுள் வளர்த்துக் கொண்டே இருந்தது. அப்போது நெல்லியில் காய்கள் இருக்க வில்லை. ஆனாலும், நிமிர்ந்து அந்த மரத்தைப் பார்ப்பதற்கு எனதியல்பு தவறிவிடவுமில்லை.

தொடர்ந்து தங்கமுடியாமல் ஊரை விட்டு விலகிய போது, அவளது வீட்டுச்சுவர்கள் ஷெல் சிதறல்களால் உருக் குலைந்திருந்ததைக் காணமுடிந்தது.

முதல்நாளில் கூட அங்குதான் இருந்தோமா...?எனும் ஆச்சரியம் பீதியாய் உருமாற எங்கள் ஊரை முதல் தடவையாகப் பிரிந்து போனோம்.

இரு வருடங்களின்பின் மீளவும் ஊர் திரும்பியபோது, எங்களுடைய வீடுகள் போலவே, அவளுடைய வீடும், யன்னல் கள் நொறுங்குண்டு, உருக்குலைந்திருந்தது. நெல்லிமரத்தடியி லிருந்த பங்கர் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டிருந்தது.

மாமா மட்டும்,மீண்டும்,மீண்டும் அவளது வீட்டைக் கவனமெடுத்து பராமரித்துக் கொண்டிருந்தார்.

எனக்கோ அவளது வீட்டைப் பார்க்கும் கணந்தோறும், அவள் ஊரைவிட்டுப் பிரிந்த நாளும், அந்த வீட்டில் ஒருபோது சேந்தனைச் சீருடையில் கண்டதுமே மனதில் நிழலாடிக் கொண்டிருந்தது.

அவனைப் பற்றிய தகவல்கள் மட்டும் எனக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து கிடைக்கவில்லை.

சாருமதி மட்டும் சுகமாய் இருப்பதாய் அறிந்தேன்.

பிறகு எனக்கும் கல்யாணமாகி, குழந்தைகள் பிறந்து, அவர்களும் பள்ளிக்கூடம் போய், நெல்லிக்காயில் ஆசை வைத்து, நெல்லிக்காய் கேட்கிற அளவிற்குக் காலம் வளர்ந்து போயிற்று.

ஒருநாள், சின்னவனின் ஆய்க்கினை தாளாது சாருமதி வீட்டுக்குப் போய், நீண்ட கொக்கத்தடி எடுத்து நெல்லிக்காய் களைத் தட்டி விழுத்திக்கொண்டிருந்தேன்.

அருகிலே வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட பங்கர் புதர் மூடிக் கிடந்தது. அதைப் பார்த்தபோது சேந்தன் நினைவில் வந்தான்.

நாங்கள் ஆபத்திற்கு ஒதுங்கிய பங்கர், அவன் ஒரு காலத்தில் தங்கியிருந்த இடமாயிருக்கும். அவன் அங்கே பெரிய பதவியில் இருந்தானாம். கடைசிப் போரில் காணாமல் போய் விட்டான். அவனைப் பற்றிய எந்தத் தடயமும் இல்லாமல் அவனது குடும்பம் அல்லாடிக்கொண்டிருந்தது.

நெல்லிக்காய்களோடு நானும், மகனும் திரும்பிக் கொண்டிருந்தபோது மாமாவும், இன்னொருவரும் வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டுக் கீழிறங்கிக் கொண்டிருந்தனர்.

முன்பு வாசலிலிருந்து வீட்டை நோக்கிச் சரித்து வளர்க் கப்பட்ட பசிய புல்வேலியின் அடையாளம் கொஞ்சமும் இல்லை.

வந்தவர் தெருவில் இறங்கியதும் நான் மாமாவிடம் கேட்டேன்.

“என்ன மாமா... வாடகைக்கு விடப் போறீங்களோ...?”

“ஏன் வாடகைக்கு விட வேணும்? இவ்வளவு காலம் பாத்த நான் இனியும் பாக்கமாட்டனே...?”

அவரது குரலில் ஆதங்கம் இருந்தது.

அப்ப ஆர் மாமா வீட்டை, இப்பிடிப் பாத்திட்டுப் போகீனை...”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா ஒரு நிமிடம் மௌனமானார். கனத்த கண மொன்று விடை பெற்றபோது பெருமூச்சோடு சொன்னார்.

"வீட்டை விக்கிறதெண்டால், ஆக்கள் பாத்திட்டுத் தானை வாங்குவீனை...."

"என்ன ..." என் சொற்கள் வீறிட்டன.

அது சாருமதியின் சீதன வீடு.

ஒருகாலத்தில் வீடு திரும்புவாள் என எதிர்பார்க்கப்பட்ட சாருமதி.

எதற்காக அவள் வீட்டை விற்கவேண்டும்...?

அவளுக்கென்ன குறைச்சல் அங்கே!

"அப்ப, அவள் இனி வரவே மாட்டாளா....?" என்றேன் அளவிடமுடியாத் துயருடன்.

"வரமாட்டாள்..." என்றார் மாமா திடமுடன்.

"ஏன்...?"

மீண்டும் கனத்த நிமிடங்கள்.

"சாருமதீன்ரை பிள்ளை போன வருஷம் ஒரு அக்சிடென் ரிலை ஆப்பிட்டிட்டான்..."

"அது போன வருசமேல்லோ...சுகமாப் போச்சு தெண்டறிஞ்சன்..." எனது குரலை உடைத்து மாமா சொன்னார்.

"இல்லை, அவன் இன்னும் கோமா நிலையிலை தான். இன்னும் நினைவு வரேல்லை..."

அதற்கு மேல் ஒன்றும் என் காதில் விழவில்லை.

நான் அவளது வீட்டைக் கடைசி முறையாகப் பார்க்கிறேன்.

அவளது நினைவுகளை, கூடவே சிலதுளி அவனது நினைவு களையும் சுமந்த அந்த வீடு இனி, என் பார்வையில் விழப் போவதில்லை.

எனது மனதில் பல வருடங்களாக வட்டமிட்ட அவளது முகம், இப்போது என்னை அலைக்கழிக்கத் தொடங்குகிறது.

- காற்றுவெளி : மே - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடராத சொந்தங்கள்

மலரிணிக்குக் கடிகாரத்தை எடுத்துத் திருப்பி முறுக்கிவிட வேண்டும் போலிருந்தது. பொழுது விடிந்து நாளை வருவது போல, பொழுது இருண்டு முதல் நாள் இரவைத்தொட்டு, அதற்கு முதல்நாள், முதல் நாள் என்று போய் அவள் எதிர்பார்க் கின்ற அந்தநாள் அது வந்து நிற்காதா...? அப்போது சக்தி ரீச்சரைப் பார்த்து,

"நான் உங்கட வகுப்பிலை படிக்க வருவன். அப்ப நீங்கள், என்னை உங்களுக்குச் சொந்தம் எண்டு சொல்லோணும்." என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லி வைத்தால்தான் பிறகு இந்தநாள் வரும் போது ரீச்சரை அவளது சொந்தக்காரர் என்று சொல்ல, ரீச்சரும் அதை ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இப்போது ரீச்சர் இவளைத் தெரி யவே தெரியாது போலல்லவா இருக்கின்றா. மற்றப் பிள்ளைகள் எல்லாம், இவள், ஏதோ புளுகுவதுபோல, இவளைக் கேலியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்றன. அப்படியானால் இவளது கண்ணில் பழுதா...? அல்லது நினைவில்தான் கோளாறா..? ஏன் ரீச்சரைப் பார்த்தால் சொந்தமென்று இவளுக்குத் தோன்றவேண்டும்.

மலரிணிக்கு இப்போது பத்து வயது. இந்தமுறைதான் அவள் புலமைப்பரிசில் எடுக்க வேண்டும். அம்மாவும் ரீச்சர் தான். அம்மா எப்போதும் அதட்டி, மிரட்டித்தான் படிப்பிப் பாள். அம்மாவின் "சுப்பர் கப்" பின் பின்னே, எப்போதும் அம்மாவைக் கட்டிக்கொண்டபடிதான் இவள் ரியூசனுக்குப் போவாள். அம்மாவின் வேகம் இவளுக்குப் பயத்தைத்தான் ஏற்படுத்தும்.

"என்ன பயம் நான் இருக்கேக்கை."

என்று சொல்லிக்கொண்டு அம்மா, வேகமாய்ப் போவா.

அம்மாவின் வேகமும் அதட்டலும் மலரிணியை அம்மாவிலிருந்து விலக வைத்தன. சக்தி ரீச்சர் வர முதல் வகுப்பில் படிப்பித்த வசுமதி ரீச்சரிடம், மலரிணிக்கு நல்ல ஒட்டு. வசுமதி ரீச்சரின் சேலைத் தலைப்பை இழுத்து தன்னைச் சுற்றிப் போட்டபடி மலரிணி செல்லம் கொஞ்சியிருக்கிறாள். அம்மா வுடையதென்றால் சேலைத் தலைப்பைத் தொடக்கூட முடியாது. அதட்டி அனுப்பிவிடுவாள். வசுமதி ரீச்சர் குழந்தை தானேயென எல்லாவற்றுக்கும் இடம்கொடுத்தாள். மலரிணி அனேகமாக வகுப்பில் முதலாம் பிள்ளையும்கூட அதனாலும் வசுமதி ரீச்சரிடம் ஒருவித சலுகையைப் பெற்றிருந்தாள் இவள்.

வசுமதி ரீச்சருக்கு கொஞ்ச நாட்களுக்கு முன்னால்தான் இடமாற்றம் வந்தது. ஏதோ தேவைக்காக வசுமதி ரீச்சரே விரும்பி இடமாற்றம் பெற்றுப் போவதாக ஆசிரியர்கள் பேசிக் கொண்டார்கள். வசுமதி ரீச்சருக்குப் பதிலாகத்தான் இவளது வகுப்பில் வகுப்பாசிரியராக வந்தா சக்தி ரீச்சர்.

சக்தி ரீச்சரைப் பார்த்தவுடனேயே இவளுக்கு மிகுந்த புளுகமாய்ப் போய்விட்டது.

"இந்த ரீச்சர் எங்கட சொந்தக்காரரர்." பக்கத்திலிருந்த டெய்சிக்குப் பெருமையாய் சொல்லிக் கொண்டாள். டெய்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் முகம் ஒரு மாதிரிக் கூம்பிப் போனது. இவளுக்கும், டெய்சிக்கும் எல்லாவிதத்திலும் போட்டிதான். இவள் முதலாம் பிள்ளை என்றால் அவள் இரண்டாவதாக வருவாள். அவள் முதல் என்றால் இவள் இரண்டாவதுதான். பாடங்களிலும் யார் அதிகூடிய புள்ளி பெறுவதென்பதில் எப்போதுமே போட்டி. வசுமதி ரீச்சர் இருந்தவரையில் இருவரையும் சமமாகத்தான் பார்த்தா. இனி சக்தி ரீச்சர் வந்தவுடன் மலரிணிக்கு அவள் சொந்த மென்றால், தன்னுடைய இருப்புத் தொலைந்து போகுமென எண்ணியோ தெரியவில்லை. டெய்சி மறுகினாள். இவளோடு முகம் கொடுத்துப் பேசவில்லை. சக்தி ரீச்சரோடும்தான்.

இவள் தான் உற்சாகத்தோடு ரீச்சரின் அருகே போனாள்.

"ரீச்சர். நீங்கள் எங்களுக்குச் சொந்தமெல்லோ?"

"ஆர் சொன்னது? எனக்குத் தெரியேல்லையே. நீங்கள் ஆரெண்டு?"

டெய்சி உன்னிப்பாக அவர்களைப் பார்த்துக் கொண்டே யிருந்தாள்.

"நீங்கள் அப்ப வந்தனீங்கள் அங்கை."

"எங்கை வந்த. எப்ப.?"

"அதுதான் பெருமாள் கோயிலுக்கு. அப்ப நீங்கள் எங்கட சொந்தக்காரரர் எண்டு அம்மா சொன்னவ."

"எப்ப.?" சக்தி ரீச்சரின் விழிகள் கேள்விகளாயின.

"அப்ப வருசப் பிறப்பு முடிஞ்ச நேரம். கனகாலம் ஆச்சு."

"ஓ." சக்தி ரீச்சர் ஆச்சரியப்பட்டுவிட்டுச் சொன்னா.

"எனக்கு ஞாபகம் இல்லையே. இப்ப படிப்பம் என்ன."

அதற்குமேல் மலரிணியைப் பக்கத்தில் நிற்க அனுமதிக்க வில்லை ரீச்சர்.

"போய் இருங்கோ. பாடம் படிப்பம்" மலரிணி சோர்ந்து போய் இருக்கைக்கு வந்தாள்.

டெய்சியிடம் பொறாமை அவிந்து இப்போது கோண லான ஒருமலர்ச்சி தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் ரீச்சர் அப்படிப் பொய் சொல்ல வேண்டும். அன்றைக்குக் கோவில் முற்றத்தில் அவர்களும், நாங்களுமாய் காரில் கோவிலுக்குப் போனபோது அம்மா இவளைப் பார்க்கத் தான் அந்த அன்ரி வந்ததாகச் சொன்னா. பிறகேன், அந்த சொந்தமெல்லாம் இல்லாமல் போனது. இவள் வீட்டுக்கு வந்ததும், பொறுக்கமாட்டாமல் அம்மாவிடம் வந்து புலம்பினாள்.

"அம்மா. எங்கட புது ரீச்சர் எங்களுக்குச் சொந்தமில்லை எண்டு சொல்லுறா."

"ரீச்சர் மாரெல்லாம் எங்களுக்குச் சொந்தமாகலாமே..?"

"எல்லாரும் சொந்தமில்லை. ஆனால் சக்தி ரீச்சர் சொந்தம்தானே."

"என்னெண்டு சொந்தம்."

"அதுதானையம்மா. அப்ப சொன்னீங்கள். கோவிலுக்குக் கார் பிடிச்சு நாங்கள் போகேக்கை. என்னைப் பாக்கவந்த அன்ரி எண்டு சொன்னனிங்கள். அவதானை எங்கட ரீச்சர்."

"நீ ஆரையோ நினைச்சுக் கதைக்கிறாய். சொந்தமெண்டால் அவவே கதைப்பாதானை."

அதற்குமேல், அம்மா இவளுடன் கதைக்க நேரமில்லை என்பதுபோல், கண்ணாடியைப் போட்டுக்கொண்டு கணிப்பீட்டுத்தாள்களுடன் உட்கார்ந்து விட்டாள்.

நாட்கள் போகப் போக, ரீச்சர் இவளைக் கண்டுபிடித்து, நல்லாய் பழகுவா என்று பார்த்தால் அதுவும் நடக்கவில்லை.

முதலில் இவளது துடுக்குத்தனத்தின் மீதிருந்த ஈடுபாடு குறைந்து, ரீச்சர் மற்றப் பிள்ளைகளையும் சமனாகக் கவனிக்க ஆரம்பித்தா. டெய்சி அடிக்கடி ரீச்சரின் மனங் கவரும்படி ஏதாலுமொன்றைச் செய்துகொண்டிருப்பாள்.

வசுமதி ரீச்சரின் சேலைத் தலைப்பைத் தூக்கித் தனது தலையில் போட்ட பழக்கத்தில் ஒருநாள், சக்தி ரீச்சரின் சேலைத் தலைப்பையும் இவள் தூக்கித் தன்மேல் போடப் பார்த்தாள்.

சக்தி ரீச்சர் துணுக் குற்றாற்போல அப்படியே சேலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரி இழுத்துக்கொண்டா.

ரீச்சருக்குக் கோபமோ என அவள் பதறியபோது, அவளது முகத்தை வருடி, "சீலையெல்லாம் இழுக்கக்கூடா. போய் இருங்கோ இடத்திலை." என்று அவளது இடத்தில் அமரச்சொன்னா, அம்மா கண்டித்து உதறுவதைக் காட்டிலும் இது அவளுக்கு அதிக ஏக்கத்தை ஏற்படுத்துவதாயிருந்தது.

அதற்குப் பிறகு இவள் ரீச்சரிடம் நெருங்குவதில்லை.

முந்தி என்றால் இவளுக்குப் பள்ளிக்கூடம் மிகக் கலகலப்பாக இருக்கும். இப்போது, இவளுக்குத் தன்னை முதன்மைப் படுத்தாத ரீச்சர் இருப்பதாலோ என்னவோ கலகலப்பில்லாமலே பாடங்கள் நகர்ந்தன. வீட்டிலும்கூட இப்போது முன்புமாதிரி அடிக்கடி வெளியே போகின்ற நிகழ்வுகள் இல்லை. மாமா இருந்தபோது அடிக்கடி புதுப்புது ஆட்களைத் தேடிக் குடும்பமாய்ப் போவார்கள். மாமா கல்யாணமான புதிசிலும் கொஞ்ச நாள் அடிக்கடி வெளியே போக முடிந்தது. பிறகு அப்படி அதிகம் வெளியே போக முடிந்ததில்லை. மாமாவும், அத்தையும் எப்போதாவது வருவார்கள்.

மாமாவும் முன்னை மாதிரி அதிகம் இவளைக் கொஞ்சுவதில்லை. அத்தை மட்டும் இவளிடம் செல்லக் கதைகள் கேட்பாள் அவ்வளவே.

அம்மா எப்போதும் படி, படி என்றபடியேதான். இவள் கேட்கின்ற கேள்விகளை ஒரு தொண தொணப்பாகவே கருதி எப்போதும் ஒதுக்கிவிடுவாள். இவளிடம் நிறையக் கேள்விகள் இருந்தன.

நாளுக்கு நாள் யோசிக்க, யோசிக்க, ரீச்சர் தன்னைப் பார்க்க வந்தது உண்மைதான் எனும் எண்ணம் மலரிணிக்கு வலுக்க ஆரம்பித்தது. ஏன் இந்த அம்மாவும், ரீச்சரும் பொய் சொல்ல வேண்டும். அன்றைக்கு கோயிலில் வந்து எல்லாரும் ஒன்றாய்க் கதைத்தபோது, சக்தி ரீச்சர் இவளுக்கு "ஐஸ்கிரீம்" கோன் வாங்கித் தந்தது ஞாபகத்துக்கு வந்தது. அவ்வளவு நல்லாய்ப் பழகிவிட்டு இப்போது ஏன் ஒன்றுமில்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல வேணும்.?

டெய்சி, மலரிணியின் முழியாட்டத்தைப் பார்த்து விட்டு கொடுப்புக்குள் சிரித்தாள். அவள் அன்று காலைதான் ஒரு "ரோசாப்பூ"வைக் கொண்டு வந்து சக்தி ரீச்சருக்குக் கொடுத்திருந் தாள். ரீச்சர் அதைத் தலையில் வைத்திருந்தா.

மலரிணிக்குப் பொறுக்க முடியாமல் போனது.

"எனக்கு ரீச்சர் ஐஸ்கிரீம் வாங்கித் தந்தவ. தெரியுமே." என்றாள் வீராப்பாக.

"சும்மா புளுகாதையும். உமக்குத் தந்தால் எங்களுக்குத் தராமல் விடுவாவே"

"இப்ப இல்லை. அவ இஞ்சை வரமுந்தி எனக்கு வாங்கித் தந்தவ. அவ எனக்குச் சொந்தம்."

"உதை நீர்தான் சொல்லிக்கொண்டிரும். ரீச்சர் ஒத்துக் கொள்ளேல்லையே." என்ற டெய்சி ரீச்சரை நோக்கிக் கத்தினாள்.

"ரீச்சர் மலரிணிக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் குடுத்தனிங் களாம். எங்களுக்கு ஏன் ரீச்சர் வாங்கித் தரேல்லை."

ரீச்சர், கொப்பிகளைத் திருத்துவதைவிட்டு, நிமிர்ந்து வகுப்பைப் பார்த்தா. கண்கள் சட்டென்று மலரிணியை ஏறிட்டன.

"இப்ப எண்டாலும் சொல்லுங்கோ ரீச்சர், நீங்கள் எனக்குச் சொந்தமெல்லோ." மலரிணியின் கண்கள் ரீச்சரை இறைஞ்சின.

ரீச்சர், பட்டென்று பார்வையைத் திருப்பினா.

"நான் ஒருத்தருக்கும் ஐஸ்கிரீம் வாங்கிக் குடுக்கேல்லை. நான் ஒருத்தருக்கும் சொந்தமில்லை."

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடத்திற்கு மணி அடிக்க முதலே ரீச்சர் எழும்பி விறுவிறென்று வெளியே போய்விட்டா. பக்கத்திலிருந்தவர்கள் இவளை அசூயையோடு பார்த்தார்கள். முந்தின ரீச்சர் எவ்வளவு நல்லம்.

இப்பவும் நல்ல ரீச்சர்தான். ஆனால் அவளைத் தனியே கவனிப்பதில்லையே. வீட்டுக்குப் போனதும் மலரிணி ஓ...

வென்று அழுதாள்.

காரணமில்லாமல் அழுகிறாள் என்பதில் அம்மாவுக்குச் சரியான கோபம். முன்பென்றால் தம்பி பார்த்துக் கொள்வான். இப்போது அவனும் மனைவிக்குப் பின்னால் திரிந்து கொண்டிருக்கிறான். புதிதாய்ப் பிறந்த குழந்தை வேறு அவனது கவனத்தைத் தன் புறம் ஈர்த்திருக்கிறது.

"என்னத்துக்கெடி ஒப்பாரி வைக்கிறாய்." என்றாள்.

"எனக்குப் புது ரீச்சர் வேண்டாம். பழைய ரீச்சர்தான் வேணும்."

"ஏன் ரீச்சர் அடிச்சவவோ..?"

"இல்லை"

"அப்ப என்னடி.?"

"அவ என்ரை சொந்தம் எண்டு சொல்லுறா இல்லை."

"சொந்தம் என்டாத்தானை சொந்தம் எண்டு சொல்லுற. இல்லாட்டி என்னண்டு சொல்லுற."

"அப்ப ஏன் என்னைப் பாக்க வந்தவ அவ."

"எப்ப...?"

"முந்தியொருக்கா."

அவள் காலத்தை விளக்குவதற்கு மிகச் சிரமப்பட்டாள்.

"சரி, நான் வாறன், நான் கதைக்கிறன் ரீச்சரோடை."

மலரிணி சமாதானமாகக் கொஞ்ச நேரம் எடுத்தது.

***

அடுத்த நாள் சுபத்திரா, மலரிணியின் பாடசாலைக்கு வருவதாய்ச் சொல்லி இருந்தாள். இடைவேளையை அண்டிய வேளையில் குறுகிய விடுப்பில் மலரிணியின் பாடசாலைக்கு வந்தாள். அதிபரிடம்போய் விலாவாரியாய் மகளைப் பற்றிக் கதைத்தாள். அதிபர் மலரிணியையும், சக்தி ரீச்சரையும் அழைத்துவர ஆளனுப்பினார். முதலில் மலரிணி வந்து விட்டாள். வந்தவள் சுபத்திராவின் கதிரைக்குப் பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுங்கினாள்.

கொஞ்ச நேரத்தில் சக்தி ரீச்சரும் கண்களில் கேள்வியோடு வந்து சுபத்திராவின் பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்தாள்.

பளிச்சென்ற முகத்தில் எந்தக் குழப்பமும் இல்லை.

"ரீச்சர். மலரிணி உங்கட வகுப்புப் பிள்ளைதானை எப்பிடிப் படிக்குது...?" என்றார் அதிபர்.

சுபத்திரா கதிரையில் இருப்புக்கொள்ளாமல் நெளிந்தாள்.

"ஷீ இஸ் வெறி பிரில்லியன்ற்." என்றாள் சக்தி ரீச்சர்.

"அப்ப ஏன் உங்களிலை, அவளுக்கு விருப்பம் வரேல்லை?"

சக்தி ரீச்சர் நிமிர்ந்து சுபத்திராவைப் பார்த்தாள்.

"சில வேளை நான் கறுப்பெண்டதாலை என்னிலை விருப்பம் வரேல்லையோ தெரியா..?" சக்தி ரீச்சர் மிக மெல்லிய சிரிப்போடு சொன்னாள்.

"ஏன் மலரிணி இந்த ரீச்சர் வேண்டாம்.?"

அதிபர் மலரிணியை முன்னால் அழைத்துக் கேட்டார்.

"ரீச்சர்தான் எனக்குச் சொந்தமில்லை எண்டு சொல்லுறா."

"ரீச்சர்மார் எல்லாரும் சொந்தக்காரர் ஆகேலாதானை. ரீச்சர்." என்றாள் சக்தி.

"ஆனால், நீங்கள் எனக்குச் சொந்தம்தானை."

"ஆர் சொன்னது அப்பிடி."

"எல்லாரும் தான். நீங்கள், அம்மா, அப்பா, எல்லாரும் தான் சொன்னவை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது ஏதோ மாறிச் சொல்லிப் போட்டினை. நாங்கள் சொந்தமில்லை. என்ன ரீச்சர். நாங்கள் சொந்தக்காரர் இல்லைத் தானை."

சுபத்திராவைப் பார்த்து சக்தி ரீச்சர் கேட்டாள்.

சுபத்திராவிற்குப் பதில் பேசமுடியாமல் வாயடைத்தது.

"நான் போகலாம்தானை சேர்?" என அதிபரிடம் அனுமதி கேட்டுவிட்டு சக்தி ரீச்சர் எழுந்தாள்.

அதிபர் சுபத்திராவைக் கேள்விக்குறியோடு பார்த்தார்.

"என்ன பிரச்சினை. நீங்கள்தான் சொல்லோணும்."

சுபத்திரா மென்று விழுங்கிவிட்டுச் சொன்னாள்.

"என்ரை தம்பிக்கு உந்த ரீச்சரைக் கலியாணம் பேசி முற்றாக்கினாங்கள். கோயிலுக்கு எல்லாருமாய்ப் போய்க் கொண்டாடினாங்கள். அப்ப மலரிணிக்கு சொந்தக்கார அன்ரி எண்டுதான் சொன்னம்."

"அப்ப சொந்தம் தானையம்மா.?" என்றாள் மலரிணி.

"பிறகு, இன்னொரு கலியாணம் கூடச் சீதனத்தோடை வந்தாப் போலை, பொம்பிளை கறுப்பெண்டு சொல்லித் தட்டிப் போட்டடம்."

"என்ன விசர் வேலை செய்து போட்டியள்" என்றார் அதிபர்.

"அது நடந்து, இப்ப ஒரு வருசமாப் போச்சுது. அப்ப அன்ரி, அன்ரி எண்டு மனசிலை நினைச்சிட்டுது மலரிணி. நானும் மறந்து போனன். அது இவ்வளவு நாளும் அதைத்தான் மனதிலை வைச்சு மறுகியிருக்குது."

"நீங்கள் படிச்சனீங்கள். உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. இது உங்கட பிரச்சினை. நீங்கள் தான் தீர்க்கோணும்." என்றபடி எழுந்தார் அதிபர்.

மலரிணி சுபத்திராவைக் கேள்விக்குறியோடு பார்த்தாள்.

"இனி எண்டாலும் ரீச்சரைச் சொந்தக்காரர் ஆக்கேலாதே?" என்றாள் ஏக்கமாக.

"பேசாமல் வா." என்றபடி அவள் கையை இழுத்துக் கொண்டு வெளியே வந்தாள் சுபத்திரா.

நீண்ட வராந்தாவின் மறு அந்தத்தில் சக்தி பாடம் முடித்து வந்துகொண்டிருந்தாள். அவளது நெற்றியில் பளிச் சென்றிருந்த கறுப்புப் பொட்டு சுபத்திராவை உறுத்திக் கொண்டேயிருந்தது!

- பூங்காவனம் : 2012 செப்டெம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்மையும் வாய்மையிடத்து

அவளை எனக்கு ஒரு வருடமாகத் தெரியும். சின்னப் பெண். இருபது வயதிற்குள் தான் இருக்கும். ஆனால், அவளை நான் கண்ட கணத்திலிருந்து கண்ணீரும் கம்பலையுமாய்த்தான் கண்டிருக்கிறேன். எனது கிராமத்திற்கு அவள் வந்தபோது அப்படித்தானிருந்தாள். மிகப் பெரிய இழப்பொன்று அவளுக்கு நேர்ந்திருக்க வேண்டும் என்று நினைத்தேன். தாய் தகப்பன் ஒரு அண்ணன், இரண்டு தங்கைகள் என்றபடியான குடும்பம் அவளுடையது. அண்ணனை தடுப்பு முகா மிற்குக் கொண்டு போய்விட்டார்களாம். இவர்கள் மூன்று பிள்ளைகளோடு, தாய், தகப்பன் மட்டுமே வந்தார்கள். ஒரு வருடத் திற்கு மேலாய் நிவாரணக் கிராமங்களில் நசுங்கிக் கிடந்த நிலை அவர்களின் முகங்களில் பிரதிபலித்தது. விசாரணைகள், பதிவுகள், விசாரணைகள், பதிவுகள் என்று மாறி, மாறி எதிர் கொண்ட அசௌகர்ய வேதனை அவர்களின் குரல்களிலும் எட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தது. ஆனாலும், அவர்களைப் பதிவு செய்ய வேண்டிய கடமை என்னிடமிருந்தது. குடும்ப விபரம் அறிந்து எனது பதிவேட்டில் பேணிக் கொண்டேன். அவளது பெயர் தணிகா. மற்றவர்களது பெயர் அவ்வளவு அதிகமாய்த் தேவைப்படாது என்பதால் அதனைத்தவிர்த்துக் கொள்கின்றேன்.

அண்ணன் தடுப்பு முகாமிற்குப் போய்விட்ட கவலை தான் அவள் கண்களில் அடிக்கடி கண்ணீராய் எட்டிப் பார்க்கிறதோ என நினைத்தேன். அப்படியும் தெரியவில்லை. ஏனென்றால் மற்ற இரு சிறுமிகளும் அவ்வாறான அதிகப்படி சோகத்தைக் காட்ட வில்லை. அதே போல் அவள் தாயிடமும் இப்படி சட்டென்ற வுடன் கண்ணீர் துளிர்த்துக் கொள்ளவில்லை. எப்படியிருந்த போதிலும், எனது கேள்விகளுக்கு அவள் தகப்பனே பதில் சொல்லிக் கொண்டிருந்த காரணத்தினாலே அவள் என்னிடத்தில் அதிகம் பேசிக் கொள்ளவேண்டிய தேவை ஏற்படவில்லை.

“மகளுக்கு என்ன பிரச்சினை.? ஏன் அடிக்கடி அழுறா..?” என்றேன் அவள் தந்தையிடம்.

“அங்கை பட்ட கஷ்ரங்கள் ஆருக்குத்தான் மறக்கும். நாங்கள் பல்லைக் கடிச்சுத் தாங்கப் பாக்கிறம். அவள் தாங்கே லாம அழுறாள்.” என்றபடி அந்த விடயத்தை நழுவ விட்டார் தந்தை. அத்தோடு அவளது தனிப்பட்ட உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நானும் வேறு கேள்விகளைத் தொடுக்க வில்லை.

அவளது குடும்பம் முள்ளியவளையைச் சேர்ந்தது. இடம் பெயர்ந்து முகாம் வாழ்க்கை வாழ்ந்த பிறகு அவர்களை வெளியே எடுப்பதற்கு இணுவிலிலுள்ள தூரத்து மாமன் குடும்பம் இணங்கிய பிறகே, அவர்கள் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்ட மக்களோடு, மக்களாக வந்து சேர்ந்திருந்தனர்.

அவளது மாமா இணுவிலில் ஆசிரியராக இருக்கின்றார். அவருடனான பழக்கம் இவர்கள் மீது ஒரு நல்லபிப் பிராயத்தையே எனக்கு ஏற்படுத்திற்று.

அவளுடைய தகப்பன் முள்ளியவளையிலே வியாபாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வந்ததாகவும், அவளது தமையனும் வியாபாரத்தையே முன்னெடுத்ததாகவும் போரின் கடுமையோடு அவன் இயக்கத்திற்குப் போய் விட்ட தாகவும், தணிகாவிற்கும் அப்படி ஒரு நிலை வந்து விடக்கூடாது என்பதற்காக, சொந்தத்திற்குள் ஒரு பையனைப் பார்த்து அவளுக்குக் கல்யாணம் கட்டி வைத்ததாகவும், காலப்போக்கில் அவளது மாமா மூலம் எனக்குத் தகவல்கள் வந்தன. அவளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்ற செய்தி எனக்குப் புதிதாக இருந்த போதிலும், எனக்கு ஆச்சரிய மாயிருக்கவில்லை. ஏனென்றால், வன்னியில் அன்றைக்கிருந்த சூழ்நிலையில் இளம் வயதுத் திருமணங்கள் அதிகம் நிகழ்ந்திருப் பதை எனது நாளாந்த கடமைகளினூடு அவதானித்திருக் கின்றேன். பதினெட்டுப் பத்தொன்பது வயதுகளிலிருப்பவர் களெல்லாம், இளம் தாய்களாகவும் கர்ப்பிணிகளாகவும் இருப் பதை எனது குடும்ப விபரத் திரட்டில் பதிய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கான உதவிகளை நிறுவனங்கள் செய்ய முற்படுகின்ற போது, இவ்விபரங்களை அவர்களுக்கு வழங்க வேண்டியிருப்ப தனால் வன்னியிலிருந்து வந்தவர்களின் இத்தகைய விபரங்கள் என் பதிவேட்டில் பதியப்பட்டே இருக்கிறது. எனினும் தணிகாவைப் பொறுத்தவரை அவளுக்குக் குழந்தைகள் இல்லாத காரணத்தி னாலும், அவளைப் பெற்றோர் தமது குடும்ப அட்டையிலேயே இதுவரை பதிவு செய்திருப்பதனாலும், அவ்வாறான தகவல்கள் என் பதிவேட்டில் இருக்கவில்லை. எனினும் என் நினைவு எனும் பதிவேட்டில் இவற்றை தணிகாவின் மாமானார் பதிவு செய்தார்.

ஆனால், அவளது கணவன் இப்போது எங்கே..? என்பது எனது அடுத்த கேள்வியாய் எழுந்தது. அவனையும் தடுப்பு முகாமிற்கு அழைத்துச் சென்று விட்டார்களோ..? அதனால் தான் தாங்க முடியாது அவள் அழுது தீர்க்கிறாளோ..? எனக் கேள்வி எழுந்தது. ஆனால் அதற்கு தணிகாவின் மாமா சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சி அளிப்பதாய் இருந்தது. அவளது கணவன் இறந்து விட்டதாக அறிந்த செய்தியே அது. திருமணம் முடித்த ஆறேழு மாதங்கள் முடியும் முன்னரே அடிக்கடி இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்து, இவர்களை ஓரிடத்தில் தங்க வைத்து விட்டுக் கடைக்குப் போனபோது அவன் குண்டு வீச்சுக்கு இலக்காகிப் படுகாயமடைந்ததாகவும், இரண்டு நாட்களாய் அவனை "சாறம்" ஒன்றில் போட்டுத் தூக்கிக் கொண்டு இடம் பெயர்ந்ததாகவும், போதிய சிகிச்சைகளின்றி வேதனையின் வலியோடு அவன் உயிரிழந்ததாகவும் அவள் அருகிருந்து அவன் துடிதுடித்ததைப் பார்த்ததனால் நினைத்த கணத்திலே அழுது துடிக்கிறாள் என்பதையும் அவள் மாமா சொன்ன போது என் மனதிலும் வலி மிகுந்தது. இந்த வயதில் அவளை ஒரு இளம் விதவையாக என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. கணவன் இறந்தாலும் அவளை ஒரு விதவையாக அடையாளப் படுத்தாமல், அவளுக்கு ஒரு பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுக்குமுகமாக முகாமில் அவளைத் தனது மகளாகவே, அவளது தந்தை பதிவு செய்து வைத்ததனால், தொடர்ச்சியாக அவள் அவரது குடும்பத்தில் ஒருத்தியாகவே அங்கிருந்தவர் களால் அடையாளம் காணப்பட்டிருந்தாள்.

"ஏன் அவள் தனிய விதவை எண்டு பதிஞ்சிருந்தால் விதவைகளுக்குக் குடுக்கிற உதவிகள் ஏதும் அவளுக்குக் கிடைக்கும்" என்றேன் அவளது மாமாவிடம்.

"சீச்சீ. அப்படி விதவை எண்ணுறதாலை கிடைக்கிற உதவிகளை அவளும் விரும்பமாட்டாள். தகப்பனும் விரும்ப மாட்டான். அதுகள் ஒரு காலத்திலை நல்லா இருந்த குடும்பம். இப்ப முகாமுக்கை இருந்து வந்ததெண்டாப் போலை அது களிண்டை தன்மானம் கொஞ்சமும் குறையேல்லை. எங்கட வீட்டிலை தங்கியிருக்கிறதோடை சரி. வேறை உதவிகளை என்னட்டையும் எதிர்பார்க்கிறேல்லை அதுகள். என்றார் அவர்.

எனக்கு அவள் அதிசயப் பிறவியாகத் தோன்றினாள். தங்கள் கைம்மை நிலையினால் எத்தனையோ பெண்கள் உதவிகோரிக் கொண்டுவந்திருக்கின்றார்கள். ஆனால், இவள். தகப்பனின் நிழலில் ஒதுங்கி யிருப்பதால் அவளுக்கு எந்த உதவியும் தேவைப்பட வில்லையோ..?

காலப்போக்கில் இவள் தகப்பன் ஒரு சிறிய வியாபாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியிருப்பதாக அறிந்தேன். அவளும் இடையில் ஒரு தடவை எனது அலுவலகத்திற்கு வந்திருந்தாள். வழமையாக அவளது தகப்பனே என்னிடம் வந்து செல்லும் நிலையில் அவள் வந்தது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்திற்று. தனது தங்கையரில் ஒருத்தியை அழைத்து வந்திருந்தாள். ஒரு விண்ணப்பப் படிவத்தில் கையொப்பம் கேட்டு என்னிடம் படிவத்தை தந்தாள். ஏதோ வேலைக்கு விண்ணப்பிக் கிறாள் போல. என நினைத்துத் தான் அந்தப்படிவத்தை வாங்கினேன். ஆனால், அதைப் பார்த்ததும் மறுபடியும் ஆச்சரியமானேன்.

ஏனென்றால், அது க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம். தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவம் கிராம அலுவலரும் கையொப்பமிட வேண்டி இருந்தது.

“என்னம்மா ஏ.எல் எடுக்கேல்லையோ ஒருக்காலும்.” என்றேன்.

அவள் கண்கள் கலங்கின. “இல்லை சேர். படிச்சுக் கொண்டிருக்கேக்கை சண்டைவந்து எல்லாம் குழம்பிப் போச்சு.” என்றாள்.

“இப்ப என்னென்டு படிக்கிறீர்.” என்றேன்.

“நோட்ஸ் எல்லாம் வாங்கி வைச்சிருக்கிறன் வீட்டிலை யிருந்துதான் படிக்கிறன்”

“கிளாசுக் கொண்டும் போறேல்லையே.”

“மற்ஸ், சயன்ஸ் எண்டா தான் கிளாசுக்குப் போக வேணும். அங்க பயோசயன்ஸ் தான் படிச்சன் இனி, அது சரி வரா. ஆர்ட்ஸ் தான் எடுக்கப் போறன் வீட்டிலையிருந்து படிக்கலாம்.”

கண்கள் கலங்கியிருந்தாலும், அவளது விடாமுயற்சி கண்டு வியந்தபடி கையொப்பமிட்டுக் கொடுத்தேன்.

அதன் பிறகு, அவள் தொடர்ந்து படித்துக் கொண்டி ருப்பதாக அவளது தகப்பனும் மாமனும் என்னிடம் அலுவலாக வந்து போகும் வேளைகளில் நான் அறிந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகள் நெருங்கி வந்து அவை முடிந்தும் விட்டன. அவள் நன்றாக செய்திருப்பதாகச் சொன்னார்கள்.

பெறுபேறுகள் வந்தபோது அவளுக்குத் திருப்தியளிக்கக் கூடிய பெறுபேறுகளாய் அவை அமைந்தன. பல்கலைக் கழகத் திற்குப் போவதற்கு அவளுடைய பெறுபேறுகள் போதுமா வென அவள் மாமாவிடம் கேட்டேன். அப்போது அவர் சொன்ன பதில் எனக்கு மேலும் வியப்பூட்டியது. பல்கலைக் கழகத்திற்கு நுழைவதற்கான தகுதிப்பாட்டை அவளது பெறுபேறு கொண்டிருக்கும் போதும் அவள் பல்கலைக் கழகத்திற்கான முதல் படிவம் அனுப்பவில்லை என்றார். எவ்வளவு ஆர்வமாகப் படித்தாள். தனது சொந்தக் காலில் நின்று படித்து முன்னேறி தன் துன்பங்களை மறக்க முயற்சிக்கிறாள் என்று பார்த்தால், இவள் ஏன் இப்படி...? எனக் குழம்பினேன்.

"ஏன் கெட்டித்தனமாய் படிச்சபிள்ளை தானை. தொடர்ந்து படிக்கட்டுமன்." என்றேன்.

"நீங்கள் இப்படிச் சொல்லுறியள். கூடப்படிச்ச பிள்ளையளும் வந்து அட்வைஸ் பண்ணுதுகள். ஆனா அவள் கேக்கிறாளில்லை."

"ஏனாம்.?"

"அங்கை கம்பசிலை படிப்பை விட கூத்தும், கும்பாளமுமா இருக்குமாம். அங்கை போனாத் தன்ரை வேதனை தான் மிஞ்சும் எண்டு சொல்லுறாள்."

நான் வாயடைத்துப் போனேன். எந்தவித துயரங்களும் இல்லாமல் மனது வெறும் பளிங்காக இருக்கையில் பல்கலைக் கழகச் சூழல் இதமாகவும், மகிழ்வாகவும் இருக்கும் தான். ஆனால். இவளுக்கு.? அவளது எண்ணத்தின் உண்மைத் தன்மையை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

"அப்ப, ஏன் இவ்வளவு கஷ்ரப்பட்டுப் படிச்சவள். நோமலா மூண்டு பாடம் பாஸ் பண்ணியிருந்தாக் காணும் தானே."

"அவளுக்குக் கொலிஜூக்குப் போற ஐடியா இருக்கு."

"அங்கை மட்டும் சமவயசுப் பிள்ளையள் கூத்தும், கும்மாள முமா இருக்க மாட்டினமாமோ..?" கேலியாகக் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்கு அவள் சொல்லுறாள் கம்பசை விடக் கொலிஜ் பறவாயில்லையாம். ரீச்சர்மாரை உருவாக்கிற இடம் எண்ட படியால் டிசிப்பிளின் இருக்குமெண்ணிறாள். அதோட ஹோஸ்டலிலை தான் கட்டாயம் நிக்க வேணும் எண்ணிற தாலை அவள் அதை விரும்புறாள். குறைஞ்சபட்சம் தெரிஞ்ச முகங்களிலையிருந்து தள்ளி இருக்கலாம் எண்டதுக்காகவாவது அவள் கொலிஜ்ஜைத் தான் விரும்புறாள்."

அவள் நிதானமாகத் தான் சிந்திக்கிறாள். பல்கலைக் கழகம் சென்று படித்து விட்டு வேலைக்குக் காத்திருப்பதை விட கல்விக் கல்லூரிக்குச் சென்று ஆசிரியப் பயிற்சி முடித்து ஆசிரியையாக வருவது அவளுக்கு நல்லது தான். அவளது உளக் காயங்களுக்கும் ஒரு ஆறுதலாக இருக்கும்.

நாட்கள் நகர்ந்தோடின. அவர்களது வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் இல்லை. ஒரே சீராகக்காலம் நகர்ந்து கொண்டிருந்தது.

மறுபடியும் ஒருநாள் அவள் தன் தங்கையோடு வந்தாள். நற்சான்றுச் சான்றிதழ் தேவை என்றாள். என்ன தேவைக் கென்று கேட்டபோது கல்விக் கல்லூரி நேர்முகத் தேர்வுக்கென்றாள்.

அவள் கல்விக் கல்லூரியைத் தேர்ந்தெடுத்தது மிகவும் நல்ல விடயம் என்றும், கல்லூரி முடிந்ததும் ஆசிரியராகி விடலாம் என்றும் அவளை மெச்சியபடி, அவளது அடிமனக் கவலைகள் எனக்குத் தெரியாததைப் போல் காட்டிக் கொண்டு அவளது சுயவிபரங்களை விசாரித்துப் படிவத்தை நிரப்பிய வாறே அவளிடம் கையெழுத்துப் பெற்று விட்டு சான்றிதழைக் கிழித்துக் கொடுத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதை கொண்டு போய் ஏ.ஜி.ஏ.ஒவ்விசிலை சைன் வாங்கும் பிள்ளை" என்றேன். அவள் மீண்டும் தயங்கிநின்றாள்.

"வேறை ஏதேன் அலுவலோ பிள்ளை" என்றேன்.

அவள் வாங்கில் இருந்த மற்ற இரண்டு பேரைத் தயக்க மாய் ஏறிட்டாள்.

"நீர் இரும் பிள்ளை. நான் அவையளிண்டை அலுவலைக்

கவனிச்சிட்டு வாறன்." என்றேன், அவளின் தயக்கத்தை உணர்ந்து.

"பரவாயில்லை சேர்." என்றபடியே நின்றாள். நான் வந்திருந்தவர்களைக் கூப்பிட்டேன். அவர்கள் காணிப் பிணக் கில் றிமாண்டில் சென்ற ஒருவனைப் பிணை எடுப்பதற்கு தமது சொத்து விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு வந்திருந்தனர். ஆவணங்களைப் பரிசீலித்துவிட்டு அவசரமாகக் கையொப்ப மிட்டுக் கொடுத்தேன்.

வந்தவர்கள் போய்விட்டனர். மீண்டும் அவளை அழைத்து என் முன் அமரச் செய்தேன். அவளது தங்கை வாங்கில் அமர்ந்தபடி வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எனக்கு ஒரு உதவி செய்ய வேணும் சேர்" அவள்தலை குனிந்தபடியே கேட்டாள்.

அவள் என்னிடம் உதவி கேட்கிறாள் என்பதே எனக்கு வியப்பை ஏற்படுத்திற்று. குடும்பத்தில் ஏதாவது பிரச்சினையா..? அவளது குடும்பம் அப்படிப்பட்டது அல்லவே.?

"என்னம்மா என்ன விஷயம்.?" என்றேன். "வன்னிலை எனக்குக் கலியாணம் நடந்தது சேர்." என்றாள்.

"தெரியும்" என்றேன்.

"அவர், அவர், சண்டை நேரம் செத்துப் போனார்" அவள் கண்கள் கலங்கின.

வீட்டில் மறுமணத்திற்கு வற்புறுத்துகின்றார்களோ? அதில் விருப்பமில்லாமல் என்னிடம் முறையிட வந்தாளோ? என ஒரு கணம் எனக்குத் தோன்றிற்று.

"அதுவும் தெரியுமம்மா. இப்ப என்ன பிரச்சினை."

அவள் கண்களைத் துடைத்த படிநிமிர்ந்தாள்.

"கொலிஜ்ஜிலை சேருறதெண்டா கலியாணம் செய்திருக் கக் கூடாதாம். அன்மரீட் சேர்ட்டிபிக்கெற் கேக்கினம்."

திடுக்கிட்டேன். இதை நான் எப்படி மறந்தேன்? ஒவ்வொரு வருடமும் கல்விக்கல்லூரிக்குத் தெரிவாகும் பிள்ளை கள் திருமணமாகாத சான்றிதழ் பெற்றுக் கொள்ள என்னிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதை எப்படி மறந்தேன்?

இப்போது அவள் என்னிடம் எதிர்பார்ப்பது என்ன.? திருமணமாகாதவள் என்று நான் உறுதிப்படுத்துவதை அல்லவா..? எந்த நொடியில் என் மேலதிகாரிகள் அவ் விடயத்தைக் கண்டு பிடித்தாலும் என் வேலை போய்விடப் போவது உறுதி.

என் மனம் கொந்தளித்தது. "கலியாணமான பிள்ளை யெண்டு தெரிஞ்சும் நான் என்னெண்டம்மா கலியாணம் ஆகேல்லையெண்டு "சேர்ட்டிபிகேற்" தாற.?"

அவள் கண்கள் மறுபடி கலங்கின. "அவர் இப்ப இல்லை. நான் என்ரை குடும்பத்துக்கு பாரமா இருக்க விரும்பேல்லை சேர். நீங்களும் அப்பிடித்தரேலாதெண்டா விடுங்கோ சேர்."

அவள் எங்கோ பார்த்தபடி பேசினாள். எனக்கு அவளது நிலை சடுதியாக உறைத்தது. படித்த குறையில் திருமணம் முடித்து, அந்த வாழ்வை அரைகுறையில் பறிகொடுத்து முகாமில் அடைபட்டு, மீண்டு வந்து, உறவினர் வீட்டு மூலையில் ஒதுங்கி கஷ்டப்பட்டு படித்து, பல்கலைக்கழகத்துக்குத் தெரிவா கத் தக்க புள்ளிகள் பெற்றும், அதற்கு விண்ணப் பிக்காமல், கல்விக் கல்லூரியில் அனுமதி கிடைக்கும் என்று மலை போல் நம்பியிருந்தவளுக்கு இப்படி ஒரு காரணத்தினால் அவளது எதிர்காலம் கேள்விக்குறியாகுமா..?

அவள் மேலான பரிதாபம் மேலோங்குகிறது. ஆனால் அவளது எதிர்காலத்துக்கு இரங்கி எனது எதிர்காலத்தைப் பாழாக்குவதா?

எனக்கு அவர்களது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியாதது கவலையை அளித்தது. இதுவரை அவர்கள் ஒரு நாளுமே என்னிடம் உதவி என்று வந்ததில்லை. இப்படி வரும் போது என்னால் உதவி செய்ய முடியாதிருக்கின்றதே. வன்னியில் முடித்த திருமணம் தானே. யாருக்குத் தெரிந்து விடப் போகிறது என்று கையொப்பமிட்டுக் கொடுக்கலாம் ஆனால், என் மேல் பொறாமை பிடித்தவர்கள், என்னை எப்படி மாட்டி விடுவது? என்று காத்திருப்பவர்கள் மத்தியில் இந்தச் செய்தி எட்டி விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால். கடவுளே. இவர்களுக்கு என்னால் எப்படி உதவ முடியும்.?

சட்டென்று எனக்கு அந்த சந்தேகம் தோன்றியது. அவளுக்கு இப்போது இருபது வயதென்றால் கூட திருமணம் நடந்தேறிய காலப் பகுதியில் பதினெட்டு வயது தாண்டி யிருக்குமா..? என்றால் சந்தேகம் தானே. எப்படி திருமணப்பதிவு நடந்திருக்கும்.? நினைவில் பளிச்சிட சட்டென்று கேட்டேன்.

"கலியாணம் பதிஞ்சதோம்மா..?"

அவள் கண்கள் கலங்கக்கூறினாள். "பதியேல்லை, கோயிலிலை தான். தாலி கட்டின."

"அப்பாடா" என மூச்சு விட்டேன். "கடிதத்தைத் தாரும். கையெழுத்து வச்சுத் தாறன்" என்றேன்.

அவள் கையோடு கொண்டு வந்திருந்த கடிதத்தைத் தந்தாள்.

அதன் கீழ் அவளுக்குத் திருமணமாகவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கையொப்பமிட்டு எனது இறப்பர்ஸ்ராம்பை அடித்து அவளிடம் கொடுத்தேன்.

"தாங்க்ஸ் சேர், உங்கட உதவியை எண்டைக்குமே நான் மறக்கமாட்டன்." என்றபடியே அவள் எழுந்தாள்.

"நான் கையெழுத்து வைச்சுத் தந்திட்டன் ஆனா, கலியாணம் ஆகேல்லையெண்டு நிரூபிக்கிறது உம்மட கையிலை தான் இருக்கு. இப்பிடி எல்லா இடமும் அழுது, உம்மை நீரே காட்டிக் குடுத்திடாதேயும்"

என்னைப் பார்த்து புன்னகைக்க முயன்றாள். இந்த வலியும் வேதனையும் எப்படி மறந்து போகும். எனச் சொல்வது போலிருந்தது அந்தப் புன்னகை.

எனது மனதிலும் அவளது பாரம் தொற்றிக் கொண்டது.

ஆனால், வெகு விரைவிலேயே அந்தப் பாரம் இறங்கி விடும் வகையிலான ஒரு செயலைச் செய்திருக் கிறேன் என்பது மனதிற்குப் பெரும் ஆறுதலைத் தந்தது.

வாசலைப் பார்த்தேன். அவள் திடமாக நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

- ஜீவநதி : ஆனி 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகவி ஆகிய நான்

முற்றத்து மாவில் "குத்"தென்று வந்திறங்கியது ஒரு மைனா.

கொஞ்ச நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஏதோ தன் பாட்டில் கீச்சுக், கீச்சென்று கத்திக்கொண்டிருந்தது. பிறகு தான் தெரிந்தது. அது தன் பாட்டில் பேசவில்லை. சற்றுத் தள்ளி இன்னொரு கிளையிலிருந்த வேறொரு மைனாவோடு பேசிக்கொண்டிருக்கிறதென்று. இரண்டும் கொஞ்ச நேரம் கீச்சு, மாச்சென்று அமளி யாய்க் கதை பேசிக் கொண்டிருந்தன. அந்தச் சோடி மைனாக்களின் கொஞ்சநேர சந்தோசம் கூட என் வாழ்வில் அமைந் திருக்கவில்லை. சற்று நேரத்துக்குள் இரண்டும் பறந்துபோய் விட்டன. ஆரவாரம் அடங்கிக் கிடந்தது முற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைனாக்களின் சத்தம் ஓயப் புலுனி கள் மாங்கிளைகளில் தொங்கிக் கொண்டு ஊஞ்சலாடின. குழாயடியில் தேங்கியிருந்த நீர்க்குளத்தில் சிறகுகள் நனைத்துச்

சிலிர்த்துக் கூத்தாடின. தாங்கள் மட்டும் தான் உலகம் என்பது போல சிரித்துக் களித்துக் கொண்டிருந்த புலுனிகளைப் பார்க்க ஏக்கமாய்க் கிடந்தது. கீரைவிதை போலச் சின்னக்கண்கள். தலையைச் சரித்து அவை தத்தித் தத்தி இரை பொறுக்குவதை நாள் முழுக்கப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். பார்த்துக் கொண்டேயிருக்க விடாமல் நேரம் துரத்தும்.

புலுனிகளின் சத்தம் கேட்டு உள்ளேயிருந்து பூனை வந்தது. மெத்து, மெத்தெனக் கால்களை நீட்டி ஆவலோடு புலுனிச் சத்தத்திற்கு அது தலையைக் கொடுத்தபோதுதான் சஜிதா வந்தாள். அவளுக்கு ஒரு இடத்திற்குப் போனால் முதலில் அவள் கண்களில் தட்டுப்படுவது, நாய், பூனை போன்ற விலங்குகள் தான் எனச் சொன்னாள். மனிதர்களைப் பார்க்க முதல் அவளது புலன்கள் அவற்றில் தான் குவியுமாம். அவற்றின் தன்னிச்சையான செயற்பாடுகளைத் தான் ரசிப்பதாகவும் அவை வேண்டுமென்றே ஒருபோதும் தீங்கு செய்யாதவை என்றும் சொன்னாள். அப்படி எனக்கும் சில இருந்தன. ஆனால் நான் தேடுவது மிருகங்களை அல்ல. எனது கண்கள் வானத்தையும், மரங்களையும் துளாவும். பறவைகள் தான் என் தேடலுக்குக் காரணமானவை. பறவைகளைத் தேடத் தொடங்கியபிறகு என் மனம் மிக இலேசாயிருக்கிறது.

மனிதர்களிடத்தில் எதையும் தேட விரும்பியதில்லை. அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களில்லை ஒருபோதும். எனது அடி மனதில் என்றைக்கும் அது ஒட்டியபடிதான் இருக்கிறது. அப்படி மனிதர்கள் மீதிருந்த அவநம்பிக்கை தான் அவள் என்னைத் தேடி வந்ததற்கான காரணமாகக்கூட இருக்கலாம். ஆனால், அவள் என்னை எந்த விதத்தில் நம்பினாள் என்பது எனக்குத் தெரியவில்லை. அவள் தனது வளையல்கள் உள்ளிட்ட நகைகளை காகிதத்தினுள் சுற்றி ஒரு துணிப் பையினுள் பொதிந்து என்னிடம் தந்திருந்தாள். அவளது வெற்றுக் கைகளைப் பார்க்க எனக்கு ஏதோ போலிருந்தது. ஆசை, ஆசையாய்க் கைகளில் வளையல் போடுவதில் எனக்கும் தான் எவ்வளவு ஆசை இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது மணிக்கட்டை இயல்பாக எனது கை வருடியபோது, அவள் ஏதோ பாம்பு பட்டது போல சட்டென்று தன் கையை உதறினாள். எனக்கு என்னவோ போலாகிவிட்டது.

"நீ கவலைப்படாதை பிள்ளை, எல்லாத்தையும் மீட்டுப்போடலாம்..." என்றேன் அவளுக்குச் சமாதானமாக.

"இது வரைக்கும் எனக்கு இப்பிடியொரு நிலை வரேல்லை. முதல்முதலா நகையெல்லாம் அடகு வச்சிருக்கிறன். உங்களிலை உள்ள நம்பிக்கைதான். ஏமாத்திப் போடாதை யுங்கோ அக்கா..."

"ஏமாத்திப்போடாதையுங்கோ அக்கா..." என்ற அவளது அந்த வார்த்தைகளில் என் மனம் கொதித்தது.

"ஏமாத்திப்போடுவன் எண்டு நினைச்சால் போ... கொண்டு போய் பாங்கிலை அடகு வை... இப்பதானை சந்திக்குச் சந்தி வங்கி திறந்து வைச்சிருக்கிறாங்கள்..."

எனது எரிச்சலான குரலை மேவி அவள் வறட்சியாகச் சிரித்தாள்.

"நீங்கள் கண்டிப்புக் கறார் எண்டாலும் நேர்மை, நாணயம் எண்டு நம்பினதாலை தான் உங்களிட்டை வந்தனான்... குறையா நினைக்காதையுங்கோ..."

அவள் எழும்பியபோது உள்ளே சென்று அலமாரியைத் திறந்து அவளுக்குக் கொடுக்கவென வங்கியிலிருந்து எடுத்து வைத்த இரண்டு லட்சத்தை எடுத்து வந்து கொடுத்தேன்.

"வீடு கட்ட வெளிக்கிட்டிட்டு, மூளியாயே திரியப் போறாய். ஏதும் "கவரிங்" கெண்டாலும் கழுத்துக்கு, கையுக்கு வாங்கிப் போடு பிள்ளை" என்று மறுபடியும் அவள் கரத்தைத் தடவ முற்பட்டபோது அவள் விலகி எழுந்தாள்.

"வாறன் அக்கா..." சைக்கிளை எடுத்து உழக்கத் தொடங் கினாள். பத்து மைல் தொலைவிலிருந்து வந்திருந்தாள். இத்தோடு இரண்டு, மூன்று தரம் வந்திருப்பாளா என்னிடம். இருக்கலாம்.

வங்கியிலேயே நகையை அடைவு வைத்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு ஊரெல்லாம் தெரிந்து போனால் அவமானமாம்.கட்டிய குறையில் நிற்கிற வீட்டை முடிக்க அவளுக்குத் தெரிந்த ஒரே வழி இதுதான். இரண்டு குழந்தைகளோடு அவள் அல்லாடிக் கொண்டிருந்தாள்.

நான் ராகவி. சந்தைக்கு வியாபாரத்திற்குப் போய்க் கொண்டிருந்தேன். வட்டிக்குப் பணம் கொடுப்பதுவே என் பிரதானமான வேலையாகவிருந்தது. இந்த நாற்பத்து மூன்று வயதுக்குள் நானாக உழைத்த காசில் ஊருக்குள் நான் கொஞ்சம் வசதியானவளாய்த் தானிருந்தேன். இருந்துமென்ன எல்லாம் போயிற்று. நான் உழைத்துச் சேர்த்த எல்லாவற்றையும் போன வருஷத்தின் நடுப்பகுதியில் ஒருநாள் இழந்தேன். எல்லாவற்றை யும் இழந்து, வெறுங்கையோடு, வெறுங்கையோடு இருந்தால் மட்டும் பரவாயில்லை. உள்ளே குத்தி ரணமாக்கிய வேதனை யோடு செயலிழந்து போய்க் கிடந்த நாலைந்து மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் திரும்பத் தலையெடுக்க ஆரம்பித் திருக்கிறேன்.

அவளுக்கு எந்த அளவிற்கு என்னைப் பற்றித் தெரிந் திருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் அவள் மீது எனக்கு ஏதோ ஒருவித ஒட்டுதல் வந்திருந்தது. என்னைக் குறித்து அவள் எச்சரிக்கையாக இருப்பது எனக்கு ஒருமாதிரி இருந்தாலும், அவள் வாழ்ந்த, வளர்ந்த சூழல் அவளை அப்படி வைத்திருப் பதற்கு அவளை எப்படிக் குறை சொல்ல முடியும். என் தலைவிதி... நான் இப்படி இருக்கிறேன். வழிய, வழிய வந்து பழகியவர்களின் நடிப்புத்தான் ஒருநாளில் வெடித்துச் சிதறி விட்டதே.

அதெப்படி, இவ்வளவு மோசமாக நடிக்க முடிகிறது மனிதர்களால். நான் என்பாட்டில் தானேயிருந்தேன். நானா வலிந்து போய்ப் பழகினேன் அவர்களோடு. அவர்களாகவே வந்தார்கள். பழகினார்கள். வந்தது தான் வந்தார்கள். என்னில் மிச்ச மிருந்த ஜீவனையும் சேர்த்து சூறையாடிக் கொண்டு போய் விட்டார்கள்.

அவர்களைப் பற்றி எனக்கென்ன நினைப்பு இப்போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கொஞ்சம்,கொஞ்சமாக எல்லாவற்றையும் மறந்து கொண்டு வருகின்றேன். நான் பிறந்ததில் இருந்து இன்றுவரை என் பெற்றவர்களை, சகோதரர்களை, அவர்களிடமிருந்து என்னைப் பிரித்த விதியை, அண்டி வாழ்ந்த உறவுகளை, புதிசாய்க் கிடைத்த சொந்தங்களை, நான் நம்பி ஏமாந்து என் முதுகுக்குப் பின்னால் சிரித்தவர்களை, என் வாழ்க்கை முழுக்க நான் கண்ட ரணங்களை, நான் தேடித் திரிந்த உண்மை அன்பை, இந்த முரட்டு உடம்புக்குள்ளும் நான் உணர்ந்த மென்மையை... எல்லாவற்றையும் மறந்துவிட நினைக்கிறேன்.

எல்லாம் போதும் எனக்கு...

எந்தவிதமான அன்புத் தேடலுக்கும் நான் அருகதை அற்றவள்.

என்னையொரு கேலிப் பொருளாய் ஆக்கிவிட்டார்கள் அவர்கள். இந்த மனதுக்குள் இருந்த உணர்வை அவர்களால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை.

நான் ஒரு பாவப்பிறப்பா...?

காதல் உணர்வு எனக்குள்ளும் ஏற்பட்டது என் தவறா...?

என் மனதைப் புரிந்து கொண்டு என்னைப் பகிர முழுமையாய் ஒருவன் கிடைக்க மாட்டானாவென்று எத்தனை காலமாய்க் காத்திருந்தேன்.

அவன் எனக்கே எனக்கென்று கிடைத்தபோது நம்ப முடியாமல் திணறினேன்.

கடைசியில் என்னை ஒற்றையில் தனித்திருக்கவிட்டு அவன் துரோகத்தோடு காணாமல் போனான்...

அந்த ஆறேழு மாதங்கள் நான் அவனோடு வாழ்ந் திருந்தேன். வாழ்க்கை என்றால் என்னவென்று உணர்ந்தேன். அவ்வளவு காலம் இழந்த வாழ்வின் தேன்துளியெல்லாம் அப்போது எனக்குப் பருகக் கிடைத்தது. மனதில் ஒரு ஆறுதல் ஏறி உட்கார்ந்திருந்தது. என்னை எள்ளி நகையாடிய உலகத்தைப் பார்த்து எனக்கு வாழ்க்கை கிடைத்துவிட்டது என உரத்துக் கத்தவேண்டும் போலிருந்தது. சுற்றியிருந்த அந்த அன்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் போல யாருக்குக் கிடைக்கும். நான் அவர்களுக்குப் பார்த்துப் பார்த்துச் செய்தேன்.

***

ருக்மணி பாதிப் பொழுது ஒய்ந்து போய்க் கிடந்தாள். பிள்ளைகள் ஓய்ந்து வரும்போதெல்லாம் நான் அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன்.

என் கையெழுத்து எப்போதும் முத்துப் போல அழகாக இருக்கும். அந்தக் கையெழுத்து இன்றுவரை மாறவில்லை. தமிழிலே எவ்வளவுதான் விருப்பத்தோடும், கெட்டித்தனத் தோடும் நான் இருந்தாலும் எனக்குத்தான் தொடர்ந்து படிக்கக் கிடைக்கவில்லை.

அப்போது பள்ளிக்கூடக் காலத்தில் என்னுடைய எழுத்தைக் காட்டி சங்கரப்பிள்ளை மாஸ்டர் மற்றப் பையன் களுக்கு உதாரணம் காட்டுவதுண்டு.

"இப்பிடி எழுதோணுமடா, இதெல்லோ எழுத்து..." என்று என்னைப் பார்த்துப் பாராட்டுவார். ஆனால் அவர்கள் என்னைப் பார்த்து தங்களுக்குள் நெளித்துச் சிரிப்பார்கள். நான் அவர்களோடு அப்போதிலிருந்தே சேர்வதில்லை. அதிலும் தேவன் என் கையைப் பிடித்து முறுக்குவதும், கிள்ளுவதும் எனக்கு அறவே பிடிக்காது. அப்போதே நான் அவர்களிட மிருந்து விலகித்தானிருந்தேன்.

பக்கத்தில் இப்போது யாருமில்லை. வீடு பூட்டித்தான் கிடக்கிறது. அவர்கள் போய்விட்டார்கள். ஆறேழு மாதம், அலை எழுப்பிய கடல் மாதிரி குடியிருந்துவிட்டு எந்த அடை யாளமும் இன்றிக் கிளம்பிப் போய் விட்டார்கள். அவர்கள் மட்டுமில்லை. நானும் கொஞ்ச நாள் வாழ்ந்த வீடு அது.

இப்போது அங்கே யாரும் வாடகைக்கு வர ஒத்துக் கொள்கிறார்கள் இல்லையாம். பக்கத்து வீட்டுச் சொந்தக்காரர் அடிக்கடி வந்து கத்தி விட்டுப் போகிறார். யாரும் குடிவராததற்கு நானும் ஒரு காரணமாம். நல்லாய்த்தான் சொல்வார்கள் எல்லாரும். ஒரு நேரத்தில் அவரது மனைவி ஆஸ்பத்திரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது நான் அவளுக்கு உதவியாய்ப் போய் நின்று பார்த்த கதையெல்லாம் அவர் மறந்து விட்டார் போல.

குடும்பகாரர் அந்த வீட்டுக்கு வரப் பயப்படுகிறார் களாம்.

என்னைக் குற்றம் சாட்டும் தொனி.

என்னை விரட்டுகின்ற ஆங்காரம்.

நான் என் வீட்டில் குடியிருக்கிறேன்.

நான் எதற்குப் போக வேண்டும்...?

நான் வீம்பாகத்தான் நின்றேன்.

ஒரு பெண் பிள்ளைக்கு இத்தனை ஆங்காரம் கூடாது தான். ஆனால், நான் அப்படி எதிர்த்து நின்றிராவிட்டால் எங்கேனும் விரட்டியடித்திருப்பார்கள் என்னை. ஆனால் அதற்கும் முயற்சி செய்து கொண்டுதான் இருந்தார்கள்.

இரவுகளில் தகர வேலியில் கற்களை எடுத்து எறிவார்கள். பெரிய, பெரிய சத்தம் இரவில் திகிலை மூட்டும்.

எனக்குத் தெரியும், அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் என்னை விரட்டச் செய்கின்ற சதிதான் என்று.

கிராம அலுவலரிடம் போனேன். போலிசுக்குப் போனேன். என்னை என் வீட்டில் இருக்க விடுகிறார்களில்லை என்று முறைப்பாடு கொடுத்தேன்.

கொஞ்ச நாளைக்கு ஓய்ந்திருக்கும். பிறகு மறுபடி தொடங்கிவிடும்.

சத்தம் தாளாமல் நான் பகல் வேளைகளில் ஆங்கார மாய்க் கத்துவேன்.

எனக்கு மூளைப்பிசகு வந்துவிட்டதாய்ச் சொன்னார்கள்.

அக்கம்பக்கத்தில் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்றார்கள்.

என்னால் திரும்பவும் அவர்களோடு மோத முடிய வில்லை. வீட்டுக்குள்ளேயே ஒடுங்கினேன். திரும்பவும் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பும் இல்லாமல் உழைக்கத் தொடங்கினேன். கையில் மறுபடியும் கொஞ்சம் காசு சேரத் தொடங்கியது.

எனது பணம் அவர்களது அவசரத் தேவைகளுக்குத் தேவைப்பட்டது. வாயை மூடிக் கொண்டார்கள்.

அப்படி என்னிடம் காசு வாங்கிப் பழகியவர்கள் தான் சஜிதாவுக்கு என்னைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும்.

சஜிதாவுக்கு நல்ல நீளத் தலைமுடி. பார்க்கப், பார்க்க ஆசையாக இருக்கும். எனக்கு இடுப்புக்குக் கீழ் வளரவேயில்லை முடி. அவளது முடியைப் பார்க்கத் தடவிக் கொடுக்க வேண்டும் போலிருக்கும். ஆனால், அவள் அருகில் போனாலே விலகிக் கொண்டு விடுவாள். எனக்குத் தலை நிறையப் பூ வைப்பதில் விருப்பம் இருந்தது. அவளுடைய பின்னலுக்குப் பூ வைத்தால் எவ்வளவு அழகாக இருக்கும். ஆனால், அவள் அதில் அக்கறை காட்டுபவள் போல் தெரியவில்லை. அவளது கழுத்தைச் சுற்றி இறுக்குகின்ற குடும்பப் பிரச்சினைகளுக்குள் அவள் இதில் அக்கறை எடுத்தால் தான் ஆச்சரியம்.

நான் குழாயடியில் இரண்டு மல்லிகைக் கன்றுகள் வைத்திருந்தேன். அது இப்போது நல்லாய்ப் பூத்துக் கொட்டு கின்ற பருவத்தில் நிற்கிறது. ஒவ்வொரு விதமாய் ஆசைதீர நான் அந்த வாசம் திகட்டும் வரைக்கும் நூலில் கட்டித் தலைக்கு வைத்துக் கொள்வேன்.

யாரேனும் சிறிசுகள் வந்து மல்லிகைப்பூ என்று வாசலில் நின்றாலும் கொடுக்கத் தோன்றாது எனக்கு. மரம் முழுக்கப் பூவாய் இருக்க வாசனையில் குலுங்கும் வீடு. அவளுக்கு நான் அந்த மரத்திலிருந்து கொஞ்சம் பூக்களைப் பிடுங்கிக் கொடுப்பேன்.

“உன்ரை தலைக்கு நல்ல வடிவாக் கிடக்கும், சரம் கட்டி வை பிள்ளை…”

அவள் அதை அசிரத்தையாய் வாங்கிக் கொள்வாள்.

இந்த மல்லிகைப் பூ வாசத்தின் மேலும் ஒருத்திக்கு ஆசை வராமலா இருக்கும், என அவள் மீது எனக்கு ஆச்சரியம் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் பட்ட அடிகள் அவளை இப்படிப்பட்ட சின்னச் சின்ன சந்தோஷங்களைக்கூட கவனிக்காமல் பண்ணுமா? எனக்கும் தான் வாழ்க்கையில் எத்தனை அடி. நான் இந்தப் பூக்களை, வளையல்களை, அலங்காரங்களை ரசிக்காமலா இருக்கிறேன்.

அவள் வன்னியில் வேலை பார்த்தவள். இப்போது இங்கு மாற்றம் எடுத்து வந்திருந்தாள். வன்னியிலே இருந்த சொத்துக் கள் எல்லாம் அழிந்து போக, இங்கேயிருந்த சீதனக் காணியில் வீடு கட்டிக் குடி போகும் எண்ணத்தில் வந்திருந்தார்கள். சிறிசுகள் படிக்கிற வயதில் கடனுக்கு விண்ணப்பித்து விட்டு என்னிடம் நகைகளை அடகு வைக்கக் கொடுத்திருந்தாள்.

என்னிடம் வர முதல் நாலைந்து இடங்களில் என்னைப் பற்றி விசாரித்திருப்பாள் போல. என் குணஇயல்புகள் அறிந்தவள் போல அதற்கேற்ப நடந்து கொண்டாள். ஆனாலும் கொஞ்சம் தயக்கமாய் விலகியே நின்றாள். நான் அவளோடு ஒட்டிக் கொண்டது போல அவளால் என்னோடு ஒட்டிக் கொள்ள முடியவில்லை.

இரண்டு, மூன்று பிள்ளைகளைப் பெற்று அதில் ஒன்றை வன்னிக்குள் காவு கொடுத்துவிட்டு, துயரங்களைத் தாங்கும் சக்தியின்றி வந்து நின்றவளை நான் கொஞ்சம் பரிவாகத்தான் பார்த்தேன். ஆளுக்காள் துயர் சொல்லி ஆற ஒரு நிழல் கிடைத்தாற் போல. ஆனால் அவள் அதற்கு இசைவாள் போல் தெரியவில்லை. எனக்கும், உனக்கும் இந்தக் கொடுக்கல் வாங்கல் மட்டும்தான். இது முடிந்தவுடன் எல்லாமும் முடிந்துவிடும். உனது கண்டிப்பும், கறாரும் இருக்கும் வரைக்கும் எனது காணாமற்போன தம்பிகளைப் பற்றியோ, வன்னிக்குள் குடி யேறப் போய் விட்ட தம்பி மனைவியைப் பற்றியோ உன்னிடம் பேசத் தேவையிராது என்றுதானே உன்னிடம் வந்தேன்... என்பது போல எட்டத்தில் இருப்பாள். மனம் திறந்து எதுவும் கதைத்திருக்கவும் இல்லை. அவளைப் பற்றி அக்கம் பக்கத்தி லிருந்து அரசல், புரசலாய் வந்த கதைகளின் படி அவளது தம்பிகள் இருவர் இயக்கத்தில் கொஞ்சம் பொறுப்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் இருந்ததாகவும், இருவரும் காணாமல் போய்விட்ட தாகச் சொல்லப்பட்டு விட்டாலும் உண்மை என்னவென்று தெரியாதென்றும், தம்பி மனைவிக்கும் குழந்தைகளுக்கும் இவளே பணம் அனுப்பிக் கொண்டிருப்பதாகவும் இவள் வீட்டுக்கு விசாரணைக்கென சி.ஐ.டி வந்து போவதாகவும் வீடு கட்டுவதற்குப் பணம் எப்படி வருகிறதென அவர்கள் ஆராய்வ தாகவும், இந்தக் கதைகளை என் காதுபடவே சனங்கள் கதைத் தார்கள். ஆனால், நான் எதையும் அவளிடமிருந்து பிடுங்கிக் கேட்கவுமில்லை.

இந்தச் சனங்களின் வாயிலிருந்து வருகின்ற ஈவிரக்கமற்ற சொற்கள் நாளை என்னையும் வேட்டையாடும். இதுவரை என்னைத் தின்ற சொற்கள் தானே. நான் அவற்றைக் காதில் வாங்கவும் விரும்புவதில்லை.

அவளைப் பற்றி நான் எதுவுமே கேட்கவில்லை.

எப்போது பணம் தேவை...? எப்போது திருப்பிக் கொடுப்பாள்...? எவ்வளவு தேவை...? போன்ற விபரங்களை யும், எனது வட்டிக் கணக்கையும் மட்டுமே அவளோடு பேசிக் கொண்டேன். அதைத் தவிர எங்களுக்கிடையே பேச எதுவும் இருக்கவில்லை. ஆனால், ஒரு நாள் எனது பூனை மல்லாந்து ராஜ தோரணையில் படுத்துக் கிடந்ததைக் கண்டபோதுதான் அவளது கண்கள் விரிந்து பரிவு வழிந்தோடத் தன் வாய் திறந்தாள்.

“அய்யே... என்ன மாதிரி, சொகுசாப் படுத்திருக்கிறார். பஞ்சு போல எவ்வளவு ஆசையாக் கிடக்கு...”

அவள் மூன்று குழந்தைகளுக்குத் தாய் என்றதை மறந்து குழந்தையாய்க் குதூகலித்தாள். அதற்குப் பிறகுதான் அவள் சொன்னாள். எங்கே போனாலும், ஓடித்திரியும் அணில்களை யும், பூனை, நாய்களையும் அவள் மனம் பின் தொடர்ந்து செல்வ தாக. அவள் சொன்ன பிறகுதான் நானும் யோசித்துப் பார்த்தேன். எனது மனமும் அப்படித்தானே குருவிகளையும், மரங்களையும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. நான் அண்ணாந்து பார்க்கின்ற போது இழந்து போன எனது சந்தோஷங்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுவதாக நீங்கள் நினைத்துக் கொள்ளலாம். ஆனால், நிச்சய மாக நான் தேடுவது தொலைந்து போன மனிதம் மேலே, எங்கேயாவது தொங்கிக் கொண்டிருக்கிறதாவென்றுதான் ...

அவள் தங்கள் வீட்டுப் பூனைக்குட்டிகள் பற்றி, வன்னி யில் தவறவிடப்பட்ட பூனைக்குட்டியை, அங்கு வந்து போகும் குரங்குக் குட்டிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பாள். நானும் எங்கள் வீட்டுப் புலுனிகளையும், மைனாக்களையும் பற்றிச் சொல்வேன். அப்படித்தான் எங்களுக்கிடையிலான இடைவெளிகளை நாங்கள் நீக்கிக் கொள்ளத் தொடங்கினோம். அவளோடு பழகப் பழக என் மனதில் நிறைந்திருந்த கசந்த நினைவுகள் கொஞ்சம், கொஞ்சமாய்க் கழன்று கொண்டு போயின. நானும், சந்தையும், வியாபாரமும் என் வட்டிக் கடனு மென ஓடிக் கொண்டிருந்தேன். சைக்கிளை எடுத்து, பாருக்கு மேலால் கால் போட்டு, நான் நிமிர்ந்து சைக்கிள் ஓட்டும்போது ஒழுங்கைக்குள் சிறிசுகள் ஓடி வந்து வேடிக்கை பார்க்கும்.

நீண்ட நாட்களாக வராமல் இருந்தவள் மறுபடியும் வந்தபோது நான் அவளிடம் கேட்டேன்.

"என்ன, கன நாளாய் ஆளைக் காணேல்லை..."

"நெஞ்சுக்குத்து, ரெண்டு நாள் ஆஸ்பத்திரீலை கிடந்த னான்... இப்ப பறுவாயில்லை..." பரிவாய் அவள் நெஞ்சைத் தடவப் போகப் பட்டென்று விலகிக் கொண்டாள். என் மனம் உடைந்து குமுறியது.

என்ன தான் அன்பு, பாசம் காட்டினாலும், எனக்கும் அவளுக்குமான உறவு வெறும் காசுக் கொடுக்கல், வாங்கல் தானே.

"ஏன் பிள்ளை இவ்வளவு தூரம் நீ சைக்கிள் ஓடிக் கொண்டு வாறாய். நெஞ்சுக்குத்துக்காறி. மனிசனை அனுப்பி யிருக்கலாம் தானை. நான் குடுத்து விட்டிருப்பன் காசு..." என்றேன்.

"வேண்டாம். நானே வந்து வாங்குறன்" என அவள் முணுமுணுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிசனை அனுப்பித் தாரை வாக்க இவளூமென்ன ருக்குமணியே..."

தகரவேலிக்கு அப்பாலிருந்து எப்படி அந்தச் சொற்கள் கிளம்பி வந்ததோ தெரியவில்லை.எனது உச்சியிலிருந்து கொதி கிளம்பிக் கொண்டு வந்தது. விறு, விறென்று வீதிக்கு ஓடினேன்.இரண்டு உருவங்கள் ஒழுங்கை முனையில் மறைய தெருவில் கிடந்த கற்களைப் பொறுக்கி எறிந்தேன்.

"என்னடி சொன்னியள்... என்னடி சொன்னியள்..." பைத்தியம் பிடித்தது போல் கத்தினேன்.

சஜிதா திகைப்போடு படலையடிக்கு வந்தாள்.

"அக்கா... உள்ளுக்கு வாங்கோக்கா... எல்லாரும் பாக்கினம்..."

"பாக்கட்டும்... எல்லாரும், இப்ப மட்டுமே பாக்கினம்... நான் பிறந்த நாளிலையிருந்து எல்லாரும் என்னை விசித்திர மாய்த் தானை பாக்கினம்..."

நெஞ்சில் அறைந்தபடி கத்தினேன்.

"உள்ளுக்கு வாங்கோக்கா முதலிலை... ஆக்களை வேடிக்கை பாக்க வைக்காதையுங்கோ..."

"எனக்குப் பைத்தியம்... எல்லாரும் பாக்கட்டும்... அவன் என்னைப் பைத்தியம் ஆக்கிப் போட்டான்..."

நான் எழும்பி அரற்றியபடி உள்ளே வந்தேன். வீதியில் ஆட்கள் குழும, அவள் என்னைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.இப்போதும் அவள் என்னைப் பிடித்த போது கொஞ்சம் விலகித்தான் நடந்து வந்தாள். அவள் தோளில் சாயக் கூட எனக்கு உரிமை இல்லை. கொஞ்சம் சாய வேண்டும் போல்தான் இருந்தது. சாய்ந்தால் உதறிவிட்டுப் போய் விடுவாளோ எனும் பயத்தில் நான் என்னைச் சுதாகரித்துக் கொண்டேன்.

விறாந்தையின் வெளிக் குந்தில் அவள் என்னை அமர்த்தி விட்டுப் பக்கத்தில் இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒண்டும் யோசிக்காதையுங்கோ அக்கா... சனத்தின்ரை கதையை விடுங்கோ..." என்றாள்.

நான் அவளைக் கூர்மையாகப் பார்த்தேன். அவள் தனது கண்களைத் தாழ்த்திக் கொண்டாள். என்னைப் பார்ப்பதிலிருந்து விடுபட நினைக்கிறாளோ...?

"நீ உண்மையைச் சொல்லு பிள்ளை, சனத்திண்டை கதையை நீயும் நம்புறியோ...?"

"என்ன...?"

"நான் உன்ரை புருஷனை வளைச்சுப் போடுவன் எண்டு தானோ நீ தனிய இவ்வளவு கரைச்சல்பட்டு இஞ்சை வந்து போறாய்..."

"உந்தக் கதையை விடுங்கோ அக்கா..."

"உண்மையைச் சொல்லு..."

"அவருக்கு நேரமில்லை..." அவள் எங்கேயோ பார்த்துக் கொண்டு சொன்னாள்.

"அப்ப நீ என்னை நம்புறியோ...?" அவள் திகைப்போடு திரும்பினாள்.

"என்னத்தை நம்புற...?"

"நான் ஒருத்தரையும் ஏமாத்தேல்லை எண்டதை...?"

"நீங்கள் ஏன் ஏமாத்திறியள்...."

"நீ என்ரை கதையை முழுக்கக் கேட்டிட்டுச் சொல்லு பிள்ளை எனக்கு எல்லாருமாச் செய்த அநியாயத்தை..."

நான் எனது கதையை அவளுக்கு முதலில் இருந்து சொல்லத்தொடங்கினேன்.

சின்ன வயதில் அம்மாவை இழந்து அதற்குப் பிறகு அப்பாவையும் இழந்த பிறகு சகோதரர்கள் கொஞ்சம், கொஞ்சமாய் என்னை விலக்கத் தொடங்கினர்.

அக்கா, தம்பிகளின் பிள்ளைகள் வளர, வளர பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளிடையே அவமானமாய்க் கிடந்ததாய்க் கத்துவார்கள். நானும் எத்தனை நாட்களுக்கென்று தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடப்பது...? நான் வட்டிக்குப் பணம் கொடுக்கத் தொடங்கியபின் கொஞ்சம், கொஞ்சமாய்ச் சேமித்தேன். அதன் பிறகு தான் என் பெயரில் இருந்த சிறிய காணித்துண்டில் எனக்களவான சிறிய வீட்டை அமைத்துக் கொண்டேன். அங்கு சுதந்திரமாய் வந்த பிறகுதான் சந்தைக்குப் போயும் வியாபாரம் பண்ண முடிந்தது.

நான் கொஞ்சம் காசு புழங்கும் ஆளாக இருந்ததால் எல்லாரும் காசுத் தேவைக்கு என்னிடமே வந்தனர். கொடுப்பதைப் போலவே அதை வசூலிப்பதிலும் நான் கறார் ஆகவே இருந்தேன்.

அப்போது தான் பக்கத்து வீட்டுக்கு ருக்மணியின் குடும்பம் குடி வந்தது. ருக்மணிக்கு நாலு பிள்ளைகள். எங்கெல்லாமோ மாறி,மாறி இடம் பெயர்ந்து வந்ததாக அவள் சொன்ன போதும், அவளது உண்மையான இடம் எதுவென்பது கடைசிவரை எனக்குத் தெரியவேயில்லை.

வந்த புதிதில் எதற்கெடுத்தாலும் என்னிடமே வருவாள்.

“திருவலையைத் தாங்கோ அக்கா..”

“பிள்ளையளுக்குப் பள்ளிக்கூடத்துக்குக் காசு கட்ட வேணும் அக்கா. கொஞ்சம் காசு கடனாத் தாங்கோ...”

என எதற்கெடுத்தாலும் என்னிடமே வருவாள்.அவளது கணவன் பெரிதாக வெளிப்பட மாட்டான். இடைக்கிடை எங்கேனும் வேலை கிடைத்தால் போய் வருவதாக ருக்மணி சொன்னாள்.

எப்போது பார்த்தாலும் அவள் கணவனைக் குறை சொல்லிக் கொண்டேயிருந்தாள். அவனைப் பார்க்கப் பாவமாயிருக்கும்.

எதற்கெடுத்தாலும் குறை சொல்வதை நிறுத்தும்படி நானும் அவளிடம் இரண்டு, மூன்று முறை சொன்ன ஞாபகம்.

திடீரென்று சில நாட்களில் ருக்மணி தனக்கு ஏலாமல் இருக்கிறதென்று என்னைத் தேநீர் போட்டுத்தரச் சொல்லிக் கேட்பாள். நாரிப் பிடிப்பென்று அவள் படுத்திருப்பாள். கஷ்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் தானே உதவி தேவையென்று நானும் அவளுக்குச் செய்து கொடுப்பேன். தேநீர் போட்டு அவள் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் நானே கொடுப்பேன்.

அப்படித்தான் ருக்மணி ஒருநாள் என்னைக் கூப்பிட்டாள்.

“அக்கா, இந்த மனிசன் சாப்பாடு வேண்டாமெண்டு படுத்திருக்கு. என்னவெண்டு ஒருக்காக் கேளுங்கோ அக்கா...”

இப்படிக் கூப்பிட்ட போதுதான் வினை ஆரம்பிக்கிறதென்று எனக்கு ஏனோ தெரியாமல் போயிற்று.

“ஏன், என்னத்துக்குச் சாப்பிடாராம்...”

“நீங்களே கேளுங்கோ என்னவெண்டு...”

நான் அவனிடம் ஆறுதலாக என்னவென்று விசாரித்தேன்.

குடும்பக் கவலையைச் சொன்னான்.எப்படியும் வெளிநாட்டுக்குப் போகவேண்டும் என்று சொன்னான். நான் அவனுடைய கவலைகளைக் கேட்பது மனதுக்கு நிம்மதியைத் தருவதாகச் சொன்னான்.

நான் ருக்குவுக்கும், அவனுக்கும் தேறுதல் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். அதற்குப் பிறகு அடிக்கடி அப்படி நிகழ்ந்தது.

“அக்கா நான் குடுத்தா அவர் சாப்பிடாராம்... நீங்கள் வந்து குடுங்கோ அக்கா...” அவள் என்னை வருந்தி,வருந்தி அழைத்தாள். அன்புக்கு ஏங்கிக் கிடந்த நான் அவளது குழைந்த வார்த்தைகளில் எடுபட்டேன்.

நாட்கள் போகப் போக அவன் என்னை அணுகும் முறை வித்தியாசப்பட, என் மீதில் அவன் எடுத்த உரிமை அச்சத்தைத் தர ருக்குவிடம் சொன்னேன்.

“வேண்டாம் ருக்கு, நான் இனிமேல் வரேல்லை....”

“ஏன் என்ன நடந்தது...?”

“இல்லை ருக்கு, இப்பிடி ஒரு பொம்பிளை தன்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷனை இன்னொருத்தீற்றை விடக் கூடாது. விட்டால் அது பிழையாப் போம்."

"ஏன், என்ன பிழை... எனக்கு என்ரை புருசன்ரை சந்தோசம் தான் முக்கியம்.நான் வருத்தக்காறி. உனக்கு விட்டுத் தாறன்... நீ என் யோசிக்கிறாய்...?

ருக்குவிடமிருந்து இந்த வார்த்தைகளை நான் எதிர்பார்த் திருக்கவில்லை. அதிர்ந்து போனேன். ருக்கு என்னை அவனுக்கு இரண்டாம் தாரமாக்குவதாகச் சொன்னபோது எனக்கு இந்த உலகமே என் காலடிக்குக் கீழே வந்தது போலிருந்தது.

அதற்குப் பிறகு நானும் எல்லாத் தயக்கங்களிலும் இருந்து விடுபட்டு அவனோடு குடும்பம் நடத்தத் தொடங் கினேன். எனக்கென்று ஒருவன் இருக்கிறான் என்பதே எனக்குப் போதுமானதாய் இருந்தது. அவன் என்னில் காட்டிய அக்கறை யில் நான் நெகிழ்ந்து போனேன். என் வீட்டுக்கு யாரும் ஆண்கள் காசு விஷயமாக வந்தால் கூட என்னை வெளியே வர விட மாட்டான்.

"ராகவி,நீ உள்ளுக்கை போ..." என என்னை உள்ளே அனுப்பிவிட்டு அவனே எல்லாவற்றையும் பேசிக் கொள்வான். அவ்வளவு நாளும் என் சுய உணர்வோடு இருந்த என் அறிவு அப்போது தான் முழுசாய் மங்கியது.அவனது அந்த வார்த்தைக்குத் தான் நான் அவ்வளவு காலமும் காத்திருந்தது போல் பட்டது. எனது வீட்டில் சகோதரர்கள் கூட ஆண்கள் யாரேனும் வீட்டுக்கு வந்தால் என்னை உள்ளே போவென்று சொன்னதில்லை. இவன் சொன்னான்.அவன் ஒருவன் என்னைத் தன் மனைவியாக முழுக்க, முழுக்க ஒரு பெண்ணாக ஏற்றுக் கொண்டுவிட்டான் என்ற மகிழ்வில் திண்டாடினேன்.

பிறப்பில் ஆணாயிருந்து, வளர வளர உடலின் சுரப்புக் களும், உணர்வுகளும் மாற, முடி வளர்த்து, சேலை கட்டி, அறுவை சிகிச்சை செய்து முழுதாகப் பெண்ணாக மாறி விட்டாலும் கூட "அலி"என்று பெயர் சூட்டிய இந்தச் சமூகம் என்னைப் பெண்ணாகப் பார்க்கவில்லையே. அவன் என்னை உள்ளே போகச் சொன்ன அந்தக் கணத்திலிருந்து நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையுமே அவனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தேன். வங்கியிலிருந்து என் பணம், நகை எல்லாவற்றையும் எடுத்து அவனிடம் கொடுத்தேன். எட்டு லட்சம் ரூபாய்கள். அவன் ஏஜென்சிக்குக் கொடுப்பதற்கு அதுவும் உதவுமென்றால் எனக்கு எவ்வளவு சந்தோஷம். அவனோடு நானும் கொழும்புக்குப் போனேன். அவன் அந்தப் பணத்தை ஏஜென்சிக்காரனிடம் கொடுப்பதை நான் என் கண்களால் கண்டேன். போய்ச் சேர்ந்தபிறகு ருக்குவையும், பிள்ளைகளையும் கூப்பிடும் போது என்னையும் கூப்பிடுவதாகச் சொன்னான்.

நான் ஊருக்கு வந்தேன். இரண்டு மாதங்களில் ருக்குவும் கொழும்புக்குப் போய் அலுவல் பார்த்துக் கொண்டு வருவதாய்ச் சொல்லிக் கொண்டு போனாள்.

போனவர்கள் இரண்டு மாதங்களில்லை நாலு மாதங்கள், ஆறு மாதங்கள் என்று காலங்கள் போன பிறகும் திரும்பி வரவேயில்லை. அவர்கள் ஏதோ ஒரு நாட்டுக்குப் போய் விட்டார்கள் என்று என் முதுகுக்குப் பின்னால் யாரோ கதைத்தார்கள். ஆனால், அவன் என்னைக் கூப்பிடுவான், கூப்பிடுவான் என நினைத்துக் காத்திருந்து, காத்திருந்து நான்... எல்லாவற்றையும் இழந்தேன், என் மன நிம்மதியையும் சேர்த்து. இப்போது ஒரு பைத்தியம் போல் அலைந்து கொண்டிருக்கிறேன்.

என் புலம்பல் ஓய்ந்தபோது சஜிதா என்னை வருடிக் கொண்டிருந்தாள். அவளது கரங்களில் கூச்சம் கொஞ்சமும் இல்லை என்பதைக் கொஞ்சம் தாமதமாகவே நான் உணர ஆரம்பித்தேன்.

- எதுவரை : 2012 செப்ரெம்பர் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை இனி யாரோ...?

"சட்... சட்... சடார்..." தூரத்தில் எங்கோ துப்பாக்கி வேட்டுக்கள் ஒலித்தன. மளமளவென்று "ட்ரௌசர்" அடித்துக் கொண்டிருந்த ஸ்ரீயின் பாதங்கள் திடுக் குற்று நின்றன.

ஐயோ... அம்மா... என்ற வார்த்தை களுடன் அவன் விரலிலிருந்து இரத்தம் தெறித்தது.

"என்னடா... என்ன..." தையல் மெஷின்களின் ஓட்டம் திடீரென்று நின்று விட எல்லோரும் அவனைச் சந்தேகத்துடன் பார்த்தார்கள். எங்கேயோ கேட்ட துப் பாக்கிச்சத்தம் அவனைத் தாக்கி விட்டதா என்ன...? துப்பாக்கிக்குண்டு தன்மேல் பாய்ந்தது எனப் பிரமை பிடித்துக் கத்து கின்றானா...?

ஏற்கனவே இவ்வாறான சத்தங்கள் கேட்டால் அவனுக்குக் கெடிக்கலக்கம். அது இப்போது உச்சத்திற்கு வந்து விட்டதா என்ன...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் என்னடா செய்து வைச்சிருக்கிறாய்...?" கணத்தில் ஏற்பட்ட சந்தேகமெல்லாம் உடைந்து நொறுங்க, சுபேஷ் அதிர்ச்சியாய்க் கத்தியபடி அவனருகே ஓடிவந்தான். அதற்குப் பின்தான் மற்றவர்களும் நிலைமையைப் புரிந்து கொண்டார்கள். ஸ்ரீயின் பெருவிரலின் மீது தையல்ஊசி ஏறியிருந்தது. அவன் வலியால் துடித்துக் கொண்டிருந்தான்.

"பொறடா பொறு.." என்றபடி சுபேஷ் மெல்ல அவன் விரலை தையல் ஊசியிடமிருந்து விடுவிக்க எத்தனித்தான். கண்களை இறுக மூடியபடி அனுங்கிக் கொண்டிருந்தான் ஸ்ரீ. இன்னும் கொஞ்சநேரத்தில் அந்த அனுக்கம் பெரும் கத்தலாய் உருவெடுக்கக்கூடும் என்பதை உணர்ந்த சுபேஷ் மெல்ல தையல் மிஷினைச் சுழற்றி ஊசியை மேலேற்றி எடுத்தான்.

"குபுக்"கென்று குருதி பீறிட்டுக்கிளம்ப "ஆ"வென்று அலறியபடி விரலை வாய்க்கு அருகில் கொண்டு போய் ஊதினான் ஸ்ரீ.

"சரி சரி... ஏதோ ஊசியை எடுத்தாச்சு. இப்படியே விடாமல் ஆஸ்பத்திரீலை போய் ஊசியைப் போடு..." என்றான் மதீசன்.

"இப்ப போட்ட ஊசிக்கே இவ்வளவு கத்துறான். இனியொண்டு போட விடுவான் பார்..." சுபேஸ் அவனை அனுதாபத்துடன் பார்த்தான்.

"இந்தச் சின்ன ஊசி குத்தினதுக்கே எனக்கு இந்தப்பாடு... அந்தத் துவக்குச்சூடு வாங்கின வனிண்டை கதி என்ன...?" ஸ்ரீயின் நினைவு சூடு பட்டவனைச் சுற்றியே வட்டமிட்டது. அந்த மிரட்சியின் விளைவாய்த்தானே கை தடுமாறி விரலில் ஊசியை ஏற்றிக் கொள்ள நேரிட்டது.

இங்கேயாவது அவன் கத்தியவுடன் பக்கத்திலிருந்தவர் கள் என்ன ஏது என்று கேட்டு ஓடி வந்தார்கள். அங்கே சூடு பட்டவனின் நிலை என்னவாயிருக்கும். சூட்டுச்சத்தம் கேட்டவுடனேயே அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் காததூரம் போயிருப்பார்கள். கொஞ்சநேரத்திற்கு அங்கு ஈ, காக்கை கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்காது. அவன் சிலவேளை காயப்பட்டு, மூச்சுக்குத் தவித்து தாகமுற்று, இறுதிக்கணத்தில் தண்ணீருக்குக் குரல் கொடுத்திருந் தாலும் கூட யாரும் அவனுக்குப் பதிலளித்திருக்கப் போவ தில்லை. மூச்சு அடங்கும்வரை அந்த உயிர் தவித்திருக்க வேண்டும் என்பதே நியதியா?

ஸ்ரீயிற்கு இப்படியான மரணங்களைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்து மனது நிலை கொள்வதில்லை. எப்போதும் பயமாகவே இருக்கிறது. சாவு குறித்தபயம் அவனை நிம்மதி யாகவே இருக்க விட்டதில்லை. அவன் பிறந்த காலத்திலிருந்து நிலைமை இவ்வாறாகத் தானே இருக்கிறது.

எண்பதுகளின் கடைக்கூற்றில் அவன் பிறந்திருந்தான் அவன் பிறந்த காலத்தில் துப்பாக்கிச் சூடுகளும், வெடிகுண்டு ஒலிகளும் நிறைந்திருந்தன. வயிற்றிலிருக்கும் போது கூட அந்த ஒலிகள் தான் அவனைச் சூழ்ந்திருந்தன. அதனால் தானோ என்னவோ, அவன் எதற்கெடுத்தாலும் பயந்த சுபாவம் கொண்டவனாய் இருந்தான். வயிற்றிலிருக்கையிலேயே அந்தக் குண்டு ஒலிகள் அவனது மூளையைப் பாதித்திருக்க வேண்டும். படிப்புக்கூட ஏறவில்லை. பாடசாலையில் ஆசிரியர்களிடம் "மரமண்டை" எனப்பேச்சு வாங்கியதுண்டு. ஆனாலும் எத்தனை தடவை பேச்சுக் கேட்டாலும் "சுரணை" வரவில்லை.

"எனக்குப் படிப்பு வரேல்லை. நான் பள்ளிக்கூடம் போகேல்லை..." எனத் தாயோடு மல்லுக்கட்டி அந்தத் தாயின் அழுகைக்கும் கண்ணீருக்கும் இரங்கி பத்தாம் வகுப்புவரை படித்தான். அதுவரை எப்படிப் பாஸானான் என்பதில் அவனுக்கே சந்தேகம். எப்படியாவது ஓ. எல்லையாவது தாண்ட வைக்க வேண்டுமென்று அவனது தாய் எவ்வளவோ கஷ்டப்பட்டாள். எதுவும் பலிக்கவில்லை. "எப்பிடியும் நான் பாஸ் பண்ணமாட்டன். பிறகேன் கஷ்ரப்படுவான்..." என்பதே அவனது சித்தாந்தமாக இருந்தது. ஓ. எல்.லை எழுதினால் ஆர்ரையேன் காலைப் படிச்செண்டாலும் எங்கினையேன் பியோன் வேலை எடுப்பிச்சுப் போடலாம் என்றுதான் அவன் தாய் அல்லாடினாள். அவன் அதற்கு இடங்கொடுக்காததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தையல் கடையில் ட்ரௌசர் அடிக்க வேண்டி வந்து விட்டது. என்னென்றாலும். படிப்பதைவிட இது அவனுக்கு இலகுவாகத்தான் இருந்தது.

சுபேஸ் எங்கேயோ பக்கத்தில் போய் மருந்தும், பண்டேஜும் வாங்கி வந்தான். ஒரு சகோதரன் போல் உதவி செய்வதில் அவன் மிகவும் வல்லவன். நல்லவனும் கூட. இவனைப்பற்றி மற்றவர்கள் ஒரு சொல் கூற அவன் விடமாட்டான். தாயைப் போலத்தாங்கும் அவனுக்கும் படிப்பு ஏறவில்லை. இங்கே வந்து சேர்ந்துவிட்டான்.

சுபேஸ் மருந்துபூசும் தருணத்தில், வலியை மறக்கும் சாக்கில் நினைவை மாற்ற எத்தனித்தவனுக்கு, மறுபடியும் அந்தத் துப்பாக்கிச் சூட்டின் ஞாபகம் வந்தது. இப்போதெல்லாம் எப்போது நினைத்தாலும் இந்தச் சூடுகள் கேட்பது வழக்கமாகி விட்டது. ஆண், பெண் எந்த பேதமுமின்றி துவக்குகள் வாய் பிளப்பது சாதாரணமாகிற்று. ஒரு தந்தையின் பொறுப்புக்கள் பற்றியோ, சகோதரனின் சுமைகள் பற்றியோ, எந்த வித உணர்வுகளுமற்று ரவைகள் பீறிட்டுப் பாய்கின்றன.

போன கிழமை கூட அவனறிய ஒரு அக்கா செத்துப் போனாள். அந்த அக்காவை இவனுக்குத் தெரியும். சின்னவயதில் கோவில் திருவிழாக்களில் இவனுக்குக் கச்சான் வாங்கிக் கொடுத்திருந்திருக்கிறாள். அந்த அக்கா ஏன் இவ்வளவு காலமாகியும் கல்யாணமாகாமல் இருக்கிறா? என்ற கேள்வி அவன் மனதில் அடிக்கடி அரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அதைவிட அதிகமாய் அவன் மனதை இப்போது அரிக்கின்ற கேள்வி அந்த அக்காவை ஏன் சுட்டார்கள்...?

கடைசியாய் அந்த அக்காவை அவன் கண்டபோது, அவள் இடுப்பில் குடத்தோடு கோவில் கிணற்றடியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது தான். அதன்பிறகு இரண்டு சடச்சட சத்தங்கள். அவ்வளவுதான். வீதியிலே குடம் உருண்டு தண்ணீர் ஒழுகிப்பாய அருகில் குருதியும் போட்டிக்கு ஒழுகியதாம்.

அக்காவின் அம்மா எவ்வளவோ கத்தியபோதும் அந்த இடத்திற்கு ஒருவரும் போகவில்லையாம்... பிறகு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ்வந்து விசாரணைகள் முடித்து அந்த அக்கா... ஏன்... எதற்கு என்பதெல்லாம் தெரியாமல் அடக்கம் செய்யப்பட்டாள்.

போனமாதத்தில் இன்னொரு சம்பவம். அது யாரென்று அவனுக்குத் தெரிய வில்லை. இரண்டு குழந்தைகளை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு சென்ற ஒரு மனிதன்... சைக்கிளை நிறுத்தச் சொல்லி ஏதோ கதைப்பதற்குக் கூட்டிப்போனார்கள். இரண்டு நிமிடங்களில் வேட்டுச்சத்தங்கள். அவ்வளவுதான் அந்தச் சின்னக்குழந்தைகள் தந்தையின் பிணத்தை நெருங்கவும் முடியாமல், விலகவும் முடியாமல் கதறிக் கொண்டிருந்ததை அவன் நேரில் கண்டான். அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் இனி என்னவாகும், கொலை செய்தவனுக்குக் குழந்தைகள் இல்லாமலிருக்குமா? அந்தக் குழந்தைகளைப் பார்த்தபிறகும் கூட அவனுக்குக் கொலை வெறி தீரவில்லையா?

“சந்தையடிப் பக்கத்திலை தான் ஆரையோ சுட்டுப் போட்டுக்கிடக்காம்...”

பக்கத்துக் கடையிலிருந்து தம்பர் வந்து காதுக்குள் தகவல் சொல்லிவிட்டுப் போனார். சந்தையடி வரவர சனசந்தடி யில்லாமல் மாறிக் கொண்டு வருகிறது. இப்படி அடிக்கடி இரத்தம் தெருக்களை நிறைக்கிற போது சனங்களும் வீட்டுக்குள்ளேயே முடங்க வேண்டித்தான் ஏற்படுகிறது.

லட்சுமியம்மா தன் மகனை மனித உரிமை ஆணைக் குழுவில் ஒப்படைத்துவிட்டதாய் ஊருக்குள் கதைத்தார்கள் ஏற்கனவே லட்சுமியம்மாவின் மகனை யாரோ வெருட்டி விட்டுப் போனதாய் ஊருக்குள் அரசல் புரசலான கதை இருந்தது. தன் ஒரே ஒரு மகனைப் பலிகொடுக்க லட்சுமியம்மாவுக்கு விருப்பம் இராததால் அவனைப் பிரிவதற்கும் அந்தத்தாய் சம்மதித்துவிட்டாள்.

இவனைக் கூட இவன் தாய் இனிமேல் எங்கேனும் ஒப்படைக்கக் கூடும் ஆனால் அதுவரைக்கும் கூட இவனது உயிருக்கு உத்தரவாதம் இல்லையே.

“ஒண்டுக்கும் யோசிக்காதை வா. இண்டையான் பலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிஞ்சுது, ஆனபடியா இண்டைக்கு ஒரிடமும் அம்பிட மாட்டம்..."

சுபேஸ் அவனை ஆஸ்பத்திரிக்கு அழைக்கிறான்.

போகலாம். இன்றைய பலி முடிந்து துப்பாக்கி வாய் மூடியிருக்கும் என்ற உணர்வில் பய உணர்வு குறைகின்றது. என்றாலும் மனநிம்மதி கொஞ்சம் தானும் வருவதாயில்லை.

நாளை... அதற்கு மறுநாள்... பொழுதுகள் விடியப் போகின்றன. அந்தந்த நாள்களுக்கான பலி யார் யாரோ...? எனது நாள் என்றோ....?

அவனது மனதில் கேள்விகள் கொக்கி போட்டு இழுக்க தையல்மிஷினை விட்டு எழுகின்றான். எப்படியும் ஊசி போடுவதற்கு ஆஸ்பத்திரி போகத்தானே வேண்டும். எழுந்து நடந்த போது காற்று மெதுவாக வீசியது. அதில் சற்றுமுன் கேட்ட துப்பாக்கிச் சன்னத்தின் குருதி நெடில் கொஞ்சம் கொஞ்சமாய்க் கூடிக்கொண்டு வந்தது.

- ஜீவநதி : தை மாசி -2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு ஆசிரியர்கள் இரண்டு மாணவிகள்

இது துண்டு துண்டான கதை. இந்தக் கதையைச் சேர்த்துச் சொல்ல முடியாமைக்காக நீங்கள் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஒரு கதையைச் சொல்லும் போது நேரடியாக கதையைச் சொல்லக் கூடாது என்றும், வாசகனே கதையை உய்த்துணர வேண்டுமென்றும் அப்படியொரு மேதாவித்தனமான நோக்கமொன்றும் என்னிடமில்லை, நான் சொல்ல நினைப்பது சாதாரண மன உணர்வுகளை. அவற்றைச் சொல்வதற்கு எனக்கென்ன மேதாவித்தனம் வேண்டிக் கிடக்கிறது. எளிமையான மனிதாபிமானம் ஒன்று மட்டுமே போதாதா? ஆனால் இந்தத் துண்டு - துண்டான கதையை நான் உங்களுக்குச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், நான் நீதிபதி இல்லை. எனக்கு என்ன தகுதி இருக்கிறது, மற்றவர்களைப் பிழை என்று சொல்வதற்கு. அவரவர் வரையில் தானே அவரவர் நியாயங்கள் இருக்கின்றன. அதனால் இந்தக் கதையை நான் துண்டுதுண்டாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதாக உத்தேசம். யாரும் இந்தக்கதையைப் பாதியில் விட்டுவிட்டுப் போகாதீர்கள் என்றெல்லாம் நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால் அது உங்கள் இஷ்டம், ஒவ்வொரு துண்டோடும் கதை முடிந்து விட்டதாய்க் கூட நீங்கள் நினைக்கக் கூடும். ஒவ்வொரு துண்டுகளும், அவரவர் மன ஓட்டத்திற்குச் சரியாகவிருக்கும் போது அப்படித்தானே நீங்கள் செய்வீர்கள். அநேகமாக பொறுமையற்றவர்கள், அவசர புத்திக் காரர்கள், நிதான மிழந்தவர்கள் என நீங்கள் இருப்பீர் களாயின் இடையிலேயே நீங்கள் போய்விடக்கூடும். எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. ஏனென்றால் இந்தக் கதை முழுவதையும் கேட்பதற்கு யாராவது ஒருவராவது இருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

***

## அஜந்தா : "ட்ரான்ஸ்பர்" கிடைத்த கதை

விடியற்காலை அவசரங்கள் எல்லாமே அடங்கிப் போன மாதிரிக் கிடக்கு, போனகிழமை வரைக்கும் ஓடி, ஆடி அலைஞ்ச அவசரங்கள் இனி இல்லை. ஆறுதலாய் எழும்பலாம். நிதானமாய் சமைக்கலாம், மனிசனுக்கும் பிள்ளையளுக்கும் பக்கத்திலையிருந்து சாப்பாடு குடுக்கலாம். எரிஞ்சு விழாமல் ஆசை ஆசையாய் வாழ்க்கையை வாழலாம். நாலு வருஷமா அந்தப் பள்ளிக் கூடத்துக்கு அலைஞ்சு திரிஞ்ச அலைச்சலிலை வேலைலைகூட வெறுப்பு வந்திட்டுது. ரெண்டு பஸ்ஸெடுத்துப் போகவேணும். போதாக் குறைக்கு, உள்ளுக்கை வேறை நடக்க வேணும். எல்லோருக்கும் நினைச்ச மாதிரி, நினைச்ச பள்ளிக்கூடம் கிடைக்க நான் மட்டும் அலைய வேண்டியதாப் போச்சு. இடையிலை "டிப்ளோமா" செய்ய வெளிக்கிட்டதிலை பயண அலைச்சலிலை இருந்த விடுதலை திரும்பவும் "பழைய குருடி கதவைத் திறவடி" கதைதான்.

மனிசனுக்கு மாகாண சபையிலை வேலை. பக்கத்தில் பள்ளிக்கூடமெண்டாக் கொண்டு வந்து விட்டிட்டுப் போகலாம். பத்துக் கிலோ மீற்றர் தூரம் தாண்டிக் கொண்டு வந்து விட்டிட்டுப் போக ஏலுமே, அதுவும் ஒவ்வொரு நாளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தான் பஸ்ஸைப் பிடிச்சு அலைஞ்சு உலைய வேண்டி வந்தது.

அதுவும் அங்கை படிக்கிற பிள்ளையள் எல்லா மென்ன படிச்சுக் கிழிக்கவே வருதுகள். உதவாக்கரையள். உள்ள கழிசடை எல்லாம் அங்கே தான். இன்னும் கொஞ்சக்காலம் அங்கை இருந்தனோ அதுகளிண்ட "பாஷை" யெல்லாம் எனக்கும் வந்துடும். நல்லவேளை தப்பினன். நல்ல வேளையோ...? பட்ட அவமானத்துக்கு அதுவும் ஒரு கேடு, எவ்வளவு அவமானத் தோடை, அங்கேயிருந்து திரும்ப வேண்டி வந்தது. இப்படி ஒரு அவமானத்தோடை எப்படி ஒரு ரீச்சர் தொடர்ந்து அங்கை படிப்பிக்கிறது...? நீங்களே சொல்லுங்கோ நான் இதுக்கு மிஞ்சியும் அங்கே இருக்கலாமோ...? நான் கல்விக் கந்தோருக்குப் போய் முறைப்பாடு குடுத்தன். என்னாலை இனிமேல் இஞ்சை படிப்பிக்க ஏலாதெண்டு. உடனை "ட்ரான்ஸ்பர்" கிடைச் சிட்டுது.

என்ன நடந்ததெண்டுதானை கேக்கிறியள். சொல்லுறன். பத்தாம் வகுப்பிலை "அமலி" எண்டொரு பெட்டை புதிசாய் வந்து சேர்ந்தாள். அவள் வரமுதலே அவளைப் பற்றி ஒரு கதை ரீச்சர்மாரிட்டைப் பரவீற்றுது. வேறை ஒண்டுமில்லை. பழைய பள்ளிக்கூடத்திலை ஆரோ மாஸ்டரைப் பற்றிக் கண்டதெல்லாம் சொல்லி முறைப்பாடு குடுத்திருக்கிறாள், வலயத்தாலை விளக்கமெல்லாம் எடுத்துக் கடசீலை இஞ்சை கொண்டு வந்து தள்ளியிருக்கினம்.

படிப்பிக்கிற வாத்தியாரிலை கண்டதையும் முறைப்பாடு குடுக்கிற பெட்டையெண்டால் எப்படியிருக்கும் எண்டு நினைச் சுப் பாருங்கோ, இப்ப கண்ட கண்ட படங்கள், செல்போன், இன்ர் நெற் எண்டு வந்து எல்லாம் கெட்டுப் போச்சுதுகள். எல்லாத்தையும் வாய் கூசாமல் கதைக்குதுகள். ஆம்பிளையள் ஆரையேன் பிடிக்காமல் பழிவாங்க நினைச்சால் இப்பிடிச் செய்தான், அப்பிடிச் செய்தான் எண்டு பழி போடுதுகள். எங்கட காலத்திலை நாங்கள் உப்பிடியெல்லாம் கதைப்பமே. ஆள் வலு சூரி. வந்த உடனையே எல்லா ரீச்சர்மாரும் அவளோடை எட்டத்திலை தான் இருந்தம். வளர்மதி ரீச்சரைத் தவிர, வளர்மதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிண்டை வகுப்பிலை கணக்குப் பாடம் எடுக்கிறது. ஸ்டாப் ரூமிலை நாங்கள் ஏதும் கதைச்சால் அவ ஒண்டும் பேசாமல் "உம்மெண்டு" கொண்டு இருப்பா. அவவுக்கு ஏதோ தான் பெரிய சீர்திருத்தவாதி எண்ட நினைப்பு. அப்படியெண்டா முதல் அந்தப் பெட்டையைத் திருத்திக் காட்டட்டுமன்.

அந்தப் பெட்டை அமலி சரியான றாங்கிக்காறி. பிடிச்ச பிடியிலை நிப்பாள். வன்னிச் சண்டைக்குள்ளை அம்பிட்டு அடி பட்டுத் திரும்பி வந்ததுகளாம். அமலி தான் மூத்த பெட்டை, தாய்க்காரி பழைய போராளி. தகப்பன் காணாமல் போட்டான். அதாலை அந்தக் குடும்பத்துக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. இயக்கம் இருக்கேக்கை இயக்கத்தோடையும், ஆமி இருக் கேக்கை ஆமியோடையும் இருந்து சீவிக்கத் தெரிஞ்சதுகள். சீ... இதுவும் ஒரு பிறப்பே. தாயிட்டைப் பல பேர் வந்து போறதாகக் கேள்வி. அவள் இருக்கிற ஏரியாவும் அப்பிடித்தானை. சீ... நினைக்கவே குமட்டுது. ஒரு நாள் பெட்டையிட்டை நான் கேட்டிட்டன். "உன்ரை அம்மாக்குப் பலபேர் சிநேகிதம் போலை" யெண்டு, பெட்டை என்னை எரிக்கிற மாதிரி ஒரு பார்வை பாத்தாள். ஒரு ரீச்சரிட்டைப் பிள்ளையளுக்கு இருக்க வேண்டிய பணிவு அடக்கம் எல்லாம் எங்கை போச்சு அவளுக்கு,

நான் விசயத்துக்கு வாறன். என்ரை "ஹான்ட் பாக்கு"க்கை மூவாயிரத்து ஐநூறு ரூபா இருந்தது. அந்தக் காசு காணாமல் போச்சு. ஹான்ட் பாக்கை வச்சிட்டு நான் ஒரு இடமும் போற தில்லை. அப்ப மட்டும் போன் கதைக்கிறத்துக்காக எழும்பிக் கொஞ்சம் தள்ளிப்போட்டன். திரும்ப வந்து "பாக்"கைத் திறந்தால் காசைக் காணேல்லை. வாசலில் அவள் முழுசிக் கொண்டு நிண்டாள். வகுப்புக்குப் போகாமல் இஞ்சை என்ன செய்யிறாய்...? எண்டன். ஆரேன் ஆம்பிளை வாத்தியார் நிண்டால் மாட்டி விடலாம் எண்டு பாக்கிறாளோ...? எண்டு தான் எனக்குத் தோன்றிச்சு.. "வளர்மதி ரீச்சர்..." எண்டு இழுத்துப் போட்டு அப்பிடியே பேயறைஞ்ச மாதிரிப் போட்டாள். அதுக்குப் பிறகுதான் நான் பாக்கைப் பாத்தன் காசு இல்லை.

அவள் தான் எடுத்திருக்க வேணும். நான் விறுவிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்டு அவளிண்டை வகுப்புக்குப் போனன்.

ரீச்சர்மார் ஒருதரும் இல்லை.

"வரவர களவெடுக்கவும் பழகீற்றியோ? பாக்கைத் திற பாப்பம்". அவளிண்டை பாக்கைத் திறந்து பாக்க எல்லாப் பிள்ளையளும் எழும்பி நிண்டதுகள். பக்கத்து வகுப்பிலை நிண்ட ரீச்சரவை உடனை வந்துட்டினை.

"அமலிதான் ஸ்டாப் ரூம் வாசலில் நிண்டவள். என்ரை மூவாயிரத்து ஐநூறு ரூபாவை எடுத்துப் போட்டாள்".

"அமலி உன்னைக் கள்ளியாம்..." பக்கத்தில் நின்ற ரம்மியா சத்தமாய்ச் சொன்னாள். அமலியின்ரை முகம் பேய் மாதிரி ஆச்சு. "நானோ கள்ளி, நானோ கள்ளி" எண்டு - கேட்டுக் கொண்டு என்ரை தோளைப் பிடிச்சு தள்ளினாள். நான் விழப்பாத்தன்,

"ஐயோ, ரீச்சருக்கு, அடிக்கவும் துணிஞ்சிட்டாள்" எண்டு சொல்லிக் கொண்டு விமலா ரீச்சர் உள்ளை ஓடி

வந்தா. பிரின்சிப்பலைக் கூட்டி வர மற்றாக்கள் போச்சினம். நான் விழ முதல் விமலா ரீச்சர் என்னைத் தாங்கிப் பிடிச்சா.

"நானோ கள்ளி, நானோ கள்ளி.." அமலி பிசாசு - பிடிச்ச மாதிரிக் கத்தினாள். தன் புத்தகப்பையைக் கவிழ்த்துக் கொட்டினாள். அங்கே என் காசு கிடைக்கவில்லை. அவள் எடுக்காமலே இருந்திருக்கலாம். ஆனா, ஒரு ரீச்சருக்குக் கை நீட்டலாமே...? அவளைப் பள்ளிக்கூடத்தாலை நிப்பாட்ட வேணுமெண்டு ரீச்சர்மார் சத்தம் போட்டினை.

எனக்கு இதைவிட அவமானம் வேறை இல்லை எண்டு உடனடியா ட்ரான்ஸ்பர் கேட்டன். இதுவரைக்கும் இழுத்தடிச்ச வலயக்காரர் உடனையே எனக்கு இடமாற்றம் தந்தினம். அவ்வளவு தான். எப்பிடியோ நான் இப்ப நிம்மதியாய் பள்ளிக்கூடம் போய் வாறன்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரம்மியா: ஆசிரியரைப் பழி தீர்த்த கதை

அஜந்தா ரீச்சரிலை எனக்குக் கோபம் வாறதுக்கு இரகசியமாய் எனக்கு மட்டுமே தெரிஞ்ச ஒரு காரணம் இருக்கு. சுதனோடை நான் வேலிக்கரையோரம் கதைச்சுக் கொண்டு நிண்டதை அஜந்தா ரீச்சர் கண்டிட்டா. சுதன் மெல்ல நழுவீற்றான். நான் தான் ரீச்சரிட்டை அம்பிட்டிட்டன். "இஞ்சை என்னடி செய்யுறாய்?" ரீச்சர் என்னை அதட்டிக் கேட்டா. நான் தலையைக் குனிஞ்சபடி நிண்டன். "படிக்கிற வயசிலை உங்களுக்குப் பெடியள் தேவைப்படுதோடி... இண்டைக்குப் பிறின்சிப்பலிட்டைச் சொல்லி என்ன செய்யிறன் பார்..."

ரீச்சருக்குக் குறுக்காலை போய் காலில் விழாத குறையாய் நான் மண்டாடினன்.

"ரீச்சர், சுதன் எனக்குச் சொந்தக்காரன். அவனின்டை அம்மா ஆஸ்பத்திரியிலை. அதுதான் எப்படியென்டு விசாரிச்சனான்"

"எனக்குக் காது குத்திறியோ, எல்லாத்தையும் விசாரிச்சாப் பிறகு தெரிய வரும், எல்லா வண்டவாளமும்..."

"சொறி ரீச்சர், இனிமேல் இப்பிடிச் செய்ய மாட்டன். இந்த முறை மட்டும் விட்டிடுங்கோ..."

அஜந்தா ரீச்சர் "அடுத்த தரம் இப்பிடிப் பாத்தால் சும்மா விடமாட்டன்" எண்டு சொல்லிப் போட்டு போனா. எனக்குத் திகிலெடுக்கத் தொடங்கிற்றுது. சுதன் பக்கத்து வகுப்பிலை படிக்கிறான். அவனும் நானும் ஒருத்தரை ஒருத்தர் உயிருக்கும் மேலாலை விரும்புறம். அவனோடை ஒருநாள் கதைக் காட்டிலும் எனக்கு உயிர் போற மாதிரிக்கிடக்கும். இப்பிடித் தான் எங்கையாலும் ஒழிச்சுக் கதைக்க வெளிக்கிட்டாலும் மோப்பம் பிடிச்சு மோசமாக் கதை கட்டிப் போடும் சனம். அஜந்தா ரீச்சர் பிரின்சிப்பலிட்டைச் சொல்லாட்டிலும் வேறை ரீச்சர்மாருக்குச் சொல்லிப் போட்டாவோ எண்டு எனக்கு ஒரு சந்தேகம். அதாலை சுதனோடை தனியக் கதைக்கப் பெருங் கஷ்டமாக் கிடந்தது. எப்பவேன் போற போக்கிலை ஆரோடை யேன் கதைக்கிற மாதிரி ஏதேன் கதைகளை எறிஞ்சு போட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவான். அது எனக்கு என்னத்துக்குக் காணும். ஆனாலும், அஜந்தா ரீச்சரிலை பயமாக் கிடந்தது. பிறகு ஒண்டுக்கும் வழியில்லாமல் போம், “டிசிப்ளின் அக்ஷன்” எண்டு ஏதேன் எடுக்கப் போனால் நான் துலைஞ்சன்.

அப்பதான் அமலி வந்தாள். ரீச்சருக்கு என்ரை கதை விட்டுப் போய் இப்ப அமலின்ரை கதையிலை ஆர்வம் திரும்பின திலையும் நான் ரீச்சருக்கு முன்னாலை அடக்க ஒடுக்கமா இருந்ததாலையும் என்ரை கதையை மறந்தது போலவே ஆயிற்றா, ஆனால் நான் மறுப்பனே...? சுதனையும், என்னையும் காணேக்கை ஏதோ கேடு கெட்டதுகள் போலை அவ எங்களைப் பார்த்த பார்வை எனக்கு மறக்கேல்லை.

அமலி நல்லாய்த்தான் பழகினாள். ஆனால், எனக்கு அவளோடை பழகுறத விட வேறை சோலி இருந்தது. அமலிக்குக் கொஞ்ச மொண்டா உடனை “கொதி” வந்திடும், அதுவும் தாயைப் பற்றி எதுவும் சொன்னா வெறியே வந்திடும். இதைக் கனதரம் நான் கண்டிட்டன். அவவிண்டை பழைய கதை என்னவோ அது எனக்குத் தெரியா. ஆனா, ரீச்சர்மார் நாங்கள் அவளோடை பழகுறதைப் பெரிசா விரும்பேல்லை எண்டு அமலி இல்லாத நேரம் மொனிற்றர் சொன்னது. எல்லாரையும் கொஞ்சம் எட்டத்திலை இருக்கட்டாம். இல்லாட்டி நாங்களும் கெட்டுப் போடுவமாம். அதாலை, நாங்கள் அப்பிடித்தான் இருந்தம்.

ஆனால் அஜந்தா ரீச்சர் காசைக் காணேல்லையெண்டு அமலின்ரை பாக்கைத் திறந்து பாக்க “டக்” கொண்டு அமலின்ரை கோபம் தான் நினைவு வந்துது. உடனை அமலிக்குக் கிட்டப் போய் “உன்னைக் கள்ளியாம்” எண்டு போட்டுக் குடுத்தன். அவ்வளவு தான் அமலின்ரை கண்ணிலை அந்த வெறியை நான் திரும்பவும் பாத்தன். “நானோ கள்ளி, நானோ கள்ளி“ எண்டு அமலி அஜந்தா ரீச்சரை அடிக்கப் போனதை நான் கண் குளிரப் பாத்தன். இப்படியொரு இரகசியமான சந்தோஷம் கிடைக்குமெண்டு நான் நினைச்சே பாக்கேல்லை. ஆனாப் பிறகு நானும் மற்றப் பிள்ளையளோடை சேர்ந்து கத்தினன். அமலி ரீச்சருக்குக் கை நீட்டினது பிழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாதரன் : ஒழுக்காற்றுச் சபையின் கௌரவத்தைக் காக்கும் கதை

இந்தக் காலத்துப் பிள்ளையளுக்கு ஒழுக்கமெண்டா கிலோ என்ன விலை எண்டு கேட்குங்கள். படிக்கிற காலத்தில் நாங்களும் குழப்படி செய்தனாங்கள் தான். ஆனா வாத்திமாருக்கு என்னமாதிரி கீழ்ப்படிஞ்சனாங்கள் தெரியுமே...? முதுகுக்குப் பின்னாலை வாத்திமாருக்குப் பட்டம் தெளிச்சாலும் முன்னாலை போனால் கொஞ்சமெண்டாலும் மரியாதைக் குறைவாய் நடந் திருப்பமே. இப்ப பெடியள் என்ன மாதிரி மாறிட்டாங்கள். வாத்தியாரை ஒரு சதத்துக்கும் மதிக்கிறாங்களில்லை. வகுப்பிலை கண்டிச்சால் அதுக்குப் பழிவாங்குற மாதிரி பேஸ்புக்கில் கண்டபடி போட்டு ஆளைக் கேவலப்படுத்திப் போடுறாங்கள். பெடியள் தான் அப்பிடியெண்டா பெட்டை யளும் போட்டிக்கு நிக்கிறாளவை.

அவள் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு மாறி வரேக்கையே நான் சொன்னனான். உவளை இஞ்சை சேர்த்தால் நாங்கள் பெருங் கஷ்டப்படப்போறமெண்டு, பிரின்சிப்பல் கேக் கேல்லை. இப்ப படினைபாடு. நான் முதல்லையே சொல்லிப் போட்டன். அவளிண்டை வகுப்புக்கு நான் பாடம் எடுக்க மாட்டனெண்டு. என்ன இருந்தாலும் எனக்கும் அப்பிடி ஒரு நிலை வராதெண்டு எப்பிடி நம்புறது..? - அவளை நம்பேலா, அவள் ஒரு பொல்லாத குடும்பத்திலையிருந்து வந்தவள். இல்லாட்டி பழைய பள்ளிக்கூடத்திலை ராஜேந்திரன் மாஸ்டருக்கு இப்படிச் செய்திருப்பாளே...? எவ்வளவு கௌரவமானவர் ராஜேந்திரன் மஸ்டர். இப்பிடியொரு குற்றம் சுமத்த அவளுக்கு எப்பிடி மனம் வந்தது...? ஏதோ அந்த மனிஷன் எண்ட படியால் இவ்வளவுக் கும் உயிரோடை இருக்குது. நானெண்டா தூக்குப்போட்டுச் செத்திருப்பன். உயிரை விடப் பெரிசு மானமெல்லோ...?

எனக்குச் சம்மதமில்லை, பிரின்சிப்பல் என்னதான் சொன்னாலும், அவள் திரும்பப் பள்ளிக்கூடம் வாறதிலை எனக்குச் சம்மதமில்லை, இல்லாட்டி நான் இஞ்சை டிசிப்ளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமிற்றிக்குப் பொறுப்பாசிரியரா இருக்கிறதிலை என்ன அர்த்தம். இருக்கிற நாலு வாத்தியாரிலை ஒருதருக்குக் குறி வைப்பாள். இதாலை அவளுக்கு என்ன லாபம்...? அங்கை கை பட்டுது, கால்பட்டுது எண்டு வாத்தியார் அங்கை தொட்டார். இஞ்சை தொட்டார் எண்டு அவள் சென்னால் ஊதிப் பெரிசாக்க நாலைஞ்சு என்.ஜீ. ஓக்கள் வேறை இருக்கு. வாத்தியார் இஞ்சை எங்கட கடமையைச் செய்ய வேண்டாமே. பிள்ளை பிழை செய்தால் அடிச்சுத் தானை திருத்த வேணும். அதெல்லாத்தை யும் சிறுவர் உரிமை மீறல் எண்டு கதைச்சால் சமூகத்திலை பிள்ளையள் உருப்படுமே.

நான் முதலிலேயே சொன்னன். இஞ்சை இப்பிடியானது களை சேர்க்க வேண்டாமெண்டு. அதிபர் கேக் கேல்லை. தான் வலயத்திலை நல்ல பேர் எடுக்க ஓம், ஓம் எண்டு இஞ்சை கொண்டு வந்து சேர்த்தார். கடைசிலை என்ன நடந்தது...? அவள் அஜந்தா ரீச்சருக்கு அடிக்கிற அளவுக்கு நிலைமை போட்டுது. இப்ப பள்ளிக்கூடத்திலை எல்லாருமே அவளுக்கெதிரா திரும்பீட்டினை, பிள்ளைகளும் கூட, வளர்மதி ரீச்சர்தான் இன்னும் அதிலை பரிதாபப்பட்டுக் கொண்டு ஒண்டும் பேசாமல் இருக்கிறா. என்ன நியாயம், கதைச்சாலும் பெட்டை ரீச்சரிலை கை வைச்சதை அவவாலை நியாயப்படுத்த ஏலாது தானை. நான் கௌரவமான குடும்பத்திலையிருந்து வந்தனான். பொம்பிளை ரீச்சரை அடிக்கிற அளவுக்குப் போனவள், ஆம்பிளை ரீச்சர் மாரிலை பரிசு கெட்டத்தனமா ஏதும் பழி சுமத்திப் போட்டா ளெண்டா என்னை மாதிரி ஆக்கள் எப்பிடி ஊருக்கை திரியுறது...?

இனிமேல் அவள் பள்ளிக்கூடத்திற்கு வரப்படாது. வேணுமெண்டா வலயத்துக்காரர் வேறை பள்ளிக்கூடத் திலை கொண்டு போய் சேர்க்கட்டுக்கும். இவளை இனியும் இஞ்சை வச்சிருந்தால் இவ்வளவு காலம் கட்டிக் காத்த பள்ளிக்கூடத் திண்டை பேர் தான் காத்திலை பறக்கும், கூடப் படிக்கின்ற பிள்ளைகளையெல்லாம் திசை திருப்பி விட்டால் அதுகளும் நாளைக்கு ரீச்சர்மாருக்குக் கை ஓங்கத் தொடங்கிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ரீச்சர்மாரும் என்ரை பக்கம் தான். வளர்மதி பட்டும் பேசாமல் நிக்குது. "என்ன ரீச்சர் ஒண்டும் சொல்லுறியள் இல்லை." எண்டா, கெட்டிக்காரப் பிள்ளையைப் படிப்பிக் கிறது. பெரிய விசயமில்லை. பலவீனமான பிள்ளையைத் திருத்தி எடுக்கிறது தான் எங்கட சமூகப் பொறுப்பா இருக்க வேணு மெண்டு தத்துவம் வேறை.

வளர்மதி ரீச்சருக்கு வேறை வழி இல்லை. தனிச்சு நிக்க ஏலா, எங்கட பக்கம் சேரத்தான் வேணும். அமலி இனிப் பள்ளிக்கூடம் வரக்கூடா.

தூக்குப் போட. நான் தயாரில்லை.

***

## அமலி: மனச்சிதைவின் முதல் புள்ளியிலிருந்து...

எனக்குக் கோபம் கோபமா வருது. நான் ஏன் கோபப்பட வேணும். ஏன் நானும் மற்றப் பிள்ளையள் மாதிரி இல்லை. எனக்குத் தெரியாது. வன்னிச் சண்டை உக்கிரமா நடந்த நேரத்திலை நான் அம்மாண்டை வயித்திலை இருந்ததாலை எனக்கு இப்படிக் கோபம் வாறதாயிருக்கலாம். ஆனால், நான் ஒரு நாளும் தேவையில்லாமல் கோபப்படுறதில்லைத்தானை. நான் எப்பவாவது பிழையாக் கோபப்பட்டால் சொல்லுங்கோ. முதலாவது, நான் இஞ்சை வரேக்கை எல்லாரும் பாத்த பார்வை. அப்பிடி ஏன் என்னைப் பாத்துக் காதுக்கை கதைக்க வேணும் எல்லாரும், பிள்ளையளை விட ரீச்சர்மார் தான் கூட அப்பிடிச் செய்தவை. ரீச்சர்மார் எண்டா அப்பிடி நடக்கலாமே....? ரீச்சர்மார் பிழை விடலாமோ...?

என்ரை அம்மா எப்படியிருந்தா உவையளுக்கென்ன...? என்ரை அம்மாவைப் பற்றி ஏன் உவையள் கேவலமாய்க் கதைக்க வேணும். பழைய பள்ளிக்கூடத்திலை தான் எனக்கு ஒரு ஞாயமும் கிடைக்கேல்லை. நான் சொன்னதை ஒரு விசயமாவே எடுக்கேல்லை. எல்லாத்துக்கும் பெரிய ஆக்களாயிருக்க வேணுமோ...? சின்ன ஆக்கள் சொல்லுறதெல்லாம் பொய்யோ. நான் பொய் சொல்லி ஏன் என்னைக் கேவலப்படுத்த வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிடியொரு விசயத்தைச் சொல்லுறனெண்டு அது பொய்யா இருக்காதெண்டு எப்படிச் சொல்லுவீனை. பெரிய மனிசர் எப்பவும் பெரிய மனிசராத்தான் இருக்கோணுமோ? சந்தர்ப்ப மும், சூழ் நிலையும் ஒரு மனிசரைக் குற்றவாளி ஆக்கலாம் எண்டு வளர்மதி ரீச்சர் சொன்னவ. அதே மாதிரித்தான் அங்கையும் பெரிய மனிசர் ஒருதரை சந்தர்ப்பமும், சூழ்நிலையும் குற்றவாளி ஆக்கிச்சு எண்ட அளவிலையாவது நான் சொன்ன விசயத்தை யோசிக்க விரும்பேல்லையா...? சரி, அதில் தான் நியாயம் கிடைக்கேல்லை. இஞ்சையாவது குழப்பம் இல்லாமல் படிப்பம் எண்டு வந்தா ஏதோ செய்யக்கூடாத குற்றம் செய்து வாற மாதிரி என்னைப் பாக்கிற பார்வை, காசு களவு போச்சு தெண்டால் என்னெண்டு காசு களவு போயிருக்கும் எண்டு, யோசிச்சுப் பாக்காமல் பழி சுமத்த ஒருத்தி கிடைச்சுட்டாளே எண்டு என்னிலை பழி சுமத்தின ரீச்சர் காசு எங்கை போனதெண்டு யோசிச்சுப் பாத்திருக்கலாமே. ஏன், பிள்ளைகளிலை மட்டும் சந்தேகப்பட வேணும். ஆசிரியர் அறையிலை உள்ள எல்லாரும் ஆசிரியர் மாதிரியே நடந்து கொள்ளினம். அவையளும் எடுத்திருக்கலாம். ஏன்...? அஜந்தா ரீச்சர் வீட்டிலை மறந்து போய் வைச்சிட்டு வந்திருக்கலாம். இல்லாட்டி அவ வீட்டிலை வேறை ஆரேனும் கூட அவசரத்துக்கு எடுத்திருக்கலாம். எல்லாத்தையும் விட்டிட்டு என்னை வாசலிலை கண்டவுடனை நான் தான் களவெடுத்தனான் எண்டு என்னிலை பழி போட்டால்...? நான் கஷ்டப்பட்டவள்தான். சில நாள் சாப்பிடா மல் கூட பள்ளிக்கூடம் வாறனான்தான், அதுக்காக நான் கள வெடுப்பனே...? "கள்ளி" எண்டு எப்படி என்னைச் சொல்லலாம். எனக்குப் படு கோபம் வந்துட்டு. அடிச்சுவெண்டுதான் கையை ஓங்கினன். ரீச்சர் தள்ளுப்பட்ட தோடை மொனிற்றர் என்னைப் பிடிச்சு இழுத்துப் போட்டுது.

பிழைதான். என்ன இருந்தாலும் ரீச்சரை நான் அடிச் சிருக்கக் கூடாதெண்டு தெரியும். ஆனால், நினைச்சால் எனக்கு இப்பவும் கோபம் பத்தி கொண்டு வருது.

சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு என்னை அனுப்ப வேணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெண்டு ரீச்சர்மார் கதைக்கினமாம். எனக்குக் "கவுன்சிலிங்" வேணுமாம். எனக்குக் "கவுன்சிலிங்" குடுக்க முதல் இஞ்சை உள்ள ரீச்சர்மாருக்குக் "கவுன்சிலிங்" குடுத்தால் என்னைப்போல் ஒரு பிள்ளைக்கும் "கவுன்சிலிங்" தேவைப்படாது.

அனு, ரம்மியா, சிவா ஒருத்தரும் இப்ப என்னோடை கதைக்கிறேல்லை. எல்லாரோடையும் நல்லாப் பழக எனக்கு விருப்பம். ஆனா இனிப் பள்ளிக்கூடமே வரவேண்டாம் எண்டு சொன்னால் இனி நான் ஆரோடை கதைப்பன்...? ஆரோடை விளையாடுவன்...?

நான் இனி எங்கையும் போகத் தயாராயில்லை.

ஒவ்வொரு பள்ளிக்கடத்திலையும் புதிது புதிதாய்ப் போய் அடிபட நான் தயாராயில்லை. எல்லா இடமும் என்னை விடுப்புப் பாப்பீனை. தீண்டத்தகாத மாதிரி என்னை ஒதுக்கி வைப்பீனை. வீட்டை போனால் அம்மாவைப் பாக்க வேணும், என்னாலை அம்மாவுக்கு எப்பவும் கரைச்சல்தான். அதைவிட, அதைவிட வீட்டைப் போகாமல் விடலாம்.

என்னைச் சேர்க்காத ஆக்களிட்டை நான் ஏன் போக வேணும்.

இன்னும் கொஞ்ச நேரத்திலை றெயின் வரும்.

அது தான் சரி. இந்த உலகத்திலே இருக்க நான் விரும்பேல்லை.

நான் தண்டவாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறன்.

- கலைமுகம் : ஒக்டோபர் - டிசம்பர் - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நர்மதாவின் கடிதங்கள்

நர்மதாவிற்கு யார் கடிதம் எழுதச் சொல்லிக் கொடுத்தார்கள் என்பது இன்று வரை எனக்குத் தெரியாது. ஆனால், அவளைப் போல ரசனையோடு கடிதம் எழுதும் வேறு எவரையும் இன்று மட்டும் நான் காணவில்லை. அவளிடமிருந்து கடிதம் வருவது நின்று பத்து வருடங்களுக்கு மேலாய் ஆகியிருக்கும். அவள் எங்கேயிருக் கிறாள்...? எப்படியிருக்கிறாள்...? என்ப தொன்றும் எனக்குத் தெரியாது. இருந்தா லும் அவளைப் பற்றி அறியும் ஆவலும், ஆர்வமும் என்னுள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேதானிருக்கிறது.

நான் தேவமஞ்சரி. றொறண்டோ வில் குடியேறிப் பன்னிரண்டு வருடங்கள். அதற்கு முன் நான்கு வருடங்கள் கொழும்பு வாசி. அதற்கும் முன்னால் இருபது வருடங்கள் பிறந்ததிலிருந்து யாழ்ப் பாணத்தின் கல்வயல் மண்வாசத்தில் திளைத்துக் கிடந்தவள். எதிர்பார்க்காத ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருணத்தில் எந்த ஒரு எதிர்வு கூறலுமின்றி கொழும்புக்கு இட மாற்றப்பட்டு, அதேபோல எந்தவித அபிப்பிராயங்களுக்கும் இடமில்லாமல் கனடாவிற்குப் பொதி செய்யப்பட்டவள். இப்போது கணவனதும், குழந்தையினதும் அன்பில் தோய்ந்து உலகை மறந்து கொண்டிருக்கும் புலம்பெயர்ந்த சாதாரண ஒரு யாழ்ப்பாணத்துப் பெண். அப்படிச் சொல்வது இனி எவ்வள விற்கு சாத்தியமாகுமோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் வசித் திருந்த இருபது வருடங்களை மேவிக் காலம் பறக்கின்றபோது, கனடாவின் சூழ்நிலை எனக்கு அதிகம் பரிச்சயமானதாகக் கூட மாறிவிடலாம். பனிப் பாளங்களை வழிக்கும் குளிர்காலங்களில் ஏற்படும் மூச்சடைப்பு ஒன்றுதான் இந்த மண் எனக்கு அந்நியம் என்பதை அடிக்கடி நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.

நிற்க, நர்மதாவைப் பற்றிச் சொன்னேன். நர்மதாவைப் பற்றிச் சொல்வதைவிட அவள் கடிதங்களைப் பற்றிச் சொன்னால் அதிகம் புரிந்து கொள்வீர்கள். அவள் கடிதங்களுக்கான கால எல்லை நான்கு வருடத்திலிருந்து, ஐந்து வருடங்களுக்குள் இருக்கலாம். ஊரிலிருந்தபோது அப்படிக் கடிதம் எழுதுவதற் கான தேவை எமக்குள் ஏற்பட்டதில்லை.அதனால் அவளது எழுத்தாற்றலும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந் தால் அவளை அப்போதே எழுத்துத் துறையில் ஊக்குவித் திருப்பேன்.

திடுமென்று கொழும்புக்கு இடம்பெயர்க்கப்பட்ட காலத்திலிருந்து,பிறகு கனடாவிற்கு வந்து இரண்டொரு வருடங்கள்வரை அவளது கடிதங்கள் தொடர்ந்தன.

எங்களுக்கிடையிலான கடிதங்கள் எவ்வளவு இடை வெளிக்குள் இருக்கும் என்று மட்டும் கேட்காதீர்கள். ஒரு கடிதத்தை அவள் தொடங்கியிருந்தாள் என்றால், அதற்கு நான் கொஞ்சம் விடயம் சேர்த்து, சோம்பல் தெளிந்து பதில் எழுதி,அது அவளுக்குக் கிடைத்தவுடனேயே அவளது அடுத்த கடிதம் ஆரம்பித்துவிடும்.எப்படிச் சொல்கிறேன் என்றால், அவளது கடிதத்தில் ஒவ்வொரு தடவையும் அவள் எழுதும் வரிகள் "உனது கடிதம் இன்று கிடைத்தது" என்பதாகத் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதில் தான் கடைசிவரை அவளுக்குச் சலிப்புத் தட்டவில்லை. அப்படி இருந்தும் சிலவேளைகளில் "இன்று கடிதம் மதியத்திற்கு மேல்தான் கிடைத்தது. இரவின் நிலவொளிக்குள் பதில் எழுதிக் கொண்டிருக்கிறேன்..." என மாற்றுவாள்.

எனது கடிதம் கிடைத்தவுடன் அவள் எழுதி, அவளுடையது கிடைத்து, நான் கொஞ்சம் யோசித்துப் பதில் எழுதி... அது அவள் கையைச் சேர்ந்த உடனேயே அவள் மீண்டும் பதில் எழுதி... இந்தச் சங்கிலி வட்டம் எப்போது நின்றது...?

நல்லவேளையாக அன்றைய காலகட்டத்தில் ஒருகடிதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போய்ச்சேர, ஒரு மாதத்தி லிருந்து மூன்று மாதம்வரை கூட சிலவேளைகளில் எடுத்தது. இல்லாவிட்டால் என்ன எழுதுவதென்று எனக்குத் திண்டாட்டம் ஆகியிருக்கும். சமயங்களில் அதிர்ஷ்டவசமாக ஒரு கிழமையில் கடிதம் வந்துசேர்ந்ததும் உண்டு. (கவனியுங்கள், ஒரு கிழமையில் கடிதம் போய்ச் சேர்வதே அந்தக் காலத்தில் அதிர்ஷ்டம் தான்.)

அதிகமில்லை... எங்கள் கடிதங்களில் அனேகமாக இரண்டு விடயங்கள் மேலோங்கியிருக்கும்.

ஒன்று வயல்கரைப் பிள்ளையார்... இரண்டாவது அவளது குட்டித்தம்பிகள்.

பிள்ளையார் மீதில் எனக்கு மிகுந்த ஈடுபாடு. அவளானால் முருகனின் பக்தை.

நான் முதலிலேயே சொன்ன மாதிரி கடித ஆரம்பத்தில் நலம் கோரும் பகுதிகளில் பின்வருமாறு எழுதுவாள்.

"நான் நலம்... நீ நலமா..." என எழுதிச் சலித்தவள்,

"நீ நலமென்று நம்புகிறேன்..."

"நீ நலமாக என முருகனை வேண்டுகிறேன்..."

"நீ நலமாக உன் வயல்கரை பிள்ளையார் துணை யிருப்பாராக..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கே நானும் முருகனும் நலம். உன்னை உன் பிள்ளையார் நலமாக வைத்திருக்கிறாரா...?"

எனப் படிப்படியாக அவளது கடிதங்கள் வளர்ச்சியுறும்.

எழுத்தென்றாலும், கட்டுரை என்றாலும் பெரும் அலேர்ஜிக்குள்ளாகின்ற நான், அவளது கேள்விகளுக்கூடாக பதில் எழுதும் ஆற்றல் தூண்டப்பட்டவளானேன். அவளது கேள்விக்கான பதில்களாய் எனது கடிதங்களும் நீளும்.

வயல்கரைப் பிள்ளையார் என்னில் செலுத்திய செல்வாக்கு ஆழமானது. அதை மிகச் சரியாகப் புரிந்து கொண்டவள் அவள். பிள்ளையாரைச் சுற்றியிருந்த சணல்வயல் மஞ்சளாய்ப் பூத்துக் கொட்டும் காலத்தில் இருவருமாய் மஞ்சள் துளிர்க்கும் வரப்புகளில் ஓடியாடியிருக்கிறோம். நான் இங்கு வந்தபிறகு எத்தனை பனி மூடிய அழகு மரங்களைப் பார்த்திருந் தாலும் அந்த மஞ்சள் வயலின் மயக்கும் அழகு இன்றுவரை என மனத்திலிருந்து விலகவேயில்லை.

கடிதங்களில் நான் கேட்டிருக்கிறேன்.

"எங்கள் வீட்டுப்பக்கம் போனாயா நர்மதா...?"

"இன்னமும் அங்கே சணல் பூத்திருக்கிறதா...?"

"இன்னமும் வயல்கரைப் பிள்ளையார் தனித்துத்தான் இருக்கிறாரா...?"

நர்மதாவிடமிருந்தான பதில்கள் கேலியும், கிண்டலு மாய் இருந்தாலும் அவள் பதில்கள் எனக்கு ஆறுதல் ஊட்டும்.

"உன்னுடைய பிள்ளையாரை நான் ஒன்றும் பிடித்துக் கொள்ளவில்லை."

"நீ போன பிறகு இங்கு யாரும் சணல் விதைக்கவே யில்லை..."

என்பன போன்றெல்லாம் தொடரும் அவள் கடிதத்தின் இறுதிப் பகுதியில் எனக்கான ஆறுதல் மொழி ஏதேனும் இருக்கும்.

"கவலைப்படாதே... நீ மறுபடி இங்கே வருவாய்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தச் சணல்காட்டில் மறுபடியும் நாம் திரியும் காலம் வரும்..."

"வயல்கரைப் பிள்ளையாரும் என்னைப்போல் தான் உனக்காகக் காத்திருக்கிறார்..."

என்றெல்லாம் ஆறுதல் தொக்கும் வரிகளைத் தீர்த்தமாய்த் தருவாள்.

பிள்ளையாருக்கு அடுத்து அவள் என்னிடம் பரிமாறிக் கொண்ட விடயம் அவளது குட்டித் தம்பிகள். நான் அவளை விட்டுப் பிரிந்தபோது, அவர்களுக்கு வயது ஒன்பதே ஒன்பது தான். இரட்டைத் தம்பிகள். அவளுக்கு அடுத்து இன்னொரு தங்கை இருந்தாள். நர்மதாவிற்கும், தம்பிகளுக்கும் இடையில் பதினோரு வயசு வித்தியாசம். அதனால் எங்கள் வகுப்பில் எல்லோருக்கும் அவள் தம்பிகள் மீதில் அதிகச் செல்லம் இருந்தது.

நான் கொழும்பு போகிற காலம் வரை அவள் அவர்களில் ஒருவனைத் தூக்கி வைத்துக் கொண்டுதான் இருப்பாள். மாறி, மாறி நானும் அவர்களில் ஒருவனைத் தூக்குவேன். தூக்கி வைத்துக் கொண்டு பக்கத்து வளவுகளுக்குள் அலைவோம். ஷெல்லடி, விமானத் தாக்குதல் நடக்கின்ற காலம் அப்போது. அடுப்படிப் புகைக்கூடு, மரத்தடி பங்கர் என அவர்களைத் தூக்கிக் கொண்டு ஓடுவோம்.

"ஆரூர் எங்கை...?"

"ஆர்த்தியை நீ தூக்கு..." என அந்த நேரங்களில் அவளும், தங்கையுமாய் அல்லோல கல்லோலப்படுவார்கள்.

ஏதாவது வானத்தில் இரைந்தால் அவளது குரல் முதலில் அந்தக் குட்டித் தம்பிகளைக் கூப்பிடுவதாய்த்தானிருக்கும்.

ஒருதரம் பங்கருக்குள்ளிருந்த ஆரூரிற்கு ஏதோ விஷஜந்து கடித்துவிட்டது. வலி பொறுக்க முடியாமல் அவன் அழுத அழுகை தாங்கமுடியவில்லை. அவளது அம்மா அவனைத் தூக்கிக் கொண்டு கந்தப்பு அண்ணரிடம் "பார்வை" பார்க்கப் போய் விட்டாள். ஆனாலும் நர்மதாவால் பொறுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. ஏதாவது செய்தாக வேண்டும் என்ற தீவிரமான வேகத்தில் அன்று மாலை முழுதும் சாணி கரைத்து பங்கரை மெழுகினோம். தங்கை ஆர்த்திகனைத் தூக்கிவைத்துக் கொள்ள, "இனிமேல் எந்த விஷ ஜந்தையும் உள்ளே வரவிடமாட்டோம்" என அவனுக்குச் சத்தியம் செய்து கொடுத்தோம். பொழுது கறுக்கக் கறுக்க பங்கர் மெழுகியிருந்தோம்.

எங்களைக் காணாமல் அவள் அம்மா பங்கருக்குள் வந்து தேடி என்னை வீட்டுக்குப் போகச் சொல்லி வற்புறுத்தும் வரைக்கும் நான் அங்கேயே நின்றது எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது.

ஆரூரும், ஆர்த்தியும் பிறந்தது இந்திய இராணுவத்தின் காலம். அவர்கள் பிறந்ததிலிருந்து எப்போதும் யுத்தத்தின் நெருக்கடிகளுக்குள்ளேயே வாழ்ந்திருப்பார்கள். அதனாலேயோ என்னவோ, மிகவும் அமைதியான சொல் கேட்கும் பிள்ளை களாய் அவர்கள் இருந்தார்கள். அது சிலவேளை நர்மதாவின் கைகளுக்குள் வளர்ந்ததனால் வந்ததாகக் கூட இருக்கலாம்.

ஆரூரிற்கு புலமைப் பரிசிலில் பாடசாலையிலேயே முதலிடம் கிடைத்தது...

ஆர்த்திகன் சித்திரப் போட்டியில் முதல் பரிசு பெற்றது...

என அவள் அவர்களது முன்னேற்றங்களை எழுதிக் கொண்டே போவாள்.

எனக்கு அவர்களோடு கடைசியாய்ப் போன பிள்ளை யார் கோவில் தீர்த்தத் திருவிழா நினைவில் வந்து கொண்டே யிருந்தது.

வேட்டியைச் சின்னதாய் மடித்துத்தார் பாய்ச்சி இருவருக்கும்கட்டிவிட்டபோது இருவரும் குட்டிக் கிருஷ்ணர் களைப் போலவேயிருந்தார்கள். அன்று முழுக்க அவர்கள் எங்களைத் தூக்க விடவில்லை. பெரிய மனிதர்கள் போல் எங்கள் கைகளைப் பிடித்துக் கொண்டு நடந்து வந்தார்கள். நாங்களும் அன்று சேலை உடுத்தியிருந்தோம். அவர்களைத் தூக்கி ரிஸ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க விரும்பவில்லை. தீர்த்தக்கேணியில் தாமரைப் பூக்கள் மிதப்பதையும், சுவாமி தீர்த்தம் ஆடுவதையும் ஆவலாகப் பார்த்தோம். கோவிலுக்கு வந்த காவடிகளுக்குப் பின்னே ஆரூரும், ஆர்த்தியும் இழுபட்டார்கள். இருந்தாலும் எங்கள் கைகளை விடவில்லை. காவடியிலிருந்து விழுந்த மயிலிறகுகளைப் பொறுக்கி அவர்களுக்குச் சேர்த்துக் கொடுத்தோம். அன்று முழுக்க அவர்களின் குதூகலம் விடாமல் எங்களைச் சுற்றிக் கொண்டேயிருந்தது.

ம்ம்...எங்கள் குட்டித்தம்பியரின் காலம் அது.

திடுமென்று தான் அவளுடனான அந்தப் பிரிவு வந்தது.

யாழ்ப்பாணத்து மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சி முழுக்கவும், வன்னியுமாய் பரிதவித்தபோது, எங்களுக்கு இடம் பெயர வேண்டி ஏற்படவில்லை. கல்வயலுக்குள்ளேயே எங்கள் காலம் கழிந்தது. ஆறுமாதம் கழித்து, மீண்டும் தென்மராட்சியையும் கைவிட்டுப் போகும் நிலை தோன்றியவுடன் நாங்கள் வவுனியா போய் அப்பால் கொழும்பு போனோம். ஏற்கனவே அங்கு அண்ணா வேலை செய்துகொண்டிருந்தது எமக்கு மிகவும் வசதியாய்ப் போயிற்று. எங்கள் குடும்பத்தை கொழும்பில் நிலைநிறுத்துவதற்குரிய ஏற்பாட்டை அவன் செய்து கொண்டான்.

நர்மதாவும் அவள் குடும்பமும் ஊரைவிட்டு வெளியேற வில்லை. உள்ளூரிலேயே இரண்டு, மூன்று தினங்கள், அயலுக்குள் இடம் மாறிவிட்டுப் பின் தங்கள் வீட்டுக்குப் போய்ச்சேர்ந்ததாகப் பிறகு எழுதியிருந்தாள்.

அவளை நான் கடைசியாகப் பார்க்கப் போனது ஒரு அவசரமான காலமாகவிருந்தது. வீட்டில் எல்லோரும் கொழும்பு போவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்த போது நான் அவள் வீட்டிற்குப் போயிருந்தேன். எல்லார் முகங்களிலும் கலக்கமே மேலோங்கியிருந்தது. எதிர்காலம் குறித்து யாராலுமே எதுவும் எண்ணமுடியாதிருந்தது.

“இஞ்சை இனி இருக்கிறது அவ்வளவு பாதுகாப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்காலை எப்பிடியாவது வரப் பாருங்கோ..."

என்னால் ஊரில் இருக்க முடியாமல் போன ஆதங்கம் அவர்களுக்கு உபரியாக ஒரு அழைப்பை விடுத்தது.

ஆரூரனும், ஆர்த்திகனும் என்னை வளைத்துக் கொண்டார்கள்.

"எங்கையக்கா போகப் போறீங்கள்...?"

"இனி வரமாட்டீங்களோ...?"

"எப்பக்கா வருவீங்கள்...?"

என்னை மொய்த்த கேள்விகளுக்கு எனக்குப்பதில் தெரிய வில்லை. நர்மதா மட்டும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை.

"இனி எப்ப காணுறமோ தெரியாது... எங்கையிருந்தா லும் நல்லாயிரு..."

அவள் சொன்னமாதிரி அவளை இன்றுவரை காணவும் முடியவில்லை. அவள் வார்த்தை பலித்தமாதிரி இன்றுவரை குறையில்லாமல் தான் இருக்கிறேன்.

தொடர்ந்து அவள் எமது ஊர் நிலவரங்களைக் கடிதங் களில் எழுதுவாள். தனது குட்டித் தம்பிகளின் காலம் போருக் குள்ளேயே கழிந்துவிட வேண்டும் என்பதுதான் விதியா...? என்பாள்.

நானும் எங்களோடு படித்தவர்களை கிளாலியில், ஓமந்தையில் கண்டது பற்றி எழுதுவேன். நான் கொழும்புக்குப் போகமுதல் எங்கள் வகுப்பில் இரண்டு பேர் இயக்கத்திற்குப் போயிருந்தனர். அவர்களைப் பற்றியெல்லாம் அவள் உருக்கமாக எழுதுவாள்.

"என தம்பிகளுக்கு வயசு குறைய என்பதற்காக இப்போது சந்தோஷப்படுகின்றேனடி..." என எழுதுவாள்.

"ஆனால் அவர்களுக்கும் ஒருநாள் கடகடவென்று வயது வளரும்... அப்போது என்ன செய்வது...?" என மனம் கலங்கி எழுதுவாள்.

கடைசியாய் "தம்பிகளின் வளர்த்தியைப் பார்க்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமாய் இருக்கிறதடி...“ என எழுதினாள்.

அந்தக் கடிதங்களுக்கூடேயே அவளும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவாகி ஆசிரியர் பயிற்சியைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

நான்கு வருடங்களாக நாங்கள் கடிதத்தில் பேசியிருப் போம். அப்படி என்னதான் எழுதுகிறீர்கள் மாறி, மாறி...? என அண்ணா என்னை வம்புக்கிழுப்பான். சிலவேளை ஊரில் எனக்கேதும் காதல் இருந்திருக்குமென்றும் நர்மதா தூதாகச் செயற்படுவதாயும்கூட அவன் சந்தேகப்பட்டிருக்கலாம். இல்லா விட்டால் எதற்கு இருபத்திநாலு வயசு முடிய முதல் என்னைக் கனடாவுக்கு அனுப்ப அண்ணா பிரயத்தனப் பட்டிருக்க வேண்டும்...? எனது கல்யாணமும் கூடத் திடீர் என்று ஏற்பட்டதுதான். அதையும் அவளுக்குக் கடிதத்தில் தான் தெரியப்படுத்தினேன். திருமணம் கொழும்பில் நடந்தது. அழைப்பிதழை அவளுக்கும் அனுப்பியிருந்தேன். வழமை போலவே என திருமணம் முடிந்தபிறகு தான் இந்த அழைப்பிதழ் அவள் கையைச் சேர்ந்திருந்தது. அதற்குப்பிறகு அங்கே சண்டை வலுத்திருந்தது. அவளும், அவள் குடும்பமும் எப்படியோ...என நான் தவித்துக் கொண்டிருந்தேன். அப்போது நான் கனடாவிற் குப் போகக் காத்துக் கொண்டிருந்த நேரம். ஆறேழு மாதம் நான் கனடா போகவும் முடியவில்லை. அவளது தொடர்பும் அற்றிருந்தேன். கனடாவிற்கு விசாக் கிடைத்து விமானத்திற்கு டிக்கெட் “புக்” பண்ணி புறப்படும் தறுவாயில் அவள் கடிதம் வந்தது.

தும்பளையில் இருக்கிறாளாம்...

ஊரிலே ஒருவரும் எஞ்சவில்லையாம்...

ஒட்டுமொத்தமாய் ஊர் முழுக்க இடம்பெயர்ந்து வன்னிக்கும், வடமராட்சிக்கும், வலிகாமத்திற்குமெனப் போய் விட்டார்களாம்.

தீராத துயரங்களோடு வந்து சேர்ந்திருந்தது அந்தக் கடிதம். அதற்கான பதிலை நான் கனடாவிற்குப் போய்த்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு எழுதவேண்டியிருந்தது. புது வாழ்க்கை தந்த பிரமிப்பிலிருந்து நீங்கி நான் அவளுக்குப் பதில் போட இன்னும் ஆறேழு மாதங்கள் ஆகின. அதற்குப் பிறகு அவள் கடிதம் கொஞ்சம் கோபத்தோடு, மனத்தாங்கலோடு வந்திருந்தது.

"உனக்குப் புது வாழ்க்கை கிடைத்துவிட்டது..."

"உனக்கு இனி நான் யாரோ தானே..."

"பரவாயில்லை நன்றாயிரு..."

"என் கடிதங்களுக்குப் பதில் போட்டு நீ உன் நேரத்தை வீணாக்காதேடி..." என்ற சாரப்பட அந்தக் கடிதம் வந்திருந்தது.

அதிலும் "வயல்கரைப் பிள்ளையாரையும், சணல் வயலையும்... நானும் இப்போது பிரிந்து விட்டேன்... உன் சார்ந்த எல்லா நினைவுகளும் என்னை வெறுமையாக்கி விட்டது..." என்ற பின்குறிப்பு வேறு.

என்னால் தாங்க முடியாமல் போனது.

"எத்தனை உறவுகள் வந்தாலும் உனக்குப் பதில் போடுவதை மறப்பேனா...? எண்பது வயதுக் கிழவி ஆனாலும், கண்ணாடி போட்டுக் கொண்டு உனக்குப் பதில் எழுதுவேன்..." என் பதிலை அனுப்பியிருந்தேன்.

அதற்குப் பிறகு சமாதான காலங்கள் வந்து அவள் ஊருக்குப் போனதைச் சொன்ன கடிதங்கள் வந்தன. விசுவமடு வில் ஆசிரியர் நியமனம் கிடைத்ததைச் சொல்லி எழுதியிருந் தாள். சந்தோஷப்பட்டேன். அத்தோடு எனக்கும் குழந்தை பிறந்து அந்த சந்தோஷத்தையும் அவளிடம் கடிதத்தில் பகிர்ந்து கொண்டேன். என் குழந்தையின் உடல்நலம் விசாரித்து வயல் கரைப் பிள்ளையார் கோவில் திருநீறு வைத்து ஒரு கடிதம் அனுப்பிய ஞாபகம் இருக்கிறது. எனது மகள் கூட "அன்ரீ... தின்நீறு..." என மழலை சொல்லப் பழகியிருந்தாள். ஆதலால் அதற்குப் பிறகான ஒரு காலத்தில் தான் அவளது கடிதம் நின்றிருக்க வேண்டும். அதற்குப் பிறகு என்னால் அவளது அன்பான கடிதங்களைக் காணமுடியவில்லை. முகநூல்களில் எங்காவது அவளோ...அவளது தம்பிகளோ தென்படுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களா என நான் தேடிப் பார்த்துக் களைத்துவிட்டேன். அவளை விட ஊரில் என்னோடு படித்தவர்கள் எல்லாம் இப்போது முகநூலுக்கு வந்துவிட்டார்கள். அவளை மட்டும் எங்கும் காணக்கிடைக்கவில்லை

***

என்னாலும் ஊருக்கு வந்து போக முடியும் என்பதை முதலில் என்னால் நம்பவே முடியவில்லை. என் மாமியார் ஊரில் சுகவீனமாய்க் கிடப்பதைச் சாட்டாக வைத்துக் கொண்டு தான் அவரால் வேலைக்கு விடுப்பு எடுக்க முடிந்தது. இரண்டு கிழமை யாழ்ப்பாணத்தில் தங்க முடியும் என்பதே மகிழ்ச்சி அளித்தது. இரண்டு நாட்கள் அவரது வீட்டில் தங்கியிருந்தோம். மூன்றாம் நாள் கல்வயலில் எங்கள் வீட்டுக்கு வந்தோம். அங்கே எங்கள் சித்தி குடும்பம் இப்போது குடியிருந்தது. எனக்கு நினைவு முழுக்க நர்மதா பற்றியே இருந்தது. மாலை ஆறுதலாக மகளைக் கூட்டிக் கொண்டு நர்மதா வீட்டுக்கு வெளிக்கிட்டேன். போகிற வழியில் வயல்கரைப் பிள்ளையார் கோவில் இடிபாடுகளோடு தென் பட்டது. கதவு இன்னும் திறக்கப்படவில்லை. எனினும் பூசை நடப்பதற்கு ஏதுவாய் வாசலில் உலர்ந்த பூக்களும், மாலைகளும் சிந்திக் கிடந்தன. வாசலில் நின்று குட்டிக் கும்பிட்டுவிட்டுப் பிறகு வரலாம் என மகளிடம் சொல்லியவாறு புறப்பட்டேன். சணல் வயல் காய்ந்துபோய்க் கிடந்தது.

அவள் சொன்னது உண்மைதான். பிள்ளையாரையும், சணல் வயலையும் காண நான் ஊருக்கு வருவேன் என்றாள். வந்து விட்டேன், முக்கியமாக அவளைப் பார்ப்பதற்கு. இதை அவளுக்குச் சொல்லவேண்டும் என நினைத்தபடி கைவிரலில் மகளது விரல்களைக் கோர்த்தபடி நடந்தேன்.

நான் அவளைப் பிரிந்தபோது அவளது தம்பிகளுக்கும் இதே வயது இருக்குமோ...? அவர்கள் இப்போது வளர்ந் திருப்பார்கள். அவள் எதிர்பார்த்தது போல் ஆரூரன் மருத்துவ பீடத்திலும், ஆர்த்திகன் நுண்கலைப் பீடத்திலும் படித்துக் கொண்டிருப்பார்களா? அவளுக்குக் கல்யாணம் ஆகியிருக்குமா?

அவளுக்கும் குழந்தைகள் இருக்குமா...? வழி வழியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டு வந்த போதும் மனம் முழுக்க நர்மதா பற்றிய கேள்விகளே வியாபித்துக் கிடந்தன.

நர்மதா வீட்டுக்கு வந்த போது அவளது வீட்டு வேலி சிதைந்து போய்க் கிடந்தது. வெறும் கிளுவந்தடிகளை நெருக்க மாக நட்டிருந்தார்கள். கிளுவங் குருத்துக்கள் காற்றில் ஆடிய போது, இந்தப் பத்து வருடங்களாக அவள் எழுதாத கடிதத்தி லிருந்த விடயங்கள் தம்மைக் கேள் கேள் எனப் படபடப்பது போல் உணர்ந்தேன்.

உள்ளே போய் அழைத்த போது சிறு பையன் ஒருவன் எட்டிப் பார்த்தான். எட்டு , ஒன்பது வயது இருக்கும். கடைசி யாய் அந்த வீட்டிற்கு அவளிடம் விடைபெற வந்த போது ஆரூரும், ஆர்த்திகனும் என்ன கோலத்தில் இருந்தார்களோ அதே தோற்றத்தில் இருந்தான் அவன். காலம் பின் நோக்கிச் சுழல ஆரம்பித்துவிட்டதா என்ன...?

“ஆர் பிள்ளை ” என்றபடி நர்மதாவின் அம்மா. நரைத்துக் கொட்டிய தலைமுடி. உயிருக்குப் பதிலாக உடலைத் தின்று விட்ட காலம்... எச்சிலை விழுங்கியபடியே “நான் மஞ்சரி நர்மதாவோடை படிச்சனான்”என்றேன்.

“ஆர் மஞ்சரியோ...” என்ற அம்மாவின் குரலில் ஆச்சரியம் அதிகமாய் இல்லை.

“இரும் பிள்ளை கூப்பிடுறன்...” என்றவள் உள்ளே போனாள்.

உள்ளிருந்து ஈரக்கையைத் துடைத்தபடி எட்டிப் பார்த்த நர்மதா என்னைக் கண்டவுடன் பரபரப்பாய் வெளியே வந்தாள்.

“மஞ்சரி...” என ஆச்சரியமாய் மலர்ந்தாள்.

“இதாரிது குட்டி மஞ்சரியே...” என மகளை அணைத்துக் கொஞ்சினாள்.

வேடிக்கை பார்த்தபடி இருந்த மகனைக் கூப்பிட்டாள். “என்ரை மகன்,நவீன் ...”

அவன் இன்னமும் ஒதுங்கிக் கொண்டேயிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சுபாவம்... ஆரூரா... ஆர்த்தியா...யாரது சுபாவம் ஒட்டி இருக்கிறது அவனில் ... "கடைசி வரைக்கும் கடிதம் போடோணும் எண்டிட்டு கடைசிலை நீ கடிதம் போடாமலே விட்டிட்டியே" என்றேன்.

"ஒவ்வொரு பிரச்சினை ..பிரச்சினையாய் வரத்தொடங்க கடிதம் எழுத வேணும் எண்ட எண்ணமே செத்துப் போச்சு..." அவள் எங்கோ பார்த்துக் கொண்டு சொன்னாள்.

"எங்கே உன்ரை அவர்...எப்ப கல்யாணம் நடந்தது..?."

"விசுவமடுவிலை தான் அவரும் படிப்பிச்சவர்... விரும்பித்தான் கட்டினான்.இப்ப அங்கை தான் வீடு பாக்கப் போட்டார்..."

"எங்கை உன்ரை குட்டித் தம்பிகள் ஆர்த்திகன், ஆரூரன்..."

"ஆர்த்தி..." அவள் சத்தமாய்க் கூப்பிட்டாள்.

நெடு நெடுவென்று நல்ல வளர்த்தியாக அவன் வெளியே வந்தான். முகம் குழந்தைத்தனத்தோடு இருந்தாலும் அதில் சிந்தனை தேங்கியிருந்தது .

"ஆர் தெரியுதோடா...மஞ்சரியக்கா"

அவன் லேசாய் சிரித்தான். நர்மதாவின் மகனை வாரியெடுத்து மடியில் இருத்திக் கொண்டான். இது ஆர்த்தியா ஆரூரா...எனும் தயக்கம் அவள் ஆர்த்தி என அழைத்ததில் விலகியிருந்தது. இவன் தான் சித்திரப் போட்டியில் பரிசு பெற்றவன். அவள் நுண்கலைப் பீடத்திற்குப் போக வேண்டுமென்று எதிர்பார்த்தது இவனைத்தான்.

"தம்பி கம்பஸ்ஸா..." என்றேன்.

"இல்லை..." எனத் தலையாட்டினான்.

"அப்ப என்ன செய்யிறீர்..."

"ஏதும் வேலை கிடைக்குமோ எண்டு பார்க்கிறன்..."

"ஆரூர் எங்கை...?" அவனாவது மருத்துவ பீடத்துக்குத் தெரிவான செய்தியைக் கேட்க மாட்டேனோ எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நப்பாசையில் தான் கேட்டேன்... ஒருவரும் ஒன்றும் பேச வில்லை... கொஞ்ச நேர அமைதி... அதைக் குலைத்தபடி "இப்பதான் ஏ.எல் எழுதினான் அக்கா..." என்றான் ஆர்த்தி.

"இத்தனை வருசமா ஏன் எழுதேல்லை..."

"இப்ப தானை தடுப்பாலை வந்தனான்..." என்றான்.

நான் அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தேன்.

"அப்ப ஆரூர்...?"

"அவன் முள்ளிவாய்க்காலிலை எங்களை விட்டிட்டுப் போட்டான்..."

நான் நர்மதாவிடம் திரும்பினேன்.

"என்ன நடந்தது...?"

"லீவு நாளிலை வந்து நில்லுங்கோடா எண்டு நான் தான் இவங்களைக் கூப்பிட்டன்...இவங்கள் வந்த நேரம் பாதை பூட்டி...அவங்கள் என்னோட இழுபறிப்பட்டு கடைசிலை ஆர்த்தி இயக்கத்துக்குப் போய் ஆரூர் முள்ளிவாய்க்காலிலை ஷெல் பட்டுச் செத்து...இவன் இப்பதான் தடுப்பாலை வெளிக் கிட்டவன்..."

நர்மதாவின் எழுதாத கடிதங்களில் இருந்திருக்க வேண்டிய சொற்கள் என் முன்னால் ரத்தம் சொட்ட விழுந்து கொண்டிருந்தன.

நான் ஆர்த்தியைப் பார்த்தபோது அவன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான், குழந்தைத்தனம் மாறாத அவனதும் ஆரூரினதும் முகங்கள்... என் உடம்பை யாரோ வெட்டி உப்புக் கண்டம் போட்டாற் போல நான் அந்தக் கணத்தில் உணர்ந்தேன்...

- எதுவரை? - ஜூன் 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிச்சிடப்பட்ட மூன்று காலங்கள்

## 2014 கோடை காலம்

ரம்மியமான ஒரு மாலைப் பொழுது.

குழந்தைகளைப் பூங்காவில் விளை யாடவிட்டு ரசித்துக் கொண்டிருந்தான் கோகுல்.

கொஞ்ச நேரத்திலேயே தன் மகளோடு வந்து சேர்ந்தான் பரத்வாஜன்.

ஆரம்பத்தில்எதேச்சையான அறிமுகம்.

குழந்தைகளின் குறும்புகள் பற்றிய இயல்பான வார்த்தையாடல்கள்.

இவ்வாறு தான் அவர்களது ஆரம்ப நாள்கள் இருந்தாலும் இப்போது அவரவரின் அலுவலக நெருக்கடிகள், பற்றிப் பேசுகின்ற அளவிற்கு நெருங்கி யிருந்தார்கள்.

கோகுல் தனியார் நிறுவன மொன்றில் முகாமையாளராயிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் நேர நெருக்கடிகள் பற்றி அவனிடம் அதிக முறைப்பாடுகள் இருந்தன. இங்கே வருவதன் மூலம் கொஞ்சமேனும் மனது இலேசாக ஆகியிருந்தது.

பரத்வாஜன் ஆங்கில ஆசிரியனாயிருந்தான். மாலைப் பொழுதுகளை அவனால் சேமிக்க முடிந்தாலும், பொருளாதார நோக்கில் தானும் தன் மாலைப் பொழுதுகளைத் தனியார் கல்வி நிலையங்களில் விற்றுக் கொண்டிருப்பதாக ஒரு தரம் கூறியிருந்தான்.

குழந்தைகளின் குதூகலத்திற்காகவே அங்கு வரத் தொடங்கியிருந்தாலும் அங்கு வருவது தான் வாரத்தில் ஒருதரமாவது அவர்களுக்குரிய இளைப்பாறுதலாக இருப்பதாக ஒருவருக்கொருவர் அடிக்கடி கூறிக் கொண்டனர்.

ஆரம்பத்தில் கோகுல் மனைவியையும் அழைத்து வந்திருக்கிறான்.அவளோ வீட்டுச் சுமையின் பாரத்தில் அநேக நேரங்களைத் தவிர்த்து விடவே பார்த்தாள். அவளது ஆர்வங்கள் கேக் ஐசிங் உருக்களிலும், தையல் வேலைகளிலும் பொதிந்து கிடந்தன.

பரத்வாஜனின் மனைவியையும் அவன் கண்டிருக்கிறான். பெரிய அழகி என்றில்லாவிட்டாலும் பாந்தமான முகம். அவன் அவளோடு வந்திருந்த நாள்களிலெல்லாம் கோகுல் அவனோடு நன்கு பழகியிருக்கவில்லை. தூர நின்று புன்னகைப்பதோடு சரி. இப்போதெல்லாம் அவள் வருவதில்லை. இவர்கள் நெருங்க அதுவும் ஒரு காரணமாயிருக்கலாம் அல்லது கணவனுக்கு பேச்சுத் துணைக்கு ஒரு நண்பன் கிடைத்து விட்டான் என அவள் சற்றே ஒதுங்கியிருக்கலாம்.எப்படியிருந்தாலும் அவள் இப்போது வருவதில்லை.

பரத்வாஜின் மகளைக் கண்டதும் இவனது குழந்தை களும் உற்சாகமாயின. இவன் அவர்கள் உற்சாகத்தில் கலந்தபடி தானும் ஒரு குழந்தையானான்.

இளவெயில் ஒளிர்ந்து, ஒளிர்ந்து மங்குகிற அழகை ரசித்தபடி, குழந்தைகளிடமிருந்து திரும்பிய போது, ஸ்டோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெஞ்சில் பரத்வாஜன் யோசனையோடு இருந்தது பட்டது. அவனது இயல்பான உற்சாகம் எங்கோ தொலைந்து விட்டது போலிருந்தது. ஒரு வாரத்துக்குள் இவனுக்கு என்ன நேர்ந்தது எனத் தோன்றிய ஆச்சரியத்தோடு கோகுல் அவனருகே சென்று அமர்ந்தான்.

"என்ன, ஏதோ டல்லா இருக்கிற மாதிரிக் கிடக்கு...?"

ஏதேனும் ஒரு விதத்தில் மனதைத் தொட்டால் தான் யாரென்றாலும் தங்கள் மனதைத் திறக்கத் துணிவார்கள். அது மனைவியாகட்டும், குழந்தையாகட்டும் அல்லது நண்பன் தானாகட்டும். இவர்கள் நம்மைப் புரிந்து கொள்வார்கள். நமக்குரிய தீர்வு சொல்வார்கள் என்றெண்ணித்தானே ஒவ்வொரு வரும் தம் மனதின் துயர்களைப் பகிர்கிறார்கள்.

கோகுலைப் பொறுத்தவரை அவன் எல்லோரையும் புரிந்து கொண்டான். அவர்களுக்கு இதமாகவும் நடந்து கொண்டான். அதனால் இதுவரைக்கும் அவன் உறவுச்சிக்கல்கள் எதிலும் மாட்டிக் கொள்ளவுமில்லை.

பரத்வாஜ் எதுவும் பேசவில்லை. லேசாய் பெருமூச்சு விட்டான். அதில் ஏதோ ஒரு வேதனை இருப்பதைக் கோகுலால் உணர முடிந்தது.

"தீர்க்க முடியாததெண்டு உலகிலை எந்தப் பிரச்சினையும் இல்லை".

மெதுவாகவே சொன்னான் கோகுல்.

பரத்வாஜ் மெல்லச் சிரித்தான்.

"உண்மை தான்" என முணுமுணுத்தான். சற்று நேரம் மௌனம் கனத்தது. பிறகு சாதாரணமாகவே கதைக்கத் தொடங் கினான். போன வாரத்தில் ஆங்கிலதினப் போட்டிகளுக்காக நகரப் பாடசாலைக்குப் போக நேர்ந்ததாய்ச் சொன்னான். வழமை யான அவனது ஒரே பாணி வாழ்க்கையிலிருந்து சற்றே மாறுதல். சிலவேளை வருடாந்தம் நிகழ்கின்ற இந்தப் போட்டிகளும் கூட அவனுக்கு ஒரே பாணி தானோ...?

கோகுல் அவன் சொல்வதைக் கேட்டபடியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நேரத்தில் புரிந்தது, அவனது பெருமூச்சின் காரணம் ஒரு ஆசிரியை என்பது.

கோகுலுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

விளையாடுகின்ற குழந்தைகளைப் பார்த்தான். இத்தனை பொறுப்புக்கள் வந்த பிறகும் மனதில் சலனம் தோன்றுவது இயற்கை தானா...? பரத்வாஜன் அந்த ஆசிரியையை விரும்புகிறானா என்ன...? அல்லது வேறு தொடர்புகள் ஏதேனும்...? கோகுலுக்குத் தன் மீதே கோபம் வந்தது. மனித உணர்வுகளுக்குத் தான் மதிப்பளித்து நடந்து கொள்பவன் என தனக்குத்தானே கட்டியெழுப்பிய பிரதிமைகளையெல்லாம் தானே போட்டுடைப்பதா...?

"என்ரை குடும்பத்திலை யாராலை பெரிய புயல் வீசிச்சுதோ அந்த ரீச்சரை நான் திரும்பவும் பார்த்தன்..."

அவனே சொல்வானென்னும் எதிர்பார்ப்போடு கோகுல் காத்திருந்தான்.

"ஆனால் இவ்வளவு பெரிய புயல் வீச ஒரு சின்னக் காரணம் கூட இல்லை. நான் முந்திப் படிப்பிச்ச ஸ்கூலிலை நாங்கள் ரெண்டு பேரும் தான் இங்கிலீஷ் ரீச்சேர்ஸ். இங்கிலீஷ் டே வந்தால் ரெண்டு பேரும் தானே பிள்ளைகளைப் பழக்கி எடுக்க வேணும். அதைத்தான் செய்தம். ஸ்கூல் முடியவும் ட்ராமாவும், ரெசிட்டேசனும் பிள்ளைகளுக்குப் பழக்குவம். ரீச்சர் வீடு பக்கத்திலையெண்டதாலை சில வேளை ரீச்சர் வீட்டையும் வச்சுப் பழக்குவம். ரீச்சரிண்டை மகனுக்கு ஆறு வயசு. அதாலை தான் ஸ்கூலிலை இல்லாமல் வீட்டிலை வச்சுப் பழக்க வேண்டி வாறது. ரீச்சர் என்ரை வீட்டை கூட வந்திருக்கிறா. என்ரை மனிசி பிள்ளைகள் கூட ரீச்சரோடை நல்லாத்தான் பழகின. அவளின்டை பிள்ளையும் எங்களோடை நல்ல ஒட்டு. இடையிலை என்னெண்டு எல்லாம் பழுதாப் போனதெண்டு தெரியேல்லை."

தூரத்தே குழந்தைகளின் ஆரவாரம் எழுந்தது.

யாரேனும் ஒரு குழந்தை வென்றிருக்கும். அப்படியாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்ற குழந்தையும் இருக்கக் கூடுமோ...?

பரத்வாஜன் பெருமூச்சு விட்டான்.

"மனிசி வேலைக்குப் போகாததாலை ஒருக்கால் ரீச்சர் வந்திருந்த நேரம் ரீச்சரிண்டை அலங்காரங்களைப் பார்த்துப் பழகச் சொல்லிச் சொன்னன். நான் கஷுவலாத் தான் சொன்னன். மனிசிக்கு ஒரு மாதிரியாப் போச்சுது. அதுக்குப் பிறகு எடுத்ததுக் கெல்லாம் ரீச்சரிண்டை பேரையெடுத்து எப்ப பாத்தாலும் சண்டைதான்..."

பரத்வாஜன் சொன்னதில் ஏதும் தவறிருக்கக் கூடுமோ...? இருவரும் உண்மையில் தவறாகப் பழகியிருப்பார்களோ...? பரத் வாஜன் மட்டும் தவறாகப் பழகினானா...? அல்லது அவள் தவறாகப் பழகினாளா....? அல்லது இருவருமா...? அல்லது அவனது மனைவி தான் தவறாகப் புரிந்து கொண்டாளா...? எத்தனை சாத்தியக் கூறுகள்...? எத்தனை சந்தர்ப்பங்கள்...?

கோகுல் தெளிவதற்காக மூளையைக் கசக்குகையில் பரத்வாஜ் தொடர்ந்தான்.

"வீண் சண்டைகளைத் தவிர்க்கிறதுக்காக ஏதோ சாட்டுச் சொல்லி நான் விலக நினைக்க ரீச்சர் குழம்பிப் போய் ஒண்டும் தெரியாமல் வீட்டை வந்த நேரம் மனிசி ரீச்சரிண்டை காது படவே கண்டபடி கதைச்சுப் போட்டுது. அதுக்குப் பிறகு ரீச்சருக்குக் கடுங்கோபம் வந்திட்டுது. ஒண்டுமில்லாததை ஊதிப் பெருப்பிக்க நினைச்சால் ஆராலை என்ன செய்ய ஏலும். வந்த கோபத்திலை "நான் அப்பிடித்தான். என்ன செய்ய ஏலும் உன்னாலை...?" எண்டு ரீச்சரும் எதிர்த்துக் கதைக்க என்னாலை ஒண்டும் செய்ய ஏலாமல் போட்டுது... சும்மாயே மனிசிக்கு ரீச்சரிலை இருந்த பொறாமை ரீச்சர் எதிர்த்துக் கதைச்சவுடனை நூறு மடங்காச்சுது. அதுக்குப் பிறகு நான் ரீச்சரிலை எப்பிடி முழிக்கிறதெண்டு தெரியாமல் திரிஞ்சன். ரெண்டு பேருக்கு மிடையிலை ஒண்டுமில்லை. பிறகேன் நாங்கள் பயப்பிட வேணு மெண்டு ரீச்சர் மட்டும் ஓர்மமா நிண்டா. வழக்கம் போல நாங்கள் ட்ராமா பழக்கி இங்கிலீஷ் டே நடத்தினம். ஆனா ரீச்சரிண்டை முதுகுக்குப் பின்னாலை கதைகள் கூடிக் கொண்டே போச்சுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிசி கொதிச்சுப் போச்சுது.

ரீச்சர் தன்ரை குடும்பத்தைக் குலைக்கிறதாய் பிரின்சிப்ப லுக்கு முறைப்பாடு குடுத்து எப்பிடியோ எனக்கு டிரான்சர் எடுப்பிச்சுப் போட்டாள். அதுக்குப் பிறகு ஒரு வருஷம் கழிச்சு இப்ப தான் ரீச்சரைக் கண்டன். ஒரே வெறுப்பாக் கதைச்சா.

"உண்மையிலேயே ஒண்டுமில்லாமல் இருக்க ஆருக்குப் பயப்பிட்டுக் கொண்டு ஒழியுறீங்கள்..." எண்டு. "இந்தக் கேள்விக்கு என்னாலை என்ன பதில் சொல்ல ஏலும்....?"

இந்தக் குரலின் ஆவேசத்தை எப்போதோ தரிசித்தது போலிருந்தது கோகுலுக்கு. கூடவே ஒரு சந்தேகம். அவளது கணவன் எங்கே போனான் இவ்வளவு பிரச்சினைகளுக் கிடையிலும்...?

பரத்வாஜ் கொஞ்ச நேரம் பேசாமலிருந்தான், பிறகு சொன்னான்.

"எனக்கு அவஅறிமுகமான நேரத்திலை டிவோசாகித் தான் வந்தா. அப்ப அவவின் பிள்ளைக்கு ரெண்டு வயசு..."

கோகுல் பச்சாதாபத்தோடு கேட்டான்.

"ரீச்சரிண்டை பேரை நான் அறியலாமா...?"

பரத்வாஜன் பெருமூச்சோடு சொன்னான்.

"நிறைமதி"

***

## 2010 முன்பனிக்காலம்

திருமணத்திற்குப் பிறகு முதன்முதலில் ஜெகனின் மைத்துனன் வீட்டுக்கு வந்திருந்தான். அவன் கனடாவில் இருந்ததாகவும் யுத்த நெருக்கடிகளில் ஊரைவிட்டுப் போன பிறகு இப்போதே மறுபடி ஊருக்கு வருவதாகவும் ஜெகன் சொல்லியிருந்தான். வீட்டுக்குத் திடீரென்று வந்த விருந்தாளி யின் வரவில் குழந்தையையும் கவனித்து சமையலையும் கவனிப்பது அவளுக்குப் பெரும் பாடாகிற்று. அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவனின் முகத்தில் தெரிந்த சாயல் இருப்பதாய் உணரவே அவளுக்கு வெகு நேரம் பிடித்தது.அப்படித் தெரிந்த சாயல் இருப்பதாய் உணர்ந்த போதும் கூட அது கணவனின் உறவினர் என்பதால் இருந்திருக்கக்கூடிய உறவின் சாயலென்றே நினைத் தாள். அதைப் பொய்யாக்குவது போல் புறப்படும் தறுவாயில் அவன் சொன்னான். பல்கலைக்கழகத்தில் அவளுக்கு நேர் முதல் அணியில் தான் படித்ததாய்ச் சொன்னான். மேலும் அவளோடு படித்தவர்களைப் பற்றி விசாரித்தான். அதற்கும் மேலாக அவள் மிகவும் நேசம் கொண்டிருந்த "அவனைப்" பற்றியும் அக்கறை யாக விசாரித்தான். அப்போது தான் படித்த போது தான் காதல் கொண்டு சுற்றியலைந்த அவளது அணியைச் சேர்ந்த இன்னொருத்தியைப் பற்றியும் விசாரித்தான்.போகிற போக்கில் ஜெகன் கண் வைத்திருந்திருந்த அவ்வூர்ப் பெண் ஒருத்தியைப் பற்றியும் சொன்னான். கனடாவுக்குப் போய் இதையெல்லாம் இயல்பாகக் கதைக்கிற அளவிற்கு அவன் மாறி விட்டானா...? அல்லது அவன் இயல்பிலேயே எல்லாவற்றையும் இலகுவில் நகைச்சுவையாக எடுத்துக் கொள்பவனா.? என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது. ஏனென்றால் ஜெகன் அவ்வளவு இலகுவாக எதையும் கடந்து போகிறவன் அல்ல என்பதை இந்த இரண்டு வருடங்களில் நன்றாகவே அறிந்திருந்தாள் அவள். அவன் ஆசிரியர் கலாசாலையிலிருந்து வெளி வந்தபின்னர் வெளிவாரியாகப் பட்டம் பெற்றிருந்தான். பல்கலைக்கழகக் காலத்தில் ஜெகனை அவள் ஒரு போதும் சந்திக்கவில்லை. திருமணப் பேச்சுக்களின் பின்னர் தான் அவனை அவள் அறியத் தொடங்கினாள்.

அவனது மைத்துனன் மறுபடியும் கனடா போய் விட்டான்.

அவன் கதைத்தவற்றை அவன் கூட மறந்திருக்கலாம்.

ஆனால் ஜெகன் மறக்கவில்லை.

இவளுக்கு விஷமாயிற்று பொழுதுகள்.

காதலிப்பது ஒரு குற்றமா என்று கூடத் தோன்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலிப்பது குற்றமில்லை என்றும், அவள் அவனோடு எவ்விதத்தில் பழகினாள் என்பதை எவ்வாறு தான் நம்புவது என்றும், பல்கலைக் கழகத்தில் நிகழும் கூத்துக்கள் எதுவரை போகும் என்பது தனக்குத் தெரியும் என்றும் நாக்கூசும் வார்த்தைகளின் நரகத்தை அனுபவித்த பிறகே விவாகரத்துக்கு விண்ணப்பித்தாள் நிறைமதி.

***

## 2004 இளவேனிற்காலம்

பல்கலைக் கழகத்தில் நுழைகிற போதே பட்டாம் பூச்சி களெனப் பறக்கின்ற பரவசம் வந்துவிடுகிறது. ஆனால் அங் கிருந்து பிரிகின்ற போது வலி இருந்தாலும் இந்த உலகத்தோடு வலிமையோடு போராடப் போகின்றோம் எனும் உரம் ஏற்படுவது தானே வழமை.

நிறைமதி "அவனோடு" பல்கலைக் கழகத்தில் இணைந் திருந்த காலமெல்லாம் இளமை இனிமையைத் தந்து கொண்டே யிருந்தது. அவர்களின் காதலை பொறாமையாய்ப் பார்த்தவர்கள் மத்தியில்அவன் பெறுதற்கரியதைப் பெற்றதாய் இறுமாந்திருந் தான். அவளுக்கும் அப்படியே. ஆனால் அது எந்த இடத்தில் உடைந்தது என்பது தான் இருவருக்கும் புரியாத புதிராக இருந்தது. அவளது கொள்கையை விட அவளும், அவனது கொள்கையை விட அவனும் உடன்படவில்லை. இருவரும் அன்பு செலுத்தினார்கள் என்பது உண்மை. இனியும் ஒருவருக் கொருவர் அன்பைக் கொடுப்பார்கள். மரியாதையாய் இருப்பார்கள். ஆனால் ஒன்று சேர்ந்து திருமணம் ஆனபின் இந்த விட்டுக் கொடுத்தல் இல்லாத கொள்கைப்பிடிப்போடு வாழ நேர்தலில் முரண்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தால்...

வேண்டாம் அதை விடப் பிரிந்து விடலாம் என அவனே முடிவெடுத்தான். அவளோ இயலுமானவரை முயற்சிக்கலாம் என்றாள். இல்லைஎன் கொள்கைகளை உன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி அதுவே உனக்கு விருப்பமென்றால் பிரிவோம்..." என்ற படியே சிறு சோகத்துடனான புன்னகையோடு எழுந்தாள் அவள்.

அதுவே அவர்களது கடைசிச் சந்திப்பாகவிருந்தது.

கோகுலிடமிருந்து விடை பெற்றாள் அவள்.

***

அதோ அந்தக் குழந்தையைப் போலவே அவளது பால்யம் ஒரு காலத்தில் துடிப்போடு விளையாடிக் கொண்டிருந்தது. திடீரென்று அதை ஒரு பூவைப்போலக் கசக்கி எறிந்தது யார்...? அந்தப் பால்யத்தின் குதூகலங்கள் அவளை விட்டு விலகி முகம் தீவிரப்பட்டு விட்டாலும் இன்னும் அவள் முகத்தில் தன்னம்பிக்கை தன் ஒளியை இழக்கவில்லை..

கோகுலைப் பிரிவதற்கு அவள் மனப்பூர்வமாகவே சம்மதித்தாள்.

ஜெகன் வலிந்து தன்னுறவை வெட்ட வைத்தான்.

பரத்வாஜனது நட்பை உலகம் ஒத்துக் கொள்ளவில்லை.

வஞ்சிக்கப்பட்ட பெண்கள் மேல் சமூகம் மேலும், மேலும் வன்மம் கொள்கிறது. அவர்களின் மகிழ்ச்சியை அது தொடர்ச்சியாக அபகரித்துக் கொண்டே இருக்கிறது. அவர்களை அவதானமாக இருக்கச் சொல்லியும், அவர்களிடம் அவதானமாக இருக்க வேண்டுமென்றும் அது போதித்துக் கொண்டிருக்கிறது.

இருக்கட்டுமே, அதனாலென்ன அவளுக்கு...?

அவள் இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறாள்.

- ஜீவநதி : வைகாசி - 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே தான் உள்ளாயோ...?

வைகாசியின் வாசம் ஊரெங்கும் வீசிக் கிடந்தது. எந்த மரத்திலும் பூக்கள் அப்பிக் கிடந்தது. கொன்றை, மஞ்சள் தோரணங்களாய் பூக்களை அணிந்து காற்றி லாடியது. வேப்பம்பூ மணம் காற்றி லசைந்து வந்து நாசிக்குள் கிசு கிசுத்தது.

மத்தியான வெயில் முற்றிக் கனிந்து இளகியிருந்தது. அரை மணி நேரத்திற்கு முன்பு அவ்விடத்திலிருந்த ஆரவாரம் தொலைந்திருந்தது. கோவிலுக்குள்ளே நீண்ட அமைதி; கோவிலின் பக்கவாட்டு மண்டபத்தில் துண்டை விரித்துக் குருக்கள் படுத்திருந்தார். கொடி மரத்தின் கீழே பூக்கள் சிதறிக் கிடந்தன. கோவிலின் உள் மண்டப வாயில்கள் அனைத்தும் சாத்திக் கிடந்தன. வெளி மண்டபத்தில், கோவிலு குத் தொண்டு செய்யும் "ரவியன்" கால் கையைப் பரத்தியபடி மல்லாந்து படுத் திருந்தான். நான்கைந்து சிறிசுகள் மட்டும் கோவிலுக்குள் பொழுது போக்கின்றி விளையாடிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் குழாயடியில் சோற்றுப் பருக்கைகள் சிந்திக் கிடந்தன. நீர் தாராளமாய் ஓடி வடிந்திருந்தது. கோவிலுக்கு முன் முற்றத்தில் தேர் நின்றிருந்தது. இரண்டு வெண் புரவிகள் பூட்டிய தேர். அழகாகக் கட்டப்பட்டிருந்தது. அந்தக் கோவிலில் தேர் இருக்க வில்லை. சகடையை நிமிர்த்தி அலங்கரித்து தேர் ஆக்கி யிருந்தார்கள். உள்ளே பலமான கம்பிகளை நட்டு, உச்சியி லிருந்து வண்ணச் சேலைகளை சுற்றிக் கட்டியிருந்தார்கள். ஒவ்வொரு மூலைகளிலும் தென்னோலைகள், கரும்புகள், செவ்விளநீர், நுங்குக் குலைகள் கட்டப்பட்டிருந்தன. தோரணங் கள் பசுங் குருத்துகளாக ஆடியசைந்தன. முன்புறப் புரவிகள் காற்றில் மெதுவாக ஊசலாடிக்கொண்டிருந்தன.

ஆயிற்று, அந்த ஊரின் ஐம்பது, அறுபது குடும்பங் களுக்கும் ஏகபோக உரிமையாகவிருந்த முருகன் கோவிலின் தேர் உற்சவம் அன்று காலை மிக விமர்சையாக நடந்தேறி விட்டது. இந்தப் பத்து நாள்களில் அந்த ஊரே கொண்டாட்டமா யிருக்கும். மதியவேளைக்கு ஊரில் யாரும் சமைப்பது மில்லை. கோவிலிலேயே அன்னதானம் இருக்கும். கோவி லுக்குள்ளேயே ஒன்றுகூடி முருகனுக்கு ஒருபுறம், திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்க, இன்னொருபுறம் அரிசி அவியவைத்து மரக்கறி களை வெட்டி குழையல் சோறு தயாராகிவிடும். பூசை முடிய ஐம்பது குடும்பங்களும் வரிசை கட்டி உட்கார்ந்து சாப்பிட்டு, கோவிலுக்கு வராதவர்களுக்கென, மீதிச் சோற்றைப் பகிர்ந்து வீட்டுக்குக் கொண்டு செல்வார்கள்.

இன்றைக்கும் அப்படித்தான். இன்று வழக்கத்தை விடச் சனம் சற்றுக் கூடவாயிருந்தது. பக்கத்து ஊர்களிலிருந்தும், சிலர் வந்திருந்தார்கள். தேர் உருண்ட வீதியில் நீர் தெளித்த புழுதி காய்ந்து, நிலம் உலர்ந்திருந்தது. தேரின் தடம் சிலவிடங்களில் “பளிச் சென்று தெரிந்தது. இப்போது எல்லாம் ஆறி, ஆசுவாச மாய், நீட்டி நிமிர்ந்து இளைப்பாறுகிறது தேர். சுவாமி ஊர் உலாப்போந்து, பச்சை சாத்தி பிராயச்சித்த அபிஷேகம் கண்டு, உள்ளே சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் எந்தத் தொல்லையுமின்றி. வெளியே வந்தால் போதும். குஞ்சும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமனும், இளசும், பெரிசுமாய் கேட்கின்ற கோரிக்கைகளுக்கு அளவுகணக் கில்லை. போதாக்குறைக்கு மேளகாரர் வேறு அடித்துத்தூள் கிளப்பி விடுகின்றனர். பக்திப் பரவசம் ஊற பஜனைகளுக்கும் குறைச்சலில்லை. இப்போதுதான் எல்லாம் கொஞ்சமாய்ப்போல் ஓய்ந்திருக்கிறது.

தேருக்கும், கோவில் முகப்புக்குமிடையே நின்ற மருத மரத்தின் கீழ் லச்சுமி ஆச்சி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு முன்னால் கடகப்பெட்டி நிறையக் கச்சான் இருந்தது. இரண் டொரு பிளாஸ்ரிக் டப்பாக்கள் இருந்தன. ஒன்றில் கற்பூர வில்லைகளும், இன்னொன்றில் பல நிற இனிப்புக்களும் இருந்தன. அடுக்கடுக்கான கடதாசிப்பைகள் ஒருபுறம் இருந்தன. இன்னொரு பெட்டியில் சோளமும், இன்னொன்றில் சிந்தாமணிக் கடலையும் பொலிந்திருந்தன. அவளருகே நீளமாய் ஒரு உரப்பை நிறைந்து காணப்பட்டது. அதனுள் மணல் படிந்த உடைந்த தேங்காய்ப் பாதிகள் நிரம்பியிருந்தன.

லச்சுமியாச்சி அருகிலிருந்த சீமெந்துத் திட்டில் தலையைச் சாய்த்தபடி ஒழுங்கையை வேடிக்கை பார்த்தாள். இன்றைக்கு அவ்வளவு நல்ல வியாபாரம் இல்லை. ஐஸ்பழ வான் வந்திருந்தது. சிறுசுகள் முழுக்க அதைத்தான் சுற்றிச் சுற்றி வந்தன. தேர் வீதிக்கு வரமுன்னமே அவன் சிறுசுகளைத் தன் பக்கம் வரப்பண்ணி விட்டான். யாரும் கச்சான் வாங்கவில்லை. ரவியன் இடைக்கிடை வந்து, கடகத்துள் கைவைத்து கிள்ளிக்கொண்டு போனது தவிர காசு கொடுத்து யாரும் கச்சான் வாங்கவில்லை. ஐஸ்பழவான்காரன் வந்தாலும்தான் வந்தான். அவளது வியாபாரம் படுத்துவிட்டது.

“என்ன ஆச்சி. இண்டைக்கு வியாபாரம் இல்லைப் போலை.” தேர் பின் வீதிக்குப் போய்விட்ட நேரத்தில் ஐஸ்பழம் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்த பையன் இவளோடு வலியத் தனகினான்.

“பிழைப்பிலை மண்ணள்ளிப்போட வந்திட்டுக் கேக்குறான் கேள்வி.” ஆச்சி பட்டென்று மூஞ்சியைத் திருப்பிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆறுமுகசாமியே. நீதானப்பா பார்க்கவேணும், எல்லாரையும்." கை தேரின் திசை நோக்கிக் கூப்பியது.

இப்போது அவன்களும் இல்லை. தேர் சுற்றி இருப்பிடம் வந்து, சனங்கள் கலைந்த பிறகு அவர்களும் வானை உருட்டிக் கொண்டு போய்விட்டார்கள். இவள்தான் இன்னும் இருக் கிறாள், அங்கே நிலவிய வெறுமைக்குத் துணையாக.

ஆச்சி கொடியேறிய நாளிலிருந்து இன்றுவரை இங்கே தான் பழியாய்க் கிடக்கிறாள். கொடியேறினால், எப்படியும் முதலுக்குப் பழுதில்லாமல் வியாபாரம் நடக்கும்.

வழக்கமாக, ஊரிலிருக்கும் சின்னப் பள்ளிக்கூட வாசல் தான் அவளது இருப்பிடம். இப்படி, எங்கேனும் கோவில் கொடி யேறினால்தான் கையில் கொஞ்சம் காசு புரளும். அதுவும் நகர்ப் புறத்துக் கோவில்களென்றால் இவளுக்குப் போட்டியாக, பார்வதியும், கனகம்மாவும் வந்துவிடுவார்கள். இது ஊர்க் கோவில் என்பதோடு, இந்தக் கோவில் கொடியேறுகையில், அம்மனுக்கும், பிள்ளையாருக்கும் இன்னொரு பக்கம் கொடி யேறுவதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பது போல், ஒவ்வொரு திசைக்கும் ஒவ்வொருவர் சென்றுவிடுவர். அதனால் இவளுக்கு இந்தக் கோயில் மிஞ்சியது. ஆனால், அதையும் அந்த ஐஸ்பழ வண்டிக்காரன் வந்து இன்று கெடுத்து விட்டான்.

ஆச்சிக்கு இந்தக் கச்சான் வியாபாரம்தான் ஆரம்பம் முதலே கைகொடுத்தது. பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி, கட்டிக்கொடுக்கின்ற வரைக்கும் ஆச்சி கச்சான் வியாபாரம் தான் செய்தாள். ஆச்சியின் கணவர் கூலி வேலைக்குத் தான் போய்வந்தார். அவரும் பத்து வருடங் களுக்கு முன், வயலில் வேலைசெய்யப் போன இடத்தில் ஷெல் பட்டுச் செத்துப்போனார். ஆச்சி இப்போது மூத்தவ னோடுதான் வசிக் கிறாள். மூத்தவன் சந்தையில் தேங்காய் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறான். கச்சான் விற்பதை விட்டுவிட்டு வீட்டில் நிம்மதியாக இருக்கும்படி அவனும் எத்தனையோ தரம் சொல்லி விட்டான். அவளுக்குத்தான் முடியவில்லை. அவன் சொன்னால், அதற்காகக் கூடப் பிறந்த தொழிலை விடவா முடியும்.? கொப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றையைக் கூம்பு மாதிரி சுற்றி அதற்குள் கச்சானைச் சுருட்டி பத்து சதத்திற்குக் கொடுத்த நாளிலிருந்து, சிறு பைக்குள் கச்சானைப்போட்டு பத்து ரூபாவிற்குக் கொடுக்கும் இந்தக் காலம் வரைக்கும் அவள் கச்சான் ஆச்சிதான். அதைத் தூக்கிப் போட அவளால் ஒருபோதும் முடியவில்லை.

மேலும், பேரக்குழந்தைகளுக்கு, அவர்களின் விருப்பத் திற்கேற்ப, தன் கையால் ஏதாவது செய்வதற்கும் எந்தத் தடையும் வரக்கூடாது என்பதற்காகவும் அவள் தன் வியாபாரத்தைக் கைவிட விரும்பவில்லை. "ஏதும், வாய்க்கு வக்கணையாய்த் தின்னவேணும் எண்டாலும் அவனிண்டை கையையே எதிர் பார்க்குற.? ஏலுற காலம் மட்டும் என்ரை உழைப்பிலை வாழோணும் எண்டதுதான் என்ரை எண்ணம்." என அடிக்கடி ஆச்சி சுகம் விசாரிப்பவர்களிடம் சொல்லிக்கொள்வாள்.

உள்ளேயிருந்த சிறுவர் பட்டாளம் "கொல்" லென்று வெளியே ஓடிவந்தது. வெறுமையாயிருந்த தேருக்குள் ஏறிக் குதித்து அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சுற்றிக் கட்டி யிருந்த ஓலைகளையும், தோரணங்களையும் பிடுங்கி விளை யாடினார்கள். ஒருவன் கட்டியிருந்த கரும்பை இழுத்துக் கொண்டு ஓடினான். ஐந்தாறு நிமிடங்களுக்குள் அந்தக் கரும்பைத் துண்டுகளாய் முறித்து வாயிலிட்டுச் சப்பினார்கள். முன்பக்கத்தில் விழுந்து கிடந்த தேங்காயொன்றை சிதறும் படியாக ஒரு சிறுவன் போட்டுடைத்தான்.

இன்னொரு சிறுவன் பத்து ரூபாயைக் கொண்டு வந்து நீட்டினான். ஆச்சி, கச்சானைக் கிள்ளிப் பையிலிட்டு அவனிடம் கொடுத்தாள். அவன் கோவில் படியிலிருந்தபடி கச்சானை உடைக்க ஆரம்பித்தான். இரண்டுபேர் அவனைச் சூழ்ந்தார்கள். ஆச்சி எழுந்துபோய் கொஞ்சம் முன்னர் சிதறிய தேங்காய்த் துண்டுகளைப் பொறுக்கிவந்து உரப்பைக்குள் சேர்த்தாள்.

"பறவாயில்லை, நிறையத் தேங்காய் அடிச்சிருக் கிறாங்கள், கொப்பறாவுக்குக் குறைச்சலில்லை." என முணு முணுத்தாள்.

மதியம் சாய்ந்து, மாலைப்பொழுதின் காற்று, தூக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவழைத்தது. கோவில் சோற்றில் பசியும் தீர்ந்துவிட்டது. இனி, தேரடித்திருவிழா முடிந்து வீடு போக எப்படியும் எட்டரை, ஒன்பது ஆகிவிடும். இன்றைக்கு இரவு அவ்வளவு சனம் வராது. சனம் தேர்த்திருவிழாக் களையில் அலுத்திருக்கும். உபயகாரரும், குருக்களும், தொண்டுகாரர்களும் தான் இன்றைய பின்னேரத் திருவிழாவிற்கு வருவார்கள். அதிலும், தேரடித் திருவிழா தொடங்கவும் ஆறுமணியாகிவிடும். ஆனால், ஆச்சிக்கு அப்பதான் சாமியை வடிவாகப் பார்க்க முடியும். நல்ல சந்தோஷ மாக இருக்கும். இவ்வளவு நாள் திருவிழாவிலும், சனம் அடிச்சுப் பிடிச்சு முன்னுக்கு நிற்கும். ஆனா, தேர் அண்டு பின்னேரங்களில் தான் ஆச்சிக்கு வடிவா சாமி கும்பிட முடியும். தன்ரை பேரன், பேத்திகளுக்காக ஆச்சி அப்போதுதான் வடிவாகக் கும்பிடுவாள்.

ரவியன் திடுக்கிட்டு எழும்பினவன்போல் எழுந் தான். குழாயைத் திறந்து, முகத்திலடித்துக் கழுவிவிட்டு, “கடலைக்கு உப்புப் போடோணும்” என்றவாறே மடைப் பள்ளிக்குள் நுழைந் தான். உள்ளிருந்து “கமகம” வென்று கடலை அவிந்த வாசம் எழுந்தது. அப்படியே வெளியே வந்தவன், இவளது கடகத்துள் கை வைத்து ஒரு சிறங்கை கச்சானை அள்ளி யெடுத்தான்.

“உப்பிடியே அள்ளியள்ளி நீ என்ரை கடகத்தைக் காலி பண்ணிப்போடுவாய் போலை.” என்றாள் ஆச்சி.

குருக்கள் சோம்பல் முறித்தபடி எழுந்தார். உதவிக்கு நின்றிருந்த சிறு வயதுப் பூசகர்கள் ஓடியாடி அடுத்த வேளைப் பூசைக்குரிய ஆயத்தங்களைச் செய்யலாயினர்.

தேருக்குள் மீண்டும் சலசலப்பு. கட்டியிருந்த இளநீர்க் குலைகளைப் பிடுங்கிக்கொண்டிருந்தான் ஒருவன். மற்றவர்கள் அதை எப்படிப் பிளந்து குடிப்பதென்ற ஆர்வத்திலிருந்தனர். கோவிலுக்குள்ளிருந்த சிறிய கத்தியை எடுத்துவந்து குத்தி, இளநீரை ஏந்திக் குடித்தனர்.

“அடிபட்டு விழுந்து போடாதையுங்கோடா.” என்ற ஆச்சி அப்போதுதான் அவனைக் கண்டாள்.

“பேபியின்ரை பெடியன்.” என அவளது வாய் முணு முணுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூணோரம் ஒண்டியபடி நின்றிருந்தான் அவன்.

எப்போது வந்தானென்று தெரியவில்லை. இளநீர் குடிப்பவர்களை ஒருவித ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

பேபி, ஆச்சியிடம் எப்போதும் கச்சான் வாங்கிக் கொண்டிருந்தவள்.

சின்ன வயதிலிருந்து, பள்ளிக்கூடம் முடிக்கும் வரைக்கும் அவள், ஆச்சியிடம் கச்சான் வாங்குவாள். பிறகு திருவிழாக் காலங் களில் கோவிலுக்கு வந்தாலும், மற்றக் கச்சான்காரிகளை விட்டுவிட்டு, இவளிடம்தான் கச்சான் வாங்க வருவாள். ஐஸ்கிறீம் வண்டிக்காரனைக் கண்டால் கூட, ஆச்சிக்காகக் கச்சான் வாங்குவாள் அவள். பிறகு, அவள் இயக்கத்திலிருந்த ஒருவனைக் காதலித்து, அவனைக் கல்யாணம் செய்யவேண்டி ஊரைவிட்டே செல்லவேண்டி வந்துவிட்டது. பேபியின் தாயைக் காண்கின்ற வேளைகளில் பேபியைப் பற்றி விசாரிப் பாள் லச்சுமி ஆச்சி.

"அவள் எங்கை இருக்கிறாள் எண்டே தெரியேல்லை. எத்தினை பிள்ளையள். ஒண்டுமாத் தெரியேல்லை." என்று புலம்புவாள் அவள். அதற்குப் பிறகு சண்டைகள் வலுத்து, ஓய்ந்து முகாம்களுக்குள் ஆட்கள் முடங்கியபோது, பேபியின் தாயின் முயற்சிகள் பேபியைத் தொடர்ந்து தேடிக்கொண்டு தானிருந்தன. ஆனால், பேபி கிடைக்கவில்லை. கடைசியில் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் என்று விசாரித்த இடத்தில், அவளுக்கு ஆணும் பெண்ணுமாய் இரண்டு குழந்தைகள் ஒன்பது வயதிலும், ஏழு வயதிலும் இருந்தனவென்றும், புதுக்குடியிருப்பி லும், உடையார்கட்டிலும் அவர்களைக் கண்டதாகவும் அவளுக் குத் தகவல் தெரிந்தது. அதற்குப் பிறகான விபரங்கள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. முகாம்களில் உள்ளவர்களின் பெயர்ப்பட்டியலில் அவர்கள் பெயர் பதியப்பட்டிருக்கவு மில்லை. அவர்களைப் பற்றிய தகவலே இன்றி இருந்த வேளை யில் திடீரென்று ஒருநாள் நீதிமன்றத்திலிருந்து பேபியின் தாய்க்கு அழைப்பு வந்தது. பேபி சண்டைக்குள் இறந்துவிட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேபியின் கணவன் தடுப்பு முகாமுக்குள் சிறைப்பட்டுவிட, அநாதரவான குழந்தைகள் சிறுவர் இல்லமொன்றில் பாரப் படுத்தப்பட்டிருந்தனர். அதன்பின் அவர்களின் உறவுகள் ஆராய்ந்து உறுதிப்படுத்தப் பட்ட பின்னர், பேபியின் தாயிடம் இரு பிள்ளைகளும் ஒப்படைக்கப்பட்டனர்.

மகளைப் பறிகொடுத்த துக்கம் ஒருபுறம். யுத்தத்துக்குள் அலமந்த குழந்தைகளின் உளப்பாதிப்பு மறுபுறம் என பேபியின் தாய் உருக்குலைந்து போனாள். எனினும் அந்தப் பிள்ளைகளுக் காகத்தான் இன்னும் அவள் தன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தாள்.

“ராசு. இஞ்சை வாடாப்பா.” லச்சுமி ஆச்சி அவனைப் பரி வோடு கூப்பிட்டாள். அவன் ஒருகணம் அவளைப் பயத்தோடு பார்த்துவிட்டு விலகி நின்றான்.

“என்ரை குஞ்செல்லே. என்ன. பயம்.” ஆச்சி கையைப் பிடித்து அழைத்தாள். அவன் தயங்கித் தயங்கி அருகில் வந்தான்.

ஆச்சி அவனை அருகில் அமர்த்தி, பை நிறையக் கச்சானை அள்ளிக் கொடுத்தாள்.

அதைப் பார்த்துவிட்டு இரண்டு பையன்கள் அவனுக்கருகே வந்து கையை நீட்டினர். அவன் அப்படியே பையைக் கை நழுவ விட்டான். அவர்கள் அந்தப் பையை இழுத்தபடி அப்பால் ஓடினர்.

“குழப்படிக்காரங்கள் அவங்கள். நீ ஏனப்பு குடுத் தனி.” என்ற லச்சுமி ஆச்சி இன்னொரு பைக்குள் கச்சானைப் போட்டு அவனிடம் தந்தாள்.

“நீ சாப்பிடப்பு. அவங்கள் வரட்டும். நான் பாக்கிறன்.”

அவன் மிகவும் ஆறுதலாய், சிரமப்பட்டு கச்சான்களை உடைக்க ஆரம்பித்தான்.

“அம்மம்மா வரேல்லையோ. தேருக்கு.?” அவன் வெறு மனே தலையை மட்டும் ஆட்டினான். ஆச்சி கச்சான் ஒன்றை உடைத்து அதன் பருப்பை அவன் வாய்க்குள் ஊட்டினாள்.

பொத்தென்று. பலத்த சத்தமொன்று கேட்டது. “அம்மா...” என வீறிட்ட சிறுவன் கச்சான் பை சிதற நிலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிழ்ந்து படுத்துக்கொண்டான்.

சத்தம் வந்த திசையை ஆச்சி பார்த்தபோது அந்தப் பையன்கள் முழுதாயிருந்த பெரிய தேங்காயொன்றை நிலத்தில் போட்டு உடைத்திருந்தது தெரிந்த்து.

அவன் விழுந்து படுத்திருந்த தோரணையைப் பார்த்து மற்றப் பையன்கள் "கொல்"லென்று சிரித்தார்கள்.

ஆச்சி பதறிப்போய் அருகில் வந்தாள். "இதென்ன. சீச்சி. குழந்தைப் பிள்ளை போல..." அவன் எழும்பவில்லை. கண்களை இறுக மூடியிருந்தான்.

"எல்லாரும் பகிடிபண்ணப் போகினை. என்ர செல்லம் எழும்படாப்பு."

ஆச்சி அவனைத் தூக்கி நிமிர்த்தினாள்.

அவன் கண்களை இறுக மூடிக்கொண்டு ஆச்சியின் தோளில் முகத்தைக் கவிழ்த்தான்.

"அம்மா. என்ரை அம்மா."

அவன் உதடுகள் விம்மிக்கொண்டிருந்தன.

மற்றச் சிறுசுகள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தன.

"அழக்கூடா என்ன. நான் பிள்ளைக்கு நிறையக் கச்சான் தாறன்."

அவன் முகம் நிமிர்த்தவில்லை.

"கச்சான் வேண்டாமே. அப்ப நான் பிள்ளைக்கு இனிப்புத் தரட்டே."

"அம்மா. அம்மா."

ஆச்சியின் கழுத்தைக்கட்டிக்கொண்டு அவன் அழுதான்.

"அம்மாவோ. ஓம். பிள்ளையிண்டை அம்மா நெடுகலும் என்னட்டத்தானை கச்சான் வாங்க வாறவ."

அவன் வெடுக்கென்று நிமிர்ந்தான். "அம்மா. இனி வருவாவோ..?" ஆச்சி அந்தக் கேள்வியால் திணறினாள்.

"ஏனப்பு அப்பிடிக் கேக்கிறாய்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா. இப்படியொரு சத்தம் கேக்கேக்கைதான் எங்களைத் தனிய விட்டிட்டுப் போனவ. இனி எப்ப உங்களிட்டைக் கச்சான் வாங்க வருவா..?"

"எப்பவெண்டாலும் வருவா."

"வந்தால் அம்மாவை இனிப் போக விடமாட்டன்." அவன் கண்களைக் கசக்கியபடி தீர்மானமாய்ச்சொன்னான்.

"ஓமோம். இனிமேல் அம்மாவைப் போக விடக் கூடாது." ஆச்சி அவனை அள்ளியெடுத்து மடியில் அமர்த்தினாள்.

சுற்றி நின்று வேடிக்கை பார்த்த சிறுவர்கள் கலைந்து மறுபடியும் விளையாடப் போயினர்.

ஆச்சி வெறுமையாயிருந்த தேரை ஒரு வினாடி உற்றுப் பார்த்தாள்.

"உனக்கென்ன வருசா வருசம் கொண்டாட்டம். கொண்டாடுறதுக்கும் ஆக்கள் இருக்கினம். இந்தப் பச்சைப் பிஞ்சுகள். அதுகளுக்கினி ஆர் கதி.?" வாயிலிருந்து தன் பாட்டுக்கு வார்த்தைகள் புரண்டு வந்தன.

பார்வை கோயில் வாயிலை நோக்கி வெறுப்போடு திரும்பியது.

"இன்னும் உள்ளுக்குத்தான் இருக்கிறியோ. இரு. இரு. உனக்கென்ன. நீ. கண்ணை மூடிக்கொண்டு அப்பி டியே இரு." அவளது முணுமுணுப்புப் புரியாமல் கச்சான் கோதுகளை உடைக்கமாட்டாமல் ஆச்சியின் முகத்தை ஆவலோடு நோக்கினான் அவன்.

"ஓம். ஓம். நான் இருக்கிறன் பிள்ளைக்கு." சடுதியாக வந்த உணர்வெழுச்சியினால் மளமளவென்று கச்சான் களை உடைத்து பருப்புக்களால் அவன் உள்ளங்கையை நிறைக்கத் தொடங் கினாள் லச்சுமி ஆச்சி.

- கலைமுகம் : ஏப்ரல் - ஜூன் 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயங்களும் கேள்விகளாகின்றன

"இதுதான் நாகமரம்." என்றாள் அவள்.

அதனை அவள் எனக்கு எப்படி விளங்கப்படுத்துவதென்று யோசித்தாள்.

அவளுக்கு அதன் தமிழ்ப் பெயர் தெரியவில்லை. அவள் சொன்ன ஆங்கிலப் பெயரை என்னாலும் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அதன் பிறகு அவள் "இது தான் எங்கள் நாட்டின் தேசியமரம்..." என்ற பிறகு தான் "நாகமரமா...?" என்றேன். அவள் "ஒவ்... ஒவ்...: என்றபடி, "நாக மரம்... நாகமரம்" என்று தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

நான் அந்த மரத்தைப் ப் பார்த்தேன். மிருதுவான குருத்துக்கள் ஊதாச்சிவப்பில் காற்றில் வழிந்து ஒன்றையொன்று தழுவிக் கொண்டிருந்தன. அடிக்கடி அதனை நான் தாண்டிச் சென்றிருந்த போதிலும் அதன் பெயர் தெரியாமலிருந்ததை எண்ணி வெட்கிக் கொண்டேன். இவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் தேசிய மரத்தைக் கூடத் தெரியவில்லை என்று அவள் யோசிப்பாளோ என்று தோன்றியது. நாட்டிலிருந்து துண்டா டப்பட்ட ஒரு பகுதியில் வசித்து வந்தவனுக்கு அதைத் தெரியாம லிருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை என்று நினைத்தவளைப் போல அதை எனக்குத் தெரியப்படுத்துவதில் பெருமைப் படுபவள் போல, அவள் அதை மட்டுமன்றி இன்னும் பலவற்றை எனக்கு அறியப்படுத்தினாள்.

"சிங்கள இலக்கியங்களில் இந்த நாகமரத்தின் குருத் திலைகளின் நிறத்தை பெண்களின் உதடுகளுக்கு ஒப்பிடு வார்கள்." என்றாள்.

நான் சட்டென்று திரும்பிப் பார்த்தேன்; அவளுடைய உதடுகளை.

இரண்டு நிறத்திற்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை.

தமிழில்கூட இங்கிருந்து ஏதேனும் இலக்கியம் எழுதி யிருந்தால் அப்படித்தான் எழுதியிருப்பார்கள் என்று தோன்றியது.

"நாங்கள் இப்போது எங்கே போகின்றோம்.?" என்றேன்.

"களனியிலுள்ள விகாரைக்கு..." என்றாள்.

எனக்கு ஒருபோதும் விகாரைக்குச் சென்று பழக்கம் இல்லை. அவள் என்னோடு கோயிலுக்கு வந்திருக்கிறாள்.

இன்றைக்கு ஒருநாள் என்னை விகாரைக்கு வரச் சொன்னாள். எனக்கும் விகாரையைப் பார்ப்பதற்கு ஆவலாக இருந்தது. சரியென்று விட்டேன். அவள்தான் என்னை அழைத்துக் கொண்டு வந்திருந்தாள்.

இன்றைக்கு அவள், வித்தியாசமான தோற்றத்தி லிருப்பதாய்ப்பட்டது எனக்கு. தமிழ்ப்பெண்களைப் போலவே பாவாடை, சட்டை அணிந்திருந்தாள். ஆனால், அவை நீளமாக வும், வெண்மையாகவும் இருந்தன. கையில் வழக்கத்துக்கு மாறான வகையில் ஒரு பெரிய பையைக் கொளுவியிருந்தாள். வழமையாய் அவள் அணிந்துவரும் வரும் சிறிய கைப்பையி லிருந்து அது மாறுபட்டிருந்தது.

தலையை ஒற்றையாய் உயர்த்திக் கட்டியிருந்தாள். அவளது தலைமுடியில் கொஞ்சத்தைப் பிரித்தெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேயே முடிச்சிட்டிருந்தது போல ஒருவகை சுருள் அழகாகச்சிலும்பியிருந்தது.

விகாரைக்கு முன்பாலிருந்த பெருவீதியில் நுழைந்து நடந்த போது எனக்குச் சற்றுச் சங்கடமாயிருந்தது. எனக்கு முற்றிலும் அந்நியமான சூழல். எனினும் எனது தோற்றம் என்னைத் தமிழனாய்க் காட்டிக் கொடுத்து விடுமோ என்ற எண்ணம் என்னுள் சற்றுத் தயக்கத்தை ஏற்படுத்திற்று. அந்தத் தயக்கத்தைத் துடைத்தெறிவதற்காக அவள் என்னோடு தொடர்ந்து கதைத்துக் கொண்டே வந்தாள்.

நீர் பீறிட்டுக் கொண்டிருந்த வட்ட வளைவுதாண்டி உள்நுழைந்து செருப்புப் பாதுகாவலனிடம் செருப்புகளை ஒப்படைத்து விட்டு உள்ளே நுழைந்தோம்.

வலப்புறமிருந்த சிறிய கட்டிடத்தைக் காட்டி அங்கே தான் முதலில் வழிபட வேண்டும் என்று சொல்லி அழைத்தாள் அவள். அவளின் பின் தொடர்ந்தேன். எல்லாக் கண் களும் என் முதுகின் மீது இருப்பதாக ஒரு உணர்வு. எப்படி வழிபடுவ தென்று தெரியவில்லை. அவள் தன் பையைத் திறந்து அதற் குள்ளிருந்து சிறிய வட்டவடிவமான அஸ்ரா மாஜரின் பெட்டியைத் திறந்தாள். வெள்ளை வெளேரென்ற மலர்கள் புத்தம் புதிதாய் இருந்தன. அவற்றுள் ஒன்றிரண்டை எடுத்து புத்தபகவான் முன் வைத்துப் பயபக்தியோடு கண்களை மூடி நின்றாள். என்னிடமும் பெட்டியை நீட்டினாள். "ஏன்.?" என்றேன். என்னையும் புத்தருக்குப் பூ வைக்கச் சொன்னாள். அவள் சொன்னது போலவே செய்தேன். என்ன வேண்டிக் கொள்வதென்று தெரியவில்லை. அவளையே பார்த்துக் கொண்டு நின்றேன். பின்னர் வெளியே வந்தோம். இங்கெல்லாம் பூக்கள் இவ்வளவு குளிர்ச்சியாக, தூய்மையாகவா இருக்கும்? என்று தோன்றியது. ஆனால் பிறகுதான் தெரிந்தது, அவள் பூக்களைக் குளிர் பதனப் பெட்டியில் இட்டு எடுத்து வந்திருக்கிறாள் என்று.

சிறிய, சிறிய விகாரைக் கூம்புகளுக்கருகே, வெண்ணிற உடுப்புகளோடு பெண்கள் வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். அருகிலிருந்த பிக்குகளிடத்தில், குனிந்து வணங்கி ஆசீர்வாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

அவள் என்னை அருகில் வருமாறு அழைத் தாள். முன்னாலிருந்த பிக்குவின் காலடியில் விழுந்து எழும்பினாள். அவள் என்னையும் விழுந்தெழச் சொல்லுவாளோ..? எனும் பயத்தில் நான் சற்று விலகி நின்றேன். அவள் என்னைக் கூப்பிட வில்லை. பிக்கு அவளது தலைக்கு மேல் கையை விரித்து ஆசீர்வதித்தார். அவள் மலர்ச்சியோடு என்னை நோக்கி வந்தாள்.

அந்த வளாகத்தின் இடதுபுறத்தில் பெரிய அரச மர மொன்று விசாலித்திருந்தது. அதன் கீழே அதனைச் சுற்றி வட்டப் பீடம் எழுப்பப்பட்டிருந்தது. சுற்றிலும் மக்கள் வணங்கிக் கொண்டிருந்தனர். ஒரு ஒரமாய்ச் சிலர் பத்திரிகைத் தாள்களை மணலில் விரித்து அதன் மேல் உட்கார்ந்திருந்தனர். சிலர் தியானித்துக் கொண்டுமிருந்தனர்.

நான் புதினம் பார்த்தபடி அவளோடு நடந் தேன். மரத்தைச் சுற்றியிருந்த சுற்றுவட்டப் பாதையில் இருந்த சிறிய புத்தர் சிலைகளுக்கு முன் சிறிய வட்டத் தட்டுகளில் உணவு வகைகள் படைக்கப்பட்டிருந்தன. சில பிளாஸ்ரிக் தம்ளர்களில் தேநீரும் கூட. வெள்ளைச் சம்பா அரிசிச் சோறும், போஞ்சிக்காய் பால் கறியும், உறைப்பில்லாத வேறு கறிவகைகளும் அவர்களது பாரம்பரியத்தைப் பறைசாற்றின. எனக்கு அவளது வீட்டுச் சாப்பாடு ஒருபோதும் ஒத்துவருவதில்லை. ஆனால், அவளுக்கு எங்களூர்ச் சாப்பாடு மிகப் பிடிக்கும். எப்போ தாவது, வாரத்தில் ஒருமுறை என்னோடு, எங்களூர்ச் சாப்பாடு சாப்பிடவென்றே சைவக் கடைக்கு அழைத்துப் போகச் சொல்லுவாள். அவள் அசைவம் சாப்பிடுவதில்லை. “புத்தரின் தத்துவம் அஹிம்சைத் தத்துவம். அஹிம்சையைக் கொண்டாடுபவர்கள் அசைவம் உண்ணக் கூடாது.” என்பாள். அவளது வீட்டில் மற்றவர்கள் அப்படி இல்லை. அவள் மட்டுமே இப்படியான கொள்கை களைக் கொண்டிருக்கிறாள்.

“எல்லாச் சமயங்களும், மதங்களும் ஏதோவொரு வகையில் ஒத்துப் போகின்றன.” என்றேன் அவளிடம்.

“எப்படி..?” என்றாள் அவள் என்னைப் பார்த்தபடி

“எங்கள் சைவ சமயப்படியும் தெய்வங்கள் மரங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் குடியிருக்கின்றன. ஆலமரம், அரசமரம் போன்ற மரங்களின் கீழ் குடியிருக்கும் தெய்வங்களுக்கு நாம் பொங்கிப் படைக் கின்றோம். இப்படி, உங்கள் புத்த மதத்திலும் உணவையும், பானத்தையும் புத்தருக்குச் சமர்ப்பிப்பதை இப்போதுதான் நான் காண்கிறேன் என்றேன்.

"இவ்வாறான வழமைகள் எங்களிடத்தில் உண்டு." என்றாள், அவள்.

தொடர்ந்து அவள் பின்னால் சென்ற போது, நீளமான ஒரு சீமெந்துக் கட்டின் மீது, சிட்டி விளக்குகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. ஊதுபத்திகள் குத்துவதற்கென்றும் குறிப் பிட்ட ஒர் இடம் இருந்தது. நான் அவள் என்ன செய் கின்றாள் என அதிசயமாய் நோக்கினேன். அவள் அருகிலிருந்த சிறிய சிட்டி களை எடுத்துத்துப்புர வாக்கி விட்டு, தனது தோளில் கொழுவி யிருந்த பையைத் திறந்து, சிறிய போத்தல் ஒன்றை எடுத் தாள். அதற்குள்ளிருந்த தேங்காய் எண்ணெயை அந்தச் சிட்டிக்குள் வார்த்தாள். இன்னுமொரு சிட்டியை என்னிடம் தந்து அதற்குள்ளும் எண் ணெயை வார்த்தாள். பின்னர் போத்தலை மூடி உள்ளே வைத்துவிட்டு, சிறிய திரிப் பைக்கற்றை எடுத்துத் திரிகளை எடுத்துச்சிட்டிக்குள் வைத்து, என்னிடமும் திரிப் பைக்கற்றை நீட்டினாள். நானும் ஒன்றிரண்டு திரிகளை எடுத்துச் சிட்டிக் குள் வைத்தேன். பின்னர் தனது பைக்குள் ளிருந்து ஊதுபத்திப் பெட்டியை எடுத்தாள். ஊதுபத்தியை உருவி எரிந்து கொண்டிருந்த மற்றத் தீபத்தில் கொளுத்திச் சிட்டித் திரியைப் பற்ற வைத்தாள். என்னிடமும் சில ஊதுபத்திக் குச்சிகளை நீட்டினாள். நான் அவளைப் பின் பற்றினேன். அவள் சிட்டித் தீபத்தை அந்தச் சீமெந்துத் திட்டில் வைத்துவிட்டுக் கொஞ்ச நேரம் காற்றினால் தீபம் அணைந்து விடாதிருக் கப் போராடி னாள். சிறிது நேரத்தில்தீபம் அணையாது, நிலைத்திருக்கும் தருணம் வந்ததும், ஆசுவாசத்தோடு வந்து ஊதுபத்திக் குச்சிகளை அவற்றை நாட்ட வேண்டிய இடத்தில் நாட்டி னாள்.

அந்த இடம் புகையும், வெளிச்சமுமாய் நிறைந்திருந்தது. புகையில் மோதுண்ட அவளது முகம் களைத்துத் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும், அந்தமுகத்தில் ஒரு வைராக்கியம் இருந்தது. எனக்குப் புரட்டாதிச் சனிகளில், சிவன் கோயிலில் அமர்ந் திருக்கும் சனீஸ்வரனுக்கு, எள் எண்ணெய் எரிப் பது ஞாபகத்தில் வந்தது. பெரிய வித்தியாசம் எதுவுமில்லை. எல்லா வழிபாடு களும், ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாய்த்தான் காணப்படுகின்றன.

தீபங்கள் எரியும் வரைக்கும், கொஞ்ச நேரம் அவள் அங்கே நின்றிருந்தாள். நான் சுற்றிலும் தீப மேற்றுபவர்களைப் பார்த்துக் கொண்டிருந் தேன். சற்றுத் தள்ளி ஓரத்தில், ஓரிடத்தில் சிறிய பிளாஸ்ரிக் செம்புகள் இளம் வண்ணங்களில் வைக்கப் பட்டிருந்தன. குருத்துப் பச்சை, இள நீலம், மென் சிவப்பு, தீக் கொழுந்தின் நிறம் என மெல்லிய வர்ணங்களில் அப்பாத்திரங்கள் தென்பட்டன. இடையிடையே அவ்விடத்திற்கு வந்த இளைஞர் கள், சிறிசுகள், பெரியவர்கள் என மாறி மாறி அவற்றில் நீர் நிரப்பி எடுத்துக்கொண்டு போயினர். சிலர் வெறும் செம்பினை எடுத்த இடத்தில் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தனர். சிறிய நேரப் பொழுதில், செம்புகள் குறைந்து கூடிக்கொண்டிருந்தன. தாயோடு வந்த சிறுமி ஒருத்தி ஓடிப்போய் பச்சை நிறச் செம்பினை எடுத்தாள். பின் அதில் திருப்தியுறாதது போல, தீக்கொழுந்து நிறத்திலிருந்த பிளாஸ் ரிக் செம்பை எடுத்து, அதில் நீர் நிறைத்தாள். அவள் என்ன செய்யப் போகின்றாள் என என் பார்வை அவள் பின்னால் சென்றது. பக்குவமாக செம்பைத் தூக்கிச் சென்ற சிறுமி அந்த அரசமரத்தின் வட்டபீடத்தில் அமர்ந்திருந்த புத்தரை நோக்கி ஏறிச் சென்ற படிகளில் மெதுவாக ஏறினாள். நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அடி மரத்தைச் சூழ்ந்திருந்த தொட்டியினுள் அந்நீரை மெதுவாகச் சரித்து ஊற்றினாள். பின்னர், அந்தச் செம்பை இருந்த இடத்தில் கொண்டு சென்று வைத்தாள்.

"போவோம்." என்ற அவளின் குரலில் நான் மனம் கலைந்தேன். திரும்பிப் பார்த்த போது எங்கள் தீபங்கள், சுடர்விட்டுப் பிரகாசித்தன.

"அவர்கள் எதற்காக நீர் ஊற்றுகிறார்கள்?" என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் என் கேள்வியை உணர்ந்தவள் போல, "புத்தர் இந்தப் போதிமரத்தின் கீழ்தான் ஞானம் பெற்றார். அந்த ஞானத் தைக் கொடுத்த போதி மரத்திற்கு நன்றி செலுத்துவதற்காக நாம் நீர் ஊற்றுவோம்" என்றாள்.

பின்னர், "நான் நீர் ஊற்றி வணங்கிவிட்டு வரச் சற்று நேரமாகும். நீ வேண்டுமானால் அங்கே உட்கார்ந்து கொள்ளேன்" என்றாள்.

பத்திரிகைத் தாள் விரித்து, அவர்கள் உட் கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தேன்.

பத்திரிகை மேல் உட்கார எனக்குப் பிடிக்க வில்லை.

கீழே கசங்கிக் கிடக்கிற தாளில், கால் பட்டாலும் அதைத் தொட்டுக் கண்ணிலொற்றும் வண்ணம் வளர்க்கப்பட்டவன், நான்.

"பத்திரிகை சரஸ்வதி. அதன் மேல் உட்காரக் கூடாது" என்றேன். அவள் ஆச்சரியமாய் என்னைப் பார்த்தாள். என்னைப் பற்றிய அவள் மதிப்புச் சற்றே உயர்ந்து விட்டது போற் பட்டது.

"இங்கே வா" என்றாள்.

அப்பால் சற்றுத் தள்ளியிருந்த மடம் போன்ற கட்டடத்தின் விளிம்புப் படிகளில் சிலர் அமர்ந்திருந்தார்கள். அவ்விடத்தில் என்னை அமரச் சொல்லிவிட்டு, அவள் ஒரு மென் சிவப்பு நிறச் செம்பை எடுத்து நீர்நிரப்பிக் கொண்டிருந்தாள். நான் சுற்றிலும் பார்த்தேன்.

சிலர் புத்தகங்களைப் படித்தபடியும், கண் மூடித் தியானித்தபடியும் இருந்தார்கள். நான் சுற்றிலும் மலர்ச் செடிகள் இருந்த பக்கமாய்த் திரும்பினேன். அங்கு ஒரு மரத்தின் கீழ் சின்ன தாய், ஒரு பிள்ளையார் சிலை கல்லிலே வடிக்கப்பட்டிருந்தது. சட்டென்று அறிமுகமானவர்களைக் கண்ட மகிழ்ச்சி என்னில் தொற்றிக் கொண்டது. எழும்பிக் குட்டிக் கும்பிட்டு தோப்புக் கரணம் போட்டுவிட்டு, மீண்டும் படியில் வந்து அமர்ந்தேன். அவளைப் பார்த்தேன். அவள் மரத்திற்கு நீரூற்றி விட்டு இறங்கிக் கொண்டிருந்தாள். பின் மரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சுற்றிலும் பார்வையைப் படர விட்டேன். புறாக்கள் தத்தித் தத்தி நடந்து கொண்டி ருந்தன. சிறு குழந்தை ஒன்று புறா ஒன்றைப் பிடிக்க அதன் பின்னால் ஓடியது. புறா உட்காருவதும், எழுந்து பறப்பதுமாக அந்தக் குழந்தைக் குப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் அதிலேயே லயித்துக் கொண்டி ருந்து விட்டுத் திரும்பவும் அவள் புறம் திரும்பி னேன். அவள் மீண்டும் மரத்திற்கு நீர் ஊற்றி விட்டு மரத்தைச் சுற்றத் தொடங்கினாள். இப்படி, மூன்று தடவையோ, ஐந்து தடவையோ நான் கணக்கில் எடுக்கவில்லை. அவள் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்தாள். அவள் மரத்தைச் சுற்றி விட்டு,நீர் ஊற்றினாளா? அல்லது நீரை ஊற்றி விட்டு மரத்தைச் சுற்றினாளா? என எனக்கு இப்போது புதிய சந்தேகம் வேறு வந்து விட்டது. இருபது நிமிடங்கள் கழிந்தபோது செம்பு அதன் இருப் பிடத்துக்கு வந்தது. அவளும் என் அருகில் வந்து அமர்ந்தாள்.

“முடிந்ததா..?” என்றேன், கேலியாக.

“இல்லை. இன்னும் இருக்கின்றன, நீ பார்க்க வேண்டிய இடங்கள்.” என்றாள், என் கேலி புரியாமல்.

“எங்கே?” என்றேன்.

“வா” என மீண்டும் மத்தியிலிருந்த விகாரைக்குள் அழைத்துச் சென்றாள்.

உள்ளே வெள்ளை வெளேரென்ற பளிங்குச் சிலையாகப் புத்தர் பளிச்சிட்டதைக் கண்டு நான் ஒருகணம் பிரமித்துத்தான் போனேன். அந்த வெளேரென்ற புத்தர் சிலை, வெண்ணிற வலைத் துணி திரையாக மறைக்க, புகை மூட்டத்துள் ளெழுந்த தெய்வாம்சமாகக் கண்களைக் கனவுக்குள் அமிழ வைத்தது.

முன்னால் அலங்கரிக்கப்பட்ட பூக்கிண்ணங்கள், பல வண்ணச் சிறு துணிகளை ஒன்றாய் இணைத்துத் தைக்கப்பட்ட துணி விரிப்புகள் எல்லாம் பார்வைக்குப் பரவசமூட்டின.

அவள் தன் சிறிய பெட்டியை எடுத்து உள்ளிருந்த பூக்களை எடுத்துக் காணிக்கையிட் டாள். எனக்கும் நீட்டினாள். பேச்சிழந்து போன நானும் அதனை புத்த பகவானுக்குக் கிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கினேன். உள் அறையை விட்டு நீங்கி வெளி வராந்தாவிற்கு வந்த போது, பெரிய பானைகள் வர்ணந் தீட்டப்பட்டுக் குறுகிய வாய்களுடன் காணப்பட்டன. நெல்மணிகள் சில அதனுள் சிதறிக் காணப்பட்டன.

"இது எதற்கு.?" என்றேன்.

"வயலில் முதலில் விளையும் புது நெல்லை பகவானுக்கு காணிக்கையிடுகிறோம்" என்றாள்.

மேலே சுவர்களில் புத்தபகவானின் வரலாறு சிற்பங் களாகவும், சித்திரங்களாகவும் பொறிக்கப் பட்டிருந்தது. வலப் புறமிருந்த இன்னொரு பகுதியில் நீளவாக்கில் சரிந்து படுத்தபடி அருள் சொரியும் புத்தர் காணப்பட்டார். பிரமாண்டமான அந்தப் புத்தர், என்னுணர்வில், பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனை நினைவு படுத்தினார்.

"உண்மையில் சமயங்கள் ஒன்றோடொன்று ஒத்துப் போகும் கருத்துக்களைச் சொல்பவை தான். கிருஷ்ணர் மாட்டுக்கொட்டிலில் வளர்ந்தார். யேசுகிறிஸ்து மாட்டிக் கொட்டிலில் தானே பிறந்தார். இப்படி இன்னும் எத்தனை ஒற்றுமைகளைக் கண்டுபிடிக்க முடியும்.

ஆனால், மதத்தின் பேரால், சமயத்தின் பேரால் நடக் கின்ற சண்டைகளுக்கு மட்டும் குறைச்சல் இல்லை" என்றேன்.

"நாங்கள் இதனை மாற்றியமைப்போம்" என்றாள்.

அவளது தந்தை ஒரு மருத்துவர். அவளது தகப்பன்தான், அவளைத் தமிழ் படிக்கத்தூண்டியிருந்தார். இனங்கள் ஒற்றுமை யாக வாழ வேண்டுமென்றால், ஒவ்வோர் இனத்தின் மொழியும், இன்னோர் இனத்திற்குத் தெரிந் திருக்க வேண்டும் என்பாராம் அவர். அதன் அடிப்படையிலேயே அவள் தமிழ் கற்கத் தொடங்கியிருந்தாள்.

பல்கலைக்கழகத்தில் என்னோடு, இன்னும் நான்கைந்து பேர் தமிழர்களாயிருந்தும், அவள் என்னோடே அதிகம் நட்பு பாராட்டிக் கொண்டாள். ஆரம்பத்தில் என்னுடன் தமிழ் கதைக்கும் ஆர்வத்திலேயே அவள் பழகியிருந்தாலும், இறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அதுவே காதலாயிற்று. அது எனக்குப் பெருமையாகவும் இருந்தது, ஒரு விதத்தில். அவள் மற்றச் சிங்களப் பெண்களைப் போல ஜீன்ஸ், ரீ சேர்ட் என்று ஒரு போதும் அணிவ தில்லை. சல்வார், நீளப் பாவாடை என்பவற் றையே எப்போதும் அணி வாள். நீ ஒரு தமிழ்ப் பெண்ணாகப் பிறந்திருக்க வேண்டியவள் என மற்ற சிங்களப் பெண்கள் அவளைக் கேலி செய் வார்கள். ஆனால், சேலை அணியும் போது மட்டும் அவள் தனது பாரம் பரியத்தை விட்டுக் கொடுக்க மாட்டாள். மற்றச்சிங்களப் பெண் கள் இந்தியன் ஸ்டைலில் சேலை கட்ட, இவள் மட்டும் முன்னால் சுருக்கு வைத்த சிங்களச் சேலைக் கட்டிலிருந்து சிறிதும் வழுவ மாட்டாள். இது எனக்குச் சற்று ஏமாற்றத்தையே அளித்தது. “சாப்பிடுவோமா..?” என்றாள், அவள். எனக்கும் பசித்தது.

பாக்கிலிருந்து பார்சலை எடுத்து அந்தமடத்தின் விறாந்தைப் படிகளிலிருந்தபடி விரித்தாள்.

வெள்ளை அரிசிச் சோறும், போஞ்சியும், சோயாமீற்று மாய் எனக்குச் சாப்பாடு உள்ளிறங்கவில்லை. அவளுடைய திருப் திக்காகச் சாப் பிடுவதாய்ப் பேர் பண்ணிக் கொண்டிருந்தேன்.

“எனக்குத் தெரியும். என் சாப்பாடு உனக்குப் பிடிக்கா தென்று.”அவள் கைப்பையைத் திறந்து இன்னொரு பார்சலை எடுத்துப் பிரித்தாள்.

அதற்குள் இரு பெரிய உழுந்து வடைகளும், சிவப்புச் சம்பலும் இருந்தன. ஆசையாய் வாங்கிச் சாப்பிட்டேன்.

தூரத்தில் ஒன்றிரண்டு பிக்குகள் நடந்து போய்க் கொண்டிருந்தனர்.

அவர்களது அங்கியின் நிறம் வழமையான நிறத்திலன்றிச் சற்று வேறுபட்டிருப்பதாய்த் தோன்றிற்று.

எனது கேள்வியை உணர்ந்தது போல, “அவர்கள் தாய்வானிலிருந்து இங்கே வந்து தங்கி பௌத்தத்தைப் பயிலுகின்றார்கள்” என்றாள்.

ஒவ்வொருவருடைய அங்கிகளும் இப்படி வேறுபட்ட தீவண்ணத்தில் ஒவ்வொரு அர்த்தத்தைத் தந்து கொண்டிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை என்னால் உணர முடிந்தது.

நான் பிரமிப்போடு அவர்களை வேடிக்கை பார்த்தேன். அவளோ எனது பிரமிப்பை ரசித்துக் கொண்டிருந்தாள்.

***

அன்றுதான் நான் அவளைக் கடைசியாகச் சந்தித்தேன்.

அதற்குப் பிறகு என் வாழ்நாளில் மிகப் பெரும் இடி இறங்கிய சோகத்திலிருந்து என் னால் மீளவே முடியவில்லை.

பட்டப் படிப்புகள் முடித்துக் கிடைத்த, அவளோடு கழித்த அந்த அமைதியான நாளின் பின் என் வாழ்நாள் கொந் தழிப்புக்குள்ளானது. நான் எனது படிப்பின் பலனையெல்லாம் இழந்தேன். பாவத்தைத் தெருத் தெருவாகச் சுமந்து கொண்டிருப்பவனென உணர்ந்தேன்.

வன்னியில் யுத்தம் கனத்த நாட்கள்.

என் உறவுகளைத் தேடி வவுனியாவில் முகாம், முகாமாய் அலைந்தேன். வெயில் குடித்துக் குடித்து தோல் வரண்டு போனது. இறுதியில் என் குடும்பத்தை ஒருவழியாகக் கண்டடைந்த போது, என்பாதிக் குடும்பம் யுத்தத்தில் பலியாகியிருந்தது.

அக்கா விதவையாகியிருந்தாள்.

தம்பி தடுப்பு முகாமிலிருந்தான்.

அப்பாவுக்கு ஒரு கால் போயிருந்தது.

என் குடும்பத்தைப் பார்க்குந் தோறும் என்னைத் தீ சுட்டுக்கொண்டிருந்தது.

அவளிடமிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளை நிராகரித்தேன்.

"உனக்கு என்ன நடந்தது? ஏன் என்னைப் புறக்கணிக் கிறாய்?" எனக் கெஞ்சுதலோடு வரும் அவளது குறுஞ் செய்திகளை நான் இரக்கமின்றி அழித்தேன்.

ஒருவிதமாய்ப் பழிவாங்கும் உணர்வு என்னுள் இறங்கி யிருந்ததோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமளிப்பு நாளில் அவள் என்னை எதிர் பார்ப்பதாய் வந்த அவளது தகவல் காரணமாகவே பட்டமளிப்பு விழாவைப் புறக்கணித் தேன். எல்லாத் திருவிழாக்களும் ஓய்ந்த ஒரு நாளில் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் படிவங்கள் நிரப்பிக் கொடுத்துப் பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டேன்.

பட்டத்திற்கேற்ற வேலை கிடைக்க வேண்டுமென்று காத்திருக்காது, அரச சார்பற்ற நிறுவனமொன்றில் இணைந்து கொண்டேன். மறந்தும் கூட அவளையும், அவளோடிணைந்து விகாரைக்குச் சென்ற அந்த நாளையும் நினைத்துப் பார்க்க விரும்பவில்லை. ஆனால், மனதின் ஒரு மூலையில் அந்த நினைவு ஒரு நெருடலாய் தெறித்துக் கொண்டிருந்தது.

ஒருதரம் சிவாவோடு கதைத்த போது,

அவன் கேட்டான்:

"அமந்தியை மறந்திட்டியோ மச்சான்.?"

"நான் அவளை நினைக்கவே விரும் பேல்லை." என்றேன்.

அவன் என்னை ஒரு பெருமூச்சோடு பார்த்தான்.

"உனக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியேல்லை. உன்ரை நிலையிலை அப்பிடித்தான் தோன்றும். ஆனால் அமந்தி பாவம்."

"அவள் கொஞ்ச நாளிலை மனம் மாறிடு வாள். ஆராவது ஒரு சிங்களவனை அவள் கலியாணம் கட்டிடுவாள்..." என்றேன்.

***

அம்மாவுக்கு வரவர உடம்புக்கு முடியாமல் போனது.

அக்காவும் நிறுவனம் வழங்கிய தையல் மிஷின் கொண்டு உழைக்கத் தொடங்கினாள். தம்பி தடுப்பு முகாம் வாழ்க்கை முடிந்து, வெளியே வந்து க.பொ.த. உயர்தரம் எழுதி யிருந்தான். அம்மாவுக்கு எனக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டு மென்ற ஆசை வந்தது.

மாமாவின் மகள் சுமதி இயக்கத்துக்குப் போய் வந்தவள். அவளும் தடுப்பு முகாமிலிருந்து தான் விடுபட்டாள்.

அவளைக் கட்டிக் கொடுப்பதில் சிக்கல்கள் வருமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவுக்குப் பிரச்சினை இருந்தது.

அம்மாவும், மாமா குடும்பமும் கடைசி வரை ஒன்றாய்த் தானிருந்தார்கள்.

அப்பா காலை இழந்த போதும், அத்தான் அநியாய மாய்ச் செத்த போதும் மாமாதான் கூடமாட ஒத்தாசையாய் இருந்தாராம். இப் போது சுமதி அடிக்கடி முகாமுக்குப் போய்க் கையொப்பம் வைக்க வேண்டி இருக்கிறது.

மாமாவுக்கு அவளைப் பற்றித்தான் ஒரே கவலை.

அவளை எப்படிக் கட்டிக் கொடுப்பது? என்று மாமா அங்கலாய்த்த ஒருநாளில் அம்மா சொல்லி விட்டா, "ஏன் என்ரை மகன் அவளைக் கட்டமாட்டானோ?" என்று.

சொல்லியதோடு நின்று விடாமல் அம்மா என்னைத் திரும்பிப் பார்த்துக் கேட்டா,

"நீ என்ன அவளைக் கட்ட மாட்ட னெண்டோ சொல்லப் போறாய்."

என்னால் பதில் சொல்ல முடியாதிருந்தது. ஆனால் ஒற்றை மரமாய்த் தனித்துவிட்ட மாமாவுக்கும், அவர் மகளுக்கும் இனி எங்களைத் தவிர ஆதரவில்லை எனும்போது அவர்களைக் கைவிடும் எண்ணமும் என்னிடம் இல்லை.

அம்மாவுக்கு ஆதரவாய்த் தலையசைத்தேன்.

அம்மாவுடைய சிகிச்சையொன்றுக்காகக் கொழும்பு வர வேண்டியிருந்தது. களுபோவில ஆஸ்பத்திரியில் அம்மாவுக்குச் சிகிச்சைநடந்தது. சத்திர சிகிச்சை முடிந்துவிட்ட போதிலும் மேலும் சில நாட்கள் அம்மா மருத்துவமனையிலேயே தங்க நேர்ந்தது. சுமதி அம்மாவைப் பார்த்துக் கொண்டாள். நான் வெள்ள வத்தையில் நண்பனொருவனின் அறையில் தங்கி யிருந்தேன்.

அறைக்குள் முடங்கப் பிடிக்காமல் அன்று மாலை நண்பனோடு கடற்கரைக்குச் சென்றி ருந்தேன்.

சிறுநுரை ததும்பும் வெண்ணிற அலைகள் மனதிற்கு நிம்மதியைத் தந்தன.

பனங்கிழங்கு விற்றுக்கொண்டிருந்த ஒரு கிழவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னருகே வந்து பனங்கிழங்கை நீட்டினான். என்னூர்க் கிழங்கை எனக்கே விற்கிறான் எனச் சற்று எரிச்சல் கிளம்பியது.

வேண்டாமென்று சொல்லி அவனை அனுப்ப எத்தனித்த கணத்தில், என் பின்னால் அந்தக் குரல் கேட்டது.

"கொட்ட கிழங்கு தென்ன.." எனக்கு மிகப் பரிச்சயமான குரல். திரும்பினால், அவள் நின்றாள்.

பக்கத்தில் நிழற்குடைகளின் கீழ் யாரேனும் இருக்கின்றார்களோ என என் விழிகள் தேடின.

என்னைக் கண்டதும் அவள் பாதங்கள் பின் வாங்கின. அளவில்லாத சோகமும், அதிர்ச்சியும் அவள் கண்களில் தெரிந்தன.

கைத்தடியோடும், கோர்ட்டோடும் நடந்து வந்த மனிதர். ஆம். அவளது தந்தை அவளிடம் ஏதோ கேட்டார்.

அவள் என்னைப் பார்த்தபடி அவரிடம் சொன்னாள்,

"அங்கை வாங்குவமப்பா."

கிழவன் வந்த வியாபாரத்தைத் தவறவிட மனமின்றி அவளிடம் போனான். அவள் அவனை முற்றாக உதாசீனம் செய்தாள். முணுமுணுத்துக் கொண்டு போன கிழவனைப் பொருட்படுத்தாமல், அவள் தன் தந்தையிடம் கூறினாள்,

"ஆண்களை ஒருகாலத்திலும் நம்பக் கூடாது அப்பா. அது சிங்களவனாயிருந்தாலென்ன? தமிழனாயிருந்தாலென்ன? முஸ்லிம், பேர்கராயிருந்தாலென்ன. ஆண்களை ஒரு காலமும் நம்பவே முடியாதப்பா."

அவள் என்னைத் திரும்பிப் பார்த்தபடி பனங்கிழங்கு விற்ற பெண்ணொருத்தியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

அவளது அந்தக் குரலும், சோகம் பொதிந்த விழிகளும் எனது எல்லா நியாயப்பாடுகளையும் கேள்விக்குறியாக்கிக் கொண்டிருந்தன.

- மல்லிகை : ஜனவரி - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெட்டி

மூச்சின் இழையில் உஷ்ணம்.

பயத்தின் வீச்சும் நாளுக்குநாள் காற்றிலேறும் கந்தகவாடை மாதிரி கிடுகிடு வென்று ஏறிக் கொண்டிருந்தது.

தூக்கமுமில்லாமல், விழிப்பு மில்லாமல் ஏதோ ஒரு மயக்கநிலை. அந்த மயக்க நிலையில் மேகத்திரை மாதிரி வெள்ளுடை அணிந்த ஒரு சோகமான விம்பம். அதனூடே கிளம்புகின்ற ஒரு அவல ஒலி மௌனத்தின் திரையைக் கிழித் தெறிகின்ற ஒரு ஆவேசத்தோடு...

"சுந்தா... சுந்தா..."

யாரோ கூப்பிடுகிறாற் போல... அந்த அவலத் தொனிதான் இவனை உதவிக்குக் கூப்பிடுகிறதோ?

யாருமற்ற அந்தகாரத்தில் தனித்து தவறவிடப்பட்ட அந்த ஒற்றைக்குரல் சோகம் சுமந்து இவனை உசுப்பி உதவிக்குக் கூப்பிடுகிறதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரெண்டு வயதுச் சிறுவன். இவனுக்கு என்ன முடியும்? ஆயுதங்களே அரசாளத் தொடங்கிய பிறகு... ஆண் மகனா யிருந்தாலென்ன...? அவனும் வாய் பொத்தத்தானே முடியும் இங்கு...?

பற்கள் உதடுகளோடு தேய்ந்து சண்டையிட கால்கள் நிலத்தை உதைத்துப் பிரிந்தன.

"டேய் சுந்தா..."

குடிசை வாயிலைத் தட்டி ஒரு குரல் எட்டிப் பார்க்கிறது. இது தேவதைக் குரலல்ல. மழலை மாறாத குரல். மாலினி போல... மாலு... மாலு... மனதில் அசையும் குரல் வெளியே விழுந்ததாய்த் தெரியவில்லை.

தூரத்துக் கிணற்றிலிருந்து பிளாஸ்ரிக் வாளியில் நீரை அள்ளிக்கொண்டு வந்த பாக்கியம் வாயிலோரம் வாளியை வைத்துவிட்டு நெற்றி சுருக்கி மாலுவை ஏறிட்டாள்.

"ஊருக்குப்போய் வந்ததிலையிருந்து உப்பிடித்தானடி கிடக்கிறான். என்ன காத்துக் கறுப்புப் பட்டுதோ... தெரியா..."

மனம் நிறைந்த சுமையோடு பாக்கியம் குடிசைக்குள் நுழைந்தாள். முன்பு இப்படியல்ல. அவர்களுக்கு ஊர் இருந்தது. ஊரில் வளவு நிறைந்த வீடு இருந்தது. சண்டை என்று ஒன்று வந்த பிறகு ஊரில் இருக்க முடியவில்லை. உயிர் பிரதானமாயிருந்தது. உயிரைப் பாதுகாக்க வேண்டுமாயிருந்தால் வருங்கால சந்ததியை வளமாகப் பேணவேண்டுமாய் இருந்தால் விலகி விலகிப் போக வேண்டியிருந்தது. போர்ப் பிரதேசங்களை விட்டு பாதுகாப்பான நிலங்களில் குடிசைகளை அமைத்து நாடோடி களைப்போல ஒரு வாழ்க்கை. வெறும் மணலில் சாக்குத் துணியை விரித்து, கொட்டுகின்ற மழைக்குளிரிலும் கையே தலையணையாய், புழுதியே போர்வையாய்... காலம் நகர்ந்தது.

எத்தனையோ வண்ணங்களில் உடையணிந்த மாலினி இப்போது அழுக்குப்பிடித்த சாம்பல் வண்ணத்துச் சட்டை யோடே நின்றாள். குடிசைக் கதவின் கப்பைப் பிடித்து முகத்தைத் தேய்த்த படி நகர மனமில்லாமல்... சுந்தாவைத் தேடியபடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தப் பொம்மை... டான்ஸ் ஆடுற பொம்மை..." என்பதாய் அவள் மனதினுள் அங்கலாய்த்து எதிரொலிக்கின்ற ஆர்வத்தின் பிரதிபலிப்பு...

அந்தப் பதினைந்து குடில்களுக்கும் சொந்தமான சின்ன முற்றத்தில் எல்லாக் குடிசைகளுக்கும் சொந்தமான இருபதிற்கும் மேற்பட்ட சிறுசுகளின் ஆரவாரம் காதைப் பிய்த்துக் கொண்டிருந்தது. காற்சட்டைகளோடும், பாவாடைகளோடும், அரை உடுப்புகளோடும், பால் பேதமின்றி "பாடி வந்தேன்" சொல்லிப் பறந்து கொண்டிருந்தன காலத்தால் பகைக்கப்பட்ட அந்தப் பறவைக்குஞ்சுகள். மாலினிக்கும் அந்த வயதுதான். அந்தக் கூட்டத்துக்குள் அவளும் கலந்திருக்க வேண்டியதே நியாயம். இல்லையேல் மெலிந்து போன கால்களுக்கு வலுவில்லையென்றால் அதோ குடிசையோரம் குந்தியிருந்து ஆரவாரிக்கின்ற மற்றச் சிறுசுகளைப் போலவேனும் இருக்கலாம். ஆனால் மாலினியின் மனது இவற்றையெல்லாம் தாண்டி வேறு யோசித்தது. அந்தச் சின்ன மனதிற்கு ஊரின் நினைப்பு துயரைக் கிளப்பியது. அவளது ரசனை வேறு. அவளது உணர்வுகள் வேறு. அவளது விளையாட்டுக்களும் வேறு. அவளது ரசனைக்கும் உணர்வுகளுக்கும் கிடைத்த இனிய நண்பன் சுந்தா. தூரத்துச் சொந்தம் தான் என்றாலும் பக்கத்து வீடு இருவரையும் நெருக்கியிருந்தது.

சுந்தா எப்பவும் அம்மாவுக்கு நல்ல பிள்ளை. சுள்ளி பொறுக்கி வரச்சொல்லி அம்மா சொன்னால் முகம் சுழிக்காமல் பொறுக்கி வருவான். ஊரில் அப்பவெல்லாம் தேங்காய் உரித்துக் கொடுப்பான். தென்னம்மட்டை பிளந்து கொடுப் பான். சமயத்தில் பாக்கியத்துக்கு இடியப்பம்கூட பிழிந்து கொடுப்பான். மாலுவிற்கு இனிய சினேகிதன் சுந்தா... கோவில் திருவிழாக்களில் மாலுவுக்குப் பிடித்த விளையாட்டுச் சாமான் களைத் தெரிவு செய்வது அனேகமாய் சுந்தாதான். அவளுடைய சின்னச்சின்ன எண்ணங்களை ரசித்து அதற்கேற்றாற்போல் ஈடுகொடுத்து இடையிடையே அவளோடு செல்லமாய் சீண்டி சிணுங்கவைத்து... சுந்தா இல்லாவிட்டால்... அந்தச் சிறுமியின் மனம் மரத்துத் தான் போயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்டியமாடும் பொம்மை அதையும் அவள் அவனுக்குத்தான் காட்ட வென்று ஓடோடி வந்தாள்.

"பார் சுந்தா எனக்கு மாமா திருவிழாவிலை வாங்கித் தந்தவர் கண்ணைச் சிமிட்டி டான்ஸ் ஆடுது பார்"

சுவிச்சை தட்டியவுடன் கைகால்களை அசைத்து நாட்டியமாடிய அந்தப் பொம்மையை பெருமிதமாய்ப் பார்த்த படி சொன்னாள்.

அதே பொம்மைதான் இடப்பெயர்வின் போது தவறிப் போயிற்று. உடுக்க உடுபுடவையும், சமைக்க பாத்திரங்களுமே கொண்டுவந்தபோது அந்தப் பொம்மையையா எடுத்து வரத்தோன்றும்?

ஆனால் அதற்காக அதை விட்டு வந்ததற்காக மாலு பலமுறை அழுதிருக்கின்றாள். தாயிடம் வாங்கிய திட்டுகளின் பின் சுந்தாவிடம் முறையிட்டுத் தன் துயர் குறைத்திருக்கின்றாள்.

"இனி அங்கை போகேலாதோ... போய் எடுத்து வரேலாதோ..."

என்று ஏக்கத்தோடு அவன் முகம் பார்த்திருக்கிறாள். இவளது தீவிரம் புரிந்து அவன் மௌனம் சுமக்கும் வேளைகளில் கண்கள் சுருக்கி கெஞ்சுவாள்.

"ஒருக்கா அவங்களிட்டைச் சொல்லுவமே, தங்கச்சியை விட்டிட்டு வந்திட்டம் எண்டு. இப்ப நிப்பாட்டிப் போட்டுப் பேந்து அடிக்கச் சொல்லி..."

ஏதோ இவன் சொன்னவுடன் அவர்கள் சண்டையை நிறுத்தி விடுவார்கள் என்கிற மாதிரி கெஞ்சுவாள்.

"போகலாம் போகேக்கை கட்டாயம் எடுக்கலாம்"

என்று அவளது திருப்திக்காக அவன் நம்பிக்கை யூட்டியிருக்கிறான். அப்படி அவன் நம்பிக்கையூட்டியது எந்த விதத்தில் நிஜமாயிற்றோ தெரியவில்லை. அவர்கள் போகக் கூடியவாறு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டது மட்டும் உண்மை. போர் சற்றுத் தணிந்திருந்த வேளைகளிலெல்லாம் சனங்கள் வீடு பார்க்கவென்று புறப்பட்டுப் போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப் போனபோதுதான் இவனும் வீடு பார்க்க ஆசைப்பட்டான். அதன் விளைவாய் ஊரவர்களோடு புறப் பட்டான். அப்போது மாலினி மறுபடியும் ஞாபகப்படுத்தினாள்.

"சாமியறையுக்கை கிடக்கு சுந்தா மறக்காமல் எடுத்து வா..."

அவள் கேட்பதை அவனால் மறுக்கத்தான் முடியுமா? அதற்காகத்தானே புறப்பட்டான்.

மாலுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சுந்தா கொண்டு வந்திருப்பானா...?

"டேய் சுந்தா, இஞ்சேர் எழும்படா மாலு வந்திருக்கு"

கேத்திலை மூட்டிவிட்டு மகனுக்கருகில் குந்தி அவனது தோளைப் பிடித்து உலுப்பினாள் பாக்கியம்.

"இல்லை இல்லை... நான் காணேல்லை..."

பாக்கியம் மகனை பயத்தோடு பார்த்தாள்

"என்னடா என்னத்தை நீ காணேல்லை"

அலறிப் புடைத்தபடி எழுந்த சுந்தரன் தாயைக் கண்டு திருதிருவென்று விழித்தான்.

"இல்லை... ஒண்டுமில்லை..."

பயம் அப்பிய முகத்தோடு குடிசைக்கு வெளியே இருண்டு போகின்ற பொழுதை வெறித்தவன் பார்வையில் கப்போடு கட்டுண்டிருந்த மாலுவின் பிஞ்சு விரல்களும் ஆவலான விழிகளும் பட்டன.

மாலு...மாலு... மனதிற்கு லேசாய் இதம் தடவின மாதிரி இருந்தது. மெல்ல எழுந்து வெளியே வந்தான்.

"எப்ப பாக்கியம் பொடியன் வந்தவன்...? மற்றாக்களும் வந்திட்டினமோ....?"

பக்கத்துக் குடிசைக்குள் கொடியில் உலர்த்திய துணி களைப் பொறுக்கிக் கொண்டு புகமுயன்ற கணத்தில் நின்று விசாரித்தாள் சரசு.

"எல்லோரும்வரீனமாம். வழிலை எங்கையோ இளனி வெட்டிக் குடிச்சுக் கொண்டிருக்கீனை இவன் பாட்டுக்கு வந்திட்டான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்போடு மல்லுக்கட்டியபடியே உள்ளிருந்து சத்தமாய்ச் சொன்னாள் பாக்கியம்.

"போனதுகளுக்கு உடனை வரோணும் எண்ட நினைப்பில்லை. நாங்கள் நெஞ்சுக்கை நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறம். இப்ப உவனும் வந்து சொல்லாட்டி நெஞ்சு திகீர் திகீர் எண்டு வெந்திருக்கும்"

சரசு உள்ளே போய் மறைந்தாள்.

மாலுவின் மெலிந்த விரல்களைப் பற்றியபடி அந்தக் குடிசையை விட்டு விலகி சற்றுத் தள்ளியிருந்த கோவிலின் கேணிப்படிகளில் போய் அமர்ந்தான் சுந்தா. பக்கத்திலே மாலு. அவள் விழிகளில் ஆவல். இவன் என்ன ஒன்றுமே சொல்லாமல் கேணித்தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இவன் பொம்மையைக் கொண்டு வராமலா வந்தான்? இவளது கண்களில் சொட்டுக் கண்ணீர் எட்டிப்பார்த்தது.

"சுந்தா... சுந்தா..."

அவளது குரலின் அழைப்பில் திரும்பிய சுந்தா திடுக்கிட்டான்.

சிறு மழலை முகம் சற்றே முதிர்ந்து ஒரு இளம் பெண்ணாய்த் தோற்றம் காட்டியது. அந்த விழிகளில் வளையம் போடுகிற கண்ணீர்த் துளிகள் வளையம், வளையமாய் விழுந்து வெள்ளி மெட்டிகளாகி...

அவன் தன் கண்களில் விழுந்த அந்தத் தோற்றத்தைக் கலைக்க விரும்பினான். பக்கத்தில் தென்பட்ட சில கற்களை எடுத்து வேகமாய்க் கேணிக்குள் விட்டெறிந்தான். கேணிக் குள்ளேயே அந்த விம்பம் நிற்கிற மாதிரி. அந்த நினைப்பை விரட்டியடித்து விடுகிற மாதிரி... தண்ணீருக்குள் விழுந்த கற்கள் சலங்... சலங்கென்று ஒலி எழுப்ப மெட்டியில் மோதிக் கற்கள் ஒலியெழுப்புகிறாற்போல.

இது அவன் செயலா? ஆபத்துக்கு அஞ்சி அழுகின்ற மெட்டி யின் மீது அவனும் கல் வீசக் கற்றுக் கொண்டு விட்டானா...?

மனம் சுக்கல்களானது. அவன் எறிந்த கற்கள் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தையே சுக்கல்கள் ஆக்கினமாதிரி...

பக்கத்தில் திகைத்துப் போய் இருக்கின்ற மாலினி

"அதாரடா அது..."

உறுமல்களோடான குரல் கோவில் வாயிற்புறத்தில் இருந்து எதிரொலித்தது.

"கேணிக்குள்ளை ஆரடா கல்லுப் போடுறது...?"

மீண்டும் உறுமல்

பயம் சிணுங்கல்களை முகத்தில் பிரசவிக்க சுந்தாவின் தோளைத் தொட்டுத் தயங்கி எழும்பினாள் மாலினி.

"இந்த அகதிச்சனங்களாலை பெருந் தொல்லையாப் போச்சு... இதுக்கை ஒருதரும் வரக்கூடா. அதுதான் உங்களுக் கெண்டு கொட்டில் போட்டுத் தந்துகிடக்கெல்லே. பிறகென்னத் துக்கு இஞ்சை வாறியள். ஓடுங்கோ கெதியா..."

அடிக்காத குறையாய் அதட்டியது அந்தப் பெரிய மனிதனின் குரல்.

எங்கை எங்கையோ வந்து ஆர் ஆற்றையோ சொல்லுக் கேக்கும்படி ஆச்சே...

சுந்தாவுக்குள் திடீரென்று வன்மம் வெளிக்கிளம்பியது. அவனுக்குள் தெரிந்த விம்பங்கள் மறைந்து இப்போது சுத்தமாய் மாலுவின் விம்மல் முகம் கண்ணில் பட்டது.

"நீ அழாதை மாலு நாங்கள் போவம்..."

அந்தப் பளிங்கு முகத்தில் பட்ட கண்ணீர்க் கறைகளை வருடித் துடைத்து விட்டு அதட்டிய மனிதரைக் கோபமாய் முறைத்து விட்டு மாலுவின் கரங்களை ஆதரவாய்ப் பற்றியபடி திரும்பவும் நடந்து போய் குடிசைக்குப் பின் புறமாய்ச் சாய்ந்து உட்கார்ந்தான்.

"நாங்கள் எங்கட வீட்டை போவம் இனிமேல் இஞ்சை இருக்க வேண்டாம்..."

அந்த மிருதுவான கேவல் ஒலியோடு வந்த வார்த்தை களின் அர்த்தம் திடுமென்று அவனைத் தாக்கிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மாலு சொன்னனி..."

திருப்பிக் கேட்டான்.

"இஞ்சை இனி வேண்டாம். நாங்கள் எங்கடை வீட்டை போவம். நாங்கள் அங்க வடிவா விளையாடலாம். எங்கட கோயில் கேணிக்க கல்லெறியலாம். நாங்கள் எங்கட வீட்ட போவம். நீ போட்டு வந்தனிதானே. எல்லாருமாப் போய் அங்க இருப்பம்..."

"வேண்டாம், அங்க போகவே வேண்டாம். என்ர மாலுக்குட்டியெல்லே... அங்க போகேலாது, நாங்க இஞ்சையே இருப்பம் என்ன...?"

ஆவேசத்தோடு தொடங்கியவன் மாலினியின் முகம் பயத்தால் வெளுப்பது கண்டு செல்லமாய் கதை பொழிந்தான்.

"அங்கை இன்னும் சண்டை முடியேல்லை. முடிஞ்சாப் பிறகு போவம் என்ன...?"

"அப்ப என்ர டான்ஸ் ஆடுற பொம்மை... அதைக் கொண்டு வந்தனியோ...?"

"அது... அது வேண்டாம் மாலு. உனக்கு நான் வேறை பொம்மை வாங்கித்தன். அது வேண்டாம் உனக்கு..."

"ஏன் எனக்கு அதுதான் வேணும். அதையும் அவங்கள் கொண்டு போட்டாங்களே... அதுக்கு டான்ஸ் ஆட மட்டும் தானை தெரியும். அதை ஏன் எடுத்தாங்கள்..."

"வேண்டாம் மாலு அதைப்பற்றிக் கதைக்காதை. அதை அவங்கள் என்ன செய்தாங்களோ...? நாங்கள் இனி அந்தப்பக்கம் போகக்கூடா... நான் பிள்ளைக்குப் புதுசு வாங்கித்தாறன்..."

"என்ரை பொம்மை. டான்ஸ் ஆடுற பொம்மை..."

மாலுவின் முகத்தில் இன்னும் கண்ணீர்ச்சாயை நீங்க வில்லை.

முற்றத்தில் ஒரே ஆரவாரம். தேங்காய்களும், மட்டைகளுமாய் சைக்கிள்களில் கட்டிக்கொண்டு ஊர் பார்த்து வந்தவர்களின் நேரடி வர்ணனை தொடங்கிவிட்டது. அத்தனை குடிசைக்குரியவர்களும் முற்றத்தில் குழுமிவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குள் மீண்டும் அந்த ஞாபகம் திரண்டெழுந்தது. பாழடைந்து போய்க்கிடந்த வீடு. சுற்றிவர கறையான் புற்றுகள் எழுந்திருந்தன. சற்றே ஈரலித்திருந்த மண் முதல் நாள் பெய்த மழையை ஞாபகமூட்டியது. கதவுகள் பெயர்க்கப்பட்டிருந்தன. ஓ...வென்று திறக்கப்பட்டிருந்த வீடு, சாமான்கள் வழித்துத் துடைக்கப்பட்டிருந்தன. பிரயோசனமில்லாத பொருட்கள் மட்டும் அங்கங்கே சிதறுண்டிருந்தன.

இவன் அந்தப் பொம்மையைத் தேடினான்.

பொம்மை சாமி அறையில் இருக்கவில்லை.

சாமி படத்தின் முன் குத்துவிளக்குச் சரிந்து எண்ணெய் வழிந்து அழியாத ஒரு நிறப்படிவை ஏற்படுத்தியிருந்தது.

வெளி விறாந்தையின் மூலைக்குள் மஞ்சள் நிறக் கற்றை யொன்று தெரிந்தது. அவன் அதிர்ச்சியோடு கிட்டப்போய்ப் பார்த் தான். கொத்தாய் பிடுங்கப்பட்ட பொம்மையின் தலைமுடி.

இன்னொரு மூலையில் சின்னச் சின்னத் துணித்துண்டுகள்.

ஆசை ஆசையாய் தன் சின்ன விரல்களால் மாலினி தைத்துப்போட்ட பொம்மையின் சட்டை.

நாட்டியமாடும் அழகான பொம்மை...

இவன் விழிகள் பொம்மையைத் தேடின.

பின் முற்றத்தில் சடைத்திருந்த வேம்பின் கீழ் பொம்மை குப்புறக் கிடந்தது.

இவன் ஓடிப்போய் பொம்மையைத் தூக்கி நிமிர்த்திய வன் அதிர்ந்தான். உடலெங்கும் சிராய்ப்புகள். வயிற்றுப்புறத்தே பெருங்குழி. கிறனைட் வைத்திருப்பார் களோ...?

இனி அந்தப் பொம்மைக்கு உயிர் இல்லை.

அது இனி நாட்டியமாடாது.

அந்த அழகிய பொம்மையின் உயிர்ப்பு சிதைக்கப்பட்டு விட்டது.

வயிற்றுப்புறமாய் "பற்றரி" பொருத்தியிருந்த இடத்தை அப்படியே குடைந்து எறிந்து அந்தப் பொம்மையின் உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையை நெரித்திருக்கிறார்கள்.

ஈரமணல் பட்டுச் சொரசொரப்பாகி மழைநீரின் சிலும்பல் களால் வயிற்றை நிரப்பியிருந்த அந்தப் பொம்மையை அப்பால் வைத்துவிட்டு அவன் ஒரு நொடி துக்கத்தோடு நின்றான்.

பக்கத்தில் எங்காவது புதைத்துவிடவேண்டும். மனிதர்கள்தான் இங்கு வசிக்க முடியவில்லை. பொம்மை களாவது இங்கு நிரந்தரமாய் தூங்கட்டுமேன்.

அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் சிரட்டைகளை யும், மரக்கொப்புகளையும் தேடிக்கொண்டு வந்தான். நேற்றுப் பெய்த மழைக்கு ஈரலித்திருந்த மண் சுலபமாய் தோண்ட முடியும் போலிருந்தது.

சிரட்டைகள் மண்ணைத் தள்ளிக்கொண்டிருந்தன. இரண்டு, மூன்று சிரட்டை மண் தோண்டியிருப்பான்.

எதிலோ சிரட்டை உராய்வது போலிருந்தது. சண்டை நேரம் யாராவது நகைகளைப் புதைத்திருப்பார்களோ? இவன் அவதான மாய் நெருடிய இடத்தைச் சுற்றித் தோண்டினான். வெள்ளி மினுக்கமாய் ஏதோ தெரிய ஆர்வமேலீட்டால் மேலும் தோண்டி னான். அந்த வெள்ளி மினுக்கம் இப்போது தெளிவாய் பிரகாசித் தது. ஒரு மெட்டி சுற்றிவர விரல்கள் கால் விரல்கள். மண் நெருடிய கறுப்பு விரல்கள். அழுக ஆரம்பித்திருக்கும் பாதங்கள்.

இவன் பார்வையை அச்சம் பாதி பாதியாய் மூடியது.

"ஐயோ, ஆற்றையோ சவம்..."

அவன் மனதுக்குள் எதிரொலித்த அவல வார்த்தை களூடே மரங்கள் சலசலத்தன.

மெட்டி, இஞ்சை இருந்த மெட்டி போடுற ஆக்கள்..

வந்தனாக்கா, மைதிலியக்கா, மதுரம் அக்கா...

இவன் பட்டியல்களில் நீண்ட உருவங்கள்...

"சுந்தா, சுந்தா காப்பாற்றடா..."

என்று அலறுவதாய் படவே இவன் கண்களில் தீனமாய் ஒரு அழுகை எட்டிப்பார்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகளின் சரசரப்பு இப்போது அண்டி வருமாப் போல...

"ஓடு... இங்கே நிற்காதே, உன்னையும் அவர்கள் ஏதேனும் செய்யமுதல் ஓடு..."

உள்ளெழுந்த எச்சரிக்கைக்குரல் கால்களுக்கு வேகம் கொடுக்க ஓடினான். பின்னால் யாரோ துரத்துவது போலிருந்தது.

"இங்கே பார்த்ததை நீ யாருக்கும் சொல்லக்கூடாது. சொன்னால்..."

கழுத்தில் துப்பாக்கி முனை அழுத்துவது போலிருந்தது.

சைக்கிள்களில் மூட்டை கட்டி ஆயத்தமாய் நின்றவர்கள் வேர்த்து விறுவிறுத்து வந்த இவனைப் பார்வையில் வாங்கிக் கொள்ளாமல்,

"எங்கையடா சுத்தித் திரிஞ்சனி, இனியும் மிலாந்தாமல் வா... வா..."

என்றபடி சைக்கிள்களை உழக்கத் தொடங்கினர். இவனும் சைக்கிள் ஓடத் தொடங்கியவன் இடைவெளியில் சில நிமிடம் நிற்கக் கூட அஞ்சியவனாய் ஒரே ஓட்டத்தில் இங்கு வந்து விழுந்தான். அந்த நினைப்புத்தான் மரணக்கயிறுபோல் அவனை நெருக்கிக்கொண்டிருந்தது.

"இந்தாப்பன் வெறும் தேத்தண்ணி. ஏதோ பேயடிச்ச மாதிரி இருக்கிறாய். குடி... எல்லாம் போன களைப்பு, குடிச்சவுடனை சரியாப்போம்..."

பரிவோடு பாக்கியம் தந்த தேநீரை வெறுமையோடு வாங்கியவன்,

"அம்மா வந்தனாக்கா மதுராக்கா... எல்லாரும் எங்கை யிருக்கினம்..." என்றான்.

"அதுகளும் உங்கினேக்கதான் எங்கையோ இருக்குதுகள், ஏனப்பு உனக்கிப்ப ஆற்றையேன் கதை..." என்றபடி பாக்கியம் மாலுவின் அழுத விழிகளைப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சொன்னனி. அவள் ஏன் அழுகிறாள்..."

அவளுக்கும் தேநீரைக் கொடுத்துவிட்டு பொழுதால் இருண்ட வானத்தைப் பார்த்து பெருமூச்செறிந்தாள்.

"எப்பத்தான் எங்களுக்கு விடியப்போகுதோ...?"

"மாலு ஒண்டும் யோசிக்கக்கூடாது. நான் பிள்ளைக்குப் புதுப் பொம்மை வாங்கித்தருவன் சரிதானே..."

ஆறுதலாய் மாலினியை அனுப்பிவிட்டு குடிசையின் கதவோரம் ஒண்டுகிறான்.

அந்த உருவம் அது யாராயிருக்கும்?

அந்த மெட்டி அது யாருக்குரிய மெட்டி?

இப்படி இன்னும் எத்தனை மெட்டிகள் இன்னும் யாருக்கும் தெரியாமலே அங்கு புதைந்து போயிருக்கின்றன?

இன்னும் எத்தனை பொம்மைகள் யாருக்கும் தெரியாமலே அங்கு நசுங்கிச் சிதைக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் எத்தனை துன்பமயமான ரகசியங்கள் அந்த ஊரின் மண்ணுக்கடியில் புதையுண்டிருக்கின்றன.

போர் தந்த வடுக்கள் இவ்வளவுதானா? இன்னுமிருக் கின்றனவா?

தூரத்திலே மேகங்கள் திரண்டன.

மேகத் துணுக்குகள் ஒன்றுசேர்ந்து வெள்ளைத்திரைச் சேலையாகி ஒரு பெண்ணுருவாய் மாறி சோக விம்பமாகி இவன் மனதை அலைக்கழித்தன.

மாலினியின் குழந்தை முகம் ஒரு பெண்ணுருக் கொண்டாற்போல... அந்த உரு வான்வெளியில் நின்று அழ ஆரம்பிக்கிறது.

அது வந்தனாக்காவோ, மதுரமக்காவோ... இல்லாமல் போகும் பட்சத்தில் யாரோ ஒரு பெண்மகள். இங்கு கயமைக்குப் பலியாகி, வானத்தில் தோன்றி அவனை உலுப்பிவிட்டபடி...

அந்த மெட்டி அலறிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டி கதறிற்று.

மெட்டி கடைசியில் குலுங்கிக் குலுங்கி அழுதது.

என்னைக் காப்பாற்றத்தான் முடியவில்லை உன்னால், சரி என்னை உன்னால் அடையாளப்படுத்தவாவது முடியாதா? என்னைக் கசக்கி அழித்தவர்களை பழிவாங்கவாவது முடியாதா... உன்னால்...?

வான் விளிம்பில் நிலவாய் வந்த மெட்டி கெஞ்சிற்று. சொல்லிவிட வேண்டும். அந்த ஊரில், அந்த இடத்தில் அனாதையாயக் கிடக்கின்ற அந்த மெட்டியின் துயரத்தை உலகக் கண்ணின் முன்னால் நிறுத்தத்தான் வேண்டும். அது வந்தனாக்கா அல்லது மதுராக்காவாய் இல்லாவிட்டாலும் கூட அதை வெளிப்படுத்தத்தான் வேண்டும்.

இவன் மனது தீவிரமாய் ஆவேசத்தோடு உன்னிய வேளையில் காதில் சபித்தது அந்தக் குரல்.

"சொல்லாதே, நீ சொல்லத் துணிந்தாயானால் உனது நாவு துண்டிக்கப்படும். உனது கரம் முறிக்கப்படும். உனது உயிர் பறிக்கப்படும். துணிவிருந்தால்... எங்கே சொல் பார்ப்போம்..."

அவன் கண் முன்னால் துப்பாக்கி முனைகளை நீட்டியபடி அரக்கர்கூட்டம் திரண்டுவருவது தெரிகிறது.

"சொல்லேல்ல... நான் சொல்லேல்ல..."

உரக்கக் கத்திய அவன் குரலின் நடுக்கத்தில் உள்ளிருந்து பாக்கியம் ஓடி வருகிறாள்.

"என்னடா தம்பி, உனக்கு என்ன நடந்தது..."

அழுகை தெறிக்கும் குரலில் வினவுகிறாள்.

"மெட்டி... அம்மா... மெட்டி..."

அவன் தாயின் மடியில் முகம் புதைத்து உரக்கக் கதற ஆரம்பிக்கின்றான்.

- தமிழீழப் பெண்களின் சிறுகதைகள் - 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாப்பாதையிலும் முட்கள்

விடியவிடிய மொட்டை மாடியில் நின்றிருந் தாள். நிலவு, தெறித்துத்தெறித்து இலைகளூடு பாலாய் வழிந்து கொண்டி ருந்தது. கடலின் இரைச்சல் மோதி, மோதி மனதை ஒரு பாறையென எண்ணி அடித்து விலகியது. ஒரு பேயெனத் தோற்றம் காட்டியவாறு தன்னை எண்ணிக் கொண்டாள். ஆட்களற்ற நள்ளிர வின் பொழுதில் கீழே வீதி வெறிச்சோடி யிருந்தது. ஜன்னலூடு தெரிந்த மரங்களின் கிளைகள் நிலவில் அசைந்து திகில் ஊட்டின. திகில் என்பதன் அர்த்த மெல்லாம் கடந்து, ஏதோ ஒரு சடம் போல் நின்றிருத்தலில் என்ன ஆறுதல் இருந்ததோ...? இதற்கு மிஞ்சி அவள் அனுபவித்து விடப் போவதில்லை எந்தவதையை யும். நேரம்ஆக, ஆக தனிமை ஒரு சுருக்குக் கயிறு போல் அவளை இறுக்கத் தொடங்கிற்று. இது ஒன்றும் புதினமாய் இருக்கப் போவதில்லை அவளுக்கு. எப்போதும் அவளைச் சுற்றித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை தன் கோட்டினை வரைந்தபடிதான் இருந்தது. ஆனால், இந்தத்தனிமை கொடுமையாய் இருந்தது. மனதின் வதையைப் பகிர முடியாதபடி கொடுமையாய் இருந்தது. சிலவேளை தனிமையைப் பகிர நினைத்ததன் பலன் தான் இந்தக் குரூரவதையின் ஆரம்பப் புள்ளியாய் இருக்குமோ...?

இன்னும் கொஞ்ச நேரம் அங்கே நின்றால் கீழே குதித்து விடுவாள் போலிருந்தது. இப்போ தெல்லாம் அடிக்கடி அப்படி நேர்கிறது. மனதின் கட்டுப்பாட்டை மீறி ஏதாவது நடந்து விடுமோ என்கிற பயம் வந்து விடுகிறது. கீழே பச்சைப்புல்லின் கீழ் மறைந்திருக்கின்ற கல் துணிக்கைகளில் அடியுண்டு குருதி பீறிட்டால் கூட அவளுக்கு வலிக்காது எனும் எண்ணம் ஏற்பட்டிருந்தது. இன்னும் முற்றாகக் காணாமல் போயிருந்த அறிவின் மீதம் மூளையை அருட்டிக் கொண்டிருந்ததால் எங்கே தன்னை மீறி எதுவும் நடந்து விடுமோ எனும் பயத்தின் முன்னெச்சரிக்கையோடு அவள் உள்ளே வந்தாள்.

எதுவும், யாருக்கும் நினைத்தபடி நடந்து விடுவதில்லைத் தான். நினைத்தபடி நடந்து விடுவதற்கு அவள் எதுவும் பெரிதாய் எதிர்பார்த்து விடவும் இல்லை. அவள் நினைத்ததெல்லாம் அவளுடைய அம்மாவோடு கடைசிவரை இருக்க வேண்டு மென்பது தான். அவளுடைய கனவுகள் எல்லாம் நடக்காமல் போனதைப்பற்றி அவளுக்குக் கவலை இல்லை. ஏனென்றால் அவை கனவுகள்.

கனவுகள் எல்லாம் நனவாவதில்லை என்பதை அவள் கனவு காணத்தொடங்கிய போதே அறிந்துதானிருந்தாள். ஆனால், அவள் இப்போது கேட்பது சாதாரண வாழ்க்கை. அந்தச் சாதாரண வாழ்க்கையை அவள் சாதாரணமாகவே வாழ்ந்து முடித்து விடக்கூடும். ஆனால், இந்த உலகம் அதற்குக் கூட அவளை விடவில்லை.

அவளுடைய கனவு பல்கலைக்கழகத்தை நோக்கி அவாவியிருந்தது. பாடசாலையில் படிக்கிற காலத்தில் எல்லார தும் கனவுகளில் ஒன்றாக இருந்திருக்கலாம் பல்கலைக்கழகம். இரண்டொரு புள்ளிகள் குறுக்கே நின்று தடைப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கனவு. தளர்ந்து போகாமல் போட்டிப் பரீட்சை எழுதி ஆரம்பக்கல்வி ஆசிரியை ஆனாள். அம்மாவைப் பார்த்துக் கொண்டு பாடசாலை போய் வருவதற்கு இடைஞ்சல் கொடுத்தது இருபது மைல் தள்ளி அமைந்திருந்த பாடசாலை. அந்தக் கனவிலும் சின்னக் குறுக்கம். அலைந்துலைந்து பள்ளிக்குப் போய்வந்து அம்மாவைப்பார்த்தாள்அவள். அம்மாவுக்கொன்றும் பெரிய வருத்தமில்லை. பிரெஷர் அடிக்கடி ஆளை விழுத்தும். அது அவளது தம்பியை நினைத்து ஏற்படுகின்ற வருத்தம். அது இந்தப்பிறவியில் தீரப் போவ தில்லை அம்மாவுக்கு.

அக்கா பக்கத்தில் தான் இருக்கிறாள். அக்காவுக்குத் தன் மூன்று வாண்டுகளுடனும் அல்லாடவே பொழுது சரியாகப் போகிறது. அத்தோடு அக்காவுக்குப் பொறுமையில்லை. அம்மா தம்பியைக் குறித்து அரற்றும் அரற்றல்களுக்கு அவளுக்குத் தேறுதல் சொல்லத் தெரியாது. உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அக்காவுக்கு எப்போதும் இருந்த தில்லை. அதனால் தானோ என்னவோ அத்தானோடு, அக்காவுக்கு ஏற்படும் சச்சரவுகளில் பெரும்பாலானவை அக்காவாலேயே ஏற்படுகின்றன என அவளுக்குத் தோன்றும்.

அண்ணன்கள் இருவரும் எப்போதோ பிரான்சுக்கும், சுவிசுக்கும் புலம்பெயர்ந்து போய் விட்டார்கள். அவர்கள் போனதனால் தான் அக்காவை ஊருக்குள்ளேயே கட்டிக் கொடுக்க முடிந்தது. அதற்குப் பின் அவர்களும் இங்கிருந்து பெண்எடுத்து திருமணம் ஆகி குழந்தைகள் பெற்றபின் அம்மாவையும் தங்கள் நாட்டிற்குக் கூப்பிட்டார்கள். அம்மா மறுத்து விட்டாள். அவளுக்கு அங்கே எந்த இடமும் தேவையில்லை. இங்கேயிருந்த தம்பியை அவர்கள் எப்போதோ அங்கு எடுத்திருந்தால் எந்தச்சிக்கலும் வந்திருக்காது. அவன் போகவில்லை. கொழும்புக்குப் போகவென்று போனவன் அப்பால் கொழும்புக்குப் போகாமலேயே வன்னியிலேயே நின்று கொண்டான். அதற்குப் பிறகு அவனோடு ஒரு தடவை கூடப் பேசும் சந்தர்ப்பம் அவர் களுக்குக் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் அவனுக்கு என்ன நடந்தது என்பதே ஒருவருக்கும் தெரியவில்லை. அம்மா இப்போது ஒருவரிடமும் பேசுவது மில்லை. எத்தனை பிள்ளைகள் இருந்தாலும், அம்மாவை வருத்த அவன் ஒருவனின் நினைப்புப் போதுமானதாயிருந்தது.

இவளுக்குக் கிரகத்தில் ஏதோ கோளாறு இருப்பதாய்ச் சொன்னார்கள். ஒவ்வொரு தடவை கல்யாணம் பேசிவருகின்ற போதும், ஏதேதோ சாட்டுகளில் கைநழுவிப்போனது. அண்ணன்கள் வெளி நாட்டில் பார்க்கவா... என்றபோது, இவள் மறுத்து விட்டாள். அம்மா பாவம் தனித்து விடுவாள். அக்காவை நம்பி அம்மாவை விட்டுப்போக முடியாது. இருக்கிற ஆயுளில் பாதிக்குமேல் அக்காவின் சொற்கேட்டே அம்மாவுக்கு இல்லை யாகி விடும்.

அக்கா கொண்டு வரும் குறிப்புக்களை இவள் அக்கறையின்றிப்பார்ப்பாள். எந்த ஒரு முடிவுமின்றி எதற்காக அதைப்பார்க்க வேண்டும் என்பது போலிருக்கும் அவளது பார்வை. ஒரு பெண் தனக்குப்பார்க்கும் ஒவ்வொரு வரனிலும் அக்கறை கொள்ள ஆரம்பித்தாள் என்றால் எத்தனை பேரோடு தான் அவள் வாழ்ந்து தீர்ப்பது...? அதனால் எந்த ஒரு அக்கறையையும் காட்டுவது குறித்து அவளுக்கு ஆர்வம் இருந்ததில்லை.

"என்னடி, உனக்குத்தானை பாக்கிறம், நீ என்ன ஆருக்கோ வந்த விருந்து போலையிருக்கிறாய்..." அக்கா பொரியும்போது இவளுக்குச் சினமா யிருக்கும்.

"சரிவந்தாச்சொல்லக்கா... அதுக்குப் பிறகு கேக்கிறன் ஆர், எவர், என்ன செய்யிறார்... எண்டெல்லாம்..."

அக்கா அதற்கு மேல் பேசமாட்டாள். அவளுக்குத் தெரியும். இவளது தீய்ந்து போன கனவு களில் அதுவும் ஒன்று.

மூன்று வருடங்களுக்கு முன் நடந்தது அது. அவனைப் பேசி முற்றாக்கி இருந்தார்கள். வேறொரு பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தான். ஏதோ அலுவலாய் வருவது போல இவளது பாடசாலைக்கு வந்து இவளைப் பார்த்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருந்தான். இவளும் அவனைப் பற்றி அறிந்திருந்தாள். குறைப்பட எதுவு மில்லை. சம்மதித்து விட்டாள். நாள் குறிக்க வேண்டியது தான் மிச்சமாக விருந்தது. இவளது நண்பிகளும் ஓரிருவர் விடயமறிந்து கிண்டலடிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

திடீரென்று தான் அத்தான் அந்த செய்தியைச் சொன்னார். வீடு சின்னதாய் இருக்கிறதென்றும் அதனால் இன்னும் பத்து லட்சம் சீதனம் அதிகமாய்த்தர வேண்டு மென்றும் கேட்டார்களாம்.

இவளுக்குச்சுரீரென்றது.

"அண்ணாக்கள் வெளிலை எண்டு அறிஞ் சிட்டுக் கேக்கினம் போலை..." அக்கா பொருமினாள்.

"என்னெண்டாலும்... பாத்துச் செய்யத் தானை வேணும்..." அம்மா கட்டிலில் எழுந்திருந்தபடி கொஞ்சம் முனகினாள்.

"இல்லையம்மா... எனக்கிதுவேண்டாம்..." அவளுக்குத் துண்டறப் பிடிக்காமல் போயிற்று.

ஏன்...? எதற்கு...? யாரும், எதுவும் கேட்க வில்லை.

அண்ணன்கள் விடயமறிந்தபோது தங்களிடம் ஏன் சொல்லவில்லை என்றார்கள். அவர்களும் குடும்பம், குழந்தை என்றான பின் அவர்களிடம் இனி எதையும் எதிர்பார்க்கக் கூடா தென்பது அவளுடைய இப்போதைய கொள்கையாய் இருந்தது. அக்காவின் கல்யாணத்துக்கென்று அவர்கள் எவ்வளவு கொடுத்தார்கள். இந்த வீடு கூட அவர்களின் உழைப்புத்தானே...? இதற்குப் பிறகும் அவர்களிடம் எதிர்பார்ப்பதென்றால் அதற்கு அவளது மனச்சாட்சி இடம் கொடாது.

கையில் வேலை இருக்கிறது. வருகிற வனும் வேலையோடு தானே வரப்போகிறான். இருவரின் உழைப்பு சாதாரணமான ஒரு குடும்பத்தை நடத்தப் போதாதா...? அவள் ஒன்றும் ஆடம்பரமான செலவு செய்பவள் இல்லையே...? கொஞ்சம் பெரிதாய் வீடு தேவைப்பட்டால் கடனுக்கு விண்ணப்பித்து, கடன் பெற்று வீடுகட்டலாம் தானே.? வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடத்துப் பில்லாமல், வருபவளிடம் வீட்டை எதிர்பார்ப்பவன் எப்படி நாளைக்குக்குடும்பத்தைக்கட்டி இழுக்கப் போகிறான்...?

இவளுக்கு அதற்குப் பிறகு எந்த ஒரு திருமணப் பேச்சையும் நின்று கேட்க இஷ்டமில்லை. எல்லாம் சரி ஆகி வந்து கல்யாணத்துக்கு நாள் குறிக்க ரெடி என்றானால் தன்னிடம் விபரம் தெரிவிக்குமாறு அக்காவிடம் சொல்லியிருக்கிறாள். யாரோவாய் இருப்பவர்களை எல்லாம் தனக்குப் பக்கத்தில் நிறுத்திப்பார்க்க இப்போது அவள் தயாரில்லை.

அக்கா அடிக்கடி தூதனுப்பி விடுவது விநோத னிடம். விநோதன் இவளிடம் சின்ன வயதிலிருந்து பாடம் கேட்டுப் படிக்க வந்து கொண்டிருந்தவன். இவளை விட நாலு வயது குறைவு. போன வருஷத்தில் கூடப்படித்த "ஷிரோமி"யைத் தான் காதலிப்பதாக தயங்கித்தயங்கி இவளிடம் போட்டுடைத்தவன்.

ஷிரோமி நாகரிகச் சின்னங்களால் தன்னை அலங்கரித் துக் கொள்பவள். ஆடைவகையில் வருகின்ற புதுவகை எல்லாம் அவள் போட்ட பிறகு தான் அவள் ஊரில் புழக்கத்துக்கு வரும். கொஞ்சம் தூரத்தில் வரும் போதே கமகமக்கும் "செண்டும்", வித, விதமான கிரீம் வகைகளும் அவளைக் காட்டிக் கொடுக்கும். எந்தக் கிரீமை அவள் பாவிக்கிறாள் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. ஒவ்வொரு தடவையும் தொலைக் காட்சியில் என்னென்ன காட்டப்படுகிறதோ அதெல்லா வற்றையும் அவள் பரீட்சித்து விடுவாள்.

அவளுக்கும், விநோதனுக்கும் எப்படி ஒத்து வரப் போகிறது என்பதில் இவளுக்குக் குழப்பம் தானிருந்தது. ஆனால், காதல் இதொன்றையும் பார்த்து வருவதில்லை என்பதும், காதலிக்கும் தருணங்களில் எவர் பேச்சையும் புறந்தள்ளும் நிலையிலேயே காதலர்கள் இருப்பார்கள் என்பதையும் அவள் அறிந்தேயிருந்தாள்.

"ஷிரோமிக்குத் தெரியுமா... நீ லவ் பண்ணுறது...?" என்றாள் இவள்.

"அவளுக்குத் தெரியும் நான் அவளைச் சுத்துறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானாய்இன்னும்சொல்லேல்லை..."

"என்னமோ பாத்து நடந்து கொள்... உன்னை நம்பித் தான் உன்ரை தாய், தகப்பன் இருக்கினம்..." என்பதோடு அவள் நிறுத்திக் கொண்டாள்.

உயர்தரம் முடித்தவுடன் எழுதுனர் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றி விரைவிலேயே அரச உத்தியோகம் பெற்றுக் கொண்டான். அவன் அடிக்கடி அம்மாவுக்கு மருந்து வாங்கித் தருவதற்கும், இவளுக்கு ஏதும் சிரம மான காரியங்கள் செய்து கொடுப்பதற்குமென வந்து போனான். அப்படியான சில வேளை களில் அக்கா அவனிடம் சில குறிப்புகளைக் கொடுத் தனுப்புவாள்.

ஒருநாள் அவளுடைய அக்கா கொடுத்து விட்டிருந்த குறிப்பினையும் கொண்டு வந்தான். இவள் அவன் புறம் திரும்பாமலேயே கொண்டு போய் அக்காவிடம் கொடுக்கச் சொன்னாள். வினோதன் கொஞ்ச நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுச் சொன்னான்.

"எனக்கு வீட்டிலை கலியாணம் பேசீனை..."

"ஷிரோமி என்னவாம்...? நான் அவளுக்குத் தூது போகணுமோ...?" என்றாள்.

"ஷிரோமியை நான் எப்பவோ மறந்திட்டன்..." என்றான்.

"அப்ப இப்ப வேறை யார்...?" என்றாள் கேலியாக.

"இப்ப மட்டுமில்லை, எப்பவும் நீங்கள் தான்..." என்றான்.

சட்டென்று அனல் துண்டுகளைக் கொட்டினாற் போல அதிர்ந்து போனாள் அவள். அப்போது தான் கவனித்தாள். அக்காவென்று சொல்வதை அவன் எப்பவோ நிற்பாட்டியிருந் தான். அது எப்போதென்பது தான் அவளுக்குப் புரியவில்லை.

"விசர்க்கதை கதையாமல் அம்மா, அப்பா சொல்லுறபடி கேள்... போ..." அவள் உள்ளே போய் விட்டாள்.

இவளுக்கு, ஷிரோமி அவனை எதிர் பார்ப்போடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப் பார்த்தபடி போவது கண்ணில் தெரிந்தது. ஷிரோமி இவள் மேல் எவ்வளவு மரியாதை வைத்திருந்தாள். இவனது நினைப்பைப் பற்றி அறிந்தால், இவளைப் பற்றி அவள் என்ன நினைப்பாள். இவளை நம்பி இவளது வீட்டுக்கு அவனை அனுப்புகிற அவனது பெற்றோர்கூட அவளைப் பற்றிக் கேவலமாக நினைத்து விட மாட்டார்களா...?அவர்களென்ன நினைப்பது... அவளுக்கென்றொரு மனம் இல்லையா...? தம்பியென நினைத்துப்பழகிய அவனை ஒருகணமேனும் வேறு நினைக்க அவள் மனம் ஒருப்படுமா...? தெரியாத ஒருவன் என்றாலும் முற்றாக்கு முன் அவனைப்பற்றி அறிய விழையாத அவள் எப்படி ஒரு கணத்தில் அவனது உறவுமுறையை மாற்றச் சம்மதிப்பாள். ஒரு பெண் எந்தக்காலத்தில் என்றாலும் தனியே வாழ விடமாட்டார்களா இவர்கள். தனியே வாழ்தல் எனும் வலியைவிட இப்படியான தொந்தரவுகளின் வலிதானே அதிகமாய் இருக்கிறது. தனியே இருக்கிறாள் என்பதற்காக அவள் கேட்பவனை எல்லாம் வரித்துக்கொள்ள முடியுமா...? அவளுக்கென்று ஒரு மனம் இல்லையா...?

சீ...யென வெறுத்துப் போயிற்று எல்லாம்...

இப்போதெல்லாம் அவன் வருவதில்லை வீட்டுக்கு. இவள் வர வேண்டாம் எனச் சொல்லி யிருந்தாள். அவனது அம்மா இடைக்கிடையே வரும் போது புறுபுறுப்பாள், அவன் இப்போது வீட்டுக்கே வருவ தில்லையாம்... எங்கெங்கோ சுற்றி விட்டு அகாலத்தில் தான் வருகின்றானாம். பள்ளிக்கூடத்தில் சக ஆசிரியை சொன்னாள். ஏதோ ஒரு பாழடைந்த கொட்டிலில் கோல்ட்லீவை இழுத்தபடி முகட்டைப் பார்த்த படி படுத்திருக்கக் கண்டாளாம். இப்போ தெல்லாம் ஷிரோமி தன் அலங்காரம் குறைத்து கொஞ்சம் ஏக்கத்தோடு வலம் வருவதுபோல் தோன்றியது இவளுக்கு. தாளாமலே போக அவள் ஒரு நாள் அவனிடம் போனாள்.

"இதென்னகூத்து...?" அவன் எதுவும் பேசவில்லை.

"நீ என்னிலை வச்சிருக்கிறதுக்குப் பேர் இரக்கம் வினோதன். அது காதல் இல்லை... ஷிரோமி பாவம். நீ அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாத்தாதை...”

“நான் ஷிரோமியிலை வச்சது தான் வயதுக் கோளாறு. இது தான் உண்மையான காதல்...” அவன் புதிதாய்க் கண்டு பிடித்தது போல் தத்துவம் கதைத்தான்.

“போடா, நீயும் உன்ரை காதலும்...” அவள் அவனைத் திட்டிவிட்டு வீட்டுக்கு வந்தாள்.

பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள். அவன் புறம் கொஞ்சமேனும் மனம் இரங்கக்கூடாதென்பதில் உறுதியாய் இருந்தாள். இரக்கம்வேறு... காதல்வேறு... இரண்டுக்கும் இடை யில் இருக்கின்ற கோட்டை அவன் இன்னும் பிரித்தறியவில்லை. அவளை ஒருவன் இரக்கப் பட்டுக் கல்யாணம் கட்டுவதை அவள் வெறுத்தாள். அவ்வளவு காலமும் மனதில் இருந்த அமைதி கழன்று காணாமல் போனது. அவளது மனதில் எந்த விருப்பமும் இல்லாமல் இருந்தாலும் மனம் குழம்பிச் சலனித்தது.

திடீரென ஒரு நாள் அவன் வந்த போது அவனது மனம் மாறியிருக்கக்கூடுமென்றே அவள் நினைத்தாள். எல்லாம் மறந்து அவனை உள்ளேவா வென்று அழைத்தாள். உள்ளே வந்தவன் அம்மா உறங்கியிருக்கக் கண்டு அவளது கையைப் பிடித்து இழுத்தான். இவளுக்குச் சட்டென்று மனம் கொதித்துப் போயிற்று. எப்படியாவது திருத்தி விடலாம் என்று பார்த்தால் அவன் வர வர மோசமாகிக் கொண்டு போகிறான். எப்படியாவது போகட்டும் என்று விட்டு விடவும் முடியவில்லை. ஒரு பிள்ளையைப்போல அந்த வீட்டில் உலவி அவர்களுக்கு அன்பு காட்டியிருக்கிறான்.

“விடடா... கையை...” கையை உதறி அவனை வெளியே விட்டுக் கதவைச் சாத்தியபடி சொன்னாள்.

“இனிமேல் இந்தப் பக்கம் வந்திடாதை...”

அவன் பிடிவாதத்தோடு இவளையே பார்த்துக் கொண்டிருக்க கதவை அறைந்து சாத்தி விட்டு உள்ளே வந்தாள்.

அதற்குப்பிறகு அவளுக்கு வீடு பிடிக்க வில்லை. ஊர் பிடிக்கவில்லை. யாரையும் பிடிக்க வில்லை. எங்கேயாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கண்ணில் படாத தூரதேசத்திற்குப் போய்விட வேண்டும் போலிருந்தது.

அக்காவிடம் சொன்னாள், அண்ணாக்களிடம் சொல்லி வெளிநாட்டில் ஏதாவது வரன்கள் பார்க்கச் சொல்லி.

"என்னடி சொல்லுறாய்...?"

"இவ்வளவு காலமும் இஞ்சை பாத்தது காணும்."

அவள்தானோ இப்படிச் சொல்கிறாள் எனும் ஆச்சரியத்தோடு அக்கா, கண்வெட்டாமல் அவளைப் பார்த்தாள். அதில் கொஞ்சம் இரக்கம் இருந்ததோ...?

அண்ணாமார் இவளுக்காக அமளி துமளியாகக் கல்யாணம் பேசத் தொடங்கினர்.

அவன் காதில் இந்நேரத்திற்கு விடயம் கசிந்திருக்கும். கசிந்திருக்க வேண்டுமென்றே அவளும் விரும்பினாள். ஏதோ ஒருவிதத்தில் அது அவளுக்குத் திருப்தியாகவிருந்தது. அப்படி அவன் நினைக்கும் விதமாக அவள் தான் இடம் கொடுத்து விட்டாளா...? என சிறியதொரு குற்றஉணர்வு குறுகுறுத்தது. அதொன்றும் பெரிதாயில்லை. அவளது வாழ்வே தலை கீழாக மாறப்போகிறது. அப்படியிருக்க இதென்ன பெரிய விடயம்.

அவள் ஊரிலிருந்து புறப்பட்டபோது வினோதன் கடுப்போடு அவளைப் பார்த்தான். அவள் அதனைப் பொருட்படுத்தவில்லை. இந்தக் கடுப்பு கொஞ்ச நாளில் ஆறிப்போகும். அவனது குடும்பம் விரும்பும் விதமாக அவன் எதிர்காலத்தில் வாழக்கூடும்.

இவள் மனதில் இரைச்சல் கூடுகட்டத் தொடங்கியது. யார் என்றே முகம் தெரியாத ஒருவனைத் திருமணம் செய்ய எந்தக் கணத்தில் சம்மதித்தோம் என்பதே புரியாத புதிராகவிருந்தது. அம்மாவுக்காக ஊரைவிட்டுப் போகக்கூடாதென்றிருந்த அவள் அம்மாவை விட்டு ஒரேயடியாகத் தூரம் போகப் போகிறாள்.

அம்மாவை இனி அக்கறையோடு யார் பார்ப்பார்கள்? படைப்பவன் படி அளக்காமலா போவான்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது அம்மாவும், அக்காவும் அவளைப் பார்ப்பதற்கு வருகின்றார்கள். அதற்காகத் தான் அவளைக் கொழும்பிற்கு வரச்சொல்லியிருந்தார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கலாம். வரவில்லை.

இவளுக்கும் அதுவே நல்லதாய்ப்பட்டது.

இனி விநோதனின் கண்பட இவளது நல்லது, கெட்டது எதுவுமே நடக்கவேண்டாம்.

நட்சத்திரங்கள் ஒன்றொன்றாய் உதிரத் தொடங்கிய விடிகாலைப் பொழுதில் அவள் திரும்பித் தூங்குவதற்குப் போனாள்.

- ஜீவநதி : கார்த்திகை 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாவது குரல்

வீட்டிலிருந்து வெளிக்கிட்டபோது மழை வருவதற்கான அசுமாத்தம் கொஞ்சமும் இல்லை. ஒழுங்கைக்குள் இறங்கி அவள் நடக்கத் தொடங்கும் போதே மேகமும் கொஞ்சம், கொஞ்சமாய்க் கறுக்கத் தொடங்கி விட்டது. கறுப்பு கொஞ்ச நேரத்தில் ஊரையும் மூடுகிற அளவுக்கு வளர்ந்தது. எப்படி மேகம் கறுத்தாலும், கோவிலுக்குப் போகிறவரைக்கும் துளி விழாமலிருக்க வேண்டுமே, என மனதுக்குள் பிரார்த்தித்தபடிதான் எட்டி நடந்தாள் பாக்கியலட்சுமி. மழை அவளுக்குக் காத்திராமல் "சில்"லென்று அவள் மேல் விழுந்து தெறித்தது.

முதல் மழைத்துளிகள் கனமாக விருந்தன.

பெரிய தேக்கிலையைக் கூம்பாக்கி அதற்குள் செவ்வரத்தை, நித்யகல்யாணிப் பூக்களை இட்டிருந்தாள். அந்தக் கூம்பை இடக்கைக்கு மாற்றிக் கொண்டு சேலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பை சுற்றி எடுத்து அதன் முனையில் கற்பூரத்தையும், தீப்பெட்டியையும் வைத்து முடிந்தாள். பின்னர் சேலைத் தலைப்பால் தலையைப் போர்த்தி நுனியில் முடிந்த பகுதியை வலக்கையால் இறுகப் பொத்திக் கொண்டாள்.

தலை சின்ன நடுக்கத்தோடிருந்தது.

மழைத்துளி ஈரத்தில் குளிர்ந்து, காற்றும் வீச, தலையின் ஆட்டம் இன்னும் கொஞ்சம் அதிகரித்தது.

தேக்கிலைக் கூம்பினுள் மழைத்துளிகள் விழுந்து பூக்கள் சிலிர்த்தன.

"பூவுக்குத் தீர்த்தம் மாதிரி மழை விழுந்தா நல்லது தான்."

"கற்பூரமும் தீப்பெட்டியும் நனையக்கூடா." வலது கரம் மறுபடியும் சேலைத் தலைப்பை இறுக்கிக் கொண்டது.

உள்ளே ஈரலித்திருக்கவில்லை என்பதை உள்ளங்கை உணர்ந்து கொண்டது.

"என்ன பாக்கியக்கா. இந்த மழையுக்கை." சைக்கிளில் வேக மாய்ப் போய்க் கொண்டிருந்த உருத்திரன், போகிற போக்கில் கேட்டபடி, அவளது பதிலுக்குக் காத்திராமல் விரைந்தான்.

"மழையென்ன, வெயிலென்ன. உதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாக் காரியம் ஏலுமே." அவள் தனக்குள் முணு முணுத்தபடி நடந்தாள். வேலிக்கரையில் ஒதுங்கி நடந்தும், முகத்திலும், கைகளிலும் நீர் பரவிவிட எட்டி நடந்து, தில்லை யம்பலத்தாரின் சங்கடப் படலையில் ஒதுங்கி நின்று கொண்டாள். உடம்பு வெடவெடத்தது.

குளிர் உடம்புக்குள் நுழைந்து விட வழி தேடியது.

கையிலிருந்து வழிந்த நீர் உள்ளங்கைக்குள் வழிந்து, சேலைத் தலைப்பினூடு கசிந்து, கற்பூரத்தை நனைத்து விடும் போல் தோன்றக் கையை இறுக்கியபடியே உதறிக் கொண்டாள்.

குடிசை ஒழுகியிருக்கும். பிள்ளைகள் மூவரும், பள்ளிக் கூடம் வெளிக்கிடும் அவசரத்தில் அந்தரித்துப் போயிருப்பார் கள் என்பது மனதில் ஒரு சலனத்தை ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைக்குப் பக்கத்து வளவு மங்கை தோட்டத்தில் பிடுங்கியதாய்க் கொடுத்த மரவள்ளிக்கிழங்கினைத் துண்டு களாக்கி அவித்து வைத்து விட்டு வந்திருந்தாள்.

நின்றிருந்தால், நிரூபன் தேங்காய்ச் சம்பல் வேண்டு மென்று, அடம் பிடித்திருப்பான். இப்போதுகூட அக்காக் களிடம் ஏதாவது, முணுமுணுத்து, முணுமுணுத்துத்தான் சாப்பிட்டிருப்பான். ஆனால், மழைக்கு அவித்த, மரவள்ளிக் கிழங்கு சுதியாகவிருக்கும்.

இந்த மட்டிலாவது கிடைத்ததே என்று பெட்டைகள் இரண்டும் திருப்திப்பட்டுக் கொள்ளும். இது காலவரைக்கும் பட்ட கஷ்டங்கள், அவர்களை, அந்த அளவிற்குப் பக்குவப் படுத்தியிருந்தன. பக்குவப்படுத்தியிருந்ததென்றால், அவர்களிரு வருக்கும் இருபதோ, இருபத்திரெண்டோ வயதல்ல. பதினாலு, வயதுதான். இருந்தாலும் அவ்வளவு பக்குவம். இவளுக்கும் மரவள்ளிக்கிழங்கு ஆசையாகத்தான் இருந்தது. ஆனால், அவள் இப்போதெல்லாம், காலையில் சாப்பிடுவதில்லை. அதென்னவோ, சாப்பிடக் கையிலெடுத்தாலே, இளங்கோவின் ஞாபகம் வந்து விடுகிறது. அவனது குரல் எங்கிருந்தோ அம்மா வென்று இவளை விழித்து அழைப்பது போலிருக்கும். மூன்று வருடங்களாகிற்று. அவள் காலையில் சாப்பிடுவதை விடுத்து, அது என்னவோ ஒரு விரதம் போல. அவன் வந்த பிறகுதான் இனிமேல் காலைச் சாப்பாடு என்பது போலவும்.

மழை கொஞ்சம் போல் ஒடுங்கிக் கொண்டு வந்தது.

இனியும் நின்றால், நேரம் போய்விடும் என்பது போல அவள் மறுபடியும் தெருவிற்கு வந்தாள். கொஞ்ச நேர மென்றாலும் பெய்த மழையால் சிற்சில பகுதிகளில் நீர் சுழித்து சிறிய ஓடைகளாய் ஓடியது. ஆட்கள் அதிகமில்லை.

மழை வரும் என்று தெரியாமல் வெளிக்கிட்ட சிலர் இவளைப்போல் எங்கேனும் ஒதுங்கியிருந்தனர். மற்றவர்கள் வீட்டை விட்டு வெளிக்கிடவில்லை.

இரண்டு நிமிடத்துள் கோவிலை அடைந்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலென்றால், கோபுரத்தோடு நிமிர்ந்து நிற்கும், கட்டட அடுக்குகளல்ல.

ஒரு ஆலமரம். அதற்குக்கீழ் வட்டவடிவ சீமெந்துப் பீடம். அதில் நிறுத்தப்பட்ட சில சூலங்கள். அவ்வளவே.

வழக்கமாயெனில் பக்கத்துக் கிணற்றில் நீர், மொண்டு, அந்த இடத்தைக் கழுவுவாள் பாக்கியலட்சுமி. இன்றைக்கு அவ்வளவு தேவையில்லை. மழை எல்லாவற்றையும் கழுவியிருக்கிறது.

தேக்கிலைக்குள் பொதிந்து வைத்திருந்த பூக்களைக் கிள்ளி சூலங்களின் முன் வைத்தான்.

சேலைத் தலைப்பைப் பிரித்தபோது கற்பூரவில்லைகள் ஈரலித்துப் பொருமியிருந்தன. எங்காவது ஈரம் படாத பகுதி இருக் கிறதா எனப் பார்த்தாள். எங்குமில்லை. ஆலமர அடியில் குடை வாய்க் காய்ந்திருந்த பொந்தினுள், கற்பூரத்தையும், தீப் பெட்டியையும் வைத்து விட்டு. சேலையை உதறி, முகத்திலும், இரு கைகளிலும் உள்ள ஈரத்தைத் துடைத்துக் கொண்டாள்.

இப்போது, காற்று மழையற்று உலர்வாக இருந்தது.

கற்பூரவில்லைகளை எடுத்து வைத்து தீப்பெட்டியினுள் குச்சினையெடுத்துத் தட்டினாள்.

ஈரலித்த குச்சிகளின் மருந்து உதிர்ந்து விழுந்தது.

தொண்டைக்குள் ஏக்கம் எட்டிப்பார்த்தது.

இரண்டு குச்சிகள் வீணாகிப் போயின.

கைகளை நன்றாக மறுபடியும் துடைத்துக் கொண்டாள். தீப்பெட்டியின் மருந்து தடவிய பக்கங்களை மணிக்கட்டில் வைத்துத் தேய்த்தான். கையில் கொஞ்சம் சூடேறினாற் போலிருந்தது. மறுபடியும் தீக்குச்சியொன்றை எடுத்து தீப்பெட்டியின் விளிம்புகளில் தேய்த்தாள்.

கொஞ்சம் தயங்கிவிட்டுப் பற்றிக் கொண்டது நெருப்பு.

"பக்"கென்று கற்பூரத்தில் குச்சியை வைத்து தீயை இடம் மாற்றினாள். காற்றோ இலைகளிலிருந்து வடியும் நீர்த்துளி களோ, கற்பூரத்தை அணைத்து விடாதிருக்க, தீபத்தை இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளாலும் வளைத்துப் பிடித்தாள். பிறகு, இரு கரங்களாலும், தீபத்தை ஒற்றிக் கண்களில் தொட்டுக் கொண்டாள். மழைக்குளிரில் விறைத்திருந்த கரங்களுக்குள், கற்பூரத்தின் வாசனையும், வெப்பமும் புகுந்து, உள்ளங்கைகளுக்குள் ஒரு வெதுவெதுப்பைத் தொற்ற வைத்தது. அந்த ஆறுதலான வெதுவெதுப்பு, மனதுக்குள்ளும் ஏறிப்படர்ந்தது.

கற்பூரத்தை ஒற்றிக் கொண்டபின் மூன்று தடவைகள் வைரவரைச் சுற்றி வந்தாள்.

"அவனைக் கெதிலை விடப்பண்ணப்பு. அவனுக்கு எந்தக் கஷ்டமும் வரக்கூடா." என மனம் திரும்பத் திரும்பப் பிரார்த்தித்துக் கொண்டது. பிரார்த்திக்கும் ஒவ்வொரு கணமும் இளங்கோவின் முகம் அவள் முன் நீண்டு மறைந்தது.

"ரெண்டு பிள்ளையளையும் பறிச்சுப் போட்டாய். இனி மற்றதையும் பறிச்சுப் போடாதையப்பன்." என மனம் தொடர்ந்தது.

"மற்றதுகளெல்லாம் எங்கையிருந்தாலும், கூட ஆரெண்டாலும் இருக்கினம். அவன் மட்டும்தான் தனிச்சுப் போட்டான்." மீண்டும் மன்றாட்டம்.

"உன்னட்டையெடுத்ததுகளைக் கவனமாப் பார்த்துக் கொள்ளப்பு. திரும்பியும் பிறக்கிறதெண்டா என்ரை வம்சத்துக் குள்ளையே வரட்டும்."

திரும்பி நடந்தபோது மீண்டும் அவனது ஞாபகம் வந்தது. இறுதியாய் அவனைக் கடவுளிடம் ஒப்புக் கொடுக்க வேண்டும் போலிருந்தது.

"இளங்கோவைக் கெதிலை கொண்டு வந்திடப்பு. அவன் தாங்கமாட்டான் ஒண்டையும்." என மனதுக்குள் உருகினாள்.

இப்போது மழை முற்றாகவே நின்று விட்டது.

வெய்யில் லேசாக மின்னியது.

நடப்பது லேசாகவிருந்தது.

போகிற வழியில் நிருபனும், நித்யாவும், புவனாவும் பாடசாலைப் பைகளோடு நடந்து வந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சாப்பிட்டியே குஞ்சு.” என்றாள் நிருபனைப் பார்த்து.

“சுப்பர் மரவள்ளிக்கிழங்கு.” என்று துள்ளினான். நிருபன்.

அவிக்கும் போதே நல்ல மாவாய்க் கரைந்திருந்தது. அதுதான் அவனுக்குப் பிடித்தது.

“சாப்பிட்டீங்களையெடி.” என்றாள் பாக்கியலட்சுமி பெண்களைப் பார்த்து.

“எங்கை சாப்பிடுறது. விட்டாலெல்லோ. கொஞ்சம், கொஞ்சம். எண்டு கேட்டு, எங்கடையையும் சேர்த்து, அவன்தான் திண்டது.” என்றாள் நித்யா சலிப்பாக.

சலித்துக்கொண்டாலும் அவன்மேல் அவர்களுக்குச் செல்லம் கூட, அவர்களாகவே கொடுத்திருப்பார்கள்.

“பள்ளிக்கூடம் பெல் அடிக்கப்போகுது.” என்று சொல்லிக் கொண்டே ஓடினான் நிருபன். நித்யாவும், புவனாவும் பின்னால் ஓடினார்கள்.

நல்லவேளை, அவர்கள் வருவதற்கிடையில் மழை விட்டது என நினைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

முன்புறச் செத்தையில் கொடியில் கிடந்த உடுப்புகள் இறைந்து கிடந்தன.

நித்யாதான் அள்ளிப் போட்டிருப்பாள்.

இவள் அவற்றை அள்ளி உள்புறக் கொடியில் போட்டாள்.

இளங்கோவும் நிருபனைப்போல் தான் இருந்தான். அவனும் அப்போது நல்ல செல்ல மாய்த்தான் இருந்தான்.

வசந்தாவும், பவிதாவும் சாப்பாட்டில் அவனுக்கென்று எடுத்து மீனாயிருந்தாலென்ன. பொரியலாயிருந்தாலென்ன..? தங்களுடையதில் அவனுக்கும் பங்கு கொடுப்பார்கள். அவன் தான் நிருபனைத் தூக்கி வளர்த்தான். நிருபனென்றால் போதும் அவனுக்கு. நிருபனுக்கு ஒரு வயதாய் இருந்தபோது இளங்கோவுக்குப் பதினாலு வயதுதான். நாளும், பொழுதும் தூக்கிக் கொண்டுதான் திரிவான். வேடிக்கை காட்டுவான். நிருபனும், இளங்கோ போன கொஞ்சநாளில் ஏங்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்த்தானி ருந்தான். இப்போது கொஞ்ச நாட்களாகத் தான் அந்த ஏக்கத்திலிருந்து விடுபட்டான்.

அவளுடைய வாழ்க்கையிலும் எத்தனை ஏக்கங்கள்.?

முதலில், நீரூபன் பிறந்த கையோடு அவளது கணவன் அவளைக் கைவிட்டுப் போனான். எட்டுப் பிள்ளைகளோடும் அவள் தனித்துப் போனாள்.

யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தாலாவது சமாளித்திருக் கலாம். ஐந்து பிள்ளைகளோடு யாழ்ப்பாணத்திலிருந்த அவளைக் காடு, கழனியெல்லாம் காட்டி, வன்னிக்கு அவள் கணவன் கூட்டிச் சென்றதால்தான் அவள் முள்ளிவாய்க்கால் வரை முட்டுப்பட நேர்ந்தது. அதுவும் எட்டுப்பிள்ளைகளோடு.

எட்டுப் பிள்ளைகள். நினைக்கவே அயர்ச்சியாக இருக்கிறது. அவளுக்கு, எப்படிப் பெற்றாளோ? அதற்குக் காரணமானவன் அவளைக் கைவிட்டுப்போய்விட்டான். அதற்குப் பிறகு அவனைப் பற்றி நினைத் தென்ன பலன்? யாருடன் சேர்ந்து வசிக்கிறானோ..? அல்லது இந்தச் சண்டைக்குள் செத்துத்தான் தொலைந்தானோ..? எதுவும் தெரியாமலே குங்குமத்தோடு வளைய வருகிறாள்.

அடுத்த ஏக்கம் கண்ணனின் வடிவில் வந்தது.

கண்ணனை அவள் பெரிதும் நம்பியிருந்தாள்.

ஐந்தாவது பிள்ளை. அவன் படிப்பில் கெட்டிக்காரன். அவளது கஷ்டத்தையும் உணர்ந்து கொண்டவன்.

அவனை யாழ்ப்பாணத்தில் தன் அக்கா வீட்டில் அனுப்பிப் படிக்க வைத்தாள் பாக்கியலட்சுமி. எப்படியும் அவன் படித்து முன்னுக்கு வந்து விடுவான் என்ற நம்பிக்கை இருந்தது. முதல் தடவை பாதை திறந்திருந்தபோது அவன் யாழ்ப் பாணத்திற்குப் படிக்க வந்தான். ஏ. எல். படித்து மூன்று “ஏ“யும் எடுத்து விட்டான். பல்கலைக்கழகம் போவதற்கு முன் குடும்பத் திற்கு உதவி செய்ய வேண்டுமென்று அவன் அவளிடம் திரும்பி வந்தான். அவன் வராமலே இருந்திருக்கலாம். வந்து விட்டான்.

அவனுக்கு இயல்பிலேயே மிருகங்களின் குரலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்துக்காட்டும் திறமை இருந்தது. நாயைப்போல, கிளியைப் போல, யானையைப் போலெல்லாம் சத்தம் போட்டுக் காட்டு வான். அவனது திறமை அவனுக்கு சிறியதொரு வேலையைப் பெற்றுக் கொடுத்தது. இயக்கதினுடைய வானொலியிலும், தொலைக் காட்சியிலும், இப்படி ஏதாவது ஆடுபோல, மாடு போல, நாய் போல சப்தமெழுப்ப வேண்டிய நேரங்களில் அவனைக் கூப்பிடுவார்கள். அவன் போய் அப்படியே நடித்துக் கொடுத்துவிட்டு, கொஞ்சம் பணத்தோடு திரும்புவான். ஏதோ கைச்செலவுக்கு என்பது போல மிகக் குறைவான பணம். கடைசியில் அவன் இரணைப்பாலையில் வந்த ஷெல்லில் துடிதுடித்துக் கீழே விழுந்து விட்டான். கொஞ்சத் தூரத்திற்கு அவனைச் சாக்கில் போட்டு இழுத்துக் கொண்டு போனார்கள். பிறகு, ஷெல் விழும் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓரிடத்தில் கிடங்கு தோண்டிப் புதைத்து விட்டுப் போனார்கள்.

இப்போது கூட எங்கேயாவது குட்டி நாய் குரைத்தால், கிளி கீச்சிட்டால், அவனது ஞாபகம் கண்களை நனைத்து விடுகிறது.

கண்ணனைப் புதைக்கவாவது அவகாசம் இருந்தது. கோகுலனைப், புதைக்கக்கூடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. முள்ளிவாய்க்காலில், கடைசியாய், இனி, எந்த எல்லையும் இல்லை என்றிருந்த கணத்தில், அவன் யாருடைய துப்பாக்கிச் சூட்டுக்கு இறந்தான் என்று தெரியாமலே, குண்டு பட்டுச் செத்தான். அவனைப் பார்த்துக் கொண்டு நின்றால், மிஞ்சி நின்ற நான்கையும் காப்பாற்ற முடியாதென்றுதான், அவனைக் கைவிட்டு, விட்டு வந்தாள். இளங்கோவும், நிரூபனும், நித்யாவும், புவனாவும் தான் இவளோடு முள்ளிவாய்க்காலைக் கடைசியாய்க் கடந்தார்கள். அதற்கப்பால், இளங்கோவை இவள் கத்திக் கதறப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். இவள் மற்ற மூன்று சிறிசுகளையும், கைக்குள் பொத்திக் கொண்டு செட்டிகுளம் முகாமில் ஒரு வருடத்திற்கு அல்லாடினாள். அதற்குப் பிறகு அவர்களின் குற்றமற்ற தன்மை நிரூபிக்கப்பட்ட பிறகு, பட்டதெல்லாம் போதுமென்று யாழ்ப்பாணத்திற்கு வந்தார்கள். மூன்று பிள்ளைகளுக்கும். யாழ்ப்பாணம் புதிசுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பிறந்த ஐந்தும் யாழ்ப்பாணத்தை விட்டு நெடுந்தூரம் விலகி விட்டன.

வசந்தாவை முன்னமே கட்டிக் கொடுத்தாயிற்று. வவுனியாவில் மூன்று குழந்தைகளோடு இருக்கிறாள்.

சந்திரன் முன்னமே அவங்களோடு போய்ச் சேர்ந்து விட்டான். அங்கேயே ஒரு "இயக்கப் பெட்டை"யைக் கல்யாண மும் கட்டிக் கொண்டான். பிறகு, சந்தர்ப்பம் கிடைத்த ஒரு பொழுதில் அவன், அவளோடும், ஒரு வயதுக் குழந்தையோடும் கடல் தாண்டிப் போய் விட்டான். இப்போது இந்தியாவில் இருப்பதாகக் கேள்வி. பவிதா கிளிநொச்சியில் கணவனோடு வசிக்கிறாள். அவள் கணவனுக்கு அங்கே காணி, பூமி இருக்கிறது. அதை விட்டுவிட்டு வர அவளுக்கு விருப்பமில்லை. இவர்களிருந்த முகாமின் இன்னொரு மூலையில் தான் அவர்களும் இருந்தார்கள். விடுவிக்கப்பட்டபோது, இவர்கள் யாழ்ப்பாணம் வர விரும்புவதாய்ப் பதிய, அவர்கள் கிளிநொச்சி போக விரும்புவதாகப் பதிந்து பிரிந்து கொண்டார்கள்.

பெய்த மழையைப் பற்றிக் கொஞ்சமும் பொருட் படுத்தாமல் வெயில் தன்பாட்டில் எட்டிப்பார்த்தது. இவள் கொஞ்சம் தேநீரைப் போட்டுக் குடித்தாள். வெளிக்கிட்டால் தான் எங்கேனும் கூலி வேலை கிடைக்கும் எனக் கிளம்பிய போது கிராம அலுவலர் வந்தார்.

"வெளிநாட்டு நிறுவனக்காரரர் வரீனை, கேக்கிற விஷயத்தைச் சொல்லணை." என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

"உவங்களுக்கு உதுவே வேலையாப் போச்சுது. இண்டை யக் கூலி துலைஞ்சுது.." என முணுத்தபடி அவள் குந்தில் சாய்ந்தாள்.

இரண்டு பெண்களும், ஒரு பையனும் வந்திருந்தனர்.

இவளது குடும்ப விபரத்தைக் கேட்டுப் பதிந்தனர்.

"எத்தினை பிள்ளையள் அம்மாக்கு."

"எட்டு."

"குடும்பக் காட்டிலை மூண்டுதான் கிடக்கு."

"ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு இடத்தை. இஞ்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதைத்தானை விதானையார் ஐயா பதிவார்."

"எங்கெங்கை இருக்கினம்; ஒண்டொண்டாச்சொல்லுங்கோ."

"ஏன், ஏதும் தரப்போறியளே."

"இல்லையம்மா, இடம் பெயர்ந்த ஆக்களின்டை விபரம் திரட்டத்தான்."

"திருப்பித் திருப்பி உதைத்தான் செய்யுங்கோ."

சலித்தாள் பாக்கியலட்சுமி.

"நாங்கள் இப்பதானம்மா வாறம்." என்றாள் வந்தவர்களில் ஒருத்தி.

"சரி. சரி." சொல்லுறன் என்ற பாக்கியலட்சுமி தொடர்ந்தாள்.

"என்ரை மூத்தவன் இந்தியாவிலை. அடுத்தது வவுனியாவிலை. இன்னொண்டு கிளிநொச்சிலை."

"என்னம்மா தனியத்தனிய இருக்கீனமே."

"இல்லை. கட்டிக் குடும்பமா இருக்கீனை."

"ம்... அடுத்தாள்."

"அடுத்தவன் முள்ளிவாய்க் காலிலை மோசம் போட்டான்..." கேவினாள். அவர்கள் பேசாமல் இருந்தனர்.

"அவனிண்டை உடம்பைக் கூட எடக்கேலாமப் போச்சு... என்ன பாவம் செய்தனோ.." யாரும் எதுவும் பேசவில்லை.

"இன்னொருத்தன், அவன் மூண்டு "ஏ" எடுத்தவன். இரணைப் பாலையிலை அவனைச் சாகக்குடுத்தன். என்ன கெட்டிக்காரப்பெடியன். என்னட்டை வரவேணும் எண்டு வந்து கடைசிலை தனிரை உயிரைக் குடுத்திட்டான். அறுவாங்கள் என்ரை குஞ்சுகளைக் கொண்டு போட்டாங்கள்."

அவளது உலர்ந்த கண்களில் வடிந்த ஈரம் மறைந்ததும் வந்திருந்த பையன் கேட்டான்.

"வேறை."

"ஒருதன், தடுப்பிலை. உம்மைப் போலைத்தான் மெல்லிய பெடியன். இப்ப என்ன பாடுபடுறானோ தெரியாது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்த பெண்கள் அவனைப் பார்த்து தங்களுக்குள் கண்காட்டிச் சிரித்தார்கள்.

அவர்கள் கேலியிலிருந்து தப்ப அவன் மீண்டும் "மற்றாக்கள்." என்றான்.

"இஞ்சை என்னோடை மூண்டு பிள்ளையள் படிக்குதுகள்."

"எத்தினை பிள்ளையளம்மா சரியாச் சொல்லுங்கோ...!" குறுக்கிட்டாள் ஒருத்தி.

"ஏன், இவ்வளவு நேரம் என்ன சொன்னவா..?" என்றான் அந்த இளைஞன்.

"எண்ணிப் பாரும் ஒன்பது வருது."

"எத்தினை பிள்ளையளம்மா சரியாச் சொல்லுங்கோ..!"

"ஒன்பது."

அவளுக்கென்ன மனக் குழப்பமோ எனத் தோன்றியது அவர்களுக்கு.

"என்னம்மா, அடிக்கடி மாத்தி மாத்திச் சொல்லுறியள்."

"நீங்கள் ஏதோ தரப்போறியள் எண்டே நான் மாத்திச் சொல்லுறன். எனக்குப் பிள்ளையள் ஒன்பதுதான்."

"அப்ப எட்டெண்டியள்."

"நான் பெத்தது எட்டுத்தான். பெத்தா மட்டுமே பிள்ளை. வளர்த்தாப் பிள்ளையில்லையே.

அவர்கள் அவளைத் திகைத்துப் போய் பார்த்தார்கள்.

"என்ரை, மனிசன் என்னை விட்டிட்டுப் போனவுடனை, நான் "அவங்கட" சமையல் அறையில் கொஞ்சநாள் சமையல் வேலைக்குப் போனனான். அப்ப, அங்கை அவன் நிண்டான். கிழிஞ்ச சறத்தோடை.

பாவம், பெடியன். ஏதோ பசியிலை களவெடுத்துப் போட்டான் எண்டு பணிஷ்மெண்டாம்.

தாய், தேப்பன் இல்லாத பொடி, வேறை என்ன செய்யும்?

என்னோடை வாறியோ எண்டன். வந்திட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்குப் பிறகு அவனும் என்ரை பிள்ளைதான். திண்டாலும், குடிச்சாலும் அவனுக்கும் குடுத்துத்தான்.

எட்டுப்பிள்ளையளிண்டை குரல் எனக்கு எப்படிக் கேட்டுதோ அப்பிடித்தான் அவனின்டை குரலும் எனக்கு ஒன்பதாவதாக் கேட்டுது.

அவன் என்ரை பிள்ளை தான். நான் அவனைப் பிரிச்சுப்பாக்கன்."

அவள் எழுந்து உள்ளே போனாள். சில நிமிடங்களில் கசங்கிப் போன இரு புகைப்படங்களோடு திரும்பி வந்தாள்.

படங்களைத்தொட்டு அவர்களுக்கு காட்டினாள்.

"இதுதான் கண்ணன். மூண்டு "ஏ" எடுத்தவன். இரணைப்பாலையிலை செத்தவன். நல்ல வடிவாக் குயில் மாதிரிக் கூவி நாய் மாதிரிக் குரைப்பான்."

குரல் கம்ம மற்றப் படத்தைக் காட்டினாள்.

"இது கோகுலன். முள்ளிவாய்க்காலிலை செத்தவன். பக்கத்திலை நிக்கிறது இளங்கோ. அவன் தூக்கி வைச்சிருக்கிறது என்ரை கடைக்குட்டி. இப்ப பதினொரு வயது. பள்ளிக்கூடம் போட்டான்."

அவளிடமிருந்து வார்த்தைகள் ஒழுகிக் கொட்டின.

"அந்தப் பிள்ளை தான் இரணைப் பாலையிலை செத்ததோ?"

"எந்தப் பிள்ளை."

"அதுதான் நீங்கள் வளர்த்தது."

"இல்லை. அது என்ரை அஞ்சாவது."

"அப்ப, முள்ளிவாய்க்காலிலையோ."

"சீச்சி, அவன் இன்னும் உயிரோடை இருக்கிறான்."

"இந்தியாவிலையே."

"அது என்ரை மூத்தவனெல்லோ."


"அப்ப எங்கை...?"

"அவன் தான் இளங்கோ. இப்ப. தடுப்பு முகாமிலை." என்றாள் பாக்கியலட்சுமி.

- ஞானம் : 2012 ஜூன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்க காலம் முதல் இன்றுவரை பெண்கள் பலர் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளாக இருந்து வருகின்றார்கள். அந்த வரிசையில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுள் ஒருவர் தாட்சாயணி. இலங்கை அரச நிர்வாக அதிகாரிகளாக இருந்து வந்த சிலர் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளாகவும் தமிழ் இலக்கியத்துக்குப் பங்களிப்புச் செய்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் தாட்சாயணிக்கு மிகக் காத்திரமான ஓர் இடமுண்டென்பதனை அவரின் “ஒன்பதாவது குரல்” என்னும் இச்சிறுகதைத் தொகுதி மீண்டும் வலியுறுத்துகின்றது.

தாட்சாயணியிடத்தே தெளிவான சமூகப் பார்வை இருக்கிறது. சம தரையில் ஆற்றுநீர் ஓடுவது போன்ற மொழி ஓட்டம், வீச்சு வெற்றுச் சலசலப்பின்றி ஓடிக் கொண்டிருக்கிறது. தமது ஆக்க இலக்கியப் படைப்புகளைச் சராசரி வாசகர்களும் வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டுமென்னும் இலக்கிய சமூக அக்கறை இவரது எழுத்துக்களில் புலப்படுகின்றது.

– தெணியான்

ISBN 978-955-0958-17-7
9 789550 958177

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org